
ஓம்.

பரப்பிரஹ்மணே நம:.

பிரபோத சந்திரோதய வசநம்.

[அல்லது மெய்ஞ்ஞானவிளக்கம்]



இது

காஞ்சீபுரநிவாஸி

வித்வசிரேஷ்டராகிய

ஸ்ரீமாந் - இராமயோகிகள் அவர்களால்

வசனரூபமாக இயற்றப்பட்டு,

காலஞ்சென்ற சை. இரத்தினசெட்டியார் குமாரர்

சை. சிவசங்கர செட்டியார், பி. ஏ., பி. எல்.,

அவர்களால் தமது

சென்னை :

மதராஸ் ரிப்பன் அச்சியந்திரசாலையில்

பதிப்பிக்கப்பட்டது.

[2-வது பதிப்பு.]

1911.

[விலை ரூபா 1.]

4-6-13 ൽ വാങ്ങിച്ചു
വില 0-12-0

உ

கடவுள் துணை.

முகவுரை.

புண்ணிய பூமியென்று புலவர்களால் புகழ்ந்து துதிக்கப்படுகின்ற பரதகண்டத்தின்கண் வைதிக மதங்களான மீமாம்சம், சாங்கியம், தர்க்கம், யோகம், [illegible] முதலியவை வேதாந்த சித்தாந்தத்தைக் கைக்கொண்டொழுகி, துக்க நிவிர்த்தியும் பரமாநந்தப் பிராப்தியுமாகிய மோட்சத்தை மக்களடைவதற்கு முக்கியசாதனங்களாயுள்ளனவென்றும், உலோகாயதம், புத்தர், சமணம் முதலிய அவைதிக மதங்கள் வேதாந்த சித்தாந்தத்தை யனுசரித்தொழுகுவதற்கு முக்கிய சாதனங்களல்லவென்றும் விளக்குமாறு கி. பி. 1200-ம் ஆண்டில் விஜயநகரத்தின்கண் (?) பண்டித சிரோமணியாய் விளக்க முற்றிருந்த கிருஷ்ண மிசிரரென்னும் அந்தணகுல திலகர், வேதாந்த சித்தாந்தத்தை யனுஷ்டானத்திற் கொண்டு வருதற்குப் பெருந்தடையாயுள்ள மனம், அகங்காரம், காமம், கோபம், மற்சரம், மதம், மானம், சங்கற்பம், சந்தேக முதலியவற்றையும், அவ் வேதாந்த சித்தாந்தத்தை யனுஷ்டித்தற்குச் சாதனமாயுள்ள விவேகம், நிரூபகம், பொறுமை, சந்தோஷம், சமம், தமம், விராகம், சுசீலம், தவம், இயமாதிகள் முதலியவற்றையும் புருஷர்களாகவும் மனைவியர்களாகவும், புத்திரர்களாகவும் புத்திரிகளாகவும் தக்கவாறு உருவகப்படுத்தி, சுலபமாய் வேதாந்த சித்தாந்தத்தை யறிந்துகொள்ளுமாறு நாடகவடிவமாய்ப் பிரபோத சந்திரோதயமென்னு மோர் அரிய நூலைச் சம்ஸ்கிருத பாஷையில் இயற்றி யருளினதை அப் பாஷாப்பியாச மில்லாத தமிழ்ப் பண்டிதரும் எளிதில் அறிந்துகொள்ளுமாறு, கி. பி. 1600-ம் ஆண்டு இலக்கண விளக்கச் சிறப்புப்பாயிரத்தில் "மாதையரதிபன் வரகுண மேரு, கல்விக்கெல்லை கருணைக் காரகம் பெருமான் மெய்த்தவப் பேறெனத் தோன்றிய, திருமாலுலகஞ் செவ்விதிற் புரக்கும், மேதகு புகழ்த்திரு வேங்கட நாதன், ஓதினனாக" என்றுள்ளபடி இலக்கண விளக்கமியற்

றிய திருவாரூர் வைத்தியநாத தேசிகர் காலத்து விளங்கிய யாழ்நகர்க் கரசான திருவேங்கடநாதனென்னும் திருவேங்கட சுவாமிகள் தமது ஞானகுருவான இராகவானந்தரது கட்டளைப்படி கூறிய இலக்கணமமையச் செய்யுள் வடிவமாக மெய்ஞ்ஞான விளக்கமென்று பெயரிட்டுச் சொன்னோக்கும், பொருணோக்கும், தொடைநோக்கும், நடைநோக்கும், வேறெந்நோக்கும் நன்றாகப் பொருந்த ஓர் நூலியற்றி யருளினார்.

அவ்வாறியற்றியுள்ள பிரபோத சந்திரோதயமென்னும் இம்மெய்ஞ்ஞான விளக்கம் இலக்கண இலக்கிய வுணர்ச்சியுள்ளார்க்கன்றி யேனையோர்க்குப் பயன்படாதிருப்பது கருதி, இவ்வரிய பெரிய நூலை வித்வ சிரேஷ்டராகிய காஞ்சீபுர நிவாஸி ஸ்ரீமத் இராமயோகிக ளவர்களைக்கொண்டு தெள்ளிய தமிழ் நடையில் வசன வடிவமாக வெழுதுவித் தச்சிடலா யிற்று.

இந்நூலை வாசிப்பதால் பிரமம், மாயை, மனம், பிரவிர்த்தி, நிவிர்த்தி, போகம், அகங்கார முதலியவைகளின் இலக்கணங்களும், காமக்குரோதாதிக ளுண்டாயபோ துண்டாகும் மெய்ப்பாடுகளின் தன்மைகளும், இன்னின்ன குணங்களுக்கு இன்னின்ன குணங்கள் மாறுபட்டிருக்கின்றன வென்பதின் சொரூபமும், சுபுத்தியோடு கூடிய விவேக முடையவர்களுக்கே உபநிடதமும் கீதையும் பயன்படுமென்பதும், உலோகாயத முதலிய மதங்களின் தன்மைகளும் அவற்றின் கண்டனங்களும், தர்க்கம் வேதாந்தசித்தாந்தத்தை யறிதற்கு அத்தியந்த சாதனமா மென்பதும், மீமாம்சம் முதலிய மதங்களின் சொரூபங்களும், அவற்றுள் வேதாந்த சித்தாந்தத்திற்கு விரோதமாயுள்ள விஷயங்கள் இன்னின்னவென்பதும், வேதாந்தத்தின் நிச்சய மின்னதென்பதும், வேறுபிறவு மறிந்து கொள்ளலாமென்க.

உ

கணபதிதுணை.

திருச்சிற்றம்பலம்.

பிரபோத சந்திரோதய வசனச்

சருக்க அட்டவணை.

சருக்கத் தொகை.	சருக்கப் பெயர்.	பக்கம்.
	பாயிரம்	1
க	உற்பத்திச் சருக்கம்	5
உ	மோகன் அரசாட்சிச் சருக்கம்	10
ங	அவித்தியாபுரச் சருக்கம்	15
ச	விவேகன் வனம்புகு சருக்கம்	26
ரு	விவேகன் மந்திரச் சருக்கம்	31
சா	விவேகன் ஒற்றுக் கேள்விச் சருக்கம் ...	37
எ	விவேகன் சேனை கரந்துறை சருக்கம் ...	50
அ	சத்துவச்சிரத்தை தூதுச் சருக்கம் ...	58
கூ	மோகன் ஒற்றுக் கேள்விச் சருக்கம் ...	62
க0	இடம்பனுக்கு ஓலைவிடு சருக்கம் ...	65
கக	இடம்பாங்காரச் சருக்கம்	68
கஉ	மோகன் காசிபுகு சருக்கம்	83
கங	சாருவாகச் சருக்கம்	84
கச	கலிச் சருக்கம்	89
கரு	மித்தியாதிட்டிச் சருக்கம்	93
கசா	சிரத்தைபோக்கிடையூற்றுச் சருக்கம் ...	96
கஎ	சாந்திச்சருக்கம்	98
கஅ	சமணாதியர் சருக்கம்	101
ககூ	வைராவி வதைச் சருக்கம்	109
உ0	சிரத்தை மீட்சிச் சருக்கம்	111
உக	விவேகன் போதகனை வரவழைத்த சருக்கம் ...	115
உஉ	உபநிடதை வேள்விச் சருக்கம்	118
உங	சக்கரதீர்த்தச் சருக்கம்	124
உச	காமணாதியர் சருக்கம்	126

சருக்கத் தொகை.	சருக்கப் பெயர்.	பக்கம்.
௨௫	நியாயன் தூதுச் சருக்கம்	132
௨௬	காமனாதியர் வீராலாபச் சருக்கம் ...	137
௨௭	நிருபகாதியர் வீராலாபச் சருக்கம் ...	150
௨௮	விவேகன் காசிபுகு சருக்கம்	160
௨௯	படையெழுச்சிச் சருக்கம்	163
௩0	காமனாதியர் வதைச் சருக்கம்	169
௩௧	உலகாயதன் வதைச் சருக்கம்	177
௩௨	புத்தர் வதைச் சருக்கம்	183
௩௩	சமணர் வதைச் சருக்கம்	185
௩௪	மோகன் வதைச் சருக்கம்	189
௩௫	மானதன் புலம்புறு சருக்கம்	193
௩௬	கலைமகள் தேற்றச் சருக்கம்	197
௩௭	விவேகன் முடிசூடு சருக்கம்	199
௩௮	மாயைச் சருக்கம்	204
௩௯	மீமாஞ்சச் சருக்கம்	207
௪0	சமுச்சயன் சருக்கம்	212
௪௧	சாங்கிய மதச்சருக்கம்	213
௪௨	தார்க்கிகன் மதச் சருக்கம்	215
௪௩	வேதாந்தி மறுத்தற் சருக்கம்	218
௪௪	யோகமதச் சருக்கம்	220
௪௫	பாஞ்சராத்திரச் சருக்கம்	225
௪௬	சைவ சித்தாந்தச் சருக்கம்	227
௪௭	வேதாந்தச் சருக்கம்	230
௪௮	பிரபோதன் முடிசூடு சருக்கம்	232

ஆக சருக்கத்தொகை மொத்தம் ௪௮.

பிரபோதசந்திரோதய வசனச்

சருக்க அட்டவணை

முற்றிற்று.

உ

கணபதி துணை.

மோசனுதியர், விவேகனுதியர்

வம்சபரம்பரை அட்டவணை.

பிரமத்தினோடு மாயை கலந்து

மானதன் பிறந்தனன்.

மானதனுக்குப் பிரவிர்த்தி நிவிர்த்தியென

இரண்டு பெண்சாதிகள்:

அவர்களுள்

பிரவிர்த்தியின்ற மக்கள்.

ஆண்.	பெண்.
1 மோகன்	1 தீவினை
2 அகங்காரன்	2 கபடி
3 கர்மன்	3 அகீர்த்தி
4 கோபன்	4 அநீதி
5 மச்சரன்	
6 மதன்	
7 மானன்	
8 இராசதன்	
9 தாமதன்	
10 சங்கற்பன்	
11 சந்தேகன்	

நிவிர்த்தியின்ற மக்கள்.

ஆண்.	பெண்.
1 விவேகன்	1 மைத்திரி
2 நிரூபகன்	2 கருணை
3 பொறை	3 நீதி
4 சந்தோடன்	4 முதிதை
5 சமன்	5 உபேட்சை
6 தமன்	
7 விராகன்	
8 சுசீலன்	
9 தவன்	
10 சத்துவன்	
11 இயமன்	
12 நியமன்	
13 ஆசனன்	
14 பிராணுயாமன்	
15 பிரத்தியாகாரன்	
16 தாரணன்	
17 தியானன்	
18 சமாதி	

மோகனுதியர், விவேகனுதியர்

வம்சபரம்பரை அட்டவணை

முற்றிற்று.

[தனித்தனி ஒவ்வொருவரின் குடும்பவரலாறு]

மோகஞாதியர்கள்.

இலக்கம்.	மோகஞாதியரின் பெயர்	மனைவியர், பர்த்தாக்கள் பெயர்.	பிள்ளைகளின் பெயர்.	பிள்ளைகளின் மனைவியர்பெயர் பர்த்தா பெயர்.	பவுத்ரர்பவுத்ரிகள் பெயர்	பவுத்ரர் மனைவியரும் பவுத்ரிகள் பர்த்தாக்களும்.	பிரபவுத்ரர் பிரபவுத்ரிகள் பெய
1	மோகன்	துன்மதி 1, பாஷண்டவிஞ்சை 2	,, அஞ்ஞன்	,, ,, ,,	,, ,, ,,	,, ,, ,,	,, ,, ,,
2	அகங்காரன்	அகந்தை	பெண் மமதை, ஆண் லோபன்	இச்சை	இடம்பன்	வஞ்சனை	அசத்யன்
3	காமன்	இரதி	விடயானந்தன்	,,	,,	,,	,,
4	கோபன்	கொலை	சலகன்	,,	,,	,,	,,
5	மச்சரன்	அசூயை	வயிரன்	அவமரியாதை	அக்ரமன்	,,	,,
6	மீதன்	மறதி	அனத்தன்	கெடுதி	நாசகன்	,,	,,
7	மானன்	வெகுமதி	உற்சாகன்	,,	,,	,,	,,
8	இராசதன்	முயற்சி	பெண் சிரத்தை, ஆண் காரியன்	,,	,,	,,	,,
9	தாமதன்	சோம்பல்	பெ-சிரத்தை, நித்திரை	,,	,,	,,	,,
10	சங்கற்பன்	கற்பனை	விகற்பன்	யோசனை	வெகுமுகர்	,,	,,
11	சந்தேகன்	அசித்தி	கலக்கன்	,,	,,	,,	,,
	பெண்கள்						
12	தீவினை	அனாசாரன்	,,	,,	,,	,,	,,
13	அகீர்த்தி	,,	பெ-மிச்சாதிட்டி, ஆ-விடயசக்கன்	,,	,,	,,	,,
14	கபடி	கலியன்	சஞ்சலன்	அதோகதி	துக்கன்	,,	,,
15	அநீதி	,,	அதன்மன்	,,	,,	,,	,,

விவேகனாதியர்கள்.

இலக்கம்.	விவேகனாதியர்கள் பெயர்.	மனைவியர்கள், பர்த்தாக்கள் பெயர்.	பிள்ளைகளின் பெயர்.
1	விவேகன்	சுமதி உபநிடதை	உபநிடதைவயிற்றில் பிரபோதன்
2	நிரூபகன்	புத்தி	நிச்சயன்
3	பொறை	உறுதி	அடக்கன்
4	சந்தோடன்	மகிழ்ச்சி	அற்புதயன்
5	சமன்	சாந்தி	அசமுகன்
6	தமன்	தாந்தி	தனிவத்துநோக்குவான்
7	விராகன்	விரத்தி	சுகன்
8	சுசீலன்	கீர்த்தி	பிரசித்தி
9	தவன்	நல்விருத்தி	பரோபகாரன்
10	தத்துவன்	புனிதை	கருமன், பெ - சிரத்தை
11	இயமன்	அயிஞ்சை	இரவாமை
12	நியமன்	மனநிலை	சத்தியன்
13	ஆதனன்	திதி	தேயன்
14	பிராணாயாமன்	பூர்த்தி	தீர்க்கவாயு
15	பிரத்தியாகாரன்	மீட்சி	நிருலேபன்
16	தியானன்	காட்சி	நிர்ச்சந்தேகன்
17	தாரணன்	திருதி	அப்பிரமன், ஆத்திகன்
18	சமாதி	தன்னிலை	நிருவிகற்பன், மோனன்
	பெண்கள்		
19	மைத்திரி	சமாதானன்	,,
20	கருணை	கருமன்	,,
21	நீதி	நியாயன்	,,
22	முதிதை	அவிரோதன்	,,
23	உபேட்சை	பூரணன்	,,

மோகனாதியர், விவேகனாதியர் வம்ச பரம்பரை

அட்டவணை முற்றிற்று.

ஓம்

பரப்பிரமணே நமஃ

பிரபோத சந்திரோதய வசநம்

கடவுள் வாழ்த்து

திருமடந்தைதன் காதலன் சிவந்ததாண் மலரும்
கருணை யந்தடங் கண்களு நாபியங் கமலத்
தொருகு ழந்தையு முடித்தபொன் முடியுந் தொடுத்த
மருமலிந்தபைந் துளவுமென் மனத்துள்வா ழியவே.

பாயிரம்

பெருமை பொருந்திய காவேரி நதியானது பக்கங்களிற் பரவிப் பெருகுதலால், புதுமையாகிய அழகிய இள வாழைகளும் இளந் தெங்குகளும் காய்க்குலைகளையுடைய இளங் கமுகுகளும் நெருங்கி, நீண்ட கதிர்க் கற்றையையுடைய செந்நெற்பயிரும் கரும்பந் தோட்டங்களும் இவைபோல்வனவாகிய பிறவும் நிலைபெற்றுப பெருக்கமடைந் திருக்கிற சோழ நாட்டிலே ஒரு வள்ளலானவன் பூர்வகாலத்தி லிருந்தனன். அவன் யாரெனின், அழகிய ஒளி வீசுகின்ற பொன்னின் மீது நவரத்தினங்கள் பதிப்பிக்கப்பெற்ற செய்குன்றுகளும், மிகுந்த வெண்மையாகிய நிலாவீசுகின்ற மேல் முற்றங்களும், முத்துக்க ளிழைத்த ஏழ் நிலைகளையுடைய மாடங்களும் கூடங்களும், எவ்விடத்தும் மேகக் கூட்டங்கள் தவழ்தற்குரிய உயர்ந்த மதில்களும் நெருங்கியிருக்கிற மாதை யென்னும் பெரிய பட்டணத்திற்கு அரசனு யிருப்பவன். அவன், அந்தணர் குலத்திற்குத் திலகம் போல்பவனும், பேரறிஞர்களுக்குத் திருமுடி போல்பவனும், மந்திரங்களெல்லா மொரு

வடிவு கொண்டாற் போல்பவனும், சதுர்வித புருஷார்த்தங்களைத் தருகின்ற பழையவேதங்கள் தவழ்கின்ற நாவினையுடையவனும், கற்பக தருவை நிகர்த்த கையையுடையவனும், அறம் பொருள் இன்பம் வீடு என்று சொல்லப்படுகின்ற நால்வகைப் புருஷார்த்தங்களின் திறந் தெரிந்து தன் செங்கோற் கீழ் வாழ்வோரை அப் புருஷார்த்தங்களை யடைதற்குரிய நல்வழியில் செலுத்துந் தொழிலை மேற்கொண்டவனும், உள்ளும் புறம்பும் ஒருங்கே பரிசுத்தமானவனும், பாவங்கள் குறையும்படி அற நூல்களை வளர்க்கின்ற மெய்ந்நெறியை யுடையவனும், உண்மையும் பழைமையு மமைந்த வேதங்களால் சொல்லப்பட்ட மார்க்கங்களை நன்குணர்ந்து ஊழிபெயரினும் நித்திய நைமித்திக நெறி தவறாதபடி அவற்றைப் பக்தியோடு அநுஷ்டித்து வருகின்ற தன்மையை மேற்கொண்டவனும், உலகத்திலுள்ள எல்லாருடைய எண்ணங்களையும் அறிந்து தன்னிடத்துக்கொண்டு காட்டுந் தன்மையினால் கண்ணாடி போல்பவனும், திண்ணிய புயங்களையுடைய அரசர்களது செம்பொன் மாமுடிகள் படியப்பெற்ற பாதங்களை யுடையவனும், எண்டிசைகளும் பரவிய கீர்த்தியை யுடையவனும், அரசுரிமைக்குரிய பற்பல தொழில்களை மேற்கொண்ட காலத்தும் குடும்ப பார கிருத்தியங்களை மேற்கொண்ட காலத்தும் அவைகளில் சிறிதும் பற்றில்லாமல் தாமரை யிலையில் நீர்போல் தோய்ந்தும் தோயாதிருப்பவனும், இல்லறம் பூண்டு பெருஞ் செல்வத்தோடு கூடியிருந்தும் பல உறவினர்களோடு அளவளாவியும் இராச்சிய பாரத்தை நடத்தியும் இவைகளில் சிறிதும் பற்றின்றி மெய்ஞ்ஞான நிலையை யடைந்திருந்த ஜநக சக்ரவர்த்தியைப்போல மெய்ஞ்ஞான நிலையை யடைந்திருப்பவனும், சர்வேசுவரனைப் பொற்றூணினின்றும் எனக்கெதிரே தோன்றியருள வேண்டுமென்று மிக்க அன்போடழைத்த பிரகலாதன் போலப் பச்சென்ற நிறத்தோடுகூடிய கோபால கிருஷ்ணனை நாள்தோறும் பூசனை செய்கின்ற சிறந்த பக்தியுடையவனும், கற்க வேண்டுவன வெல்லாங் கற்றுப் பற்பல தருமங்களை அவற்

ருல் உண்டாவதாகிய பயனிடத்து மனம் பொருந்தாவண்
ணம் செய்து அவை யனைத்தையும் ஸ்ரீ கண்ணபிரானுக்கே
சமர்ப்பணஞ் செய்கின்ற அன்புடையவனும், நீலமேகவண்
ணனாகிய திருமாலின் திருவுந்தித் தாமரையிற் றோன்றின
சதுர்முகனுக்கு நிகராய்ப் பெருமை உண்மை நல்லறிவாகிய
இவற்றிற்குக் கடல் போல்பவனும், அந்தத் திருமாலின் பெ
ருமை பொருந்திய வரத்தினால் அவதரித்தவனும், சீதாநாயக
னாகிய ஸ்ரீராமபிரானைப்போல அஷ்டதிக்கி லுள்ளாரையும்
நீதியோடு காப்பாற்றி அவர்களை நன்னெறியில் நடத்தின
வேதபாரகனும், பிறர்மாட்டுத் தயை புரிவதில் சங்கநிதி
பதுமநிதி போல்பவனும், அரசர்க்கரசனும், திருவேங்கடேந்
திர னென்னும் திருநாமத்தை யுடையவனுமாவன்.

அத்தகையோன் அறநூல்கள் கூறியவாறு உலகத்தைப்
பாதுகாத்துவருங்காலத்தில், அருட்கடலும் சற்குருவுமாகிய
இராகவாநந்தரது திருவடித் தாமரைகளை வழிபட்டு வருவா
னாயினன். அவ்வாறு வழிபட்டுவரும் நாளில் ஒருநாள் அவ்வி
ராகவாநந்த ரென்னும் சற்குரு நாதர் அவ்வரசனது உள்ளக்
குறிப்பை யறிந்து, 'ஓ அரசனே! உனக்கு யான் சொல்ல
வேண்டுவ தொன்றுண்டு, அதனைச் சொல்லுகின்றேன், சிரத்
தையோடு கேட்பாயாக' என்று கூறி, முகமலர்ச்சியோடு,
'தர்மார்த்த காமங்கள் உலகத்தார் அடையும்படி அவர்களைத்
திருத்தின நீ அவர்கள் மோட்சத்தையு மடையும்படி ஞான
நூல் ஒன்று செய்யக்கடவை' என்றருளினர். அதனைக்கேட்ட
அரசன் சற்குருநாதரை நோக்கி, 'சுவாமீ! தேவரீர் நியமித்த
படி ஞானநூலைச் செய்தல் துறவறத்தை யடைந்த மகான்
களுக்கே யன்றி, இல்லறம் பூண்டு வாழ்கின்ற எம்போல்வாரு
க்கு இயல்வதன்று' என்று விண்ணப்பஞ் செய்தனன். அவ்
விண்ணப்பத்தைக் கேட்ட இராகவாநந்த யோகியானவர் அர
சனை நோக்கி, 'அரசனே! ஞானியர் இல்லற வாழ்க்கையி லிருந்
தால் அவர்களுக்கோர் கெடுதியுமில்லை, அஞ்ஞானியர் காட்டி
லும் மலைக்குகையிலும் வாழ்ந்தாலும் ஒரு நன்மையுமில்லை,

நீண்ட உடம்பினையுடைய பெரும் பாம்பு மலைக்குகையில் வாழ்ந்தாலும் மிக்க கோபத்தையுடைய புலியானது காட்டில் வாழ்ந்தாலும், என்ன பிரயோசனத்தை அவைகள் அடையும்? மெய்ஞ்ஞானியா யிருப்பவன் இல்லறத்தி லிருந்தாலும் துறவறத்தி லிருந்தாலும் அவனுக்கு அவைகளால் உளவாகின்ற சிறுமை பெருமைகளில்லை. ஆதலால், நீ இல்லறத்தானென்று அஞ்சவேண்டாம். யான் நியமித்தபடியே ஒரு ஞானநூலை யியற்றுவாய்' என்று கட்டளையிட்டார்.

அரிதாகிய தவத்தை யுடையவராகிய இராகவாநந்த யோகிகள் அருளிச்செய்த சொற்க ளெல்லாவற்றையும் அரசன் தன் மனத்திற்கொண்டு, களிப்பினால் உடல் பூரித்து, தன் பொருட்செல்வ முழுதும் உலகத்தார்க்குக் கொடுத்தல்போல அருட்செல்வத்தையும் (ஞானச் செல்வத்தையும்) கொடுக்க வேண்டுமென்று சிந்தித்து, நன்மையைத்தரும் வேதாந்த நூல்க ளெல்லாவற்றையும் தொகுத்து ஆராய்ந்து, உலகவழக்குக்கு விரோதிக்காமல் உருவகப்படுத்தி, யாவருக்கும் மெய்ஞ்ஞானத்தைத் தருகின்ற இனிய கதையொன்றை எக்காலத்தும் உலகத்தில் நிலைபெற்று விளங்கும்படி செய்யவேண்டுமென்று தன் மனத்தில் நிச்சயித்து, உலகிலுள்ள மனிதருக்கு ஆயுளோ அற்பம், அந்த அற்ப ஆயுளுள்ளும் கொடிய பிணி, இளமை, மூப்பு, தூக்கம், சோம்பல், ஆசை, மனோசலநம் முதலியவற்றை நீக்கிக் கற்பது அரிது, கற்றாலும் தமது அறிவாகிய கொள்கலம் மிகச்சிறிது, ஞானநூற் கடல் மிகப் பெரிது என்று இவை முதலிய விஷயங்களை நன்றாய்ச் சிந்தித்து, முற்காலத்தில் திருப்பாற்கடலைத் திருமாலானவர் கடைந்து அதில் உண்டாகிய அமிர்தத்தை எடுத்துத் தேவர்களுக்குக் கொடுத்தாற்போல, வேதாந்தமாகிய பாற்கடலைத் தனது யுத்தியாகிய மத்தினாற் கடைந்து, ஞானாமிர்தத்தைத் திரட்டியெடுத்து, இவ்வுலகத்தில் பிரபோதசந்திரோதயம் என்னும் பெயருள்ள ஒரு நாடகத்தைச்செய்த கிருஷ்ணமிசிரனும் நாணும்படி, திருவேங்கடேந்திரனென்பவன் அந்த நாடகத்தைப்

பூசுரர்க்கு உபயோகமாகும்படி வடமொழியிற் செய்ததுமல்லாமல், மற்றெல்லா வருணத்தார்க்கும் உபயோகமாகும்படி தென்மொழியிலும் கற்பதற்கெளிய நடையிற் செய்தருளினான்.

பாயிரம் முற்றிற்று.

---

1. உற்பத்திச் சருக்கம்

நீர்ப்பெருக்கைக் கானலினிடத்துக் கண்டாற்போல, ஆகாய முதலிய பஞ்சபூதங்கள் ஒன்றிலொன்றுண்டாகிவேறுன்றி உலகவுருவாய், ஆராய்கின்ற மெய்யுணர்வில்லாதவர்களுக்கு உண்மையாகவும் அவ்வுணர்வுள்ளவர்க்குப் பொய்யாகவும் போகின்ற கயிற்றரவு போலுதலால், அதன் தொடர்பை விடுத்து, பரிபூரணானந்த ரூபமாய் நிர்மலமாய்த் தழைத்தோங்குகின்ற பேரொளியாய் அழகைக் கொண்டிருக்கிற ஆத்ம போதத்தை வணங்கி, இதய கமலத்தில் வைத்து எக்காலத்தும் வாழ்வோம்.

இடை பிங்கலைகளில் இயங்காதபடி இடை நாடியாகிய சுழுமுனையில் நிறுத்தப்பட்ட வாயுவினால் உச்சியை யடையும்படி செய்தும், உபசாந்தி மிகுந்த யோகியின் மனத்தில் நிறைந்த ஆனந்தக்கடலிற் படிந்தும், பூமி முதலாகிய எல்லா வுலகங்களிலும் வியாபித்தும், இளம் பிறையை யணிந்த சடையையுடைய சிவபெருமானது நெற்றிக் கண்போலக் காட்டுந் தன்மையால் தடையறக் காணும்படியாயும் விளங்குகின்ற சின்மயமாகிய உள்ளொளியானது எக்காலத்தும் மேன்மை யடைந்து தழைத்து வாழக்கடவது.

அத்துவிதம், வாசாமகோசரம், மனோதீதம், அசலம், மூலம், தத்துவம், அப்பிரமேயம், சர்வசமம், சச்சிதானந்தம், சாந்தம், சுத்தம், அவ்வியக்தம், அவிகாரம், அநுபவம், துரியம், சுயம்பிரகாசம், நித்தியம், நிர்க்குணம், அநந்தம், நிரதிசயம், பிரமம் என்று வேதாகமாதிகளாற் சொல்லப்படும்

மெய்ப்பொருள் ஒன்றுண்டு. அந்தப் பிரமப்பொருள் சிறிதும் விகாரமில்லா திருக்கவும் அதன் சந்நிதியில், காந்தம் அசையா திருக்கவும் அதற் கெதிரே ஊசியானது விகாரப் படுவதுபோல, மாயை யென்னும் ஒரு பெண்ணானவள் விகாரத்தை யடைந்து கருப்பந்தாங்கி மாநதன் என்னும் ஒரு புத்திரனைப் பெற்றாள். இருளை ஒளியாகவும் ஒளியை யிருளாகவும் இன்பத்தைத் துன்பமாகவும் துன்பத்தை யின்பமாகவும் செய்யவல்ல மாயையானவள், அந்தப் புதல்வனை அன்போடு தன் மார்பிலணைத்துத் தாலாட்டிப் பாராட்டிச் சீராட்டி நீராட்டி ஊணூட்டி வளர்க்க, அவனும் தன் தந்தையாகிய பரத்தில் ஒரு புல்லுருவி முளைத்துச் செழித்தாற்போலச் செழித்து வளர்ந்தான்.

அந்த மாநதன் என்னும் புத்திரன், தனக்குத் தகுதியான பருவம் வாய்த்தவுடன், தன் தாயாகிய மாயாதேவி மனங்களித்து நோக்கி நிற்க, பிரவிர்த்தி நிவிர்த்தி என்னும் இரண்டு பெண்களை மணம்புணர்ந்து இனிதாக வாழ்ந்து வருங்காலத்தில், முதல் மனைவியாகிய பிரவிர்த்தி யென்பவள்: மோகன், அகங்காரன், மதநன், மாநன், காமன், கோபன், மச்சரன், சங்கற்பன், இராசதன், சந்தேகன், தாமதன் என்னும் புதல்வரையும்; தீவினைமாது, கபடி, அகீர்த்தி, அநீதி என்னும் புதல்வியரையும் ஈன்றாள்.) இரண்டா மனைவியாகிய நிவிர்த்தி யென்பவள் (விவேகன், நிரூபகன், சாந்தன், சந்தோஷன், சமன், தமன், விராகன்; இயமன், நியமன், ஆசனன், பிராணயாமன், பிரத்தியாகாரன், தியாநன், தாரணன், சமாதி என்று சொல்லப்படுகிற எண்மர்; சத்துவன், அமுதன், தவன் ஆகிய இப் புதல்வரையும்; மைத்திரி, கருணை, நீதி, முதிதை, உபேக்ஷை என்னும் புதல்வியரையும்,) பாற்கடலானது உலகத்தார்க்கு அமிர்தத்தைக் கக்கினதுபோலப் பெற்றாள்.

மாயையானவள் தன் மகனாகிய மாநதனுக்கு வாய்த்த மனைவிய ரிருவரிடத்து முண்டான புதல்வருக்கும் புதல்வியருக்கும் மணஞ்செய்விக்க நினைத்து, மோகன் என்னும் புதல்

பிள்ளைக்குந் துன்மதி யென்னும் பெண்ணை மணம் புணர்வித்து, பிறகு அகங்காரனுக்கு அகந்தையையும், காமனுக்கு இரதியையும், கோபனுக்குக் கொலையையும், மச்சரனுக்கு அசூயையையும் மணம் புணர்வித்தாள். அதன்பிறகு, மதனனுக்கு மறதியையும், மானனுக்கு வெருமதியையும், இராசதனுக்கு முயற்சியையும், தாமதனுக்குச் சோம்பலையும், சங்கற்பனுக்குக் கற்பனையையும் மணம் புணர்வித்தாள். பிறகு, சந்தேகனுக்கு அசித்தியை மணம் புணர்வித்தாள். அதன் பிறகு, அந்தப் பிரவிர்த்தி பெற்ற புதல்வியர் நால்வருக்கும் மணம் செய்விக்கக் கருதி, தீவினை அகீர்த்தி என்னு மிருவரையும் அநாசாரனுக்கு மணம் புணர்வித்து, கபடம் அநீதி என்னு மிருவரையும் கலியனுக்கு மணஞ்செய்வித்தாள்.

இங்ஙனம் மணஞ்செய்து கொண்டவர்கள் இனிதாக வாழ்ந்துவருங் காலத்தில், அகங்காரன் அகந்தையைக் கூடி மமதை என்னும் ஒரு புதல்வியையும், லோபன் என்னும் ஒரு புத்திரனையும் பெற்றான். அந்த லோபனும் இச்சை என்னும் பெண்ணை விரும்பிப் புணர்ந்து மிகு சமர்த்தனாகிய இடம்பனைப்பெற்றான். அந்த இடம்பனும் வஞ்சனை என்னும் மாதைத் தழுவி அசத்தியனைப் பெற்றான். காமராஜன் இரதி தேவியைப் புணர்ந்து விடயானந்தன் என்னும் புத்திரனைப் பெற்றான். கோபன் கொலை என்னும் மாதைப் புணர்ந்து கலகனைப் பெற்றான். மறதி என்பவள் மதனனைப் புணர்ந்து அனர்த்தனைப் பெற்றாள். கெடுதி என்பவள் அனர்த்தனைப் புணர்ந்து நாசனை யீன்றாள். அசூயை யென்பவள் மச்சரனைப் புணர்ந்து வயிரனைப் பெற்றாள். வயிரன் தேவியாகிய அமரியாதை என்பவள் அக்கிரமனைப் பெற்றாள். மானனுக்கு வாய்த்த வெருமதி என்பவள், வயிற்றில் உற்சாகன் என்பவன் பிறந்தான். கற்பனை என்பவள் சங்கற்பனைப் புணர்ந்து விகற்பனைப் பெற்றாள். அந்த விகற்பன் யோசனை என்னும் பெண்ணைப் புணர்ந்து வெகுமுகன் என்னும் புதல்வனைப் பெற்றான். அசித்தி என்பவள் சந்தேகனைப் புணர்ந்து கலக்கன் என்னும் புதல்

வனைப் பெற்றாள். சோம்பி என்பவள் தாமதனைப் புணர்ந்து நித்திரை அசிரத்தை என்னும் இரண்டு பெண்களைப் பெற்றாள். முயற்சியைப் புணர்ந்த இராசதன் சிரத்தை என்னும் ஒரு புத்திரியையும், காரியன் என்னும் ஒரு புதல்வனையும் பெற்றான். அநாசாரனைப் புணர்ந்த அகீர்த்தியினிடத்து மிச்சாதிட்டி என்னும் பெண்ணும், விடயசங்கன் என்னும் புதல்வனும் தோன்றினார்கள். கலிபன் என்பவன் கபடியைக் கூடிச் சஞ்சலன் அதமன் என்னும் இரண்டு புதல்வரைப் பெற்றான். அதர்மன் அதோகதியைப் புணர்ந்து துக்கனைப் பெற்றான்.

இவ்வாறாகப் பிரவிர்த்தியின் மக்களாகிய மோகன் முதலானோருடைய மணத்தையும் அவர்களுடைய மக்கட் பேற்றையுஞ் சொன்னோம். இனி நிவிர்த்தி மக்களாகிய விவேகன் முதலான உத்தமருடைய மணத்தையும் அவர்களுக்குப் பிறந்த மக்களையும் விவரித்துச் சொல்லுவோம்.

விவேகன் என்னும் அரசன் சுமதி என்னும் மாதை மணம் புணர்ந்தான். நிரூபகன் உத்தி என்னும் பெண்ணை மணம் புரிந்தான். சாந்தன் உறுதி என்னும் மாதை மணம் புரிந்தான். சந்தோஷன் மகிழ்ச்சியைப் புணர்ந்தான். சமன் சாந்தியையும், தமன் தாந்தியையும் மணம் புரிந்தார்கள். விரக்தி மாதை விராகன் மணஞ்செய்தான். சுசீலனுக்குக் கீர்த்தி என்பவள் மனைவியாக வாய்த்தாள். தவன் நல்விருத்தியை மணம் புரிந்தான். சத்துவன் புனிதை என்னும் பெண்ணை மணம் புரிந்தான். இயமன் அஹிம்சை என்னும் மாதைக் கடிமணம் புணர்ந்தான். மனநிலை என்னும் பெண் நியமனைத் தனக்குப் பர்த்தாவாகப் பெற்றனள். ஆதனன் திதியை மணந்தான். பிராணாயாமன் பூரத்தியைச் சேர்ந்தான். பிரத்தியாகாரன் மீட்சியைப் புணர்ந்தான். தியானன் காட்சி என்பவளைக் கூடினான். திருதி என்பவள் தாரணனுக்குத் தேவியானாள். சமாதி தன்னிலை என்னும் பெண்ணைச் சேர்ந்தான்.

இவ்வாறு மணம் புணர்ந்த விவேகனாதியர் இன்புற்று வாழுங்காலத்தில், அந்த நிவிர்த்தி யீன்ற பெண்களில் மைத்

திரி என்னும் பெண் சமாதானனுக்கும், நீதி என்னும் பெண் நியாயனுக்கும், கருணை என்னும் பெண் தருமனுக்கும், உபேக்ஷை என்னும் பெண் பூரணனுக்கும், முதிதை என்னும் பெண் அவிரோதனுக்கும் வாழ்க்கைப்பட்டார்கள்.

உத்தி என்பவள் நிரூபகனைப் புணர்ந்து நிச்சயனை ஈன்றாள். உறுதி மாது சாந்தனைப் புணர்ந்து அடக்கனைப் பெற்றாள். மகிழ்ச்சி என்னும் பெண் சந்தோஷனைப் புணர்ந்து அற்புதயனைப் பெற்றாள். சமன் சாந்தி என்னும் தந்தை தாயருக்கு அகமுகன் புதல்வனாகப் பிறந்தான். தாந்தி என்பவள் தமனைப் புணர்ந்து தனிவத்து நோக்குவானைப் பெற்றாள். விராகன் மனைவியாகிய விரக்தி சுகனை ஈன்றாள். கீர்த்தி என்பவள் சுசீலனைப் புணர்ந்து பிரசித்தி என்னும் புதல்வியைப் பெற்றாள். தவன் நல்விருத்தி என்னும் தந்தை தாயருக்குப் பரோபகாரன் என்னும் புதல்வன் பிறந்தான். சத்துவனைப்புணர்ந்த புனிதை என்னும் மாதின் வயிற்றில் தருமன் என்னும் புதல்வனும் சிரத்தை என்னும் பெண்ணும் தோன்றினார்கள். அந்த சிரத்தை என்னும் பெண்ணினிடத்தில் சாந்தியென்னும் ஒரு பெண் பிறந்தாள்.

இயமனைச் சேர்ந்த அஹிம்சை என்பவள் இரவாமை என்னும் மகவை யீன்றாள். நியமனைக் கூடிய மனநிலை யென்னும் பெண் சத்தியனைப் பெற்றாள். ஆதனனைச் சேர்ந்த திதி என்பவள் தேயனைப் பயந்தாள். பூர்த்தியை மணந்த பிராணாயாமன் தீர்க்காயுவைப் பெற்றான். மீட்சியைப் புணர்ந்த பிரத்தியாகாரன் நிர்லேபனைப் பெற்றான். காட்சியைப் புணர்ந்த தியானன் ஐயமில்லானைப் பெற்றான். தாரணனைக் கூடிய திருதி என்பவள் அட்பிரபன் ஆத்திசன் என்னுமிருவரைப் பெற்றாள், சமாதி தன்னிலை என்னும் தந்தை தாயருக்கு நிர்விகற்பன் மோனன் என்னுமிருவர் உண்டானார்கள்.

முற்காலத்தில் காசிப முனிவரது மனைவியாகிய திதியும் அதிதியும் பெற்ற அசுரரும் சுரரும்போல, மூத்தவளா

கிய பிரவிர்த்தி என்பவள் ஈன்ற மோகன் முதலாகிய மூட மக்களும், இளையவளாகிய நிவிர்த்திபெற்ற விவேகன் முதலிய மதியுடை மக்களும் செழித்து வளர்ந்து வருங்காலத்தில், மாயாதேவியானவள் தன் மகனாகிய மாநதன் மணம் புரிந்து கொண்ட பிரவிர்த்தி நிவிர்த்தி என்னும் பெண்கள் பெற்ற புதல்வர் கூட்டம் யமுனைநதியும் கங்காநதியும்போலத் தன் பக்கத்திற் பரவி நின்று விளங்குங் காட்சியைக் கண்களிக்க நோக்கி ஓர் கபட சிந்தனை செய்வாளாயினாள்.

உற்பத்திச்சருக்கம் முற்றிற்று.

2. மோகன் அரசாட்சிச் சருக்கம்

நமக்கு நாயகனாக வாய்த்த மகாபுருஷன் விஷயவிருப்பமில்லாதவனும், நீங்காத இளமையைப் பெற்றிருந்தும் ஒருபோதும் நம்மைக் கண்ணெடுத்துப் பாராதவனுமாயிருக்கின்றான், ஆதலால் மூன்றுலகங்களையுங் காக்கின்ற முதன்மையை நமது புதல்வனாகிய மாநதனுக்குக் கொடுத்துவிட்டு, நம் கணவனை நீங்கித் தனித்திருந்து களித்து வாழ்வோமென்று மனத்திற் கொண்டாள். தன் தாய் மாயாதேவியின் எண்ணத்தைக் குறிப்பாயறிந்த மைந்தனாகிய மாநதன், தனக்கிருப்பிடமாக விசித்ராலங்காரமான நவத்துவார புரங்கள் அளவில்லாதவைகளா யுண்டாக்கிக் கொண்டு, அவ்வப் புரங்களிலெல்லாம் தன் தந்தையாகிய பிரமத்தை அணுவளவாக நிறுத்திச் சிறையிட்டு வைத்தான். இப்படிச் சிறைசெய்யப்பட்ட தந்தையானவன் ஒருவனேயாயினும் உலகத்திலுள்ள பலகோடி யுடம்புகளிலும் அங்கங்கே வியாபித்து விளங்குதல் எப்படியிருந்ததென்றால், படர்ந்த கிரணங்களையுடைய சூரியன் ஒருவனேயாகியும் தொகைப்பட நிரைக்கப்பட்ட தெண்ணீர்க் குடங்கள்தோறும் தனித்தனியே பிரதிபிம்பித்துக் காட்டுதல் போலிருந்தது. அவ்வாறு அந்த மாநதன் தன் தந்தையைச் சிறைசெய்தது கண்ட மோகாகங்காரர் நன்று நன்றென்று

தாழுங் களித்துப்பற்ற, அதைக்கண்ட காமனாதியரும் நெருக்கி மேன்மேலும் வருந்தும்படி ஆசை முதலிய கயிறுகளா லிறுக்கிக் கட்டினார்கள். மாயையாகிய பாட்டியானவள் வஞ்சனையை நினைந்த விதத்தையும், தன் தாய் கருத்தை யறிந்த மாநதனாகிய புதல்வன் பாட்டனைச் சிறைசெய்த விதத்தையும், காமனாதியர் ஆசையாகிய வலிய கயிற்றாற் கட்டின விதத்தையும், துக்க ரஹிதனாகிய ஈசனுக்குத் துக்கமுண்டான விதத்தையும் கண்ட விவேகனானவன் மனங்கலங்கி, கொடியகண்டகர் செய்த வஞ்சனையானது பழைய நூல்களாற் சொல்லப்பட்ட தருமமார்க்கமன்று, இதைக் கண்டவர்களும் பாவத்துக் காளாவார்கள் என்று சிந்தித்து, நாம் சும்மாவிருப்பது தகுதியன்று என் றெழுந்து, தந்தையாகிய மாநதன் பாதத்தை வணங்கி, 'ஐயனே, உன்னை ஈன்ற தந்தையைச் சிறையிட்டு, தாயாகிய மாயையின் வஞ்சனை வழியில் நடப்பது நன்னெறி யன்று; தருமம் இன்பத்தைத் தருமேயன்றித் தருமத்துக்கு மாறான காரியங்கள்யாவும் அப்பொழுது இன்பம்போலத் தோன்றினாலும் பச்சை மண் பாண்டமானது தன்னிடத்துள்ள நீரோடு தானும் கெட்டுப் பயன்படா தழிதல்போல ஒரு கணப்பொழுதி லழிந்து துன்பத்தையே கொடுக்கும்; அந்தத் தருமமாவது யாதெனில், தந்தையே அருட்டெய்வம் என் றெண்ணுந் தன்மையேயாம்; அந்தத் தன்மையை விட்டுப் பிதாவைப் பின்ன பின்னங்களாகப் பேதகஞ் செய்தல் உனக்குத் தகுமோ' என்று சொன்னான். இதைக் கேட்ட மாநதன் விவேகனை நோக்கி, 'தாயானவள் தந்தையைப் பார்க்கினும் மேன்மை யுள்ளவள்; "அன்னையும் பிதாவு முன்னறி தெய்வம்" என்ற பெரியோர் வாக்கியங்களுக்கு ஒத்து நடக்க வேண்டாமா? துறவாச்சிரமத்தை யடைந்த சந்நியாசிகளும் வந்து தாயைத் தொழுவதுண்டு; ஆதலால், என் தாய் தன் உளத்துட்கொண்ட எண்ணத்தின்படி செய்தலே எனக்கு நீதியாவதும் தருமமாவதும் என்று ஆலோசித்துத் துணிந்து அளவற்ற நவத்துவார புரங்கள் தோறும் என் தந்தை[illegible] சிறையிட்டு வைத்தேன்' என்றான். அது கேட்ட உயர்

ந்த அறிவையுடைய விவேகன், மானதனை நோக்கி, 'பெரியோர் தாயின் பாதங்களை வணங்குதல் அரசமரத்தையும் திருத்துழாயையும் பசுவையும் வணங்குவதுபோன்ற வணக்கமேயன்றி, புத்தி கேட்பதற்கு வணங்கும் வணக்கமன்றே; "அன்னையும் பிதாவு முன்னறி தெய்வம்" என்ற வாக்கியார்த்தத்தை நன்குணர்ந்த பரசுராமரானவர் தாயினும் தந்தை சிறந்தவனென் றெண்ணியன்றோ, தந்தையாகிய சமதக்கினியின் கட்டளையைச் சிரமேற்கொண்டு தாயாகிய ரேணுகையைக் கண்டதுண்டங்களாய் வெட்டியெறிந்தது! ஸ்ரீ ராமர் வனவாசஞ் செய்யப்போகுங் காலத்தில் தமது தந்தையாகிய தசரத சக்ரவர்த்தியின் வார்த்தையைச் சிரமேற்கொண்டாரன்றித் தமது மரவுரி முதலியவற்றை நோக்கி நினைந்து அழுது இரங்கிய தாய் கௌசலையின் கண்ணீரைத் துடைத்தாரா? அதற்குக் காரணம் தாயினும் தந்தை சிறந்தவனென்பதன்றோ? இவைகளை யெல்லாம் நன்றாய் ஆலோசித்துத் தாயை அவமதித்தாலும் தந்தையை அவமதிக்கலாகா தென்பதைக் கடைப் பிடித்து அவனிடத் தன்பு கொண்டு விரைந்து சென்று அவனைச் சிறை விடுத்தலே தருமம்' என்றான்.

அந்தச் சொல்லைக் கேட்ட மாநத ராஜன், தன் புதல்வனாகிய விவேகனைச் சினந்து நோக்கி, 'பிள்ளாய், தந்தையாயினும், மனைவியாயினும், மைந்தனாயினும், தமது குடிக்குக் கேடு நினைப்பாராயின் அவரோ டுறவு செய்யலாமோ? உலகத்திலுள்ள மனிதர், பயிர் செழித்து விளையும்பொருட்டு முன்னே யுழுத எருதாயினும் அந்தப் பயிரை யழிக்கப் புகுந்தால் பார்த்துக்கொண் டிருப்பார்களோ? பயிரழிக்கா போமென்று விரைந்துவந்து வலிய கயிற்றால் பிணித்துத் தொழுவத்திற் கட்டி வைப்பாரல்லவோ? பொல்லாத நடக்கையரே யாயினும் உறவினரைத் தம்முள்ளே யடக்கிக் கொள்ளவேண்டும், அடங்காதாரை உடனே நீக்கவேண்டும், அப்படிச் செய்யாவிட்டால் அவரால் தீங்கு நேரிடும்; சோறுக்குதற்கு இன்றியமை

யாத நெருப்பை மடைப் பள்ளியில் ஒரு புறத்து வைத்துச்
சிறை செய்யாமல் விட்டால், அந்த நெருப்பானது ஊர் முழு
தும் சுட்டெரிக்கு மன்றோ? இவ் விடயங்களை யெல்லாம் ஆரா
ய்ந்து, இனிதாகிய நமது குலத்தில் தோன்றின புத்திர
பௌத்திராதியராய்க் கிளைக்கின்ற உறவினரைக் கெடுத்தலே
அவனது எண்ண மாதலால் அவனை யான் சிறையிட்டு வைத்
தேன்' என்றான்.

இவ்வாறு சொன்ன மாநதனை விவேகன் நோக்கிக்
கைகூப்பி வணங்கி, 'நிலத்தியற்கையால் நீரின்தன்மை குறைந்
தாற்போலத் தாயின் குணத்தை மேற்கொண்ட தல்லாமல்
தந்தையின் குணத்தை விரும்பினா யல்லைபோலும்; இராவண
னானவன் உத்தமனாகிய தந்தையின் குணத்தைப் பொருந்தா
மல் பொல்லாதவளாகிய தாயின் குணத்தைப் பொருந்தின
மையால் தனது குலத்தோடும் நரரும் வாநரருமாகிய இவர்
களால் நசித்தது லோகப்பிரசித்தமன்றோ? ஆகையால், நீயும்
நன்னெறியை விட்டுத் தீநெறியி லொழுகுகின்ற தாய்வார்த்
தையைக் கேட்டு நடப்பையாயின், இம்மையில் பழியையும்
அற்பாயுளையு மடைந்து, மறுமையில் நரகத்தை யடைவதே
யன்றிப் பேரின்ப வீட்டையும் இழந்துபோவாய்' என்றான்.

இதனைப் பக்கத்திலிருந்த மோகன் கேட்டெழுந்து,
விவேகனை நோக்கி, 'தம்பி, இலங்கை வேந்தன் தாயின் செய்
கையை மேற்கொண்டதனால் உயிரிழந்தா னென்றாய், அது
உண்மையே யாகட்டும்; தந்தைக்கு மாறாகப் புத்திரர் எழு
தல் தகாத காரியமென்று முன்னமே சொல்லி யிருக்கிறா
யல்லவா? இப்போது இங்கே உன்னோடு வாது செய்வது
உன் தந்தையன்றோ? நீ இங்கே பேசவந்ததும் உன் தாயின்
செய்கையன்றோ? ஆதலால், நீ இருவழியிலும் குற்ற முடை
யவனாகின்றாய், இதற்கு நீ சொல்லத்தகுந்த சமாதானமே
யாதேனு முளதாயின் சொல்லக் கடவாய்' என்றான். அது
கேட்ட விவேகன் மோகனைப்பார்த்து, 'மோகா, நீ அறியாது
வினவினாய், பெற்ற தாய்தந்தையர் தீநெறியிற் சென்றால்,

அவரை விட்டு நீங்குவதே விவேகிகள் செய்கை. இராவண
னது தாய் பெற்ற பிள்ளைகளில் இராவணனும் கும்பகர்ண
னும் தீநெறியிற் சென்று வீணே மடிய, நன்னெறியிற் சென்
றவனாகிய விபீஷணன் நன்மையடைந்து இன்றும் உயிர்பெற்
றிருப்பதைக் கேட்டறிந்திலையோ' என்று மறுத்தான்.

இவ்வாறு மறுத்த சொல்லானது மாநதன் செவியிற்
புகுந்தவுடனே அவன் மிகுந்த கோபத்தோடும் எழுந்து
விவேகனை நோக்கி, 'அடா விவேகா, வேய், கதலி, நண்டு, முத்
துச்சிப்பி என்பவற்றைப்போல என்குலத்துக்கு நாசகாரணன்
நீயேயாகிறாய், என்னை வருந்திப் பெற்ற தாயைக் கொலை செய்
யும்படி எனக்குப் புத்தி சொல்லுகிறாய், இது மிகவும் அழ
கிது! திதியின் வயிற்றில் தோன்றிய இரணியாதிகளைக் கொல்
லப் பிரகலாதன் தோன்றினாற்போல, நீயும் எமது குலத்
தைக் கெடுக்க நிவிர்த்தி வயிற்றிற் பிறந்தாய்போலும்; எமது
தந்தையை யாம் விஞ்சவொட்டாமல் தடுத்ததே யன்றி அவ
ரைக் கொலைசெய்யவில்லை; நீயோ எங்களை யெல்லாம் அடி
யோடு நாசமாக்குதற்கு ஒரு கோடரிக்காம்புபோன் றிருக்
கிறாய்; உன்னியற்கையை மாற்ற எம்மால் முடியாது; இனி
உன் கருத்துப்போல எங்களுக்கெல்லாம் நீ பகைவனாகி, எங்
களையழித்து, திரிலோகத்தையும் கைப்பற்றும் வழியைத்
தேடுவாயாக' என்று அவ் விவேகனைத் தூரமாகப்போக்கி,
பக்கத்தில் நின்ற மோகனைக்கூவி, அவனை மார்போடணைத்து,
'அப்பா, நான் என் தந்தையைச் சிறைசெய்த காலத்தில் என்
குறிப்பறிந்து விரைந்தோடி வந்து முன்னே நின்று, காமா
தியருடன் பாசங்களால் இறுகக் கட்டி அசையவொட்டாது
தடுத்தவன் நீயன்றோ? உன்னைப்போன்ற சற்புத்திரன் வேறு
யாவன்? உன்னைப் பெறுதற்கு நான்செய்த புண்ணியமே
புண்ணியம்! என்னையோ முதுமைப்பருவம் வந்தடுத்தது;
முதிர்ந்த ஆலமரத்துக்கு அதன் வீழ்போல், இந்த முதுமைப்
பருவத்தில் என்னைக் காப்பாற்றுதற்கு நீயும் உன் தம்பிய
ரும் முற்பட்டு நின்றீர்கள். இனி எனக்கு யாதொரு குறையு

யில்லை; ஆதலால், எனது ராஜ்யபாரத்தை நீயே தாங்கக் கட வை' என்று கூறி, அவனுக்கு மகுடாபிஷேகம் பண்ணி, என் தந்தையை வெளிப்படவொட்டாது சிறைப்படுத்தி, என்னோடு நீடூழிகாலம் அரசாளுவாயென்று வாழ்த்தினான். கொம்பில்லாதிருந்த ஒரு கொடும் புலிக்கு ஒரு கொம்பு வாய்த்தாற்போல, மோகனுக்கு ராஜ்யாதிகாரம் உண்டாதலும், இவன் முன்னிலும் பதின்மடங்கு அதிகமான வீரசூரத்வமும் புஜபல பராக்கிரமமும் அடைந்து, தந்தை குறிப்பின்படியே நிவிர்த்தியையும் அவள் புதல்வராகிய விவேகனாதியரையும் தன் ராஜ்யத்தின் எல்லையில் நிற்கவு மிடங் கொடாமல் ஓட்டிவிட்டு, முப் புவனத்திலும் தன்கோலை செலுத்தி வாழ்ந்திருந்தான்.

மோகன் அரசாட்சிச் சருக்கம் முற்றிற்று.

---

3. அவித்தியாபுரச் சருக்கம்

அளவற்ற கொடியோரான மோகனாதியரால் ஓட்டிவிடப்பட்ட விவேகனும், அவனுக்கு இளைஞரும், சுற்றத்தவரும், சுமதிமாதும் மிக்க தளர்வுடையவராய்ப் புறமே போய், புண்ணிய ஸ்தலங்கள் எங்கெங்குளவோ ஆங்காங்கு தனித்தனி சென்று ஒதுங்கிக் காலங்கழித்து வருவாராயினர். தருமநெறியி லிருப்பவரான இவர்கள் துயரமுற்றதினாலே, பூமியில் திசைகள்தோறும் பொருந்திய இந்திரன் முதலிய தேவர்கள் யாவரும் தங்கள் தங்கள் இடங்களைவிட்டு ஓடிப்போனார்கள். அப்பால் மோகராசன், தனக்குப் பகைஞராயுள்ளோர் வேறு யாருமில்லாமையாலும், தன்னிடத்தேயுள்ள துணைப்படை வலியினாலும், அளவில்லாத செல்வத்தாலும் மிக்க செருக்குடையனாகித் தன் மனைவியாகிய துன்மதியின் உபபலத்தினாலே, கல்லாமை, கொலை, களவு; துராசை, இன்சொற் சொல்லாமை, நம்பிக்கையின்மை, கோபம் முதலிய தீய குணங்களையன்றி, நன்மை சிறிதேனுமில்லாத தீயவர்களுடைய

இருதயமாகிய அவித்தியாபுரம் என்னும் ஒரு நகரத்தை யமை த்தான். அந் நகருக்கு மாமன், மனைவி, தாய், தந்தை, குழ ந்தை என்றிந்த மயக்கத்தை யுண்டாக்கும் இனமென்னும் அகழியும், ஒருவராலும் ஒழிக்க முடியாத சங்கற்பமென் னும் மதிலும், யான் எனது என்னும் மதிலுண்மேடையும், தீயவொழுக்கமாகிய காட்டரணும், பஞ்சேந்திரியக் காவலும், விஷயங்கள் வெளிப்படாவண்ணம் விரைந்து அகப்படுத்தும் சூத்திரப் பொறிகளும், கோபம், கொலை, பாதகம் இவைபெ ற்று உலகெல்லாவற்றையு மொருநொடியுள் வலம் வரத்தக்க பலகோடி சேனுவீரரும், எது பெறினும் அமையாத அவா என்னும் கிரிதுர்க்கமும் அமைத்தான். அந் நகரம் நேராகச் செல்லும் நெறியின்றி அதர்ம நெறியிற் செல்லும் கோண லுடையதாயும் அறிவின்மை கொண்ட வளைவான வாச லுடையதாயு மிருந்தது.

பின்னரும் இரண்டு காலை நிறுத்தி, மேலே இரண்டு கையைப் பூட்டி, முதுகெலும்பா லிணைத்து, முகட்டின் மேலே பழுக்கழிகளை யிட்டு, நரம்புகளாற் கட்டி, மயிர்த்தோ லால் வேய்ந்து, புலாற் சுவரெடுத்து, போக்கு வரவுக்கு இரு வாசலும் ஏழு சாளரங்களும் சாக்கிரம் முதலிய நான்கு தள அடுக்கும் அவற்றின்மேலே சிகரமும் கூந்தலாகிய நீண்ட கொடியும் அமையும்படி நான்முகத் தச்சனால் ஒரு சித்திர மாடமியற்றுவித்தான். இத்தன்மையாக இயற்றப்பட்ட மாளி கைபோல, கணப்பொழுதில் ஆயிரமாயிரமான மாளிகை களைக் கட்டி வினை யழித்தழித்துப் புதுமாளிகைகளைச் செய் வான். அப்படிப்பட்ட மாளிகையில் இந்த மோகன் தனது தேவியாகிய துன்மதி சமேதனாய் அங்கு அமைத்த நெஞ்சு என்னும் ஆசனத்தில் அரசியற்றுவானாயினன்.

இனி மோகராசனது குணாதிசயங்களைச் சிறிது கூறு வாம்.

அவன் இந்திரனுடைய வச்சிரவாளுக்குத் தகரா்த பெரு வலிக் கல்லை யொத்த சிந்தையையுடையவன். பன்னிரண்டு

சூரியரும் ஒன்று கூடிப் பிரகாசிக்கினும் தொலையாத வல்லிருளெல்லாம் திரண்டொரு வடிவெடுத்தாலொத்த வடிவமுடையவன். மசப்பார்வை வாய்திறந்து பேசினும் இவன் தனது நாவினை யசைத்து நன்மொழி கூறான்; வசை பேசுவானாயின் ஒவ்வொரு மயிர்க்கால் தோறும் ஒவ்வொரு வாயுடையவனோ என்னும்படி பேசுவான். தனது குற்றத்தைப் பார்ப்பதில் திருதராட்டிரனாவன்; பிறர் குற்றத்தைப் பார்ப்பதில் ஆயிரங் கண்ணுள்ள இந்திரனேயாவன். இவன் செவி ஆயிரங்கோடி வம்புகள் கூடி நுழையினும் இடம்பெறத்தக்க பெரும் புற்றினை யொத்ததாயினும், ஒருசிறிய தருமநூலை எடுத்து நுழைக்கப்புகினும் சற்றேனுந் துளையில்லாத வச்சிரத்தைப் போன்றிருக்கும். தன்னுடைய நிலையற்ற வாழ்வை நீடூழிகாலம் நிலைக்கத்தக்க தென நினைக்கும் நினைவினையுடையவன். இரப்பவர்க்கொன்றுகொடுப்பதில்இரண்டுகையு மில்லாதவனாவன்; தானொன்று பெறுவதிலோ ஆயிரங்கைகளுடைய கார்த்த வீரியார்ச்சுனனும் வெட்கத்தக்க பல்கைகளை யுடையவன்போன்றவன். நல்வழியில் நடப்பதில் காலற்ற முடவனைப் போன்றவன்; தீயவழியிற் செல்வதில் மகம்மேருவைச் சூழ்ந்துவரும் விரைவுள்ள சூரியமண்டலம் போன்றவன். இவன் பாவ கன்மமாகிய வெந்நீரில் மூழ்கி, வழுவிய ஒழுக்கமாகிய பட்டாடையணிந்து, துர்க்குணமாகிய ஆபரணங்கள் பூண்டு, துர்வாசனை என்னும் புஷ்பமணிந்து, அபகாரமென்னும் சந்தனம் பூசி, புன்மையாகிய போசனமுண்டு, வஞ்சகமாகிய நீர் அருந்தி, பிறப்பு இறப்புக்களாகிய ஊசலி லாடுவான். இவனுடைய தேராகிய எதிர்மொழி, விதியை மேற் கொள்ளாதேனும், முயற்சி என்னும் கோல்கொண்டு துன்மதி என்னும் பாகன் நடத்த எமலோகம் வரைக்குந் தாவியெழுந்து உலகமுழுதையுங் காற்றுடி போல ஒருநொடியிற் சுற்றிவரு மியல்புடையது. இவனுடைய மருளாகிய யானை, வாய்மையாகிய மரத்தை வேரோடு சாய்த்து நற்குணமாகிய மலையைத் தகர்த்து அறமாகியவாழையைத் துவைத்து அன்பென்னும் ஓடையிலே புகுந்து கலக்கி மேலாகிய வாழ்க்கையை அடிக்கு மியல்புடையது. இவனுடைய

கவலையாகிய குதிரை, எதிர்ப்பட்டவொன்றை வென்றல்லது பின்னிடேன் என்னுந் தருக்குடையதாய் வாயுகதி முதலிய எக்கதியும் நாண, சப்த கிரியேயாயினும் சப்த சமுத்திரமேயாயினும் சப்த புவனமேயாயினும் அங்கெல்லாம் ஒரு கண்ப்பொழுதில் சுற்றிவர வல்லது. இவனுடைய விபரீத நெறியாகிய பதாதி, தேவர்களையும் முற்றத்துறந்த துறவிகளையும் எதிர்த்துத் தனதடிப்படுத்த வல்லது. இம் மோகனது ஆணை, அஷ்ட திக்கும் சப்த சமுத்திரமும் எட்டு மலையும் பதினன்குலகமும் பாதாள லோகமும் ஆகாசமும் பூமியும் ஆகிய எங்கும் நடந்து தடையின்றி வேகங்கொண்டு அண்டபகிரண்டமும் மயங்கச் செய்ய வல்லது. இவனது மதிகேடு என்னுங் குடை, சூரியகிரணம் எங்கும் படாமல் மறைக்கும் மேகம் போல ஈசுவரனது சோதி விளங்காமற் செய்து பகலையு மிரவாகச் செய்வதாகும். இவனது கொடுங்கோலின் வெம்மை; தீயினுங் கொடியதாகி நினைத்த மாத்திரத்தில் எவரையும் வெதுப்பக் கூடியதாயிருக்கும்.

இவ்விதமாக யாவுங்கூடிப் பதினன்குலகமும் திறைகொண்டுவந்து எதிர்வந்து அடிதாழ்ந்து போற்ற, மன மகிழ்ந்து தனது தேவியாகிய துன்மதியோடு கூடிச் சுகித்து வாழுநாளில், அகங்காரன், காமன், கோபன், லோபன், செருக்கன், மானன், அதர்மன், கலியன், டம்பன், அசத்தியன் முதலிய யாவரும் அம் மோக ராஜனது ஆக்கினைப்படி கொலுமண்டபம்வந்து கைகூப்பி நின்றார்கள். அவர்களை மோகவேந்தன் ஆசிர்வதித்து ஆசனத் தமர்த்திச் சொல்லுவானாயினன்:

'தம்பிகாள்! இப் பூலோக முதலிய பதினன்கு லோகங்களையும் எம்மைக் கட்டி. யாளும்படி எமது தந்தையார் எமக்குக் கொடுத்து மகுடாபிஷேகம் செய்வித்தனர். நான் பகைப்பற்றை யறுத்து வருத்தந் தீர்ந்திருப்பது உங்கள் வலிமையினுலேயன்றோ? என் உயிரும் என் கண்ணும் என் இரண்டு தோளும் ஒத்தவர்கள் நீங்க ளனைவரு மாவீர்கள். உங்களைத் துணையாகக் கொண்ட எமக்கு இனிப் பகையாக எழுந்த தம்

மை மேற்கொள்ள வரும் வலியுடையார் இல்லை. சிறியதொரு பகையுள்ளதாயின் பிறகு அது நமக்கு முன்னே வந்து மூளு மல்லவோ? அந்தப் பகையானது எள்ளில் நாலிலொரு பங்களவு இருப்பினும், அது அற்பமாகிய பகையென்று அதனை அலக்ஷியஞ் செய்யவொண்ணாது. ஏனெனில், முட்களோடு கூடிய வலியமரத்தை முளைக்குமுன்னே கிள்ளிவிட்டால் அது நசித்துப்போம். அப்படிச்செய்யாத பக்ஷத்தில் அது தழைத்தோங்கி வளர்ந்து பெருமரமாய்க் கோடரிக்கும் அசையாததாகுமல்லவா? சிறிய பாம்பினது நஞ்சினால் பெரிய யானைகளும் உயிர்விடுகின்றன வன்றோ? சில மனிதராலும் சில வானரங்களாலும் மஹாபலசாலியான இராவணனானவன் தன் இனத்தோடும் மாண்டானல்லவா? லோகாநுபவம் இவ்வாறிருத்தலால் விவேகன் அற்பமாகிய பகைவனென்று எண்ணாமல் அவனை வேரறக் களைவதாகிய ஆலோசனை செய்ய வேண்டும். இதுவே விவேகனை நாசப்படுத்துதற்குரிய மார்க்கம்'. இதனைக் கேட்ட காமன் எழுந்து நின்று, கரங்களைக் கூப்பி மோகனை வணங்கி, 'நீ யாது கட்டளையிடுகினும் அதைத் தடையின்றிச் சிரசினு மேலேற்றுச் செய்வதற்கே யாமெல்லோரும் இங்கே திரண்டு நிற்கின்றோம். உனது சேனைகளாகிய எங்களி லொருவனுக்குப் பிரமாதியர் தாமும் ஈடாகமாட்டாரே. இவ்வுலகங்கள் எல்லாம் ஒன்று கூடி வரினும் எம்மி லொருவனே நின்று வெற்றிகொள்ள அமையுமென்றால், வேறு யோசிக்க வேண்டுவதென்னை? விவேகனை வருத்திப்பதினான்கு லோகங்களையும் வெல்வதற்கு அடியே னிருக்கும்போது அகங்காரன் முதலிய மேலோர்களுடைய படையும் அவன் மீது செல்லவேண்டுமோ? வேண்டுவதில்லை. ஆயினும், உமது கட்டளைப்படி நாங்களெல்லோரும் இக் காரியத்தை முடித்து விடுகிறோம். எங்களுக்கு விடைதரக் கடவீராக' என்று வணங்கினின்றான். நின்ற காமனை வியந்து, மோகராஜன் அக்காமன் முதலியோர்க்கு அவரவர்க்குத் தக்க சிறப்புச்செய்து அனுப்புகின்றான். எவ்வாறெனில்:

முதலில் அகங்காரனை யழைத்து, 'அகங்காரனே! நீ, கொடை, ஆண்மை, சேண்மை, குணம், படை, சிறப்பு, தூழ்

க்கம், நடை, வாய்மை, நாகரிகம், தவம், புகழ், நிதி, மேன்மை குலம், நியமம் முதலிய சிறப்புக்களை யுடையவனும், சமரை வென்று, உலகமுழுதுங் கைப்பற்றி, கௌட தேசத்தை ராஜதானியாகக் கொண்டு அவ்விடத்திலேயே வாழக்கடவாய்' என்று கட்டளையிட்டான்.

அதன்பிறகு காமனையழைத்து, அவனுக்கு மீனக்கொடி, சந்திரவட்டக் குடை, கடற்பேரிகை, குயிலொலிக்காளம், தென்றற் றேர், இருள் யானை, கிளிப் பரி, மாதர் படை, புஷ்ப பாணம் கரும்பு வில், சுரும்பு நாண், மடல் வாள் முதலிய சிறப்புக்களெல்லாவற்றையுங் கொடுத்து, 'எவ்வுலகத்திலும் நிரூபகன் பிரவேசியாமல் அவனை வருத்தி வென்று உன் மனைவியாகிய ரதிதேவியோடு காஞ்சிப்பதிக்குப் போயிருந்து நிலைபெற்று வாழக்கடவை' என்று கட்டளையிட்டான்.

அப்பால் கோபனையழைத்து, அவனுக்கு நெறுநெறெனக் கடிக்கும் பல்லுப் பறையும், கட்பொறியாகிய நெருப்புக்களையும், நெரிக்கின்ற புருவமாகிய வில்லும், நெடுமூச்சாகிய தேரும், குறுவியர்வையாகிய கவசமும், தீயசொல்லாகிய வாட்படையும், அதட்டுகின்ற சத்தமாகிய சங்கத்தொனியும், மற்றும் பற்பல சிறப்புக்களுஞ் செய்து, 'உனது மனைவி மக்களோடு உலகமுழுதும் உலாவி, சாந்தன் முதலாகிய பகைவரைப் பற்றற முடித்து, யவன தேசத்திற் சென்று எக்காலத்தும் வாழ்ந்திருக்கக் கடவாய்' என்று நியமித்தான்.

அதன் பின்னர் லோபனையழைத்து, அவனுக்குக் கையிற் பொருளிருந்தும் என்செய்வேன் ஒன்றுமில்லையே என்னும் இரப்பொலியாகிய பறையும், தாங்குகின்ற சுமையாகிய கிரீடமும், கடல் தாண்டிப் பொருள் தேடுதற்கேதுவான மரக்கலமாகிய தேரும், பிச்சையாகிய உடைவாளும், இருகால்களாகிய வேகப்பரியும் என்ற இவை முதலியவற்றைக் கொடுத்து, நல்முகமன் கூறி, 'உனது மனைவியாகிய ஆசையோடுங் கூடிப் பூமியில் விராகனும் விரக்தியும் ஒதுங்க வொட்டாது கடுக்க கேரள தேசஞ்சென்று வாழக்கடவாய்' என்றான்.

பின்னர் டம்பனைக் கூவி, அவனுக்குப் பெருமையாகிய யானை, சிங்காரமாகிய தேர், பொய் வணக்கமாகிய சிலை, வஞ்ச மொழியாகிய பாணம், கபட ஒழுக்கமாகிய குதிரை என்ற இவை முதலிய பல பொருளும் வரிசையாக வழங்கி, 'நீயும் உனது பத்தினியாகிய வஞ்சனையும் உனது மகனாகிய அசத்தியனுமாக எங்குஞ் சென்று நிஸ்ஸந்தேகனையும் சத்தியனையும் வென்று காசிமா நகரத்தில் வீற்றிருக்கக் கடவாய்' என்றான்.

அப்பால் மதநனை யழைத்து, களிப்பு என்னும் யானை, மதியாத வெடித்த சொல்லாகிய பறை, தன்னை மேலாக மதித்தொழுகு மொழுக்கமாகிய குதிரை முதலியவைகளை, அகங்காரனுக்குக் கொடுத்த வரிசைகள் போலவே, இவனுக்குங் கொடுத்து, 'நீ மறதி என்னும் மனைவியுடன் உலகமெங்குஞ் சஞ்சரித்து, அடக்கனை வேரோடும் அடக்கி, பிறிது பகைவரையுங் கெடுத்து, கோதாவரிக் கரையை யடைந்து வசிப்பாயாக' என்று அநுமதி கொடுத்தனுப்பினான்.

அவன் நீங்குதலும், அநர்த்தனை யழைத்து, அவனுக்குக் கேடுவருவது தெரிந்திருந்தும் மேலோருடன் எதிர்த்தலாகிய யானையும், குரங்குப் பிடிபோலப் பிடித்தலாகிய கொடியும், இடையிலே உயிர்கெடவரினும் விடாது தொடர்தலாகிய வேகக் குதிரையும், பிறவும் கொடுத்து, 'கெடுதலாகிய மனைவியுடனும் நாசனாகிய பிள்ளையுடனும் உலகத்தை வென்று, அற்புதயன், பிராணாயாமன் முதலிய பகைவரைச் செயித்துநன்னடதேசம் போய் அங்கிருந்து வாழக்கடவாய்' என்றான்.

அப்பால் மச்சரனை யழைத்து, அவனுக்குப் பிறருடைய நலங்களை யெடுத்திகழ்தலாகிய பறையும், பிறர் வாழப் பொருமை யெய்துதலாகிய அம்பும், சபையிற் பிரவேசிக்கின் அங்குத்தரிக்காமையாகிய குதிரையும், தனிமையாகியதேரும், கவலையை மனத்திடை வைத்துத் திரிதலாகிய முக்காடு என்னும் கவசமும் ஆகிய இவை முதலிய எல்லாம் கொடுத்து,

'நீ உன் மனைவியாகிய அருளையோடு உலக முழுதும் வியா பித்துச் சந்தோஷனை அவன் மனைவியாகிய மகிழ்ச்சியோடும் நீக்கி, நச்சுமரம்போல மராடதேசத்திற் சென்று விற்றிருப் பாய்' என்று கட்டளையிட்டான்.

அதன் பின்னர் வயிரனை யழைத்து, அவனுக்கு முகந் திருப்புதலாகிய குதிரையும், முறுகி மனங் கறுத்தலாகிய குடையும், ஆகட்டுமொன்று அச்சுறுத்தலாகிய பறையும், பிர திக்ஞையாகிய கொடியும், அடிக்கடி தலை துளக்குதலாகிய சாமரமும், பிறவும் வரிசையாக வழங்கி, 'நீயும் அமரியாதை யாகிய உன் மனைவியும், அக்கிரமன் என்னும் புத்திரனுமாகக் கிராத நாட்டுக்குப்போய் அங்கே யிருந்துகொண்டு உலகத் தில் சமதிருஷ்டி, நியாயன், அவிரோதன் என்போருடைய வலியடக்கிப் புகழ்பெற்று வாழ்க' என்று நியமித்தான்.

அப்பால் மானனை யழைத்து, அவனுக்கு நல்லோரை வணங்காமையாகிய மகுடமும், அவரைக்கண்டு எழுந்திராமை யாகிய பீடமும், தன்னை எவர் தொழுதாலும் அவரைத் தான் தொழாமையாகிய கங்கணமும், துணிவாகிய கூர்வே லும், மனங் குழையாமையாகிய யானையும், இறுமாப்பாகிய கொடித்தேரும், இவைபோல்வனவாகிய பிறவும் வரிசையாக வழங்கி, 'நீயும் உன் மனைவியாகிய வெகுமதியும் சோமநாத புரம் சேர்ந்து, அங்கிருந்து கொண்டே சாந்தியையும் தமனை யும் அடக்கிச் சிரஜீவியாய் வாழக்கடவை' என்று ஆஞ்ஞா பித்தான்.

அப்பால் சங்கற்பனை யழைத்து, அவனுக்கு அற்பரை யும் வணங்குதலாகிய மகுடமும், அயலார் தூற்றினும் அதனைக் கேட்டுச் சகித்தலாகிய பொன்னாபரணமும், பல வரிடத்திலும் தன் குறை கூறுதலாகிய பேரிகையும், நினைத்த காரியத்தை முடிக்காமையாகிய குதிரையும், பிறவும் வரிசை யாய்க் கொடுத்து, 'நீ உன் தேவியாகிய கற்பனையோடு சென்று கூர்ச்சரதேசத்தி லிருந்துகொண்டு விகற்பமுறு

தீமையையும் உலகில் தலையெடுக்காமல் அடக்கி இனிது வாழ்வாயாக' என்று கட்டளையிட்டான்.

அப்பால் விகற்பனை யழைத்து, அவனுக்கு மண்டலம், யானை, குதிரை, சிவிகை, மகரகுண்டலம் முதலிய ஆபரணங்களும், பெரும் பொருட்குவியல், மாதராகிய சேனை, பொன் மகுடம் ஆகிய இவைகளும் அவற்றின்மீது இடையறாத கண்ணோக்கமாகிய ராஜ்யமும் வழங்கி, 'உன் பாலனாகிய வெகுமுகனைக் கொண்டு அகமுகனை வென்று, உன் தந்தையிடம் போய், அங்கே யிருந்துகொண்டு பகைவரை வென்று வாழ்க' என்று விடை கொடுத்தான்.

அதன் பிறகு சந்தேகனை யழைத்து, அவனுக்கு நிலையின்மையாகிய தேரும், மயக்கம் நீங்காமையாகிய யானையும், யாரிடத்தும் நல்லொழுக்கத்தை யறியாமையாகிய வாட்படையும், தாய் போல்வாரிடத்தும் போர் செய்தலாகிய படையும், இவை போல்வனவாகிய பிறவரிசைகளும் கொடுத்து, 'நீ உன் மனைவியாகிய அசித்தியோடும் மகனாகிய கலக்கனோடும் கொங்கண தேசத்துக்குப் போய், அங்கிருந்துகொண்டு, விசித்தி, நிச்சயன், ஐயுறான் என்போரை விலக்கி இனிது வாழ்வாயாக' என்று விடையளித்தான்.

அதன்பிறகு தாமதனை வரவழைத்து, அவனுக்கு நியதியின்றி எந்நேரமும் எவ்விடத்தும் தங்கித் தூங்குதலாகிய சயனமும், குறட்டை விடுதலாகிய வாத்தியமும், கனவாகிய கூத்தியரும், உடற் புரட்டலாகிய தேரும், பெருமூச்சாகிய குதிரையும், உடம்பிற் குத்தி வருத்தினாலும் வருந்தாமல் இன்புறுதலாகிய யானையும் வரிசையாகக் கொடுத்து, 'நீ உன் மனைவியாகிய சோம்பியோடும் கன்னியாகிய நித்திரையோடும், பாண்டி நாட்டுக்குச் சென்று, அங்கிருந்து கொண்டே சத்துவனையும் அவன் தேவியாகிய புநிதையையும் வென்றடக்கி மேன்மையாய் வாழ்க' என்று நியமித்தான்.

அப்பால் இராசதனை வரவழைத்து, அவனுக்கு நல் சிநேகத்தையும் மறத்தலாகிய விருதும், மனத்தினால் ஒரு ரையும் மதியாமையாகிய வாட்படையும், எடுத்த கருமத்தை செய்துமுடிக்கும் ஊக்கமாகிய தேரும், இன்சொல்லைக் கா றாற் கேட்டாலும் கேளாததுபோ லிருத்தலாகிய யானையு ஆகிய இவைபோன்ற சிறப்புக்கள் யாவையுஞ் செய்து, 'உ தேவியாகிய முயற்சியோடும், புதல்வனாகிய உத்தியோகே டும், கருநாடக தேசத்திற்குப் போய், சத்துவன், விரக் விராகன் என்போரை வென்றடக்கி, அந்தத் தேசத்தில் வா ந்திரு' என்று பணித்தான். (உத்தியோகன்-காரியன்.)

அப்பால் தாமதச் சிரத்தையையும் இராசதச் சிரத் யையும் வரவழைத்து, அவர்களுக்கு ஏற்பனவாகிய வரி களைக் கொடுத்து, 'நீங்கள் இருவிரும் சத்துவச் சிரத்தையி கர்வத்தை யடக்கி, எந்த நாட்டிலும் தர்மசத்திரம்போல வி பிசாரத்தையே பெருக்குங்கள்' என்று நியமித்தான்.

அதன்பிறகு அதர்மனை யழைத்து, அவனுக்கு இந்தி யங்களை யெவ்விடத்துஞ் செலுத்துதலாகிய தேரும், முன கேடாகிய மதயானையும், ஒழுங்காக நல் வழியிற் செல்லாமை யாகிய குதிரையும், நாவடக்கமின்றி எந்தக் கடுஞ் சொல்லையு சொல்லுதலாகிய பறையும் பரிசிலாகக் கொடுத்து, 'நீ உ தேவியாகிய அதோகதியோடும், புதல்வனாகிய துக்கனோடு கடற் கரையிலுள்ள ஊர்கள் தோறுஞ்சென்று, தருமனையு சுகனையும் தலையெடுக்க வொட்டாம லடக்கி வாழ்க' என் விடைகொடுத்தான்.

அப்பால் அநாசாரனை யழைத்து, அவனுக்கு இன்சொ சொல்லி, 'நீ உன் தேவியாகிய அகீர்த்தியாலே உபேக்ஷையை வென்று, உன் புதல்வனாகிய விடய சங்கமனால் அகமுகனை யடக்கி, உன் மகளாகிய மிச்சாதிட்டியால் ஆஸ்திகனை யொ க்கி, உன் திறமையால் சுசீலனை வென்று ஏழுலகும் அஞ்சு படி கோல் செலுத்தி எந்நாளும் வாழ்க' என்று விடுத்தான்.

அப்பால் கலியனை யழைத்து, அவனை நோக்கி, 'நீ கள் விற்போர் மனையிலும், சூதாடுவோ ரிடத்தும், விலை மாதர் சேரியிலும், வாழ்க' என்று சொன்னது மன்றி, 'நீ ஆசாரனை மேற்பட வொட்டாது தடுப்பாயாக, உன் மனைவியாகிய கபடியைக்கொண்டு மைத்திரியைத் தலையெடுக்காமல் அடக்குவாயாக, மனதிலைச் செருக்கை உன் மகனாகிய சஞ்சலனைக் கொண்டு அழிப்பாயாக' என்று கூறி, 'என்னைவிட்டு நீங்காதிருப்பாயாக' என்றும் அட்டளையிட்டான்.

இவ்வாறு மோக ராஜன் மற்றவர்களுக்கும் அவரவர் தகுதிக்கேற்ற சிறப்புக்களைச்செய்து, அவர்களுக்குரிய இருப்பிடம், பகைக் குறிப்பு, செய் கருமங்கள் முதலியவற்றைக் காட்டி விடைகொடுக்க, யாவரும் அவன் கட்டளையைச் சிரமேற்கொண்டு, அவன் பாதங்களை வணங்கி, அவ்விடம் விட்டுத் தத்தமக்குரிய இடங்களுக்குச் செல்லுவா ராயினர்.

அப்பால் மோக வேந்தன் தனது தேவியாகிய துன்மதியினுடைய அந்தப் புரத்துக்குச்சென்று, அவளை இனிய வசனங்களால் தன்வசப்படுத்தி,அவளைப் பார்த்து, 'என் அன்பிற் சிறந்த அன்னமே, உன்னையன்றி என்னுயிரென வேறோர் பொருளில்லை, ஆதலால் நான் இப்பொழுது சொல்லும் வார்த்தைகளுக்கு நீ இசைவாயானல் உன்னால் நமது குலம் பெருக்கமடையும், நீ என் கருத்திற் கிணங்குதலே நன்மையாகும், நான் சொல்லுகிற விஷயமென் னென்றால், பாஷண்ட விஞ்சை என்னும் ஒருத்தியின்மீது என் மனஞ் செல்லாநின்றது, அவளை நான் மணம் புரிந்துகொள்ள நீ சம்மதிக்கவேண்டும்' என்றான். அதைக் கேட்ட துன்மதியும் அப்படியே யாகட்டுமென்று சம்மதித்தலும்,மோக வேந்தன் தன் அருகில் நின்றவளாகிய தாமதச் சிரத்தையைத் தூதுவிட்டுப் பாஷண்ட விஞ்சையை இணங்குவித்து மணம்புரிந்து கொண்டான். கொண்டு, அவளோடு இடையறாத இன்பக் கலவிகள் செய்து சுகித்து வருநாளில், அவள் வயிற்றில் தீக்குணம் பலவுமுள்ளவனும், கொடுங்கோல் மன்னனாகிய தன் தந்தையினும் கொடி

யனுமாகிய அஞ்ஞன் என்பவ னொருவன் வந்துதித்தான். அந்த மைந்தன், முப்புரத்தை யழித்த நெருப்புப்போலவும், பெரியோர்க்குத் துன்பஞ்செய்கிற கீழ்மக்களது பழிபோலவும் நாள்தோறும் வளர்ந்து வந்தான். அந்தப் புதல்வன் இவ்வாறு வளர்ந்துவர, மோக வேந்தன் தன் மனைவி மக்கள் உறவினர் ஆகிய யாவரும் பெருக்கமடைந்து வாழ்வதினு லுண்டாகிய பெருங்களிப்பால் தன்னை மறந்து, உலகமுழுதும் தன் கொடுங்கோல் செலுத்தி அரசாட்சிசெய்து வந்தான்.

அவித்தியாபுரச் சருக்கம் முற்றிற்று.

---

4. விவேகன் வனம்புகு சருக்கம்.

இவ்வாறு மோக ராஜன் அரசுபுரிந்து வருங்காலத்தில் தாமதியாது பெருஞ்சேனைகள் உலகெங்கும் பரவி, அங்கங்குள்ள புண்ணிய ஸ்தலங்களை யடைந்து, சுகமாய் வாழ்கின்ற விவேகன் முதலானவரிடத்தில் பல தீமைகளை யுண்டாக்கி அவர்கள் பேரும் அற்றுப்போம்படி அவர்களை யோட்டிவிட்டார்கள். அப்பொழுதில் உலகிலுள்ள நல்லறம் நடுங்கியது மாதவம் ஒடுங்கியது, ஞான மார்க்கமும் தொலைந்துபோயிற்று நல்லொழுக்கமும் நிலைகுலைந்தது, இயமாதி எண்வகையுறுப்புகளையுடையயோக நெறியும் கலக்கமடைந்தது, வேத புராண சாஸ்திராதிகளும் அடங்கிப்போயின, மங்கையர்கள் கற்பழியும்படி அவரவர் வாழ்கின்ற குடிகளும் குன்றிப்போயின சத்தியம் குடிபோய், பொறுமை யழிந்து, பெரிய தமம் சமம் முதலாகிய ஆத்ம குணங்கள் கெட்டு, உபசாந்தி, தாந்தி, சிரத்தை, மைத்திரி, உபேக்ஷை, முதிதை என்பவைகள் போயொழிந்தன. நலமிலைகளி லுள்ளவர்களுடைய மனவுறுதியுங்கெட்டது, அறிஞர் வருந்தும்படி மறையோர் செய்கிற வேள்வி முதலாயினவும் நசித்தன. துறவியர் மனம் பம்பரம்போலச் சுழன்றது, தேவருலகும் நிலை தளர்ந்தது, பூவுலகும் முழு

கொளிந்தது. இந்த வண்ணமாகப் பதினான்கு உலகும் நெருப்பிலிட்ட தளிர்போலவும், மிகு வெப்பமான வெயிலிலகப்பட்ட புழுப்போலவும் வாட்டமடைந்து வருந்தாநிற்க, விவேகனும், பகைவராகிய காமனாதியர் செய்யுங் கொடுமையைக்கண்டு, உடல் தளர்ந்து வலி குன்றி ஒருபக்கத்தில் ஒதுங்கிப்போயினன். முற்காலத்தில் சுக்கிரீவன் தன் தமையனாகிய வாலியினால் வருந்தப்பட்டு வேறொரு திக்கில்லாதவனாய் மதங்க பருவதத்தைச் சேர்ந்து அவ்விடத்து வசித்ததுபோல, விவேகனானவன் மோகன் வலியால் நிலை குலைந்து, நரநாராயணர் வசிக்கின்ற ஸ்ரீபதரிகாசிரமத்தை யடைந்தான். முற்காலத்தில் துரியோதனாதியராகிய கொடியோரது பகைத்திறத்துக் கஞ்சி தரும புத்திராதியர் அஞ்ஞாத வாசஞ் செய்ததுபோலவும், கலி புருஷனால் வலியழிந்து நளராஜன் வனவாசம் செய்ததுபோலவும், மிகக் கொடியோராகிய மோகன் முதலியோர்களால் விவேகன் வலி குன்றித் தன் உரு மறைத்து வசித்துவந்தான்.

அந்நாளில், இயமன், நியமன், ஆதனன், பிராணாயாமன், பிரத்தியாகாரன், தாரணன், தியானன், சமாதி என்னும் மந்திரிகளெண்மரும்; நிரூபகன், பொறையன், சந்தோஷன், சத்தியன், தருபன், அடக்கன், நிச்சயன், சாந்தி, தாந்தி, சமன், தமன், மைத்திரி, கருணை, முதிதை, உபேக்ஷை, விராகன், நிவிர்த்தி முதலிய ஆண் பெண் என்னும் இருபாலாரும் விவேகன் இருந்த இடத்தே வந்து, அவனடியில் விழுந்து சொல்லத் தொடங்கினார்கள்.

"புலிக் காட்டிலிருப்பதை நீங்கி நல்ல விதிவசத்தினாலே இறவாது தப்பிய மான்போல், பாவியாகிய மோகனது படை வீரர்கள் எங்களைப் பங்கமடையச் செய்த பாட்டைப் பொறுத்து உமது அருள் எங்களிடத்தி லிருந்ததனால் உயிர் பிழைத்து வந்தோம். அஞ்சினோம்! எமக்கு உமது தஞ்சமன்றி வேறில்லை. எமக்குத் தஞ்சமாயிருக்கும் உமது தன்மையொளித்துறைதல் உமக்குத் தகுதியாகுமோ? வலிய இரு

ளைக் கண்டு சூரியன் ஒதுங்குவது இயல்பல்லவே. பெரிய சமுத்திரத்திடையிலேயுள்ள முத்து பவள முதலியவற்றை ஒரு படகு சென்று எடுத்து வருவதில்லையா? ஒரு சிறிய தீப் பொறி உலகங்களை யெல்லாம் அழிக்க வல்லதாக வில்லையா? சத்துருக்கள் சேனையை வெல்ல வல்லனாகிய உன்னைத் தலைவனாகக் கொண்டு நாங்க ளெல்லோரும் செல்லுவோமாயின் மோகனுடைய சேனையை ஒரு நொடியிலே பொடிபடச் செய்யோமோ? நீரின்றி நல்ல விதை நல்ல நிலத்திற் படினும் பயிராகுமோ, கொள் கொம்பின்றிப் பைங்கொடி படர்ந்து நிலைபெறுமோ? வீரர் எவ்வளவு சிறந்தவராயினும் அரசனில்லாப் படை வெல்லுமா? பழி பாவங்களை வளர்ப்பதுவே தொழிலாகக் கொண்ட மோகனையும் அவன் தேவி துன்மதியையும் உயிர் வாங்காது விடுவோமாயின், குயில் கூவாமையைக் கண்ட காக்கை நமக்கும் குயிலுக்கும் பேதமென்ன வென்று கருவம் தலைக்கேறி நிமிர்வது போல நிமிர இட மன்றோ? உமது தந்தையாகிய மாநதன் தன் புத்திரர் யாவரும் சமமெனமதிக்காது மோகனை யரசாள வைத்து, உட மையும் உமது தாயையும் வேறுபடத் தள்ளிவிட்டு, மோக னுக்கு முடிசூட்டி, அவனுக்கே எல்லாச் செல்வமுங் கொடுத்த விதமென்ன? நீர் அவனுக்கு யாது பிழை செய்தீர் உமது தன்மைக்கு அது தக்கதன்றே' என்று அவர்கள் சொன்னவை எல்லாம் இரு செவியினுள்ளுங்கொண்டு, இரு பீர்களாக என்றுரைத்து, கையை யமைத்து, அவர்க ளொவ் வொருவரையும் பார்த்து, அருள் கொடுத்து, அவர்கள் து ரத்தை நீக்கி, இயமன் முதலிய மந்திரிகளுடன் சொல்லத் தொடங்கினான்.

'அருமையாகிய அமிர்தத்தைக் கொடுத்தவர்க்கும் விடத்தைத்தருகிற பாம்புபோன்று கொடிய குணத்தையுடையவன் மாநதன். "உன் தந்தையை வருத்தி இவ்வாறு சிறை வைத்தது பெரும் பாவமாகும். அவனைச் சிறை விடுத்த உனக்குப் புண்ணியமாகும்" என்று நான் சொன்னதேயன்றி வேறென்ன பிழை செய்தேன்? அந்தச் சொல்லைச் சொன்

தற்குக் கோபங்கொண்டு, என் தாயோடு என்னையும் வேறாக நீக்கிவிட்டு, வேறொரு புதல்வனாகிய மோகனுக்கு அரசுரிமை முழுதுந் தந்து, எவ் வுலகுக்கும் இறைவன் இவனே யென்று முடி சூட்டி, என்னைத் தாழ்வு செய்த தந்தையானவன் இன்னும் என்ன துன்பம் செய்தாலும், நான் அவனுக்கு மாறாக ஒன்றுஞ் செய்யலாகுமோ? தரும நெறியைக் கடந்து ஒழுகுகின்ற அரசருடைய வாக்கை எவர் ஒப்புகின்றனரோ அவரே செல்வம் பெற்றவராவர். அவர் வாக்கைச் சரியன்றென்று மறுப்பவர் யாவரோ அவர் தப்பாது கேட்டையடைவர். பித்தர்க்குத் தங்குணம் நலினுஞ் சிறந்ததன்றோ? ஊனைப் புசிப்பதாகிய புலிக்குத் தருமநெறியைக் கூறிக் கொலை செய்தல் பாவமென்றால், அதனை அது அங்கீகாரஞ் செய்யுமா? ஆதலால் என்னைக் கொன்றாலும் தீயிட்டுக் கொளுத்தினாலும், நான், பூர்வத்திலே தேவர்கள் திருப்பாற்கடலில் மந்தரகிரியை யிட்டுக் கலக்கிக் கடைந்தபோது அப் பாற் கடல் எவ்வாறு பொறுமையோ டிருந்ததோ அவ்வாறு பொறுமை செய்வேனே யன்றித் தந்தைக்குத் தீங்கு செய்யத் துணிவதில்லை' என்றான்.

இவற்றையெல்லாங் கேட்டிருந்த இயமன் முதலிய எண்மருள் ஒருவனாகிய இயமன் என்னும் அமைச்சன் எழுந்து விவேகனைக் கைகூப்பித் தொழுது அவன் முகத்தைநோக்கி 'எமது வேந்தனே, அடியேன் கூறும் வாக்கியங்களை இகழாது கேட்டருளுமாறு பிரார்த்திக்கின்றேன். குரு, அரசன், அன்னை, பிதா, தமையன் என்னும் பஞ்ச குரவரும் தாம் குரவராயினரோ என்னும் உணர்வின்றிப் பொறுத்தற்கரிய பிழைகள் செய்வாராயின் அவரைத் தண்டித்தல் கடனெனத் தருமநெறி கண்ட மனு உரைத்திருக்கின்றன னன்றோ? தருமநெறிக்கு மாறாகத் தீமை செய்கின்ற தானவரை, வானவர்கோன் போரிலே அழித்து வருதல் முற்காலத்தில் மாத்திரமன்று; இந்நாளிலும் உண்டன்றோ? அதுதானு; பொறுமையெல்லாந் திரண்டொரு வடிவெடுத்தாலொப்ப விளங்கிய தருமர் தமக்குத் தீமை செய்த கிளையை யெல்லாம் போர்செய்து அடி

யோடு கரைத்த கதை பெரும் பாரதமான தன்றோ? அங்ஙனமாகவும் உம்முடைய பாட்டனரைச் சிறையிலிட்டு உமக்கும் உமது தாய்க்கும் துன்பஞ்செய்து அவ்வளவிலும்அமையாது உலகத்தி லுள்ள சகல உயிர்க்கும் இடர் செய்துவருகின்றதுஷ்டராகிய மோகனாதியரைப் போரிலடக்காமல் அவர் உமக்குத் தமராயுள்ளா ரென்னும் பரிவினால் அவரிடத்துக் கருணை வைப்பிராயின், அவரால் மேன்மேலும் துன்புறத் தப்பட் டொழிவதன்றி அவர் உம்மீது அன்பு செய்வர் என்பதைக் கனவிலும் நினையாதிருப்பீராக. கொடிதாகிய நோயைக் கொடிதாகிய மருந்தினால் அறுத்தாலன்றி அது குணப்படுவ தில்லையே. காமமாதி படைவீராகிய மாடுகள் வாராமல் அறமென்னும் வேலியிட்டுத் தீயவனாகிய மோகன் என்னுங் களையை வேரோடு துலைத்து உமது கருணையாகிய வெள்ள நீரைப் பாய்ச்சி, உணர்வாகிய பசிய பயிரை மேலோங்குமாறு காத்தாலன்றி ஆராத இன்பமாகிய பயிரை அநுபவித்தல் அரிதரிது. ஆதலால் உமது மாதரீவின் குறையைத் தீர்த்து, உமது பரிசனங்களாகிய எங்கள் குறையையு மாற்றி உமது பாட்டனாகிய பெரியவரைச் சிறையினின்று நீக்கி, அவித்தியாபுரத்தையும் அங்கிருந்து அரசு செய்பவனாகிய மோகனையும் அழித்து, ஏனைய குற்றங்களையும் நிவிருத்திசெய்து, மூவுலகத்துக்கும் நீரே ஆதாரமாகும் வகையருள்வீராக' என்று வேண்டினான்.

இங்ஙனம் இரந்துவேண்டிய அமைச்சனது நியாயங்கள் எல்லாம் விவேகன் மனத்தை உருக்க, விவேகனனவன் தளர்ந்துபோகும் தருமநெறிகளை மீட்டும் நிலை நிறுத்துதல் அவசியந்தா னென்றும், மோகன் செய்கின்ற கொடுமைகள் நாகவிஷம்போல அதிகரித்தலால் இனிச் சும்மா இருத்தல் தகாதென்றும், மோகன் முதலியோரை உறவினரென்று மதிக்காது பகைவராக மதித்து அவரை அடக்குதல் கடமைதானென்றும் துணிந்தான். விவேகனது உள்ளத்தில் நிகழ்ந்த துண்மையை அவனது முகத்தின் மலர்ச்சியே சொல்ல, அதனைக் கண்ட அவனது பரிவாரங்கள் எல்லாரும் ஆனந்தித்தார்

கள். விவேகனுடைய மனைவியாகிய சுமதியும் [illegible] கொடிய செய்கைகளைச் சகியாதவளாய் [illegible] கூடினாள். அப்பால் விவேகனும் சுமதியும் ஒருவரை யொருவர் தழுவி அன்பு கூர்ந்து இருவரும் யோசனை செய்து, இனி செய்ய வேண்டியவற்றைச் செய்வோமென்று [illegible]தார்கள்.

விவேகன் வனப்புந சருக்கம் முற்றிற்று.

விவேகன் மந்திரச் சருக்கம்.

அவ்வாறே விவேகன் தன்னைவிட்டு நீங்காது சூழ்ந்திருப்பவர்களாகிய நிரூபகன், பொறையன், விராகன், சத்தியன், தருமன், சமன், தமன், சமாதானன், சுசிலன், நியாயன், சுகன், இயமன், நியமன் முதலிய எண்மரையும்நோக்கி,இங்கு வாருங்கள் என்ன, அவர்களும் எழுந்து கைகூப்பிக்கொண்டு அவன் பக்கஞ்சேர, அவர்களோடு தானும் எழுந்து ஒரு தனியிடஞ் சென்று அங்கு அவர்களை யிருக்கச்செய்து தானுமிருந்து அவர்களுடைய முகத்தைக் குளிர்ந்த கண்களோடும் மலர்ந்த முகத்தோடும் பார்த்து, 'என் உயிர்க்குயிரும், நட்பும், பகைவரை வெல்லுவதற் கேற்ற படை வீரரும், வாழ்வும், நல்ல உறவினரும்,மற்றப் பரிவாரங்களுமா யிருக்கின்றவர்கள் நீங்களே யன்றி எனக்கு உறுதியாயுள்ளவர்கள் வேறு யாருமில்லை. ஆதலால், நான் சொல்வதைக் கவனித்துக்கேளுங்கள். நானே தருமநெறி கூறப் போய்த் தந்தையால் வருத்த முற்றுத் தளர்ந்த பிரகலாதனை யொத்தேன்; இன்னும், நான் மோகனால் வருத்தப்படுகின்றதை நோக்கினால், தமையன் போவென்று தள்ளப் புறஞ்சென்ற விபீஷணனையு மொத்தேன்; ஆயினும்,அவர்களைப் போல நானு முய்தற்குத் தருமநெறி யுண்டு. என்னைப் பெற்றெடுத்த தாயினும் இனியவரா

கிய மூதாதையோ தீயவராகிய மோகனாதியரால் பிணிக்கப்பட்டவராய்ச் செயலற் றடங்கினராதலின் என் துயரைப் போக்கும் வல்லமையுடைய பிறர் ஒருவர் வேறில்லர். தீய தொழிலால் வாழ்கின்ற வாழ்விலும் வறுமையே மேலானதென்று நன்குணர்ந்த பெரியோர் துணிவர், புல்லரோ இழிதொழிலால் வாழ்வதே மேலென்று நீதி தப்பிச் செல்லுவர். இவ்விரண்டும் நமதிடத்தும் நம் குலத்தவர்களிடத்தும் கண்டு கொண்டோம். இனி வேறு திருஷ்டாந்தம் வேண்டா. ஆதியிலே மோகன் எங்களைத் தள்ளி, எங்களுக்கு அரசு கொடாமல் மறுத்த அக்காலத்தில்தானே அவனோடு போர்தொடுத்து அவனை அடக்காமல் அவன் அதிகரித்துவிட்டபின்பு அவனை வெல்ல முயலுதல், பாம்பு கடித்த அக்கணத்திலேயே அதனைத் தடுக்காமல் அதன் விஷம் தலைமண்டைச்கேறின பிறகு அவ்விஷ மிறங்கும்படி மந்திரிப்பார் செய்கைபோன் றிருந்தது. அகங்காரனது வெற்றியானது தேவலோகத்தையு மளந்துகொண்டது காமனது வெற்றி எல்லா வுலகங்களையும் விழுங்கி விட்டது. கோபனது படைமூன்றுலகத்தும்நிறைந்திருக்கின்றது. லோபனது ஏவற்பணிவிடை செய்யாதவர்கள் ஒருவருமேயில்லை. உடம்பெடுத்தவர் யாவரும் லோபன் மகனாகிய இடம்பனுக்கு ஆளாய் நின்றார்கள். மதனது அந்தகாரம் உலகமுழுதும் மூடிக்கொண்டது. மச்சரனது வெற்றி செல்லாத திசை ஒன்றுளதோ? கலியனுக்கு உலகமெல்லாம் கைவசப்பட் டிருக்கின்றது. மானனை எதிர் கொண்டு பூசியாதவர்கள் விண்ணுலகத்தும் மண்ணுலகத்து மில்லை. அதர்மனோடு போர் செய்ய வல்லார் யாவர்? அசத்தியனுக்கு இடங்கொடாதவர் நாவசைத்தல் இயலாது.

நிகரற்ற அந்தப் பெரும் படைத்தலைவர் ஒவ்வொருவருக்குமே உலகமுழுதும் எதிர் நிற்க மாட்டாதென்றால் அவர்கட்கெல்லாம் இறைவனாயிருக்கிற மோகனது வெற்றியை யார் எடுத்துச்சொல்ல வல்லவர்? அவர்களோடு எதிர்த்தல் ஒருவராலு முடியாது.

அவர்களது தன்மை இவ்வாறென்றால், அவர்களுடைய பொய்ந் நெறியை அழித்து மெய்ந் நெறியை நிறுத்தி எல்லா வுயிர்களுடைய மனக்கலக்கத்தையும் ஒழித்து மூதாதையைச் சிறை மீட்டல் எவ்வாறு?' என்று தன் பக்கத்திலிருக்கின்ற மந்திரி முதலாயினோரது மனக் கருத்தை யறிதற் பொருட்டு வினாவினான். அவ்வாறு வினாவினதைக் கேட்ட நிருபகன் எழுந்து விவேக வேந்தனது இரண்டு பாதங்களையும் வணங்கிக் கைகூப்பி நின்று, யாவர்க்கும் புத்தி நுட்பந் தோன்றும்படியாகவும் தாமெடுத்த கருமம் நிறைவேறும்படியாகவும் ஆராய்ந்து பார்த்துச் சொல்லுவானாயினன்.

'எவ்வாறெனில், யாவரும் விர்த்தியடையும்படி எல்லாவற்றையு மறிந்திருக்கின்ற வேந்தனே! எங்களை யெல்லாம் எதிரில் வைத்துக்கொண்டு சிற்சில வார்த்தைகளை நீர் வினாவினது எமது மனக்கருத்தை யறிவதற்கேயன்றி வேறல்ல. காரிய விசாரத்தை எங்களைக் கொண்டு திருத்திக் கொள்வதற்கே யென்றால் அது ஒரு விசித்திரமாயிருக்கின்றது. சூரியனுக்கு எதிரில் ஒரு தீபம் வைத்தல்போலவும், வேதியர்க்குச் சடங்கு சொல்வது போலவும், உமக்கு ஒருவர் புத்தி சொல்வது பயனற்றதாகும். ஆயினும், என்றன் சொல்லையும் சற்றே கேட்டருளவேண்டும். அது என்னெனின், விஷத்தையுடைய பாம்பானது ஒருமூச்சு விடுதற்கு முன்னே திரண்டுவந்த பல எலிகளும் கெடும். மலைபோலக் குவிந்து கிடக்கின்ற விறகு ஒரு நெருப்புப் பொறியினால் வெந்து நீறாகும். அன்றியும், கடல்சூழ்ந்த இவ்வுலகத்தில் அறிவுடையார் யாதும் இலராயினும் செல்வம் முதலிய எல்லாவற்றையும் உடையரெனப் படுவர். அறிவில்லாதார் செல்வமும் சிறப்புமுடையவராயினும் அவர் அவற்றை உடையரல்லராவர். சமுத்திரத்தையும், விந்தமலையையும் முற்காலத்தில் அங்குஷ்டப் பிரமாணமாகிய அகஸ்திய முனிவன் தனது கையினால் அடக்கிவிடவில்லையா? உமது பக்கத்தில் நாங்கள் எல்லாரும் வந்து நிற்பதனால் உமக்குப் பயன் யாது? உமக்குச் சமானர் ஒருவருளரோ? சிவபெருமானுக்கு மலையானது வில்லாகவும், பாம்பு நாணாகவும்,

திருமால் அம்பாகவும் அமைந்திருக்கவும், அவர் திரிபுரங்களை யெரித்து நீறாக்கிவிட்டது தன் புன்சிரிப்பினா லல்லவோ? நீர் இதனை ஆலோசிப்பீராயின் மோகனது மாயச்செய்கையும் அவனது வலியும் அவன் செருக்கும் அவன் சேனையும் செல்வமும் ஆகிய எல்லாம் ஒரு மாத்திரைப்பொழுதில் நிர்மூலமாய்ப் போகுமன்றோ ?' என்று சொன்னான்.

அவன் இதனைச் சொல்லி முடிக்குமளவில், சாந்தன் எழுந்து நின்று, கை குவித்து, விவேகனது தாமரை மலர்போன்ற முகத்தை நோக்கி, நான் விண்ணப்பஞ் செய்வதொரு செய்தியுண்டு. அதனைக் கேட்டருளவேண்டுமென்று சொல்லுவா னாயினன். 'மிகுந்த வலியுடையோ ராயினும் பகைவரை வெல்ல நினைப்பவர் தாம் வெல்லுதற்குரிய காலம் இடம் காரியமுடிக்கும் வகை என்பவைகளை யாராய்ந்து, காலமுதலியவை தாம் வெல்லும்படி வாய்த்தபோது படையெடுத்துப் போய்ப் பகைவரை வெற்றிகொள்ள வேண்டும். ஆதலால், போர் புரிதற்கு ஏற்ற காலம் வருமட்டும் பொறுமையோடு வேண்டிய சாதனங்களைத் தேடிக்கொண்டு அடக்கமாயிருத்தல்வேண்டும். கடையுகம் வருமுன்னே சமுத்திரமானது தன் எல்லையைக் கடவாதன்றோ? இப்போது நாம் செய்யத்தக்கது யாதெனில், நமது பகைவர்கள் செல்லாத நல்ல ஸ்தலங்கள் எவையென ஒற்றரா லுணர்ந்து, கற்றறிஞர் சிற்சிலர் காமியர்கள் வேடம்பூண்டு அந்தப் புண்ணிய க்ஷேத்திரங்களில் பிரவேசிக்கும்படி கட்டளையிட் டருளல்வேண்டும். நமது படையை அவ் விடங்களுக்குச் சிறிது சிறிதாக நாளடைவில் அனுப்பி, அவ்வவ்விடங்களிலும் அப்படையைப் பெருக்கி, பகைவருடைய வலிமையை யுணர்ந்துகொண்டு, அதன் பின்னர்ப் படையெழுச்சிசெய்து போர்செய்து அவர்களை வெல்லுவதே தகும்' என்றான்.

அதுகேட்ட விவேகன், ஆகுகவென்று அவனை உட்காரும்படி கையமைத்துவிட்டுச் சந்தோஷ முகத்துடன் அடக்கனைப் பார்த்தலும், அடக்கன் எழுந்து வணங்கிக் கைகுவித்

துக்கொண்டு, 'வேந்தே! இதுவரையில் சாந்தன் சொன்ன வைகள் உண்மையேயாயினும், பதினாறாயிரங் கோப ஸ்திரீக ளிடத்து இன்ப மநுபவித்துக்கொண்டு தமது காரியத்தள வில் கருத்தை நிறுத்தியிருந்த கிருஷ்ணனைப்போலப் பலதொ ழிலைச் செய்துகொண்டு உட்கருத்தைக் குறித்த ஒரு கரு மத்திற் செலுத்த வல்லவர் வேறு யாவருளர்? முன்னாளிலே தவஞ் செய்கின்றவர்களும், தீயவர்க ளிருக்கின்ற நாட்டிலே புகுந்திருக்க வருங்காலத்தில் மாறுவேஷதாரிகளாகியே புகு ந்து தமது காரியத்தை முடித்தார்கள். வழிமுறையாக மதுர க்கனி தருவதாகிய மரத்தின் கன்றை உவர் நிலத்திற் பெயர் த்து நாட்டினால், பின்னாளில் அதன் குணமும் பெயரும் வேறாவது இயற்கையன்றோ? கருங்குயிற் குஞ்சானது பறக் கும் பருவம் வரும் வரையில் காக்கைக் கூட்டினிடந் திருக் கும்போது தனது குரலொலியை மறைத்திருப்பது போலப் பின்னாளிலே தமது கருமத்தை முடிக்க வேண்டுபவர் உபாய யங்களைத் தேடுவது குற்றமாகாது' என்றான்.

உடனே சந்தோஷன் எழுந்து விவேகனை வணங்கி, 'ஐயனே! நான் சொல்வதைச் சிறிது கேளும். பகைவருடனே உறவா யிருப்பவருடைய உள்ளமோ மிகக் கொடியது, வே ஷமோ மிக இனிது. அங்ஙனஞ் செய்யாத விவேகிகளுமோ மிகச் சிலர், கஜ ரத துரக பதாதிகளுடனே நவரத்தின கிரீ டந் தாங்கி, அளவிறந்த மடமாதருடன் சுகித்து உலகத்தையு மினிது காத்து வந்த சனகன் அவ் வாழ்க்கையில் ஒரு சிறி தும் கருத்தை நிறுத்தாது பர வஸ்துவையே தியானிப் பவனா யிருந்தமையை இவ்வுலகத்தில் எடுத்துக் கூறாதவர் யாவர்? தன்னால் ஒரு காலத்தும் அறியப் படாதவர்களே யாயினும் அவர்கள் சொல்லிய ஏவல்களை யெல்லாம் விருப் போடு செய்து வந்தவனும், பலியிடுவோனுடன் கூடி அவ னேவற்படி காளிமுன் அஞ்சாது சென்றவனும், அரசனது சிவிகையைச் சுமந்தவனுமாகிய சட்பரதனுடைய உள்ளம் அவைகளில் சிறிதுந் தோய்வின்றி யிருந்ததை யார்தாம் அறி யாதார்? கழைக்கூத்திக்கு ஏனை விருப்பமென்று அவற்றைத்

தேடி யீந்தும், அவள் சொல்லியபடி செய்தும், அவள் பருகி மிஞ்சிய நீரைப் பருகியும், ஒப்பற்ற சிவனும் இவர் பரிசுத்த ரெனச் சொல்லப்பெற்ற திரியம்பகருடைய உள்ளம் பிறர் அறியாததல்லவே. வேடத்தளவிலே ஒருவரும் உட்கருத் தளவிலே பிறருமாயிருக்கின்ற விவேகிகள் அநேக ருளர். புளியங்காயுடன் அதன் ஓடு முற்றும் வரையில் சம்பந்தித் திருந்து முற்றிய காலத்திற் பிரிந்து ஒன்றியுமொன்று திருப் பதுபோல விவேகிகள் ஒழுகுவர். விவேகிகள் மடமாதருடன் கூடி இன்ப மநுபவிப்பினும் தங் கருத்தை யதில் அழுந்த விடார். வீதியிலே நீர்க்குடமேந்தி நடனமாடும் தாதியின்கருத் தெல்லாம் குடத்தின் மீதிருப்பது இயற்கையன்றோ? பெரி யோர் அநேக மடமாதருடன் கூடி விளையாடினு மென்னை? தாழ்ந்தோர் தவவேடந் தரித்திருப்பினு மென்னை? குற்றமில் லாத தூயமன முடையவர்களுக்கும் மனத்திற் பரிசுத்த மில் லாதவர்களுக்கும் இழிவும் சிறப்புமுண்டோ? ஆகவே ஒற் றர்களை யழைத்து உலகமெங்கும் விடுத்து, எவ்விடங்களிற் பகைவருடைய வலிமை செல்லாதெனத் தேர்ந்து, அவ்வவ் விடங்களில் நமது மித்திரர்களை விடுத்துப் பகைவரை வெல் வதே தகுதி' என்று சொன்னான்.

இங்ஙனம் சந்தோஷன் கூறி அஞ்சலியஸ்தனாய்த் தனது ஆசனத்தில் உட்கார, விவேகன் ஏனைய சமன் தமன் முதலி யோரை நோக்க, அவர்களும் நமது பகையை வெல்வதற்கு இதுவே தக்க சூழ்ச்சியென்று சொல்லுவாராயினர். அவை களை யெல்லாங் காது குளிரக் கேட்ட விவேகன் மனம் பூரி த்து, இனிச் சிறிதுங் காலந் தாழ்க்காது முயற்சி செய்வதே கருமமென்று துணிந்து, ஒற்றரை இக் கணத்திற்றானே அனு ப்புகிறேன் என்று ஏற்றவாறு செய்வானாயினன்.

விவேகன் மந்திரச்சருக்க முற்றிற்று.

---

6. விவேகன் ஒற்றுக்கேள்விச் சருக்கம்.

இவ்வாறே விவேக வேந்தன், தருமன், விசாரன், சத்தியன், அமிர்த சீலன் என்னும் நால்வரையும் நோக்கி, இங்கு வாருங்கள் என்ன, அவர்களும் வந்து வணங்கி நின்று, எம்மை அழைத்த காரணம் இன்னதெனத் திருவுளம் பற்றியருளுக வென்று வேண்ட, விவேகன் அவர்களைப் பார்த்து, 'நீங்கள் நால்வரும் உலகெங்கும் போய், ஐயமில்லாமல் ஆராய்ந்து பார்த்து, பகலு மிரவும் இடை விடாமல் செல்ல வேண்டிய இடங்களுக்கெல்லாஞ் சென்று, போர் செய்யுங் காலம் வரும் வரையும் நாம் மறைந்திருத்தற்கு ஏற்ற புகலிடம் பார்த்து வந்து எமக்குச் சொல்லக் கடவீர். தருமா! நீ அடர்ந்த விண்ணுலகத்துக்குப் போகக் கடவாய். விசாரா! நீ பூலோகத்திற் சென்று பார்க்கக் கடவாய். சத்தியா! நீ தென்புலஞ் சென்று பார்க்கக் கடவாய். அமிர்த சீலா! நீ பாதாளத்துக்குப் போகக் கடவாய்' என்று நால்வருக்கும் நியமிக்க, அவர்களும் விடைபெற்று விரைந்து வேடமாறிச் சென்றனர். அங்ஙனம் சென்ற நால்வரும் தாம் தாம் போக வேண்டிய இடங்களுக்குச் சென்று, எவ்வெவருடைய வலியையும் வாழ்வையும் தொழில் முதலியவைகளையும் உள்ளங்கை நெல்லிக்கனி போலத் தெரிந்துகொண்டு மீண்டார்கள்.

மீண்டவர்களில், விண்ணுலகஞ் சென்று பார்த்தவனாகிய தருமன் விவேகனிடஞ் சார்ந்து அவன் பாதங்களை வணங்கி நின்று, 'ஐயனே! வைகுந்த முதலிய வானிடங்களிலே நமது பகைவர்கள் செய்கின்ற தீமை என்னால் எடுத்துச் சொல்லப்படுந் தரத்ததன்று. சொல்லின், நாவானது வெந்து போம், நினைக்கின் மனமானது சுறுக் கொள்ளும், கேட்கின் தீக்கோலை யெடுத்துச் சொருகிக் கொள்வதுபோ லாகுமன்றோ? வைகுந்தத்திலே நம் பகைவருடைய கொடிய செய்கையைச் சகியாத விஷ்ணு கண் சிவந்து அங்கங் கறுத்து வாய் துவர்த்து இடைச் சேரியிற் சென்று நெய் வெண்ணெய்

தயிர் பால் எல்லா முண்டும் ஆறப் பெறாது ஈற்றிலே பாற்கடலிற் சென்று பள்ளி கொள்வா னாயினன். இனிச் சிவனோ அப் பகைவருடைய கொடுமையால் திருமேனியி லொருபாதி தீப்போலச் சிவந்து ஒருபாதி கறுத்து அவ்வளவில் நில்லாமல் நெற்றியிலும் நீறாகும்படி அக்கினி யதிகரிக்க அதற்கு மருந்தாகச் சந்திரனைச் சூடினாலும் கங்கையைத் தரித்தாலும் ஆறாததா யிருக்கிறது. அப்பால் பிரமன் தன்னைப் பற்றிய தீயால் முன்னே ஒருதலை போகப்பெற்றும் அந்தத் தீயானது தன்னுள்ளே யிருந்து மேலும் வினையை விளைத்ததனாலே எக்காலத்தும் குளிர்ந்த பரிசத்தை யுடையதாகித் தாமரைப் பூவிலே வாசஞ் செய்வானாகியும் அம்மனஸ்தாபம் நீங்கப் பெற்றானில்லை. இவை மாத்திரமோ, வேந்தனே! இன்னுங் கேட்பாயாக, நம் பகைவர்கள் விநாயக மூர்த்தியைப் பாதைவழி தோறும் குடி யாக்குவித்து, நாணமின்றித் தொடையின்மீது ஒரு பெண்ணை வைத்துக் கொள்ளும்படி செய்து, அவரை நிருவாணி யாகும்படி செய்துவிட்ட மோசம் மகா மோச மாயிற்று. சுப்பிரமணியக் கடவுள் மோகனுடைய தீச் சரங்களால் மெய் கறுத்து, சூடு தணிய நிழலில்லாமல் துள்ளித் துடித்து ஓடாத தினைப்புனங்க ளெல்லாம் ஓடி, குறப் பெண்கள் வாசஞ் செய்கின்ற மலையில் ஒரு மலைப்பக்க மாகவும் வேங்கை மரமாகவும் மாறி மறைந்தனர். இந்திரன் தனதுடம்பெங்கும் துளைக்கப் பட்டவனாய்ச் சோர்ந்து மந்தாரநிழல் தேடி யுட்கார்ந்தும் தனது உடலைப் பற்றிய சோகந் தீரப் பெற்றானில்லை. சிவ பக்தராகிய மார்க்கண்டர் மீது கூசாமல் பாசம் வீசி அவரைத் துன்புறுத்திய காலனைத் தாளா லுதைத்துத் தரையிலே வீழ்த்தும்படி சிவனைத் தூண்டிய கொடியன் நம் பகைவனாகிய கோபனன்றோ? கொடியோராகிய நம் பகைவரது தீய செய்கையினால் தேவர்கள் யாவரும் மண்ணிலே மிதிக்கின் மிகச்சுடுமென்னும் அச்சத்தால் மிதியாமல் அந்தரத்தில் நின்றும், கண்ணுறக்க மின்றி இன்னும் யாது வருமோவென்று கண்ணிமையா திருந்தும், விண்ணுலகத்தை விட்டிறங்கினால் வெப்பேறுமேயென்று திகைத்தும் நொந்து

வருவதறியாது துடிக்கிறார்கள்' என்று சொல்லியபின் மீண்டும் வணக்கஞ் செய்து ஒரு பக்கஞ் சார்ந்தனன்.

உடனே அமிர்தசீலன் எழுந்து விவேகனை வணங்கி, 'இறைவனே! யான் பாதலத்தைத் துருவிச் சென்று கண்டதைச் சொல்வேன், கேட்டருள்க. மோகனுடைய ஆக்கினைச் சக்கரத்திலிருந் தாடுகின்ற கோபன், காமன் முதலியவர்கள் பாதலத்திலே செல்கின்ற கொடுமையால் நாகராஜன் கண் சிவந்து, நெடுமூச்செறிந்து, மிக்க பயம் பிடித்து, இனிப் பிழைக்க வழி யில்லையென்று பூமியின் கீழாகச் சென்று, பூமி அவன் சிரசின் மீதுறுத்தப் பதுங்குவா னாயினன். கொடிய விஷத்தினும் தீயவர்களுடைய செய்கை மிகக் கொடிது என அறிஞர் சொல்வது பொய்யாகுமா? அதுபற்றியன்றோ சிவனும் விஷ்ணுவும் இந்தத் தீயவர்களினும் சர்ப்பங்கள் மிக நல்லவையென் றெண்ணி முறையே அவற்றை ஆபரண மாகவும் சயனமாகவும் கொள்ளத் துணிந்தனர். கெட்ட பாதகர்களாகிய மோகனாதியர் விர்த்தி யடைந்து, பூமி கிடுகிடென்று நடுங்கும்படி துஷ்டபாவச் செய்கைகளைச் செய்த கொடுமைக்கு ஆற்றாமல் நாக லோகத்தாராகிய ஆதிசேஷன் முதலியவர்கள் பட்டபாட்டை அவர்களே சொன்னபோது என் உள்ளம் பதறியதை என்ன சொல்வேன்! அருள் தரித்த துரியோதனாதியர்க்கு அன்புள்ள தந்தையாகிய திருதராட்டிரக் குருடனை யொத்த கொடிய மாநதனுக்குப் பிரவிர்த்தி வயிற்றிற் பிறந்த திருடராகிய மோகனாதியருக்கு நாம் ஒளித்து வாழ்வதற்கேற்ற ஒரு தேசம் எங்கே யுள்ளது? நமதுகுலத்துக்குப் பகைவனாகிய கருடனுக்கும் அவன் கண்ணுக்கெதிர்ப்படா திருக்கின்றப்பலாம், அறியாமை என்னும் இருளை அகற்ற வல்ல சூரியன் போலும் நிரூபகனிருக்கவும் காமனுடைய வலிமை எவ்வுலகினும் மிகுந்தது என்ன காரவிசேஷமோ என்பார்கள். கோபனுடைய தீமையைப் பொறையன் அடக்காதிருப்பதென்ன ஆச்சரிய மென்பார்கள். அகந்தை நாயகனாகிய அகங்காரனைச் சாந்தி கணவனு

கிய சமன் வலியழிக்கத் தாமதித்ததென்ன என்பார்கள். மச்சரன் உலகத்தை யூடுருவிச் சென்று வருத்துகின்ற செய்தியைச் சந்தோஷனுக்கு எடுத்துச் சொல்வாருமில்லையா என்பார்கள். சுடும் புலைத் தொழிலைச் செய்கின்ற டம்பனுடைய அக்கிரமங்களை நிஸ்ஸந்தேஹனும் மெய்யனும் விசாரிக்கின்றுரில்லையே என்பார்கள். மௌட்டிகனுகிய வயிரன் நாசமாம்படி அவிரோதன் முயலாதிருப்பதென்ன விபரீத மென்பார்கள். ஆண்டகையாகிய விவேக வேந்தனை மோகன் தனதாணைக் குட்பட்ட தாமதன் மகளாகிய நித்திரையை விடுத்து மயக்கிவிட்டானே, அன்றி அவ் வேந்தனுடைய பத்தினியாகிய சுமதியை வேறு பிரித்து விட்டானே? சூரியன்போல அவனிருந்தும் பனிபோலும் இப் பகைவர்கள் செய்கையைச் சிந்தியாதிருப்பதன் காரண மென்னையோ அறியோமென்பார்கள். இன்னும் இவ்வாறு நாக லோகத்தார் சொன்னவைகள் ஒருகோடி கோடியுள்ளன. அவர்கள் சொன்ன வண்ணம் யான் சொல்லும் வண்ணமன்று' என்று சொல்லி முடித்தான். அங்ஙனம் சொன்ன அமிர்தசீலனை, சுமதி சமேதனுகிய விவேகன் குறுமுறுவலோடு உட்காரெனச் சொல்ல, அவன் உட்கார்ந்தனன்.

பிறகு யமலோகஞ்சென்று வந்த சத்தியன் அஞ்சலியஸ்தனாய் விவேகன் முன் எழுந்து, 'ஐயனே! நான் யமலோகஞ் சென்று கண்ட விந்தைகளைக் கேட்டருள்க. காலனும் அவனுடைய கோடி கோடி தூதர்களும் உலகமெங்கும் விஷம் போலப்படர்ந்து, மிகவுங் கொடியராகிக் கண்களில் தீப்பொறி சிந்தும்படி கோபித்து நீல மேகங்கள் போல உருக்கொண்டு, கரிய நெஞ்ச முடையவர்களாய், சுவர்க்க லோகத்தை யடைந்து அச் சுவர்க்க வாயிலின் பொற் கதவைப் பூட்டிட்டு, இடையிடையே வந்து சேருகின்ற புண்ணியர் சிலருக்கு மாத்திரம் திறந்து இடங்கொடுத்து விட்டு ஏனையர் யாவரையும் சிலரை இளமையிலும், சிலரை ஓடியாடும் பருவத்திலும், சிலரைப் பாடசாலையிற் சென்று கற்கும் பருவத்தி

லும், சிலரை யௌவனத்திலும், சிலரைப் பெண்களை மணி
ந்து இன்ப மனுபவிக்கும் பருவத்திலும், ஏனைய பருவத்
திலும், அப்பால் எப்பருவத்திலும், எச்சமயத்திலும், நேற்
றிருந்தான் இன்றைக்கிலன் என்ன பாவம் என்று உலகம் அதி
சயிக்கும்படியாகப் பெண்ணென்றும் ஆணென்றும் பேதமி
ன்றி உயிரை வாங்கி, வேறோருடலிற் செலுத்திக் கொடிய
நரகத்தில் தள்ளி, அவருள்ளே கொடிய பாவிகளைக் கூறு
கூறாக வாள்கொண்டு அடிமுதல் முடியீறாக அரிந்தும், அக்
கினியி லிட்டு வாட்டியும், பாம்பு அட்டை செந்தேள் முத
லியன நிறைந்த குழியிலே தள்ளியும், அக்கினி மயமாகக்
காய்ந்து சிவந்த இருப்புத் தூணோடு சேர்த்துக் கட்டியும்,
இவ்வாறு எண்ணில்லாது பேதப்பட்ட நரகவேதனைகளைச்
செய்து வருத்துகின்ற தன்மையை எவ்வாறு சொல்வேன்!
அங்ஙனம் வருத்தப்படுகிற சீவர்களின் தொகையைக் கண
க்கிடவும் போமோ? கடற்கரை மணல்தானும் அவ்வளவாகா
தே. ஐயனே! இன்னுமவர்கள் சொல்வதைச் சிறிது கேட்ட
ருள்க. பெண்டுபிள்ளை சுற்றம்பின்னுக்கு உதவியெனநினைந்து,
தருமத்தைச் சிறிதும் நாடாமல், அவர் பொருட்டுக் கடன்
பட்டு எம்பொருளை யெல்லாம் இறுத்தோமே யென்பார்
சிலர். பெண்டு பிள்ளை சுற்றத்தவர்களே, உண்டீர், உடுத்தீர்,
உற்றவேளைக்கு ஒருவரும் வந்து அண்டமாட்டீர், அந்தோ!
உம்மை நம்பி அடைந்த கதியிதுவோ என்பார் சிலர். கொடுஞ்
சாருவாகப் பாவி மாறுபாடாய் மறங்கூறி வேறு லோக மில்லை
யென்பதைக் கேட்டுக்கெட்டோம் என்பார் சிலர். நீறு கோபி
திருநாமம் ஆகிய இவைகளை நெற்றியி லிடாத சமணருடைய
நூல்வழியிற் புகுந்து திகைத்தோமே யென்பார் சிலர். உடம்
புகளெல்லாம் ஒரு கணத்திற் பிறந்து ஒருகணத்தில் இறக்கு
மியல்பினவாகவும் அவைகளுக்குப் பாவமும் உண்டோவெ
ன்று புத்தன் சொன்னதை நம்பிக் கெட்டோமே யென்பார்
சிலர். பரிசுத்தனாகிய விவேகனையும் சும்மா வருத்தின மகா
பாதகரிடம் எமக்குண்டாகிய கன்மக் கொடும்பாவம் சென்
றடைக வென்பார் பலர். பொருளைத் தேடிச் சிறு தொழிலிற்

செலவிட்டதுமன்றி உணர்ச்சியற்றுப் பதகரைப்பாழிப்பிழை
த்ததெல்லாம் இப்பொழுது நமக்குப் பலித்ததென்பார் சிலர்.
இப்படி எம்மைக் கேட்டுக்கு ஏதுவாக்கின பாவி இன்னு மொ-
ருமுறை எம்மைப் பிறக்கவிடின் நாம் அங்கே செல்லுவோ
மா என்பார் சிலர். என்றும் இறக்கமாட்டோம் என்றிருந்
தோம், இறப்பதை யறிந்தால் அன்று படைத்த பொருளை
அன்றே மறையவர்க்குக் கொடுப்போமே யென்பார் சிலர்.
இப்போது எம்மை அங்கே போய்வரும்படி யனுப்பினால்
புதைத்த திரவியத்தையெல்லாம் மனப் பூர்த்தியாய்த் தரு
மஞ்செய்து இங்கு ஓடிவருவோமே யென்பார் சிலர். பிறந்த
வுடனே துறந்து சுத்தப்பிரமத்தை யறிந்து பிறப்பை மற
ந்து இந்த நரகத்திலே பொருந்தாதிருக்கும் பாக்கியமும் நம
க்குக் கிடைக்குமோ என்பார் சிலர். இவ்வாறு நரகத்திலே
யழுந்தித் துன்ப மடைவதை யறியாமல் சிறந்த விவேகனு
டைய செயலை நிராகரித்தோமே என்பார் சிலர். இவ்வாறே
கொடிய நரகத்திலே கிடந்து வருந்துவோர்கள் எடுத்துச்
சொல்லுகிற சொற்களையும் அடையும் துன்பங்களையும் எடுத்
துச் சொல்ல வல்லவர் யார்?' என்று தான் கேட்டவைகளையெ
ல்லாம் இயன்றவரையிற் சொன்னான்.

இப்படிச் சத்தியன் சொல்லித் தனது ஆசநத்தில் உட்கார,
விசாரன் எழுந்து விவேகனை நோக்கி, 'ஐயனே, நான் கண்டறிந்
தவைகளையுஞ் சொல்வேன், கேட்டருள்வாயாக. சௌபரி ரிஷி
யானவர் ஓடைக்குள்ளே புகுந்து மறைந்திருந்தும் அங்கும்
மன்மதபாணம்போய் அவரையிழுத்துக் கரைக்குக் கொண்டுவ
ந்து அவரை மாயையின்வசப்படும்படி செய்ததை என்னென்று
சொல்வேன்! ஓடமேறி நட்டாற்றிலே செல்லும்போது பரா
சரரை மச்சகந்திமீது மோகங்கொள்ளுவித்து அவளுடன்
சிறிதும் குற்சிதமின்றிச் சேரும்படி செய்த, காமன் திறத்
தை எவ்வாறுரைப்பேன்! வேதங்களைச் செவ்வையாயுணர்ந்து
அவைகளை வகுத்தவராகிய வியாசரைத் தனக்கிளைஞர் மனை
வியுடன் கூடச் செய்த மன்மதனது கொடுமையைக்கண்டு

கூசாதவர் யாவர்? அக் காமனுதியர் செய்கின்ற தீமையைச் சகிக்க முடியாமலன்றோ பெரியோர்கள் உறவும் மனையும் ஊரும் வளநாடும் செல்வமும் பிறவும் விட்டுத் துறவையடைந்து ஊர்தோறுஞ் சென்று பிச்சையேற்றுண்டு திரிவாராயினர்? நம்மவருள் சிலர், அஞ்சாக் கொடும்புல்லராகிய காமனுதியருடைய கொடுஞ்செயலாகிய அக்கினியினும் பஞ்சாக்கினியே குளிர்ந்ததென்று அவற்றின் மத்தியி னின்று தவஞ்செய்யப் புறப்பட்டவரும், சிலர் கண்ணைமூடிக்கொண்டு பிரபஞ்ச பிரஞ்ஞையற்று யோகஞ்செய்பவரும், சிலர் நீருக்குள்ளே சென்று ஒளித்தவருமாயினரன்றோ? தீமையைச் செய்தலே தொழிலாக வுடையவர்களுடைய தீய குணம் தம்மைப் பற்றிக்கொள்ளுமென்னும் அச்சத்தால் சில முனிவர்கள் காட்டுக்கு ஓடினுர்கள். ஏனைய சிலர் மலைச்சாரலை யடைந்து அம் மலையின் கண்ணுள்ள குகைகளிலே ஓடி யொளித்தார்கள். மிகுதியானவர்கள் ஓடாத திசையில்லை. வேதியருடைய கருமமெல்லாம் மாறி அவராற் செய்யவேண்டிய கருமங்களை மற்றைச் சாதியார் செய்வாராயினர். உயர்ந்தவர்க ளெல்லாம் தாழ்ந்தவர்களிடஞ் சென்று பிரயோஜனமடைய விரும்பி வணக்கஞ் செய்கிறுர்கள். மேலோர் சோதிடங் கேட்கக் கீழோர் அதனை யுரைக்கிறுர்கள். ஆலயங்களும் அகரங்களு மழிந்தன. மடாலயங்கள் நந்தவனங்கள் பாழாயின. சற்கருமங்கள் தாழ்ந்தன. சீலம் நல்லொழுக்கங்கள் குறைந்தன. செய்யத்தகாத கருமங்கள் ஓங்கின. மயக்கத்தைச் செய்கின்ற மாதருடைய முழக்கமே பெரிதாயிற்று. காரணமின்றிக் கடும்போர்க ளுண்டாயின. வீடுகள் தோறும் மேன்மை யென்பதற்றுக் கீழ்மையே செறிந்தது. வைதிக நெறிகள் மறைந்தன. அதற்கு மாறுன நெறிகளோ தழைத்தன. அப்படியே உலக வழக்க மெல்லாம் தலைதடுமாறிப் போயின. நல்வழியிலே செல்லுகின்ற சிலரும் தீயவழியிலே செல்வார் போன்றே திரிகின்றனர். இப்படித் திரியாவிடின், தீயவழியிற் செல்கின்றவரால் தீமை விளையுமென் றஞ்சியே அங்ஙனந் திரிகின்றனர். அவரை அப்படிப்பட்டவரென் றறிவதற்கு என்னுலு

[illegible] ஆகினும், இம்மானிடர்களுக்கு இயலாத நெருங்க முடியாத தெய்வ ஸ்தலங்களும் விசித்திரமான தீர்த்தங்களும் புண்ணிய பர்வதங்களும் திவ்விய வனங்களும் சில உண்டு' என்று சொன்னான். சொல்லுதலும் விவேக வேந்தன் முகமலர்ந்து, விசார! நீ யன்றோ சமர்த்தன் என அழைத்து ஆசி கூறி, நீ இப்போது அத்தியவர்கள் அணுகக்கூடாத சில புண்ணியஸ்தலங்களும், நதிகளும், மலைகளும், வனங்களும் சில உண்டென்று சொன்னவற்றை எனக்கு விரித்துக் கூறுவாயாக என்று சொன்னான். சொல்ல அவனும் சொல்வானாயினன்: 'ஐயனே! யான் கண்டுவந்த ஸ்தலங்களிவை. சிதம்பரம், திருவேட்களம், திருநெல்வாயில், திருக்கழிப்பாலை, திருநல்லூர்ப் பெருமணம், திருமயேந்திரப்பள்ளி, திருமுல்லைவாயில், திருக்கலிக்காமூர், திருச்சாய்க்காடு, திருப்பல்லவனீச்சரம், திருவெண்காடு, திருக்காட்டுப்பள்ளி, திருக்குருகாவூர், சீர்காழி, புள்ளிருக்கும் வேளூர், திருக்கோலக்கா, திருக்கண்ணார் கோயில், திருக்கடைமுடி, திருப்புன்கூர், திருநீடுர், திருநின்றியூர், அன்னியூர், வேளவிக்குடி, எதிர்கொள்பாடி, திருமணஞ்சேரி, திருக்குறுக்கை, திருப்பறியலூர், குரக்குக்கா, வாளொளிபுற்றூர், மண்ணிப்படிக்கரை, ஓமாம்புலியூர், கானாட்டுமுள்ளூர், திருநாரையூர், கடம்பூர், பந்தணநல்லூர், கஞ்சனூர், திருக்கோடிகா, திருமங்கலக்குடி, திருப்பனந்தாள், திருவாப்பாடி, திருச்சேய்ஞலூர், திருந்துதேவன்குடி, திருவியலூர், கொட்டையூர், திருவின்னம்பர், திருப்புறம்பயம், திருவிசயமங்கை, திருவைகாவூர், வடகுரங்காடுதுறை, திருப்பழனம், திருவையாறு, திருநெய்த்தானம், பெரும்புலியூர், திருமழபாடி, திருப்பழூவூர், திருக்கானூர், அன்பிலாலந்துறை, திருமாந்துறை, திருப்பாற்றுறை, திருவானைக்கா, திருப்பைஞ்ஞீலி, திருப்பூச்சிலாச் சிராமம், ஈங்கோய்மலை, இவை காவேரிக்கு வடகரையிலுள்ளவைகள். வாட்போக்கி, கடம்பந்துறை, திருப்பராய்த்துறை, கற்குடி, மூக்கீச்சரம், திருச்சிராப்பள்ளி, எறும்பியூர், நெடுங்களம், மேலைக்காட்டுப்பள்ளி, ஆலம்பொழில், திருப்பூந்துருத்தி, திருக்கண்டியூர், சோற்றுக்

துறை, திருவேள்விக்குடி, தென்குடித்திட்டை, திருப்புள்ள
மங்கை, சக்கரப்பள்ளி, திருக்கருகாவூர், திருப்பாலைத்துறை,
திருநல்லூர், திருவாவூர், பசுபதீச்சரம், திருச்சத்திமுற்றம்,
திருப்பட்டீச்சரம், திருசூறை வடதளி, திருவலஞ்சுழி, குட
மூக்கு, திருக்குடந்தைக் கீழ்க்கோட்டம், திருக்குடந்தைக்
காரோணம், திருநாகேச்சரம், திருவிடைமருதூர், தென்
குரங்காடுதுறை, திருநலக்குடி, வைகன்மாடக்கோயில், திரு
நல்லம், திருக்கோழம்பம், திருவாவடுதுறை, திருத்துருத்தி,
திருவழுந்தூர், திருமயிலாடுதுறை, திருவிளநகர், திருப்பறிய
லூர், திருச்செம்பொன்பள்ளி, திருநனிபள்ளி, திருவலம்புரம்,
தலைச்செங்காடு, திருவாக்கூர்த்தான்றோன்றிமாடம், திருக்கட
வூர், திருக்கடவூர் மயானம், திருவேட்டக்குடி, திருத்தெளிச்
சேரி, தருமபுரம், திருநள்ளாறு, கோட்டாறு, திருவம்பர்ப்
பெருந்திருக்கோயில், திருவம்பர்மாகாளம், மீயச்சூர், இளங்
கோயில், திலதைப்பதி, திருப்பாம்புரம், சிறுகுடி, திருவீழி
மிழலை, வன்னியூர், கருவிலி, பேணுபெருந்துறை, நறையூர்ச்
சித்தீச்சரம், அரிசிற்கரைப்புத்தூர், சிவபுரம், கலையநல்லூர்,
கருக்குடி, திருவாஞ்சியம், திருநன்னிலத்துப் பெருங்கோயில்,
திருக்கொண்டீச்சரம், திருப்பனையூர், திருவிற்குடி, திருப்புக
லூர், திருப்புகலூர் வர்த்தமானீச்சரம், இராமநதீச்சரம், திரு
ப்பயற்றூர், திருச்செங்காட்டங்குடி, திருமருகல், திருச்சாத்
தமங்கை, நாகைக்காரோணம், சிக்கல், கீழ்வேளூர், தேவூர்,
பள்ளி முக்கூடல், திருவாரூர், திருவாரூரரநெறி, திருவாரூர்ப்
பரவையுண்மண்டளி, திருவிளமர், கரவீரம், பெருவேளூர்,
தலையாலங்காடு, குடவாயில், திருச்சேறை, நாலூர் மயானம்,
கடுவாய்க்கரைப்புத்தூர், இரும்பூளை, அரதைப் பெரும்பாழி,
அவளிவணல்லூர், பரிதிநியமம், வெண்ணியூர், பூவனூர்,
பாதாளீச்சரம், திருக்களர், சிற்றேமம், திருவுசாத்தானம்,
இடும்பாவனம், கடிக்குளம், தண்டலைநீணெறி, கோட்டூர்,
வெண்டுறை, கொள்ளம்பூதூர், பேரெயில், கொள்ளிக்காடு,
தெங்கூர், நெல்லிக்கா, நாட்டியத்தான்குடி, காறாயில், கன்றாப்
பூர், வலிவலம், கச்சினம், கோளிலி, திருவாய்மூர், திருமறைக்

காடு, அகத்தியான்பள்ளி, கோடிக் குழகர், இவை காவேரிக்குத் தென்கரையிலுள்ளன. திருக்கோணமலை, திருக்கேதீச்சரம், இவை ஈழநாட்டிலுள்ளன. திருவாலவாய், திருவாப்பனூர், திருப்பரங்குன்று, திருவேடகம், கொடுங்குன்றம், திருப்புத்தூர், திருப்புனவாயில், இராமேச்சுவரம், திருவாடானை, திருக்கானப்பேர், திருப்பூவணம், திருச்சுழியல், திருக்குற்றாலம், திருநெல்வேலி, இவை பாண்டிநாட்டிலுள்ளன. திருவஞ்சைக்களம், இது மலைநாட்டிலுள்ளது. அவிநாசி, திருமுருகன்பூண்டி, திருநணா, கொடிமாடச் செங்குன்றூர், வெஞ்சமாக்கூடல், திருப்பாண்டிக் கொடுமுடி, கருவூரானிலை, இவை கொங்கநாட்டிலுள்ளன. திருநெல்வாயில் அரத்துறை, திருப்பெண்ணாகடம், கூடலையாற்றூர், திருவெருக்கத்தம் புலியூர், திருத்தினைநகர், திருச்சோபுரம், திருவதிகை, திருநாவலூர், திருமுதுகுன்றம், திருநெல்வெண்ணெய், திருக்கோவலூர், அறையணிநல்லூர், இடையாறு, திருவெண்ணெய்நல்லூர், துறையூர், வடகூர், திருமாணிகுழி, திருப்பாதிரிப்புலியூர், முண்டீச்சரம், புறவார் பனங்காட்டூர், ஆமாத்தூர், திருவண்ணாமலை, இவை நடுநாட்டிலுள்ளன. திருக்கச்சியேகம்பம், திருக்கச்சிமேற்றளி, திருவோணகாந்தன்றளி, கச்சியனேகதங்காவதம், கச்சிநெறிக்காரைக்காடு, குரங்கணின்முட்டம், திருமாகறல், திருவோத்தூர், பனங்காட்டூர், வல்லம், திருமாற்பேறு, திருவூறல், இலம்பையங் கோட்டூர், திருவிற்கோலம், திருவாலங்காடு, திருப்பாசூர், திருவெண்பாக்கம், திருக்கள்ளில், திருக்காளத்தி, திருவொற்றியூர், வலிதாயம், திருமுல்லைவாயில், திருவேற்காடு, திருமயிலாப்பூர், திருவான்மியூர், திருக்கச்சூராலக்கோயில், திருவிடைச்சுரம், திருக்கழுக்குன்றம், அச்சிறுபாக்கம், திருவக்கரை, அரசிலி, இரும்பை மாகாளம், இவை தொண்டைநாட்டிலுள்ளன. திருப்பருப்பதம், இந்திர நீலபருப்பதம், அனேக தங்காவதம், திருக்கேதாரம், நொடித்தான் மலை, இவை வடநாட்டிலுள்ளவைகள். திருக்கோகரணம், இது துளுவநாட்டிலுள்ளது. என இவை இருநூற்றெழுபத்து நான்கும் சிவஸ்தலங்களாம்.

எழுமூர், கொல்லிக் குளிரறைப்பள்ளி, பேராவூர், ஏழூர், தோழூர், வீரட்டம், எமப்பேறு, தக்களூர், அளப்பூர், கச்சிப் பழையார், பலதளி, காம்பிலி, ஏரிடவை, குறும்பலவு, வெங் கூர், குழையூர், கொங்கணம், பிரம்பிலேமகூடம், தஞ்சை, கொடுங்கோளூர், கஞ்சாறு, குன்றியூர், முழையூர், விராடபுரம், கண்ணை, காட்டூர், உஞ்சேனை மாகாளம், ஏமநல்லூர், பொதி யின் மலை, உருத்திரகோடி, புஞ்சாய்ங்கை, நியமநல்லூர், விளத் தொட்டி, அறப்பள்ளி, குமரி, பேரூர், கடைமுடி, கருகற் குரனகரம், வெற்றியூர், கொங்கசோகம், திரிசோமீசம், மைண் மச்சரம், மாகோணம், சூலமங்கை, கோட்டுக்காடு, மந்தானம், மந்தாரம், வாரணசி, ஊற்றத்தூர், நாங்கூர், வாதவூர், பொய் கை நல்லூர், மாட்டூர், மற்குன்றம், நெற்குன்றம், அத்தியூர், இடைப்பள்ளி, புலிவலம், உறையூர், இறையான்சேரி, படம் பக்கம், குணவாயில், பூழியூர், கூந்தலூர், பட்டிகுத்தம், குடி யத்தங் குடி, குருந்தங்குடி, திருவண்குடி, சாலைக்குடி, வேதீ சம், பிடவை, குரக்குத்தளி, தென்னிறைக்காட்டூர், நிறைக் காட்டூர், பிறைக்காட்டூர், இவை வைப்பு ஸ்தலங்கள்.

விஷ்ணு ஸ்தலங்கள்.

திருவரங்கம், உறையூர், திருமுட்டம், திருத்தஞ்சை, திருவன்பில், கரம்பனூர், வெள்ளறை, புள்ளம் பூதங்குடி, ஆதனூர், திருப்பேர், அழுந்தூர், சிறுபுலியூர், சேறை, தலைச் சங்க நாண்மதியம், திருவாலி, திருக்குடந்தை, கண்டியூர், விண் ணகரம், கண்ணபுரம், திருநாகை, கண்ணங்குடி, நந்திபுரவிண் ணகரம், நறையூர், புருடோத்தமம், காழிச் சீராமவிண்ணக ரம், சித்ரகூடம், கவித்தலம், கண்ணமங்கை, நாங்கூர், மணி மாடக்கோயில், திருத்தெற்றியம்பலம், வெள்ளியங்குடி, செம் பொன் செய்கோயில், திருமணிக்கூடம், அரிமேயவிண்ணக ரம், திருவைகுந்த விண்ணகரம், திருத்தேவனார் தொகை, காவளம்பாடி, வெள்ளக்குளம், பார்த்தன் பள்ளி, திருத்துவ ரை, திருப் பாவநாசம், இவை சோழநாட்டுத் திருப்பதிகள். திருமாலிருஞ் சோலைமலை, திருக்கூடல், திருமெய்யம், திருக்

கோட்டியூர், திருப்புல்லாணி, திருத்தண்கா, மோகூர், வில்லி புத்தூர், திருக்குறுங்குடி, திருக்குருகூர், தொலைவில்லி மங்கலம், சிவரமங்கை, தென்பேரை, திருவைகுந்தம், திருப்புளிங்குடி, திருக்குளந்தை, வரகுணமங்கை, திருக்கோளூர், இவை பாண்டிநாட்டுத் திருப்பதிகள்.

திருவனந்தபுரம், வண்பரிசாரம், காட்கரை, புலியூர், செங்குன்றூர், மூழிக்களம், திருநாவாய், திருவல்லவாழ், திருவாட்டாறு, திருவண் வண்டூர், திருவாறன்விளை, திருக்கடித்தானம், திருவிற்றுவக்கோடு, திருக்கச்சி, திருவூரகம், திருப்பாடகம், திருவெஃகா, அத்திகிரி, பரமேச்சுர விண்ணகரம், அயிந்திரபுரம், திருவேளுக்கை, திருக்காரகம், திருக்கள்வனூர், கார்வானம், திருவெவ்வுளூர், அட்டபுயங்கம், திருநீர்மலை, திருநீரகம், திருநின்றவூர், திருக்கடன் மல்லை, திருவல்லிக்கேணி, திருப்புட்குழி, திருக்கடிகை, திருவிடவெந்தை, திருவேங்கடம், இவை தொண்டை நாட்டுத் திருப்பதிகள்.

திருச்சிங்கவேள் குன்றம், அயோத்தி, நைமிசாரணியம், வடமதுரை, கங்கைக்கரைக்கண்டம், பதரிகாசிரமம், திருப்பிருதி, பிருந்தாவனம், சாளக்கிராமம், திருவாய்ப்பாடி, திருவைகுந்தம், திருப்பாற்கடல், இவை வடநாட்டுத் திருப்பதிகள்.

இப்படிப்பட்ட புண்ணிய ஸ்தலங்கள் இன்னும் அநேகமுண்டு. இவைகளில் சிவபெருமானும் திருமாலும் மனமகிழ்ச்சியோடு எழுந்தருளி யிருப்பார்கள். அன்றியும், புண்ணிய தீர்த்தங்கள் அநேகமுண்டு. இவை யாவும் மோகவேந்தனது கொடுங்கோன்மையால் கார்காலத்துச் சூரிய சந்திரர்களும் உடுக்களும் ஒளி மழுங்கி யிருப்பதுபோல விளங்கா திருக்கின்றன' என்றிவ்வாறு விசாரன் சொல்லி முடித்தான்.

இதைக் கேட்ட விவேகன் தலையசைத்து, விசாரனை நோக்கி, நமது படைவீரர்களை அவ்வவ் விடங்களுக்கு அனு

ப்புவோம்; அது நிற்க, மோகன் முதலான நமது பகைவர்து படைஞர் எவ்வெத் தலங்களில் வாழ்கின்றார்கள்? அந்தச் செய்தியை விரிவாயெடுத்துச் சொல்லக்கடவையென்று நிய மிக்க, விசாரன் சொல்லுகின்றான்: 'நாம் அடையவொண் ணாத அவித்தியாபுரத்தில், நவத்துவாரங்களையுடைய வீட் டில், துன்மதியும் பாஷண்டவிஞ்சையும் ஆகிய மாதரிடத்தில், கொடுமையாகிய கலியன், சாருவாகன், அநாசாரன், காபாலி என்பவர் சூழ, மோகவேந்தன் வீற்றிருந்து எல்லா வுலகங் களிலும் தன் கொடுங்கோல் செலுத்தி, அகங்காரன் முதலா னோரை அங்கங்கே யமைத்துத் தத்தம் தொழில்களை நடத் தும்படி கட்டளை யிட்டான். அவன் சொற்படியே காமன் தன் தேவியோடும் புதல்வனோடும் காஞ்சிப்பதியில் பிரவே சித்து அவ்விடத்தி லிருந்துகொண்டே எல்லா உலகங்களை யும் தன் வலி மிகுதியால் அடக்கிவெற்றிகொண்டான். அகங் காரன் கவுட தேசத்திலும், அவன் மகனாகிய லோபன் கேரளதேசத்திலும், அவன் தமயனாகிய இடம்பன் காசி நக ரத்திலும், மதன் என்பவன் கோதாவரி தீரத்திலும் அதர்மன் என்பவன் நெய்தனிலத்தூர்கள் தோறும், கோபன் யவந தேசத்திலும், மச்சரன் மராடத்திலும், சந்தேகன் கொங் கணதேசத்திலும், சங்கற்பன் கூர்ச்சரதேசத்திலும், இராச தன் தாமதன் என்பவர்கள் பாண்டிநாட்டிலும் சோணாட்டி லும், மாநன் என்பவன் மேனாட்டிலும், வயிரன் எயினதேச த்திலும், அநர்த்தன் கன்னடதேசத்திலும், ஆக இவ்வாறு தத்தம் மனைவி மக்களோடிருந்து எல்லாவுலகங்களையும் கைப் பற்றித் தத்தந் தொழில்களை நடத்தி, நம்மவர் ஒதுங்கும்படி தாக்கி இனிது வாழ்கின்றார்கள்'. இப்படி விசாரன் சொல்லக் கேட்ட விவேகன், விசாரன் முதலியோரை நோக்கிச் சொல் வானாயினன்:

விவேகன் ஒற்றுக் கேள்விச்சருக்கம் முற்றிற்று.

---

7. விவேகன்சேனை கரந்துறை சருக்கம்

'இப்போது நீங்கள் சொல்லிய சூழ்ச்சிப்படியே நமது சேனைகளைப் பற்பல இடங்களுக்குப் போக்கி ஆங்காங்கு தம்மை வெளிப்படுத்தாதுகரந்து உறையும்படி அமைக்கப்போகிறேன்; ஆதலால் யாவரும் சிறிது பொழுது அமைதியாயிருங்கள்' என்றான். அவ்வுரைப்படி யாவரும் அமைதியாயிருக்க, 'நிரூபகனும் அவன் சேனுபரிவாரங்களும் காஞ்சிக்கும், அவன் மைந்தன் நிச்சயனும் அவன் படைவீரரும் கோகர்ண தலத்துக்கும், அமிர்த சீலனும் அவன் குழாமும் காசி நகரத்துக்கும், விராகனும் அவன் துணைவரும் அநந்த சயனத்துக்கும், அடக்கனும் அவன் சேனுவீரரும் பத்திரகிரிக்கும், சத்தியனும் அவன் அணிகளும் பகீரதிக் கரைக்கும், பொறைபனும் துணைவரும் சிந்து நதிக்கரைக்கும், அவிரோதனும் படைவீரரும் காளத்தி கிரி சேட கிரி முதலிய மலைப்புறங்களுக்கும், தமனும் துணைவரும் நாத முதலாகவுள்ள எத்தலங்களுக்கும், நிர்விகற்பனும் அவன் படைஞரும் நாசிகைக்கும், சந்தோஷனும் அவன் தானையும் கோதாவரி நதிப் புறத்துக்கும், புனிதை நாயகனாகிய சத்துவனும் படைவீரரும் சிற்சிலராகத் தென்னாட்டிலேயுள்ள காவேரி வைகை முதலிய நதி தீரங்களுக்கும், தருமன் சேனைகள் கூறு கூறாகப் பிரிந்து சேது வேதாரணியம் நாகை முதலிய சமுத்திர தீரங்களுக்கும், சமன் தானைகள் சிற்சிலராகக் கங்கா சங்கம முதலிய சங்கமங்களுக்கும், ஏனையரும் இவ்வாறே ஏனைய இடங்களுக்குஞ் சென்று கரந்து உறைவீர்களாக' என்று விவேகன் ஆஞ்ஞாபித்தான். பின்னரும் நிரூபகனை நோக்கி, 'உனது படைவீரர் சிற்சிலரா ஒற்றுவராக நமது பகைஞர் நிற்கின்ற இடங்களதோறும் ஓரொருவர் சென்று ஆங்கு வசிக்கும்படி ஏவுவாயாக' என்றுரைக்க, அவனும் அவ்வாறே செலுத்தினான். அப்பால், தன் பக்கத்தில் நின்ற மற்ற வீரர்களை நோக்கி, 'நீங்கள் யாவரும் எம்மிடத்தி லிருங்க' ளென்றான்.

இங்ஙனம் யாவருக்குங் கட்டளையிட்ட பின்னர், படை வீரர்கள் விவேகனை வணங்கி, உனது ஏவலைத் தலைமேற்கொண்டு நமது பகைவருடைய வலியை ஒருவாறடக்கி வருவோமென விடைபெற்றபின், நிருபகன் முதலிய சேனாதிபதிகள் தத்தம் படைஞரை நோக்கி, நீங்கள் யாவரும் உங்கள் உங்கள் விரோதிகளிருக்குமிடங்களுக்குச் சென்று, வேற்றுருக் கொண்டு ஒருவர் கண்ணுக்கும் புலப்படாமல் மறைந்துறையுங்கள் என்று நியமிக்க, அவ்வாறே அப் படைஞர் யாவரும் தத்தம் விரோதிகள் இருக்குமிடங்களிற் சென்று மறைந்து உறைந்தார்கள். தருமபுத்திரன் முதலானோர் அஞ்ஞாதவாசஞ் செய்ததுபோல, விவேகன் படைஞர் மறைந்து உறைந்து தந்தம் பகைவருடைய செயலுக்கேற்ற வேடந்தாங்கி அவ்வப் பதிகளிலுறைந்து, தமது குணமுந் தொழிலும் வெளிப்படாவண்ணம் எவ்வகைத் தீய வொழுக்க முடையவர்களுடனும் கூடி அவரோடுறவாடுவார், ஆடுமவரோடும் விளையாடுவார், மடந்தையர் அனேகருடனே கூடுமவரோடு உறவு கூடுவார், திருவிழாவென்றும் கோயிலென்றும் குளமென்றும் ஓடுகின்றவர்களோடும் அயலோடுவர், நகைப்பவருடனே கூடி நகையாடுவர், பாடுமவரோடும் யாழினோடு ஏழிசையும் பாடுவர்; இவ்வாறு விவேகன் சேனைகள், ஆரியப்பாவை ஆடினாலும் காரியத்தின்மேற் கண் என்றாற்போல, எத் திறத்தினருடனும் கூடி ஒழுகுவாராயினர்.

இங்ஙனம் நீறுபூத்த நெருப்புப்போலவும், மாசுகொண்ட மாணிக்கம் போலவும் உண்மை வெளிப்படா தொழுகிவரும் காலில், காஞ்சியிற் பிரவேசித்துக் காமம் பயிற்றுங் குரவர் போல வேடம் பூண்டு அநேகருடன் சினேகஞ் செய்துவந்த நிருபகன் படைஞர், பருவமும் பக்குவமும் பார்த்துக் காமப் பயனைப் போதிக்கவந்த குரவர்போலாகி, அந் நட்பினரைத் தனியிடத்துக்குக் கொண்டேகி, 'நண்பர்காள்! நாம் சொல்வதைச் சற்றே சித்தத்தை வைத்துக் கேளுங்கள். இந்தப் பூமியில் இடுக்கண்மே விடுக்க ணடைந்து ஓர் இமைப்பொழுதிலே

மடிந்து வருந்தும் இம்மானிடப் பிறப்பில், பெண்களுடன் கூடிச் சுகிக்கும் இன்பமானது கருடனுற் பற்றப்பட்ட பாம் பின் வாய்ப்பட்ட தேரையொன்று வாய் திறந்து கூவும் போது ஒரு துளித்தேன் அந்தத் தேரையின் வாயில் விழ அதனை அது நுகர்ந்து இன்பமுடைவதை யொத்திருத்தலால் சிற்றின்ப மெனலாயிற்று. இனி இதனினும் சிறந்த இன்பம் யாதெனின், அது சுவர்க்க இன்பமாம். அந்தச் சுவர்க்கம் புகுந்தால், நரை திரை மூப்பு அகன்று எந்நாளும் யௌவன முடையவராகி, பஞ்ச தருவி னீழலிலே மந்தமாருதம் வீச, காந்தருவர் கின்னரர் இசைபாட, இந்திர பீடத்தி லமர்ந்து, தேவகன்னியருடைய செவ்விதழ்த் தேனை எந்நாளுமுண்டு, துன்பமென்ப தறியாமல் வாழ்தல் கூடும். அதல்லாமல் பிறர் மனைவியருடன் கூடி அனுபவிக்கும் தீய இன்பத்தைத் தவிர்த்து, தூய வேள்வி விரதாதிகளைப் புரிவீர்களாயின் அந்தச் சுவர்க்கத்தைப் பெறக் கூடும்' என்று கூறினார்கள். அது கேட்ட நண்பினர்கள் மெய்யுணர்வடைந்து, அன்று முதலாகச் சுத்தநதி படிந்து விரத சீலங்கள் பூண்டு சற்கன்மிகளாய் நடக்கத் தலைப்பட்டார்கள். அது கண்டு சிலர் பாவனை செய் வாரு மாயினார்கள்.

சிந்துநதி தீரத்துக்குச் சென்ற பொறையனது துணைவர் அதற்கப்பாலுள்ள யவன தேசத்துச் சனங்களுடன் சிநேகஞ் செய்து அவர்களை சந்தோஷிக்க நடந்து வருநாளில், அவரிற் சிலரைத் தனியிடத்துக்குக் கொண்டுபோய், பரியாகமும் காலமும் இடமுமறிந்து, 'நண்பர்களே! கோபனுடைய போதனைக் குட்பட்டு நீங்கள் நடப்பது தகுதியன்று. வலியவர்மே லெழுகின்ற கோபமானது அவரிடத்துச் செல்லப்பெறாது கோபஞ் செய்தவரிடத்தே திரும்பி அவர்க்கே கேடு செய்வதாகும். மெலியவர் மேல் எழுங் கோபமானது இகத்தில் வெவ்விய பழியும், பரத்தில் நரகமும் விளைப்பதாகும். கோபமானது அற்பர்கள் பார்த்து அகங்களித்தற்கும் நகைத்தற்கும் ஏதுவாய்க் கேட்டினையே தருவதாகும். இனிய நட்

யையும் ஒரு நொடியிலே வேரறுக்கும். கொடிய புலியானது பசுவினத்தைப் போல விர்த்தி யடையாமைக்குக் காரணம் அதன் கோபமே யன்றோ? ஒருவர் குற்றஞ்செய்தவிடத்துத் தங் குற்றத்திற்காக அடியைத் தாங்கும்பொருட்டுக் கையேற் பாரேனும், தங் கருமம் பழுதுபடா வண்ணங் கோலை யுயர வோங்கி மெல்லெனப் பூப்போல் அடித்து ஆளுங் குணமுடை யவர்களுக்கு எக்காலும் செல்வங் குறையமாட்டாது. ஆத லால், இதனை யாங்கூறுவது உம்மிடத்து வைத்த நேயத்தா லென்பதை உணரக்கடவீர்கள்' என்று இவ்வாறு போதித்தார் கள். இதனைக் கேட்டமாத்திரத்தில் நீங்கள் சொன்னது ஒக் கும் ஒக்கும். எம்மைக் கெடுத்தது பண்டு எழுந்த கோபமே, இன்றுமுதலாக அக் கோபன் உறவை விட்டொழித்தோமெ ன்று கூறி நல்லவ ராயினர். அது கண்ட வேறு பலரும் அங் ஙனம் பாவனை செய்து அடங்குவாராயினர்.

அப்பால் கோளதேசத்திற் சென்று அங்குள்ளார் சிற் சிலர்க்குப் பிரிய நண்பராய் நடந்துவந்த விராகன் படைவீரர், காலமும் இடமும் வாய்க்க அத் தோழரோடு ஒருசோலையி னிடமாகச் சார்ந்து, அவர்களை நோக்கி, 'அன்பர்காள்! நீர் இங்குச் செய்கின்ற பொருள் வியாபாரம் ஒன்று பத்தா கப் பலிக்கினும் அதனாற் பயன் யாது? நல்ல தருமங்களை ஆராய்ந்து செய்வீராயின், ஒரு பொருள் அனந்தகோடியாய்ப் பலிக்குமே, அதுவன்றோ வாணிகம். வாணாள் ஒரு கணப் பொழுதும் நிலையிலதென்ப தறிந்தும் மலைவனங்கள்தோறும் வீணாக அலைந்தலைந்து மிகு தனம் சம்பாதிப்பதே விரதமாக் கிக் கொண்டீர். நீங்களும் நன்றாக வுண்ணாமல் பிறர்க்குங் கொடாமல் திரவியத்தைச் சேமித்து வைக்கின்றீர். நீர் உடுக் கின்ற வஸ்திரமோ ஒரு முழத்துண்டாயிற்று; உண்பதுவோ காய்கனி தானியாதி அற்பவஸ்துக்களாயின. அவ்வளவிலே உலக வாழ்வுக்கும் நஷ்டம் பிறப்பிக்கின்றீர். சுவர்க்கலோக வாழ்வையுஞ் சிதைத்துவிடுகின்றீர். இது உமக்கு அழகன்று. சம்பாதித்த உங்கள் திரவியத்தைப் பொன்காத்த பூதம்போ

லிருந்து காக்கும்படி மூடிய சிந்தனையை விட்டொழிவீர்க ளாக. தவம் தானம் தருமத்தை முடிவுறுமற் காட்டி அழுது ண்டு உடுத்துக் களித்திரக் கடவீர். உங்கள் பொருட்டு முன்பு பூட்டிய சுவர்க்கத்துக் கதவைத் திறந்து அதனுட் புகுந்து வாழும்படி தேடக்கடவீர்' என்று இதுபோன்ற பிறவுங் கூறி னார்கள். அதுகேட்ட அக் கேரளர், இனிது இனிது, இது போல நாம் என்றுங் கேட்டதில்லை. எம்முன்னோர்கள் தேடிய பொருளும் அவர்கள் போன போக்கும் எங்கே! எனத் தேறி உள்ளுணர்வு தோன்ற நகைத்து, இனி யாம் தான தருமமே செய்வோமென்று துணிந்து அங்ஙனஞ் செய்யத் தலைப்பட் டார்கள். அதுகண்டு, பின்னுஞ் சிற்சிலர் அவ்வாறு செய்வா ராயினர்.

அப்பால் கங்கா சங்கமத்தை யடைந்த படைவீரர் கவுட தேசத்தாரை யடுத்து, அவர் கொள்கையைக் கைக்கொண்டு அவர்போலவே நடித்து, அதனால் அவர் சிலரோடு நட்புச் செய்து, சமயம் பார்த்து அவர்களுக்குப் புத்தி சொல்ல நினை த்து, சமயம் வாய்த்தவுடனே அவர்களை நோக்கி, 'நண்பர்களே! அகங்காரமானது தருமத்தை வேரறுக்கு மியல்பினது, கல்வி யறிவை விழுங்க வல்லது, உள்ளம் புகைந்தெழும்பக் கனலை மிகப் புழுங்குவிக்குந் தன்மையது, பிறர் பார்த்திகழும்படி செய்யும், சிறிது தவஞ்செய்யத் தொடங்கினால் அதனைக் கெடுக்கு மியல்பினது, சுவர்க்க சுகத்தைத் தடுக்குந் தன்மை யது, சுகத்தை யழிக்கும், இறுதியில் நரகத்துச் செலுத்தும்; ஆதலால், நம்மவராகிய உங்களுக்கு இது அழகல்லவே. தக் கன் யாகஞ் செய்த காலத்தில் அகங்காரம் கொண்டு தனக்கு மேலோனாகிய சிவபெருமானை யிகழ்ந்ததனால் அவன் தலை யிழந்ததே யன்றி, அவனை யடுத்திருந்தவர்களிற் சிலர் மூக் கிழந்தவர்களும், உடல் குழம்பப் பெற்றவர்களும், கண்ணிழ ந்தவர்களும், பல்லிழந்தவர்களுமாகி அதோ கதியை யடைந்த செய்தி யாவர்க்குந் தெரிந்த விஷயமே யன்றோ? ஆதலால், அந்த அகங்கார குணத்தை விடுவதே தூய மாதவமாம், அது

வே பெருந் தனமாம், அதுவே வண்மையாம், அதுவே திண்மையாம், அதுவே அறிவாம், அதுவே வாழ்வாம், அதுவே அழகாம், அதுவே சுவர்க்கமாம், அதுவே மற்றெல்லாச் செல்வமுமாம்' என்றிவ்வாறு போதித்தனர். அது கேட்டமாத்திரத்தில் அந்தக் கௌடதேயத்தாரும், சீ! சீ! என்ன காரியம் செய்துவிட்டோம் என்று நல்லறிவு பெற்றுப் பரம சாதுக்களானார்கள். அவர்களைக் கண்டு வேறு சிலரும் அவ்வாறேயானார்கள்.

அதன் பிறகு காசி நகரையடைந்த அவிர்த சிலனுடைய படைவீரர் அந்த நகரவாசிகளைப்போலச் சிறிதுகாலம் இடம்பாசாரம் பூண்டு அவர் சிலரோடு உறவு கொண்டு, இறுதியில் காலமும் இடமும் வாய்க்க அவர்களை நோக்கி, 'நண்பர்களே! பொருள் கவர்தலும் பிறவும் விரும்பிச்செய்கிற இந்த இடம்பாசாரம் மேலுலகினுஞ் செல்லுமோவென்று பஞ்சபூதங்கள் உள்ளேயிருந்து நகைக்கும். யமதூதர், இந்த இடம்பருடைய உயிரைக் கவர்ந்துபோய் நரகத்திலிட்டு வருத்துதற்கு எமது கைகள் விரைகின்றனவே, இப்போது எம் இறைவன் கட்டளையிட்டால் ஒரு நொடியிலே அந்தீயோரைக் கொண்டு வந்து விடுவோமே யென்று சிந்திப்பார்கள். அகத்திலே பதுங்கி யிருப்பதாகிய கபடத்தை, அடுத்திருப்பவருக்குத் தெளிவாக அவர் முகமே காட்டிவிடும்; அது காட்டாதாயின், அவர் மொழியாயினுங் காட்டிவிடும். அக் கபடம் பிறர் நகைத்தற் கேதுவாகும்; முதலில் சுகங் காட்டுவதுபோலத் தோன்றி இறுதியில் மிகுந்த துக்கத்தைக் காட்டும். அதுமட்டோ, அளவற்ற அனர்த்தங்களையு முண்டாக்குமல்லவா? கரதலாமலகம்போல அகத்தியலும் புறத்தியலும் ஒன்றாகக் காட்டி ஒழுகுவோர்க்கு விரதம் மாதவம் வேறு நன்னடைகள் ஒன்றும் வேண்டுவதில்லை, அவர் அடையாத மோக்ஷமு முண்டோ? ஆதலால், இடம்பாசாரத்தை விடுத்து ஈடேறுங்கள்' என்று சொல்லினர். அதுகேட்ட அக்காசிநகரத்தார், இவர்சொல்வது உண்மையேயாகுமென்று கொண்டாடி,

அன்றுமுதலாகப் பரிசுத்தரானார்கள். அது கண்டு வேறு சில ரும் அவ்வாறாயினர்.

அது நிற்க, கோதாவரி தீரத்திலுள்ள பத்திர கிரிப் பக்கத்தை யடைந்த அடக்கன் படைவீரர் அங்குள்ளார் போல வேடம்பூண்டு, அவர்களோடு உறவாடி, இறுதியில் பக்குவமறிந்து அவர்களிற் சிலரை நோக்கி, 'நண்பர்களே! அடக்கமில்லாமல் மத குணத்தைப் பூணுமிடத்தில், கற்ற கல்வி, குல மேன்மை, கருணை, பெரும் புகழ், செல்வம், கைம்மாறு நோக்காத உதவி, ஈகை, நல்லொழுக்கம், அரிய தவம், நியமம், உறவின் கேண்மை, திண்மை, வாய்மை, அழகு என்றற் றொடக்கத்தனவெல்லாம் பெற்றிடினும் அவ ற்றையெல்லாம் அப் பெருமித குணமானது நாசஞ்செய்து விடும். அடக்கமானது தன்னையடைந்தவர் இழிகுலத்தாரே யாயினும் அவரை உயர்குலத்தா ராக்கிவிடும்; தீய பழியை நீக் குவிக்கும், புகழைப் பெருக்கும், புண்போடு நண்பை வளர்க் கும், முடிவில் சுவர்க்க சுகத்தையுங் கொடுக்கும். ஆதலால், பெருமித குணம் தகாது' என்று கூறினார்கள். அது கேட்ட வர் பலரும் மருந்துண்டு பித்தமயக்கம் தெளிந்தவர் போலத் தெளிந்து அடக்க முடையவர்களானார்கள்.

இப்படியே சோமநாதத்திற் பிரவேசித்த தமன் படை ஞர் தமது உரு மாறி, அந்த நாட்டார்க்கு உறவினர்போல நடித்து, அவர்களைத் தம் வசமாக்கி, அடக்கனுக்கியன்றபடி சொல்லி, மானத்தை விரும்பாத மெய்வணக்கமானது அங் குள்ளார்க்கு வரும்படி கற்பித்தார்கள்.

அதன்பிறகு மாராடதேயத்திற் பிரவேசித்த சந்தோ ஷன் உறவினர் அந்நாட்டார்க்கு உறவினர்போல உடன்பழகி, அவர் தமது சொல்லைக் கேட்பதற்குரிய சமயம்பார்த்து, நம் தவம் எவ்வளவோ அவ்வளவே யன்றி என்ன முயற்சி செய்தாலும் அதற்கு மேற்பட்ட இன்பத்தைத் தருவதொன் றில்லை யென்று சிற்சிலருக்கு மச்சரனால் உண்டாயிருந்த கெடுதியை விலக்கினார்கள்.

நிர்விகற்பன், அவிரோதன், நிச்சபன், சத்துவன், சத்தியன் என்பவர்கள் தமக்குத் தகுந்த தலங்களில் தங்கி, சங்கற்பன், வயிரன், அசத்தியன், சந்தேகன், இராசத தாமதர் என்பவர் கண்ணுக்குப் புலப்படாமல் சமயம்பார்த்து, அவரவர்க்குண்டா யிருந்த குணசுபாவங்கள் மாறும்படி போதித்தார்கள். விவேகன் சேனை வீரராகிய மற்றவரும் அவரவர்க்கியன்ற முயற்சியைச்செய்து அவ்வத் தேயத்தாரைத் தீநெறியி னீக்கி நன்னெறியிற் செலுத்தினார்கள். இவர்கள் இப்படிச் செய்தது, சந்தன மரங்கள் பலவும் ஒரு காட்டில் முளைத்து அக் காட்டிலுள்ள வேறு மரங்களையும் தம்மைப் போலவே மணம் வீசும்படி செய்தல்போ லிருந்தது.

அப்பொழுது உலகத்தில் எவ்விடத்தும் தவம், பொறை, அருள், ஆசாரம், விரத முதலிய யாவும், காடு, மலை, நதி, புண்ணிய ஸ்தலங்கள் முதலிய இடங்களிலெல்லாம் இருட்டறையி லேற்றிய தீபங்களைப் போலப் பிரகாசித்தன. மாதர் கற்புத் தலையெடுத்தது, வேதியர் கருமங்களாகிய யாகாதிகளும், வர்ணாசிரம தர்மங்களும், ராஜநீதியி லடங்கிநின்றன. அந்தச் சமயத்தில் விவேகராஜன் நியாயனை நோக்கி, நீ போய் நம் படைஞர் செயலெல்லாமறிந்து வரக்கடவை யென்றேவ, அந்த நியாயனும் அவ்வாறே சென்று உலகமுழுதும் நோக்கி மீண்டு வந்து விவேகனை வணங்கி நின்று சொல்லுவானாயினன் :

'அரி அர பக்தியுள்ள நம்மவர்கள் யாவரும் யோகிநிகளுடைய அருட்டுணைகொண்டு சென்று கரந்துறைதலின், என் கண்ணுக்கே புலப்படவில்லை, பிறர் யார் கண்ணுக்குப் புலப்படுவார் ? அப்படி அவர் கண்ணுக்குப் புலப்படாதிருந்தாலும், சிலர் வீடுகளில் காமம் நல்வழியிற்செல்லா நின்றது, கோபமும் குற்றங்கண்ட பொழுதே யன்றி எப்பொழுதும் நிகழ்வதில்லை, உலோபமும் அறமல்லாத வழியில் நடப்பதில்லை, தவம் உலக முழுதும் வியாபித்தது, மானமும் அடங்கிற்று, அகங்காரம் நீர் பெய்த நெருப்புப் போல அவிந்து போயிற்று, மச்சரமும் மேம்படாமல் தாழ்ந்துபோயிற்று,

இடம்ப குணமும் அவ்வவரை விட்டு விலகிப் போயிற்று; ஊர்கள்தோறும் தருமம் நடனம் செய்கின்றது, அத்தருமம் வெட்கமடையா நின்றது. தேற்றாங்கொட்டையால் தெளிவித்த நீர்போல அநேகருடைய மனம் தெளிவடைந்தது. பொய்யென்பது ஒருபுறந் தொதுங்கிற்று, இராசத தாமத குணங்கள் தாழ்ந்து சத்துவகுணம் தலையெடுத்தது, சங்கற்பங் குறைந்து நிர்விசற்ப மிருந்தது, அநர்த்தமும் துக்கமும் அநேகர் மனத்தை நீங்கின, மேகங்கள் மழைபெய்தன, வஞ்சகராகிய நமது பகைவர் இனிச் சில நாளில் நசித்துப்போவார்கள் என்பதற் கிவையே குறிகளாம், உன் முயற்சி பழுதுபடுமோ, பாவம் தோற்கும் புண்ணியம் வெல்லும் என்பது பொய்யோ'. இவ்வாறு சொன்ன நியாயனை விவேகன் தன்னிரு கைகளாலும் தழுவிக்கொண்டு, இன்னமும் ஒருதரம் போய் அவ்வவ் விடங்களில் நிகழுஞ் செய்தியை அறிந்து வந்து சொல்லக்கடவையென்று கட்டளையிட்டான்.

விவேகன்சேனை சந்நத்தசருக்க முற்றிற்று.

---

8. சத்துவச்சிரத்தை தூதுச்சருக்கம்

அதன் பிறகு, அங்குள்ள அமைச்ச ரெல்லாரும் வேறோர் உபாயம் நினைத்து, விவேக ராஜனை நோக்கி, ஐயனே, நமது பகைவரை வெல்வதற்கு இன்னுமொரு சூழ்ச்சியுண்டு, அதனைக் கேட்டருளும்படி பிரார்த்திக்கின்றோ மென்றார்கள். அதுகேட்ட விவேகன் அவர்களை நோக்கி, அது யாதென்ன, அவர்கள் சொல்லுவாராயினர்: 'மோகன் துன்மதியையே யல்லாமல் பாஷண்டவிஞ்ஞை என்னும் ஒரு கன்னிகையையும் மணந்து, அவள் வயிற்றில் அஞ்ஞன் என்னும் ஒரு புத்திரன் பிறக்க அதனால் இறுமாந்திருக்கிறான். அந்தக் கொடிய பகையை யெல்லாம உமது ஆற்றல் வெல்லுமாயினும், இந்திரன் முதலான தேவர்களுடைய இடரைக் கெடுத்து அசுரர்களது வலிமை முழுதும் கெடுத்த தசரதன் இராமனென்று சொல்

லப்படும் ஒரு குமாரனைப்பெற்று வலிய பகையைத் தீர்த்தது
போல, உமது தேவியாகிய சுமதியினது அனுமதி பெற்று
உபநிடதை யென்னும் கன்னியைக் கலியாணஞ் செய்துகொ
ண்டு, அவள் வயிற்றில் ஒரு புத்திரனைப்பெற்று, அப் புத்திர
னால் அஞ்ஞ குமாரனை வெல்லுதற்கு உமது திருவுளம்
பொருந்தவேண்டும், இதுவே எமது விண்ணப்பம்.' அவ்
வுரை செவியிற் பட்ட மாத்திரத்தில் விவேகன் அக மகிழ்
ந்து, நீர் சொன்னது செவ்வையானது என முடியசைத்து
யானும் இவ்வகை சிந்தை செய்தேன், அதற்கேற்ப நீருஞ்
சொன்னீர். இவ்விடத்திற்றானே சிறிது போதிருங்கள், சுமதி
மனக் கருத்தை உணர்ந்து வருகின்றேனென்று கூறிச் சுமதி
யிடஞ் சென்றான். நாயகன் வரவைக்கண்ட சுமதிதேவி முகம
லர்ந்து உபசரிக்க, விவேகனும் சுமதியை ஆலிங்கனஞ்செய்து
மெல்லணையை யணுகி, அதன்மேல் இருவரும் வீற்றிருக்கை
யில், அவள் முகத்தை நோக்கி, 'என்னுயிர்க்குயிரும் வாழ்வும்
நல்லுறவும் கண்ணும் சிந்தையும் மற்றைய பிறவும் அருந்ததி
யைப்போன்ற நீயே யல்லது வேறு யாவர்? ஆயினும் இங்கு
நான் சுட்டிவந்த கருமத்தைச் சொல்லுதற்கு என் நெஞ்சங்
கூசி அஞ்சுகின்றது' என்றான். என்றலும், சுமதிதேவி எழு
ந்து நாயகனைத்தொழுது, 'என் பிராணநாயகரே, நீர் திருவாய்
மலர்ந்தருளுவதை யான் மறுத்திடப் புகுந்தால் உடதிடத்து
யான்கொண்ட அன்புயாதாகும்!' என்றாள். அதுகேட்ட விவே
கன் அவளைநோக்கி, 'கண்ணினு மினியராகி ஒளியாத உள்ளத்
தோடும் வேண்டிய தொரு பொருளைக் கொடுப்பவரிடத்தும்
ஒருவர் சென்று இரக்கும்போது, ஈவரோ ஈயாரோ என்னும்
அச்சத்தோடுமே இரப்பார். இது உலக இயற்கை. ஆகலால்
என்மனம் அஞ்சுகின்றது' என்றான். அது கேட்ட சுமதி
தேவி, 'குடியிற் பிறந்த பெண்கள் தமது நாயகர் யாது சொல்
லினும், அச் சொல்லின்படி பணிவிடை செய்து தெய்வந் தொ
ழாது கணவரையே தெய்வமெனத் தொழுது அவருண்ட
பின் தாம் உண்ணுதலும் அவர் தூங்கியபின் தாம் தூங்குத
லும் அவர் எழுமுன் தாம் எழுதலும் ஆகிய இவைமுதலியன

கடனாகக் கொள்வர். ஆதலால், நீர்அருளுகின்ற வழியில் யான் நடப்பது கடனாகும். ஆகவே நீர் மயங்குவது தகுதியன்று' எனக் கூறினாள். அது கேட்ட விவேகன், 'என் கண்ணே! நமது பகைவரது வலிக்கஞ்சி நாம் ஒதுங்கித்திரிவது உனக்கு தெரிந்ததன்றோ? இனி அப் பகையை வெல்லுதற்கேற்ற உபாயங்களைத் தேடுவதும் நமது கடனாயிற்றன்றோ? ஆதலால், நான் உபநிடதையை மணந்து அவள் வயிற்றில் ஒரு புத்திரனைப் பெற்று அப் புத்திரனால் மோகனது இரண்டாம் மனைவி வயிற்றில் உதித்து வளர்பவனாகிய அஞ்ஞானை வெல்லுதல் ஆவசியகமாகின்றது. ஆகவே உபநிடதையை மணம் புரிவதற்கு உன்னால் தடையொன்று மில்லையாயின் மேன்மையான புத்திரப் பேறுண்டு' என்றான். அது கேட்ட சுமதி தேவி, 'நன்னோக்கத்தோடு செய்யப்புகும் ஒரு கருமத்திற்கு என் கருத்தும் வேண்டுமோ? அன்பரே! நன்று வினவினீர், அடியாள் மனமும் உமது மனமும் வேறென நினைந்தீரோ? நீர் நினைந்தது நற்கருமமே, அதற்கு என் மனமும் ஒருப்படுகின்றது' என்றாள். என்றலும் விவேகன் சுமதியைத் தழுவி, அப்பொழுதே பகைவரைவென்று வெற்றிமாலையைச் சூடினவன்போல ஆனந்த பரவசமடைந்தான். அப்பால் அந்தப்புரத்தைவிட்டு நீங்கி, அத்தாணி மண்டபத்தை யடைந்து, அங்கே தன் வரவை யெதிர் நோக்கி யிருந்த மந்திரிகளிடம் நிகழ்ந்ததைக்கூறி, உபநிடதையிடம் தூதுவிடக் கருதி, அத்தொழிலில் வல்லவராவார் யாவரென ஆராய்ந்து, ஈற்றிலே சத்துவச்சிரத்தையே அத்தொழிலுக்கு வல்லாளெனத் துணிந்து, அவளை யழைத்து, 'பெண்ணே! நளன் பொருட்டுத் தமயந்தியினிடம் தூதுசென்ற அன்னம்போல நீயும் என்பொருட்டு உபநிடதையிடம் தூதுசென்று, நம் பகைவர் அறிந்துகொள்ளாதபடி அவள் மனத்தைத் திருப்பி மணத்துக்கு இணங்கும்படியாகச் செய்து மீள்வாயாக' என்றான். அது கேட்ட சத்துவ சிரத்தை, தனது கரங்களைக் கூப்பி விவேகனை வணங்கி, 'ஐயனே! உமது ஏவலைச் சிரமேற்கொண்டேன், நான் தூதுசெல்லும் நெறியில் உலகத்திலே எவ்விடத்தும் பாவி

உலாவுகின்ற பகைவர், என்னைக் கண்டு புலிபோலப் பாய்ந்து பற்றுவாராயின், அவர் கையினின்றும் மீள்வது எவ்வாறென்று அறியேன்' என்றாள். அது கேட்ட விவேகன், 'பெண்ணே! அரிபக்தி சிவபக்தி என்னும் யோகினிகளது கிருபை யிருக்கும் வரையில் நீ அஞ்சத்தக்கது யாது? யோகினிகளிடஞ் சென்று, அவர்களிடம் நிகழ்ந்தவைகளை யுரைத்து, அவர்களுடைய திருவருளைப் பெற்றுக்கொண்டு, அப்பால் வாணி புத்திரியாகிய உபநிடதையினிடஞ் சென்று, அவளுக்குத் தக்கவாறு சொல்லி அவளது சம்மதம் ஏற்று இங்கு வருவாயாக' என்றான். அது கேட்ட சிரத்தை, விவேகன் பாதங்களை வணங்கி, அவன் சமுகம் நீங்கி, சிவபக்தி அரிபக்தி என்னும் யோகினிகளிடஞ் சென்று வணங்கினாள். அவளைக் கண்ட யோகினிகள் அவளுக்கு மங்களங் கூறி அவளை நோக்கி, 'சத்துவன் பெற்ற பெண்ணே! நீ இங்கு வந்தது யாது கருதி?' என்ன, 'எனது அன்னையரே' என விளித்து, மோகனாகிய பாவியானவன், அகங்காரன் முதலிய படைஞரோடு கூடி எவ்வுலகத்திலும் விஷம் வியாபித்தது போல வியாபித்துத் தீத்தொழில்களைச் செய்தலால், நன்மைகள் யாவும் நீங்கியொழிந்த விதத்தையும், தருமம் நிலை குலைந்ததையும், சாந்தி தாந்திகளோடு சம தமங்களின் பெருமையும் பொறையும் அழிந்ததையும், தவம் தலை சாய்ந்து ஒதுங்கியதையும், நிருபகனும் சந்தோஷனும் அவரை யடுத்த மற்றையரும் மெலிந்து நீங்கியதையும், நீதி, கருணை, முதிதை, உபேக்ஷை, மைத்திரி என்பவர்கள் தளர்ந்ததையும் சொல்லி, விவேக ராஜன் அக்கொடியோர்க்குப் பயந்து தான் ஒளித்திருப்பதற்கு வேறோர் அரணின்றித் தன் சுற்றத்தோடும் பதரிகாசிரம வனத்தில் வந்து தங்கியிருக்கும் விதத்தையும், உபநிடதையின் மண விருப்பத்தினால் தன்னைத் தூதுவிடுத்த விரலாற்றையும், பகைவர் வருத்தினாலும் அவ் யோகினிகளது அருளுதவியைக் கொண்டு அவர்களை வென்று வரும்படி அவ் விவேகராஜன் சொன்னதையும் எடுத்துச் சொல்லினள். அது கேட்ட யோகினிகள் மனமுருகி அவளை நோக்கி, 'நங்காய்! அஞ்சேல்.

உனது அரசன் உபநிடதையை மணம் புரிதற்கும் மோகனை தீயமை வெல்லுதற்கும் நாங்கள் துணை செய்வோம்; உனக்கும் இடையூறு வாராது காப்போம். எமது அருட்காவல் பூண்டு பிரமலோகஞ் சென்று மீள்வாயாக' என்ன, சிரத்தை நீதியும் அவர்கள் பாதங்களை வணங்கி, அவர்கள் அருளாகிய ஓடத்தின் மீதேறிக் காமனாதியரது பகைக்கடலிலே செல்வாளாயினள்.

சத்துவச்சிரத்தை தூதுச்சருக்கம் முற்றிற்று.

---

9. மோகனாற்றுக் கேள்விச் சருக்கம்

இங்கே அவித்தியா புரத்திலே, சஞ்சலன், கபடி, கலியன், குதர்க்கன், சாருவாகன், அகீர்த்தி, காபாலி, சபதன் முதலிய பலர் தன்னைச் சூழ, மோகனானவன் துன்மதியோடு இரவும் பகலுங் கூடி இன்பமனுபவித்து அவள் சொன்னபடியே நடத்தி இறுமாந்திருக்கும் நாளில், ஒருநாள் தனது மைத்துனனாகிய கலியனை அழைத்து, 'நமது பகைவர்கள் நமக்கஞ்சி நாற்றிசையிலுமோடி மறைந்த பின்னர், நெடுங்காலமாக அவர்கள் செய்ததும் அவர்கள் கதியும் இன்னவாறாயின என்பதை நம் படை வீரரில் ஒருவராயினும் வந்து சொன்னாரில்லை. இக் கணத்திற்றானே ஒற்றரைப் போக்கி, அவர் செய்தியை உணர்வாயாக' என்றான். அதுகேட்ட கலியன், 'ஐயனே, நீ கட்டளையிடா முன்னமே நாற்றிசையிலும் ஒற்றரைப் போக்கிவிட்டேன். வறுத்த விதைகள் முளைப்பதுண்டோ? அத்தன்மையராகிய நம் பகைவரது வலிமையும் எம்மனோரிடத்திற் பலிக்குமோ? எவ்விடத்தும் பரவியிருக்கிற காமன் முதலானோருடைய பராக்கிரமம் எளிதாமோ?' என்று கூறினான். கூறி முடிக்கிற சமயத்தில், அவனது ஏவலாற் சென்று உலகமுழுதும் நிகழ்கின்ற செய்தியை யறிந்துவந்த ஒற்றர்கள், சாஷ்டாங்கமாய் வணங்கி, 'இறைவனே, நமது படைத்தலைவர்களாகிய காமனாதியர்கள் உலகமெங்கும் தமது படைத்திறலைச் செலுத்திப் பகைவரது உருவும்

புலப்படாவகை அவரை யொடுக்கி வருவராயினும், மேகமி
ன்றி மழை வீழ்வது போல இவ்வுலகத்தில் இதுவரையி
லும் இல்லாதனவாகிய சில அதிசயங்கள் உளவாயிருக்கக்
கண்டோம். என்னெனின், காஞ்சியைக் காமனும் இரதியும்
தமது இராசமாபுரமாகக்கொண்டு, அங்கிருந்தபடியே உலக
முழுதும் கோல் செலுத்தி வருகின்றனராயினும், மந்திரி
வீட்டில் மௌட்டியம் நுழைந்தது போல அவ்வூரிலே
தானே மாதர் ஆசையைத் துறந்து அவர் தருகிற இன்பத்
தைச் சிற்றின்பமென்றிகழ்ந்து பேரின்பத்தை நாடி உதய
மத்தியாஸ்தமன காலங்களிலே சந்தியா வந்தனம் ஓமம் முத
லிய சற்கருமங்களை நடத்துவோரும் பற்பலராயினர். கோப
னது அரசிருக்கைத் தானமாகிய யவனதேயத்தில் சிலர்
கோபமென்பதை மறந்து பொறுமையுடையோராய் விளங்
கக் கண்டோம். லோப னிருக்குமூரிலே கருணையோடு கூடிய
ஈகையும் தலையெடுத் திருக்கப் பார்த்தோம். மச்சரன் வாழ்
கின்ற நாட்டிலே பிறர் செல்வங் கண்டு அநேகர் மனமகிழ்ந்
திருக்கக் கண்டோம். மானனது நகரத்தில் அநேகர் முடிதாழ்
த்தி வணங்குவதும் நோக்கினோம். சந்தேகன் அரசுசெய்
கின்ற கொங்கண தேசத்திலே சிலர் நிச்சயன் வழியில் நிற்ப
தும் பார்த்தோம். சங்கற்பன் வாழ்கின்ற குச்சர தேயத்தில்
நிர்விகற்பம் வாழ்கின்றது. இடம்பன் நிலைபெற்று வாழ்
கின்ற காசி நகரத்தில் மனத்தெளிவு வாழ்கின்றது. இராசத
தாமதர் வாழ்கின்றவூரில் சத்துவ குணம் வாழ்கின்றது. இது
என்ன சித்து வித்தையோ! அன்றியும், கடற்கரை நகரங்க
ளெல்லாவற்றினும் அதர்மன் நிலைபெற் றிருக்க, அவ்விடங்
களில் சிலவிடத்தில் தருமம் விளங்குகின்றது. நாம் செய்யுஞ்
செய்கையெல்லாம் இந்திரசாலம் போலப் பொய்யாய்ப்
போகும்படி செய்வோராகிய நம் பகைவர் உறையுமிடம் எவ்
வகையினும் புலப்படவில்லை; அப்படியிருந்தும் நம் செய்
கைகளுக்கு மாறான செய்கைகள் மாத்திரம் அங்கங்கே காணப்
படுகின்றன. அன்றியும், விவேகராஜன் தனது பரிவாரத்தவ
ரை நம்மவர்போல வேற்றுருக் கொண்டு நம்மவரிடங்கள்

தோறுஞ் சென்று நம்மவர் வலிமை யழிக்கும்படி அனுப்பி யிருக்கிறான். மேலும் பிரமனுக்கு வாணி வயிற்றில் தோன் றின உபநிடதை யென்னும் பெண்ணைத் தனக்கு மணம் பேசி வரும்படியாய் சத்துவன் மகளாகிய சிரத்தையைத் தூதுபோக்கி யிருக்கிறான்' என்று சொல்லி முடித்தார்கள்.

இவற்றைக் கேட்ட மோகன் நச்சரவு போலச் சீறி, உள்ளே பயமொரு பக்கம் வாட்ட, அதனை மூடாந்தகாரத்து ளிருத்தி, பித்தங் கொண்டவன் போல நகைத்து, தன் பக்கத் திலிருந்த கலியன் முதலான அமைச்சரை நோக்கி, 'இவ்வொ ற்றர் கூறினவற்றைக் கேட்டீர்களா? நன்று கூறினர்! கடழி ந்து நாடிழந்து காடுபுகுந்த விவேகன் முதலானோர் மீள்வா ராம், மீண்டு வேடமாறி நாடு சென்று யாவர்க்கும் தருமத்தை போதிப்பாராம், அவர்கள் செயலை நம்மவர்கள் அறிவது அரிதாம், பிரமனது புதல்வியாகிய உபநிடதைமீது விவே கன் ஆசைகொண் டிருக்கிறானும், அவனுக்கு மணம் பொரு த்தும் பொருட்டுச் சத்துவச் சிரத்தையைத் தூதுவிட்டா னும், அவளை மணம் புணரும் போகமும் அவனுக்கு உண்டா குமாம், இவ்வாறு நமது தூதுவர் வந்து சொன்னார்கள்; மாது சிரோமணி யாகிய பாஷண்ட விஞ்சையை யாம் மணம் புரி ந்து அவள் வயிற்றில் தோன்றின அஞ்ஞ குமாரன் போல ஒரு குமாரனைப் பெற வேண்டு மென்று விவேகன் கொண்ட கருத்து நன்று! அவனது கருத்து, பூனையானது புலியின் தொழிலைச் செய்ய நினைப்பதுபோ லிருக்கிறது. சிங்கேற்றின் வாயி லகப்பட்ட யானையை விடுவிப்பதற்குக் குறுநரிகள் முய ற்சி செய்வதுபோல நமது தந்தையாலும் நம்மாலும் சிறை யிடப்பட்ட பிரமத்தை விவேகன் முதலியோர் மீட்க முயல் வது அழகா யிருக்கின்றது! எமது தந்தையானவன் எமது பாட்டனாகிய பிரமத்தைச் சிறைசெய்ய அப் பாட்டன் சிறி தும் நழுவாதவண்ணம் நாம் பாச விலங்கிட்ட அந் நாளிலும், விவேகனையும் அவன் சுற்றத்தாரையும் காட்டுக்குப் போகும் படி கலங்கச்செய்து ஓட்டிவிட்ட நாளிலும் இல்லாத வலிமை ய

இன்று வந்ததுபோ லிருக்கின்றது!" என்று பலவாறு பரிகசி த்து, அத் தூதரை நோக்கி, 'நீங்கள் இப்போது சொன்ன தெல்லாம் சிறிதும் ஆராய்ச்சி யில்லாத சிறியாரிடத்திற் கேட் டனவா, அன்றிக் கனவிலே நீங்கள் கண்டனவா?' என்று வினவி அவர்களை யிகழ்ந்தான். அதுகேட்ட ஒற்றர் மோகனை வணங்கி, 'ஐயனே, கண்டவற்றையே சொன்னோம்; இன்னும், விவேகன் முதலியோர்க்கு யோகிநிகளுடைய அருளுதவி மிகு தியா யிருக்கிறதென்றும், அவ்வருளுதவியைக்கொண்டே இவ் வளவுஞ் செய்யத் தலைப்பட்டார் என்றும் அநேகர் சொல்லு கிறார்கள்' என்றார். அதுகேட்ட மோகன் புன்னகை செய்து, அவரை நோக்கி, 'பெண்கள் சொல்லைத் தலைமேற்கொண்டு திரிகின்ற விவேகனாதியருடைய ஆண்மை அழிவதன்றி வேறெங்ஙனம் செல்லுமென்றான்.

மோகன் ஒற்றுக்கேள்விச் சருக்கம் முற்றிற்று.

---

10. இடம்பனுக்கு ஓலைவிடு சருக்கம்.

அப்பால் மோகன் தன்னருகேயிருந்த கலியனை நோக்கி, 'நீ நமது பகைவர் இருக்குமிடங்கள் தோறுஞ் சென்று, அவ ரையடக்கி, நம்படைத்துணைவருக்கு ஊக்கமுண்டாக்கி, மீண்டு காசிநகரத்தை அடைவாயாக, நாமும் இரண்டு தினத்தில் அந் நகருக்கு வரக் கருத்துற்றோம்' என்று கூறி; அவனுக்கு விடை கொடுத்து; மற்றொரு பக்கத்தில் நின்ற சாருவாகனை நோக்கி, விஷமுந் தீயுங் கலந்தாற்போல நீயுங் கலியனோடு சேர்ந்து சென்று, நற்றலங்கடோறும் மறைந்து, அங்கு வாசஞ்செய்ப வர்களாகிய நம் பகைவரைப் பிடித்துக்கொண்டு வரக்கடவாய்' என்று கூறி அவனையும் போக்கினான். அதன் பின்னர், புத் தனையும் சமணனையும் காபாலியையும் அழைத்து, 'நீர் கற்ற வித்தையை யெல்லாம் ஆங்காங்குச் சென்று போதித்து, வைதிக வித்தையை வேரோடு களைந்துவிட்டு, சத்துவச் சிரத் தையைப் பிடித்துக்கொண்டு வரக்கடவீர்' என்று கூறி அவ

ரையும் போக்கினான். கலியனும் சாருவாகனும் தமக்கியைந்த தலந்தோறும் போயினர். மற்றையோர் சரசுவதி தேவியினிடஞ் சென்ற சிரத்தையைத் தேடிச் சென்றார்கள். அவர்கள் யாவரும் அங்கு நின்றும் போயின பின்னர், அரசன் ஒரு தூதனை யழைத்து, இன்ன மாசம் இன்ன நாள் இன்ன நேரம் காசியை அடைவோம் என ஓர் ஓலை எழுதுவித்து அதனை அவன் கையிற் கொடுத்து, இதனைக் 'கொண்டுபோய் இடம்பனிடங் கொடுப்பாயாக என்று ஏவினான். இது சமயத்தில் அங்கே காசியில் இடம்பன் ஒரு பன்னசாலையை அமைத்து, அதிலே பரிசாரகர் பற்பலர் ஏவல்செய்து நிற்கத் தான் பதியாக வீற்றிருந்து செய்கின்ற பொய் மார்க்கங்களை எவ்வாறு கூறுவோம்! இராக்காலங்களில் பல வேசியரையும் விதவையரையும் வரவழைத்து அவரோடு கலந்து இன்பமனுபவித்து லீலா விநோதனாய் விடர்சிகாமணியாக நிற்பன். பகலெல்லாம், அச்சிந்தையை மனத்திலே ஒரு புறத் தடைத்துக் கொண்டு, கண்டோர் யாவரும் தன்னை மஹாத்மா என்று போற்றும்படி ஓமமும் ஜபமும செய்வான்போல நடித்து, அக்கினி முகத்திருந்து வாய் முணு முணுத்துக்கொண்டு, நெய் சொரிந்து, தருப்பை, மாந்தழை, நெற்பொரி, அட்சதை, சமிதை முதலிய உபகரணங்களை யிட்டு அக்கினியை வளர்த்துப் பவித்திர விரலை மூக்கிலுங் காதிலுமாக முறை மாறிப் பொருத்துவன். அவ் வக்கினி ஹோத்திர சாலையைக் கண்டு வருபவரை வாரும் வாரும் என்றழைத்து அவர்க்கு வெண்ணீறு வழங்குவன், நம் பெயர் சர்வஞ்ஞ தீக்ஷிதர் என்று கூறுவன், இது கண்ட பலர் மெய்யென நம்பி அவனுக்குச் சிஷராயினர். அவரும் இடம்பனைப் போலவே இரவெல்லாம் வேசியர் மடியிற் றுயின்று விடிந்த பின்னர் ஜிதேந்திரிய ரென்றும் வேத வேதிய ரென்றும் யோகியரென்றும் தபோதன ரென்றும் தத்தமக் கிஷ்டமாகிய ஓரொரு பெயர்புனைந்து அதற்கிசைய வஞ்சித் தொழுகுவர். இள விதவையருக்கு ஞானோபதேசஞ் செய்வார்போல அவரை வரவழைத்துப் பகலெல்லாம் அவர்க்குக் குருவாகி, மாலைப்போதகன்ற பின்

னர் மாலை சூடிய நாயகர் போலாகுவர். தாமரைமணியும் கோபி சந்தனமும் சோமன் உத்தரீயமும் செவியில் துளவமும் விளங்கும்படி நாம கீர்த்தனஞ் செய்வார்போல நடித்து இராக்காலங்களில் காமவேட்கை தீருங் கள்வருமாயினர்.

இங்ஙனம் பலரைத் தனக்குச் சிஷ்ராகக்கொண்டு உலகமெங்கும் டாம்பிகத்தைப் பரப்பி டாம்பிக குருவாய்க் காசியிலே விளங்குகின்ற இடம்பன் முன்னே, மோகவேந்தன் விட்ட தூதன் சென்று வணங்கி ஓலையைக் கொடுத்தான். இடம்பன் அவ்வோலையை வாங்கித் தன் சிரசிலே சூடி, பக்கத்திலிருந்த சிஷனிடங்கொடுத்துப் படிக்கும்படி சொல்ல, அவனும் அச் சுருளைப் பிரித்து, 'மூன்றுலகமும் புகழும் இராசமா மோகன் எழுதி டம்பனுக்கு அனுப்பிய பத்திரமாவது: இரண்டு தினத்தில் யாமும் அக் காசி நகரத்தில் வந்து சேருவோம். செய்ய வேண்டியனவாகிய கருமங்களைப் பழுதின்றி நடாத்துக' என வாசித்தான். அவ் வாசகங்களைக் கேட்ட இடம்பன் ஆனந்த சாகரத் தழுந்தினவனாய், அத் தூதுவனுக்கு ஏற்றவாறு வரிசை வழங்கி, மோக மன்னவன் தனது அவித்தைமாநகரத்தை விட்டு இங்கு வருதல் நாம் செய்த தவமென்று மகிழ்ந்து, தனது புத்திரனாகிய அசத்தியனை யழைத்து, அவனுக்கு மோக வேந்தன் காசிக்கு வருகின்ற செய்தியைக் கூறி, 'நமதரசன் வாசஞ்செய்யத் தகுவதான ஒருமாளிகையை யமைத்து, கரும்பு வாழை கமுகு முதலிய மங்கல விருக்ஷம் நாட்டி, தோரணங்கள் மாட்டி, வாயிலிலே பந்தரிட்டு, மேற்புறங்கில் விதானித்து, புஷ்பத் தொங்கல் பூட்டி, பூரண கலசமிட்டு அலங்கரிக்கும்படிக்கும், வீதிகள் தோறும் மத யானைகளைப் பந்தி பந்தியாக நிறுத்தி வீடுகள்தோறும் மங்கல கும்பம் இடும்படிக்கும் ஆஞ்ஞாபிப்பாயாக' என்றான். இங்கே இவ்வாறு நடக்க, கவுடதேசத்திலிருந்தபடியே மோகவேந்தனது வருகையை யுணர்ந்த அகங்காரன் அங்கு நின்றும் நீங்கிக் காசியை யடைந்தான்.

இடம்பனுக்கு ஓலைவிடு சருக்கம் முற்றிற்று.

---

11. இடம்பாங்காரச் சருக்கம்

மானமானது எழுந்து மேற்சொலித்து வருவது போலவும், மனிதர்களெவரும் அடங்க வாய்மொழியால் அதட்டுமவன் போலவும், தான் கற்றதே வித்தை மற்றவர் வித்தையெல்லாம் வீண் என்பவர் போலவும், தனது வடிவினால் எவ்வுலகமும் விழுங்கி யுமிழ்வான் போலவும் அகங்காரன் வரும்போது, கங்கைக்கரையிலே யிருந்து நானா வருணத்தினருமாக தர்ப்பணம், சந்தியாவந்தனம், ஓமம், சாந்தி, தவம், ஜபம், நியமம், வேதசாஸ்திர புராண பாராயணம், அவைகளின்படி. பற்பல கருமங்கள் செய்யுமவர்கள் பலரைப் பார்த்து, தனது பத்தினியைப் பார்த்துச் சொல்லத் தொடங்கினான்.

"வருணம் நான்கு, ஆசிரமம் நான்கு, அவ் வருணத்திற்கும் அவ்வாசிரமத்திற்கும் உடன்பட்டார்போல ஒழுகுகின்ற இவர் தாங்கள் செய்யவேண்டுவன இவை, இவற்றின் இயல்பு இவை என்பதுணராது செவ்வையாக நடக்கும் கிருதகிர்த்தியராய்த் தாம் செய்யுமவைகளை முடிக்குஞ் சிலர்போல உண்மையில்லாமலிருக்கின்றார்கள். இக்கள்வர் இரண்டு காலுடைய மிருகங்களே யாவர். இனி வேதாத்தியயனம் பண்ணுகிற இவர்கள், வாயில் வந்தவாறு கத்துவதன்றி, சுரம், பதம், கிரமம், அவரோகணம், ஆரோகணம், பொருள், தேசம், காலம், நற்பருவம், மாத்திரை, மங்களாசாரம் என்னும் வேதமோதிலக்கணங்களை ஒரு சிறிது முணரார்கள். அப்பால் இவன் அவதானி, இவன் கிரமதாடி, இவன் சடாவல்லவன், இவன் உபாத்தியாயன், இவன் வேதபட்டன், இவன் அத்தியாபகன் என்று நவநவமாகப் பல பெயர் புனைந்து தானாதிகள் பெற்றும் திவசம் புசித்தும் உலகை வஞ்சிக்கின்ற திருடர்கள் இவர்கள். இன்னும் உலோகாயதம் முதலிய சமயங்களின் கொள்கைகளை யெடுத்துக் கூறும் நூல்களின் புத்தகம் இருந்த ஊரிலும் இவர்கள் பிரவேசிக்காமலிருந்தும், தர்க்க,

சாஸ்திரத்தில் இவர் மிகப் பெரியர், சாங்கிய சாஸ்திரத்திலிவர் மிக நிபுணர்; வேதாந்த சாஸ்திரத்திலிவர் மிக வல்லுநர், கற்பம் மீமாஞ்சையில் இவர் அதிக துரந்தரர், யோகத்தில் இவர் வெகு துரந்தரர், வியாகரணத்தில் இவர் பரமசிரேஷ்டர், என இவர்கள் தாம் தாம் கட்டிக்கொண்ட பட்டங்களோ பல. சுவடியும் கயிறும் கம்பையும் வெண் சோமனும் விளங்கும்படி அதிக ஆடம்பரமாக வீற்றிருந்து, பிரமப்பொருளைத் தெரிவிப்பவர்போல நடித்து, பவித்திரத்தை அணிவிரலிலே தரித்து, அடிக்கடி அவ் விரலை நீட்டி அதனால் சுட்டி, காதில் விளங்குகின்ற மகர குண்டலங்களை அசைத்து, அந்தக் குருக்கள் செய்கின்ற கூத்தெல்லாம் பொருள் பறிக்கும் பொருட்டேயன்றி வேறுண்டோ? இந்தக் கள்வர் கற்ற சூதை உலகத்தில் வேறு யார் கற்றிருக்கிறார்கள்?

'ஆதிகாலத்தில் தமிழ் வேதத்தை யருள்செய்த நம்மாழ்வாருடைய பிரபாவத்தையும் அந்தத் தமிழ் வேதத்தின் ஏற்றத்தையும், பொய்கையாழ்வார் முதலிய முதலாழ்வார்களாகிய மூவர் பாடலையும், அவர்களுடைய வைபவத்தையும், மற்றை யாழ்வார்களுடைய வைபவத்தையும், அவர்கள் அருளிச்செய்த நூல்களையும் சிறிதும் அறியாதிருந்தும், வைஷ்ணவ சித்தாந்தத்தை விரித்துரைக்கிற பாஞ்சராத்ரம் வைகாநசம் என்னும் வைஷ்ணவாகமங்கள் இவையென்று காதினாற்கேட்டறியாதிருந்தும், இப்படியிருக்கிற தமது நிலைமையை யறியாமல், தமக்குத் தகாத பட்டாசாரியர், அழகிய நம்பி, வேதாந்தாசாரியர் என்பவை முதலிய பெயர்களைத் தரித்து, நெற்றி முதலிய இடங்களில் விளக்கமாகத் திருமண் ஸ்ரீசூர்ணங்களைத் தரித்து, நீர்க்காவி வஸ்திரம் உடுத்து, துளசிமணி மாலிகை முதலியவைகள் பூண்டு, மூப்பு இளமை சாதி என்பவற்றை நோக்காமல் யாவரையும் அடியேன் தாசன் என்று வணங்கி, பிறர்பொருள் கவர்ந்துகொண்டு அவர்களுக்கு முத்திராதானஞ் செய்து, நிர்மலர்போலிருக்கிற இவர்களுக்கு யாரை நிகர் சொல்லலாம்? இராக்காலமெல்லாம் காமக் கணிகையர் மயக்க

தலையிற் சுருக்கு, பகற்காலத்தில் விபூதி ருத்திராக்ஷதாரணஞ் செய்துகொண்டு, குருக்களாகி, பூனைபோன்ற குழைவும் பணிவுமுடையவராய், சிவார்ச்சனை பண்ணுவோர் போலப் பல்வுருச் செபித்து மணியடித்துக் காட்டி மனிதரை வஞ்சிக்கின்ற இவர்களுடைய வேடமோ மிகக் கொடிது. மூவர் தேவாரப் பதிகங்களாகிய அமிர்தத்தை யுண்ணாமலும், திருமூலர் அருளிச்செய்த திருமந்திரத்தை உணராமலும், கிருபையோடு தரும மார்க்கத்தைக் காட்டுவோர்போல நடித்துப் பொருள் பறிப்பதே தொழிலாகக்கொண்டு, இவ்வுலகிற் கூடியிருக்கின்ற இவர்கள் நடிப்பு முழுதும் சாண்வயிறு வளர்ப்பதற்கல்லவா?'

'குடத்தினுள்ளே மலம் நிறைந்திருக்க, அந்தக் குடத்தின் மேற்புற மாத்திரம் நீரினாற் கழுவினாற்போல தருமத்தையும் அன்பையும் துடைத்தமையால் தம் உள்ளத்தில் நீங்காத மலமிருக்கவும், நீரினால் புறம் துடைத்து, மேனி முழுதும் வெண்ணீற்றைப் பூசினிக்காய்போற் பூசி, பரந்துபரந்து பலர் கைப்பொருள் பறிக்கிற சைவப் பழங்கள் இந்த வஞ்சகரல்லவா? இங்கே சிலர் துறவிகளென வேஷம் பூண்டிருப்பதைப் பார்த்தனையா? மயிர்களைத் திரட்டிப் பொன்னைக் காய்கள்போல நீட்டித் தலைச்சுமையாகத் திரப்பிக் கட்டிப் பெரிய சடாதாரியெனப் பெயர்தரித்து ஒழுகாநின்ற இவர்களுடைய ஆசையை அளவிடப் புகுந்தால் அதனளவு அவரது சடையினளவினும் நெடிதாம். நகரங்களிலேயுள்ள மடங்கள் தோறும் சென்று, புராணிகராயிருந்து தருமநெறியை யெடுத்துச் சொல்லுவோர் போலக் கையிலே யேட்டைத் தாங்கிக்கொண்டு, யாதோ சில சொல்லும் போதெல்லாம், அரிசி காய்கறி முதலியவைகள் கொண்டுவருவோர் மேலே கண்ணும், வாக்கில் இன்சொல்லும், மனத்தில் வஞ்சனையும் உடையராய் நிற்பராயின், இவர்களைப் பிறர் பொருளமேல் விருப்பமில்லாதவரென்பது எவ்வாறு பொருந்தும்? இவர்கள் பாவனையை இவ்வுலகில் யார் படித்திருக்கிறார்கள்?'

'மூங்கிலிலைபோற் கோபி சந்தனமும் முத்திரைப்பொறிகளுமிட்டு, அதனிடையே ஸ்ரீசுகோடு தீட்டி, அக்குல தூரத்துக்

களவ்வொன்றாய்ப் பல செம்புகள் நிறைத்து, சமீபிப்போ ரை நீங்குக வென்று விலக்கி, அடிமேற் குந்தியிருந்து, பல வாறு நடித்துத் தம்மைத் தத்துவரென்று காட்டி, உலகத் தை ஏத்துவார்கள் சிலர், இவர் கள்வரிற் சிறந்தவர்.

'தலையைப் பனங் காய்கள் போல முண்டித்து, காவி யாடையுடுத்து, சீடர் பலரும் தம்மைச் சூழ்ந்துவர, சந்நியாசி வேஷம் பூண்டு, தண்டு கமண்டலங்கள் தாங்கி, ஆதரிப்பவர் வீடுகள்தோறும் புகுந்து, ஊர்கள்தோறுமுள்ள மடங்க ளில் குடிகொண்டு, உபநிடதப் பொருளை நன்கு யுணராமல் தாம் கற்றதை ஒருவர்க்கொருவர் ஓதி, அத்துவித மார்க்கம் இதுவெனக் காட்டுவார்போற் காட்டி, கண்தெரியாத குருடர் தம்மைப் போன்ற குருடருக்கு வழிகாட்டுதல் போலச் சொற்பொருள் விளக்கித் தியங்கி, யாதும் தெளிவடையாத வர்களே இந்தக் கூட்டத்தார்.'

'சீதளமான இடத்தில் தர்ப்பாசநம், கம்பளாசநம், புலித் தோலாசநம் இவைகளை விரித்து, அவற்றின்மே லிருந்து, வேண்டிய உபகரணங்களை ஒரு பட்டாடைமீது வைத்து, ஜபம் செய்பவர்போல வாய் மிணுமிணுத்துக் கண்களை மூடி இருமாந்து, இவர் செய்யும் இடம்பாசார முழுதும் பொருள் பறித்தற் பொருட்டே யன்றோ? இயல்பாகிய பசியை நீக்கிக் கொள்ளும் உபாயத்தை யறியாமல், முக்கோலும் பட்டை நாமமும் காவி வஸ்திரமும் தரித்து, சீயர் என்கிற பட்டந் தாங்கி, இல்லறத்தாரையும் தலையால் வணங்கி, விஷ்ணு ஆலயங்களின் பிரசாதத்தை உண்பதற் கன்றோ இவர்கள் இக்கோலங் கொண்டது?'

'மத்துவ குருவாகிய இவன் சந்நியாசம் பூண்டும், பிறர் பொருளாசையாகிய பைத்தியம் அதிகரித்து மூடிக் கொண் டாற்போல உடம்பின் மீது காவி வஸ்திரம் விளங்க, சங்கு முதலான பல வாத்தியங்கள் முழங்க, பொற் சிவிகைமேல் வருவதை நோக்குமிடத்தில், இங்கே இது வரையில் யாம்

சுட்டிவந்த பெயர்களெல்லாம் பாக்காகவும் இந்த டம்பாசாரி யைக் கமுகந் தோட்ட மாகவும் கூறலாம்.'

'ஆதலால், என்பிராணநாயகி, இவர்களைப்பார்த்து இவர்களோடு ஒரு வார்த்தை பேசினாலும் அளவற்ற கொடிய பாவம் வந்து சேரும்' என்று தன் மனைவிக்குச் சொல்லி, அங்குள்ளார் யாவரையும் நோக்கி இகழ்ச்சிக் குறிதோன்ற நகைத்து, அங்கு நின்றும் தன் பரிவாரத்தோடும் நீங்கி அசந்தைக்கு நாயகனாகிய அகங்காரன் காசி நகரத்து வீதிகள் வழியாகச் செல்லும்போது அவ்விடத்தில் முனிவர் ஆசிரமம்போல் விளங்குகிற ஒரு மனையை எதிரே கண்டான். அந்தக் காசி நகரத்து வீதிகளில் உள்ள எல்லா மனைகளினும் இந்த மனை உயர்ந்து விண்ணளவா யோங்கியிருந்தது. அது தர்ப்பையினால் வேயப்பட்டது. ஓரமெல்லாம் பசசுலையாற் பொதியப் பெற்றது. பகற் காலத்திலும் சந்திரகாந்தி யுண்டென்னும்படி சுவர்க ளெல்லாம் வெண் சுண்ணச் சாந்து தீற்றப் பெற்றவை. அந்தச் சுவர்களெல்லாம் சித்திரங்கள் எழுதப் பெற்றிருந்தன. எல்லாப் பக்கங்களிலும் பந்தலிட்டு மாந்தழைத் தோரணம் கட்டப் பட்டிருந்தது. வாசலிலே மூங்கிற் கம்பங்க ளிரண்டு ஆகாயத்தையளாவி நிற்க அவற்றின் நுனியிலே பட்டுக் கயிற்றினாற் பூட்டப்பட்ட காவிக்கொடிகளையுடையது. ஓமாக்கினியினின்றெழும்புகின்ற புகையும், காய்ச்சப் படுகிற நெய்யின் நறும்புகையும், நெருப்பி லிட்ட சாம்பிராணிப் புகையும் ஒன்றாய்க்கூடி இமய மலைக் கொழுந்து போலத் தன்னிடத்தி னின்றும் எழுந்து விண்ணி லேறப் பெற்றது. காமதேநுவை நிகர்த்த பற்பல பசுக்களைக் கழுத்திலே மணித்திரள்கள் கண கண வென் றொலித்திட அலங்கரித்துத் தாமணியிலே வரிசையாய்க் கட்டிவைத்து அவை தருகிற பசுமையாகிய கோமயத்தைப் பற்பலரால் அடிக்கடி கொணர்வித்துக் கங்கா தீர்த்தத்திலே கரைத்து மெழுகப்பெற்றது. யாக சாலையும் தேவார்ச்சன சாலையும், பாக சாலையும், பண்ட சாலையும், ஜப

சாலையும், தியாகசாலையும், வேதிகையும் மருவப் பெற்றதாய், சதுரமாகிய விசித்திர கோலங்கள் எங்கு மிடப்பெற்றதாய், வாயிற்படிகள் தோறும் புஷ்பகந்த அக்ஷதைக ளிடப்பெற்றதாய், செம்பு, தம்பிகை, கெண்டிகை, காசண்டி, செம்புக்கும்பம், வட்டகை, கொப்பரை, கடாரம், கும்பா, பொற்றளிகை, பொற்காளாஞ்சி, பொற்றும்பாளம், மயிலுருவ மமைத்த தூண்டாக் குத்துவிளக்கு, தீர்த்த வேதி, வெண் சங்கு, தர்ப்பணம், தூபம், தீபம், கைம்மணி, பஞ்சபாத்திரம், ஆலவட்டம், சத்திரம், சாமரம் முதலிய தேவ பூசைக்கேற்ற உபகரணங்களெல்லாம் பொருந்தப் பெற்றது. இவ்வாறு குறைவற நிறைந்துவிளங்கிய அம்மனையினிடத்தே பரிசாரகர்கள் விடிய ஐந்து நாழிகை யுண்டென எழுந்து, கங்கை நீராடி, மௌனமுடையராகி, வஸ்திரங்கட்டி, வாய் மூடி, தவளச் சாம்பலினாலும் புளியினாலும் மேற்சொன்ன உபகரணங்களை யெல்லாம் பொன்போல விளக்கி, உரல், உலக்கை, யந்திரம், சுள்கு, ஆட்டுக்கல், யூபம், தீககடைகோல், அது கடை கயிறு, அக்ஷதை, தெற்பொரி, துடுப்பு, அம்மி, சகடம், மான்றோல், புலித்தோல், மரவுரி; அறுகு, முஞ்சி, தருப்பை முதலிய புல்லுகள; அரசு, பலா, எருக்கு, வன்னி, அத்தி, நாயுருவி, முட்கருங்காலி முதலிய சமிதைகள் ஆகிய யாகத்துக்கு வேண்டும் உபகரணங்களையெல்லாம் இடையிடையே நிரப்பி, திருப்பள்ளித் தாமம், திருமஞ்சன தீர்த்தம், அபிஷேக திரவியம், துளசி, களபசந்தனம் முதலியன யாவும் கொண்டுவந்து கைகூப்பி எதிரில் வைக்க, அம்மனைக்கு அதிபனாகிய இடம்பன் காதுகளில் இரத்தினப் பொற்குண்டலங்களும் கைவிரல்களிலே பொற்பவித்திரங்களும் அணிந்து, மார்பில் பொற்பூணூலும் இடையிலே பொன் னரைஞாணு மிலங்க, இருசெவிக்கு மிரண்டு, இருகைக்கு மிரண்டு, தலைக்கொன்று, இடைக்கொன்றாகத் தருப்பைப் புல்சாத்தி, வெண்பட்டுச் சோமனும் உத்தரியமும் தரித்து, மேலே இரத்தினக்குடை நிழற்ற, கால் நிலத்திலே சற்றே பொருந்தினும் அதனை யடிக்கடி நீரினாலே விளக்கவும் ஆசமனஞ் செய்யவும் பாத்திரங்களிலே

ஜலத்தையேந்தி நான்கு பக்கமும் பரிசாரகர் சூழ, தன் நண்பினர்கள் வருங்கால் அவர் வீற்றிருக்க இரத்தினக் கம்பளம், வட்டப்பலகை, சதுரப்பலகை முதலிய ஆசனம் இரு பக்கத்திலும் இடப்பட, சேமக்கலமும் கண்டாமணியும் இடைவிடாதொலிசெய்ய, தலைவாசலில் கட்டிய தூங்காமணி நிரந்தரமொலிக்க, யாக கர்த்தாவாக வீற்றிருந்து, சூரிய யந்திரமொன்றை எதிரில் வைத்து, அதற்குப் புஷ்பமும் அக்ஷதையும் அறுகும் சொரிந்து, கன்னம் மார்பு தோள் இதழ் நாசி நெற்றி முழங்கால் முதலிய தானங்கள் மண்ணிலே பொருந்த விழுந்தெழுந்து வணங்கி, கண்ட யாவரும் பரமபக்த னென்று காணிக்கை வைத்து அடிபணியும்படி நடிப்பவ னாயினான்.

இவ்வாறு உலோபன் மகனாகிய இடம்பன் எண்ணில்லா வஞ்சகம் புரிந்திருக்கின்ற காலத்தில், அகங்காரன் அந்த மனையைப் பார்த்து, இந் நகரில் இம் மனை யாவர் மனையோ, உண்மையாகிய விரத சீலர்கள் வாசஞ்செய்கின்ற மனைபோ லிருக்கின்றதே! யாவராயினு மாகுக, இரண்டு தின மிங்கிருந்து அவர் பண்ணுவது பாவனைதானோ, அன்றிப் பக்திதானோ என அறிவேன் என்று கூறித் தனது தேவியோடும் அம் மனையிற் சென்றான். சென்ற அளவிலே, எதிரே சூரியவந்தனை செய்வான் போன்று நின்ற இடம்பனைக் கண்டு அவனையடுத்து, ஐய! வாழி வாழி என்று ஆசி கூறினான். அதுகேட்ட இடம்பன் அவனுக்கு அஞ்சலி செய்யாது முகங்கடுத்தான். அது கண்ட அகங்காரன் ஆசிகூறிய எமக்கு அஞ்சலி செய்யாது கடுப்போடு கோபித்த இவன் யாவன்? இவன் தன்மை யாது? இம் மனை துருக்கர் வாசஞ்செய்கின்ற மனைபோலும்! என்று இகழ்ந்து, முன்வைத்த அடியைப் பின்வாங்கிக்கொண்டு அங்கு நின்றும் பெயர்ந்தான். அங்ஙனம் பெயர்ந்த அவனை இடம்பன் பார்த்து அவனைச் செல்லாவண்ணம் கையமைத்து விட்டுப் பக்கத்திருந்த ஒரு சீடனைப் பார்த்தான். பார்த்தவளவில் அவனுள்ளக் கருத்தை யறிந்த சீடன் அகங்காரனை நோக்கி, 'ஐயனே! காமதேனுவையுடைய வசிஷ்டமுனிவன்

றுனும் இங்கு வருவானாயின் வாயிலில் நின்று கால் கழுவியன்றிப் புகுதல் செய்யான்; பிராமணர் முதலியோருக்கு ஏனைய ஆசிரமங்களில் கூசாது செல்வ தியல்பாயினும் நம் ஆசிரமத்துக்கு வருதல் எளிதன்று. நமது குருமூர்த்தியினது ஒழுக்கங்களைக் குறித்து உமது நாட்டிற் கேட்டறிந்ததில்லையா? நமது மனையின் பரிசுத்தத்தினைப் பார்த்தாயினும் இங்குப் புகுதல் தகுதியன் றென்ப துணர்ந்தீ ரில்லையோ? கால் கழுவாமல் இம் மனைக்கு வரின் யாவர்தாம் சகிப்பார்? இத் திருமனையின் உள்ளும்புறமும் உண்டாகிய சுத்தியைக் கண்கூடாகக் கண்டும் துருக்கர் மனை யென்றீரே! இதுவோ உமது புத்தி? உம்மிடத்துண்டாகிய கோபம் போர்க்குரியராகிய க்ஷத்திரியரிடத்து முண்டாகாதே, உம்மிடத்திலே செம்பில்லையா? தண்ணீர்க்குப் பஞ்சமா? ஆசாரபரனாகிய உம்மிடத் தொரு செம்பில்லையாயின் வாயிலிலிருந்தபடியே எம்மை யழைத்துச் சிறிது ஜலங்கொடும் என்றால் கொடோமோ? என்று கூறி, போனதெல்லாம் போகட்டும், நீர் எழுந்தருளும் என்று ஒரு செம்பிலே ஜலத்தை யெடுத்து அகங்காரன் முன்னே வைத்தான். அகங்காரனும் இது நன்று நன்றென நகைத்து, அதனை வாங்கிக் கன்றிய மனத்தோடு சென்று கால் கழுவி வந்தான். வந்து அங்கிருந்த ஓர் அலங்காரமான ஆசனத்தின் மீது உட்கார அதனை யடுத்தான். அடுக்கு முன் மீண்டும் இடம்பன் அவனைக் கோப முகத்தோடு நோக்கினான். அதுகண்ட முன்னைய சிஷன் அகங்காரனைப் பார்த்து, 'ஐயா! யாது செய்கின்றீர்? கையிலே ஒரு விசிறிதானுங் கொண்டு வந்தீரா? அஃதன்றியும் உடம்பிலுள்ள வியர்வையைக் காற்று முகத்துச் சென்று நீக்குவோமென்றாயினு மெண்ணினீரா? ஒழுகுகின்ற வேர்வையோடு நம் குருமூர்த்தி யெழுந்தருளுகின்ற பீடத்திலேறப்போகின்றீரோ. இஃதென்னை? முன்பின் யோசனையின்றிப் பொருக்கென்னச் சென்று பொற்பீடத்தின்மேல் இருக்க நினைக்கின்ற உமது புத்தி பேதைமையன்றோ? நமது குருமூர்த்தியின் குறிப்பை யுணர்ந்தன்றோ நீர் இருத்தல்வேண்டும்? இது உமது அகந்தையோ? அன்றி அடங்காச் செருக்கோ?

பெரியோராயின் இங்ஙனஞ்செய்ய மனம் பொருந்தாதே' என்று கூறி, அவ்வாசனத்துக்குப் பக்கத்தில் ஓர் ஆசனம் அமைத்து, இங்கே எழுந்தருளு மென்றான். அதனைக் கேட்ட அகங்காரன் மனம் மறுகி, 'யாம் கவுதமர், வசிட்டர், காசிபர், மரீசி முதலிய தவ முனிவர்கள் பலரோடும் பழகியறி வோம், அவரவர் நிஷ்டையும் அன்பும் இவ்வளவென்பதும் அறிவோம்;' ஆயினும் இவரிடத்துக் கண்ட புதுமையை எவ ரிடத்துங் கண்டதில்லை' என்றான்.

இவ் வுரையைக் கேட்ட இடம்பன் சீடன் அகங்காரனை நோக்கி, 'நீர் அறிவதொக்கும், அதிற் சந்தேகமு முளதா? நங் குரு மூர்த்தியினுடைய பெருமை சொல்லுந் தன்மையதோ? இப் பூவுலகிலுள்ள சக்ரவர்த்திகளெல்லாம் கையினாற் புஷ்ப மெடுத்து அர்ச்சித்துத் தங்கள் பொற்கிரீடத்துடன் அவ ரது பாதங்களை வணங்கி, வெகு தூரத்தினின்று அவரது பாதுகைகளுக்குத் தூபதீப மிடுவரென்றால் இனிச் சொல்ல வேண்டுவ தென்ன? எமது குருமூர்த்தி கையில் திருநீறு வாங்கும் பொருட்டு அவர்க்குப் பாத காணிக்கையாகப் பொற்பீடம், கம்பளம், இரத்தினமணி, பொன்னாபரணம், குதிரை, சிவிகை, விளைநிலம், பசும்பொன் முதலியன கொ டாத அரசர் யாவர்? புண்ணிய தினங்கள் முதலிய பல கால ங்கள்தோறும் நான்கு வருணத்துள்ளும் எண்ணில்லாத பல கோடி சனங்களாற் கொடுக்கப்பட்ட அவ்வளவு பொன் குபே ரனிடத்து மில்லையன்றோ? இம்மட்டோ, பலராலுங் கொடு க்கப்பட்ட பசு, எருமை, ஆட்டுக்கடா, பீதாம்பரம், நெல்மலை முதலியவை சொல்லி முடியாவன்றோ?' என்று இடம்பனு டைய பெருமையை யெல்லா மெடுத்துச் சொன்னான். சொ ன்னவளவில் அகங்காரன் தனது கைகளைப் புடைத்து, தோ ளும் தலையும் துளக்கி, நன்று! மிக நன்று!! என நகைத்து, 'வேதாகம புராணவிதி யாவையும் உணர்ந்து அவ்வாறடங்கி ஒழுகுத லொழிந்து, வருகின்ற அரசர்கள் தன்னைப் பணியச் செய்து, அவரிடம் பொருள் பறிக்குஞ் சூதுத்தொழில் பெரி

யோர் செய்கையாமோ? அன்பு அறிவு சத்தியம் உபகாரம் என்னும் பிராமண லக்ஷணங்கள் உள்ளபடி யமையப்பெறாது அவரைப்போல் பாவனை செய்கின்ற மார்க்கம், பொன்போ லிருப்பதாக மேற்பூச் சிட்டுப் பேதையர் அணிகின்ற ஆபர ணங்கள் போலாகுமன்றோ?' என்றான்.

அதுகேட்ட சீடன், 'இணையற்றவராகிய எமது குருமூர் த்தியினது உண்மையையும் உள்ளன்மையையும் பிரமாதி தேவர் கள் அறிந்துணர்வதல்லாமல் அவை உம்மால் அறியப்படுந் தன்மையவோ?' என மறுக்க, அகங்காரன் நம்மா லுணரப்ப டாத தொன்று எந்தப் புவனத்திலேனு முண்டோ? பிரமாதி யர் தாமும் நம்மைப்போ லொன்றை ஆழ்ந்துணரவல்லரோ? உன் வாசகம் இனிது இனிது' என்று நகைத்தான்.

அவன் நகைத்ததைக் கண்ட இடம்பன் இவர் யாரோ மகா வேதியர்போலு மென்றெண்ணித் தன்னுடைய நியமத் தைவிட்டு, ஓர் ஆசனமமைத்து அவனை யதிலிருக்கச் செய்து தானும் பக்கத்தில் ஓர் உயர்ந்த ஆசனத்திலிருந்து அவனை நோ க்கிக் கூறுவான்: 'என் மனைக்குவந்த உம்மை நோக்குமிடத்து மிகப்பெரியவர்போல் தோன்றுகின்றீர்; என் நகர்க்கு நீர் வந் தது பெரியதொரு விசேஷமே; ஆயினும் என் மகத்துவமெ ல்லாவற்றையும் நன்குணராமல் அவற்றில் சிறிது இழுக்குரை கின்றீர், அது நன்றன்று; ஆராய்ந்துணரு மியல்பில்லாதவர் கள் பரிசுத்தரான பெரியோர்க்குப் பழுது சொல்வாராயின் அதில் என்ன தோஷமிருக்கிறது? என் பெருமையை நானே கூறுவது தக்கதன்று. ஆயினும், ஒரு சிறிது எடுத்துச்சொல் வேன்கேளும்:பிரமன் ஒரு சமயத்திலே கன்மவிதி யொன்றில் சந்தேகமுடையவனாகி தன் அன்ன வாகனத்தை இங்கு அனு ப்பி என்னைப் பிரமலோகத்துக்கு வரும்படி செய்தியனுப்பி னான். அப்படி வந்த அன்னமானது கங்கையில் மூழ்கி என் னிடத்துக்கு வந்து பிரமன்சொல்லிய செய்திகளை என்னிடஞ் சொல்லி உம்மைச் சுமந்துபோவதற்கு இங்குவந்தேன் எழுந் தருளுமென்றது. யானும் நன்றென்று அதன் முதுகின்மே

லேறித் தேவலோக வழியாகச் செல்லும்போது, எனது பிர யாணத்தைக் கேட்டுணர்ந்த இந்திரன் நெடுந்தூரம் எதிர்வந்து, இன்று இந் நகரில் எழுந்தருளி, இங்கிருந்து நாளைச்செல்லு தல் வேண்டுமென்று என்னை வணங்கி இரந்தான். அதற்கு யானும் இசைந்து அன்று அந் நகரில் எழுந்தருளி அங்கிரு ந்து அடுத்த நாள் பிரமலோகஞ்செல்ல எத்தனித்த பொழுது இந்திரன் தனது ஐராவதத்திலேறி என் பின்னே தொடர்ந் தான். தொடர்ந்தவனோடும் பிரமலோகஞ் சென்றேன். அங் கே சனகாதியரும் யோகியரும் சப்த ரிஷிகளும் ஏனைய தபோதனரும் மற்றைய பெரியோரும் தன்னைச் சூழப் பிர மன் எழுந்தருளியிருந்த சபையின் கண்ணே யான் சென்ற அளவில், என்னைக்கண்ட முனி கணங்களெல்லாம் எதிரெழுந் துவர, யானும் அன்னத்தை விட்டிறங்கி அவரோடு முன்னே செல்ல, அதுகண்ட பிரமனும்பொருக்கென வெழுந்து என க்கு ஆசனமிடக்கருதி, அந்தோ! இங்குள்ள ஆசனங்களெல் லாம் முனிவராற் றீண்டப்பட்டன வாயினவே, இதற்கு யாது செய்வேன் என்று ஒரு நொடியிற் சிந்தித்துத் தெளிந்து, நமது தொடையையே ஆசனமாகஇடக்கடவோம் என்று துணிந் தான். துணிந்தும் நமது தொடையும் வாணிபால் தீண்டப் பட்டதாயிற்றே, ஆயினும் காமதேனுவினது கோமயத்தினாற் சுத்திசெய்து அதனை ஆசனமாக்குவேன் என்று கருதி, அங் ஙனஞ்செய்து தனது தொடையின் மீது எழுந்தருளுமாறு வேண்டினன். அதற்கு யான் உடன் பட்டதை முகக்குறிப் பா லுணர்ந்து பிரமன் தான் முதலில் தனது ஆசனத்தின் மீதெழுந்தருளி, நின்ற என்னைக் கையினாற் பற்றித் தழுவித் தன் மடிமீதிருத்தி உபசார வார்த்தைகள் ஒன்றோ, பலவு ரைத்தான். அங்ஙனம் யான் எழுந்தருளி அரை நொடியாகு முன்னே, பிரமன் தன் மனத்திலெழுந்த சந்தேகம் நிவிர்த்தி யாகப்பெற்றுப் பேராச்சரிய வசத்தனாகி என்னைப் பார்த்து, குருமூர்த்தீ, உமது இனிய அருளினாலே என் சந்தேகம் நிவி ர்த்தியாயிற்று என்று கூறிப் பலவாறு புகழ்ந்து, இனி நீர் இங் கிருக்கில் உமது நித்திய கரும நிஷ்டைக்குத் தாழ்வு செய்தவ

ருவேன் என்றான். யானும் உண்மையே என்றேன். அது கேட்ட பிரமன் மீளவும் என்னைச் சுமந்து செல்லுமாறு தனது அன்னத்தை விடுத்தான். இப்படிப்பட்ட எனது பெருமைகளை எடுத்துக்கூறப் புகுந்தால் அவை எண்ணில வாம்' என்றான்.

அதுகேட்ட அகங்காரன் இதுபோலும் பெரிய் உலகத் திலுண்டாவென ஆச்சரியமுற்று நகைத்து, பொய்யென் பது இவனிடத்திற்றான் உற்பத்தியாயிற்றோ? அன்றிப் பொய் தான் திரண்டு இவ்வுருவாயிற்றோ? அதுவுமன்றிப் பேர்பெ ற்ற இடம்பன் இவன்றானோ? அல்லனேல் அவ் விடம்பனு க்கு இவன் குருவாயுள்ளவனோ? எனப் பலவாறு சிந்தித்து இவன் யாவனாயினு மாகட்டும். இவன் செருக்கைத் தொலைப் பேன் என அகங்கரித்து, இடம்பனைப்பார்த்து, 'இன்னகுலம், இவள் தாய், இவன் பிதா, இது நகரம் என்பதின்றியும், தன தென ஒரு நகரமும் அதற்குப் பிரதிஷ்டையு மின்றியும், தன் மனைவியை நாவிலடக்கிக் காத்தும் அவள் பற்பலரிடத்தும் அன்புகாட்டிப் போயிருப்பது கண்டு நாணத்தால் முகம் வெளுத்தவனாகியும், நீண்ட காலம் தான் ஓதிய வேதத்தைப் பகுத்துணாரும் பண்பற்றவ னாகியும், சின்னாட் டொகுதியாகிய கற்பமொன்றிலே உயிர் தீர வருபவனாகியுமுள்ள பிரமனாலே அழைக்கப்பட்டு அவனிடஞ் சென்ற உன்னை அவன் கண்டெழுந்து சற்காரஞ்செய்து தன் தொடையிலிருத்தி விடுத்த அப் பெருமை உன்போல்வாருக்குப் பெரிதாகு மன்றி நம்போல் வாருக்குப் பெரிதாகுமோ? ஆற்றினிடத்து வலைச்சி வயிற் றிற் பிறந்தவரும், நாணற் புதரினிடத்துப் பிறந்தவரும், குடத்திற் பிறந்தவரும், வேர்வையிற் பிறந்தவரும், உள்ளத் துப் பிறந்தவரும், மான்வயிற்றிற் பிறந்தவரும், கிளி வயிற் றிற் பிறந்தவரும் ஆகிய இவர்கள் எதிர்சென்று கண்டதும், சரீரத்திற் பழிப்புடையவனாகிய இந்திரன் ஐராவதமேறி எதிர் சென்றதும் உன் மதிப்புக்குப் பெரும் பெருமையா யினபோலும்! இப்படி எத்தனை முனிவர், எத்தனை தேவர்,

எத்தனை இந்திரர், எத்தனை பிரமர், நாம் வாய்திறந்து அழைக்கா முன்னே அடியேங்கள் செய்யவேண்டிய பணியாதென்றுவந்து நம் வாய்மொழியைத் தங்கள் சிரமேற் கொள்வார்கள். பங்கமற யாம் செய்த பெருந்தவத்தின் பலத்தினாலே எத்தனை கோடி கற்பங்களை இது வரையிற் கண்டு களித்தோம்! எமது கண்முன்னே எத்தனை பிரமாதியர் இறந்துபோயினர். அட்டகோணத் தற்பங்கன், ரோமசன், தாலசங்கன் என்னுமிவர்கள் முடிவுங் கண்டோம். மேற்குலத்தார்க்கு இபற்றைபா யுள்ள பௌருஷத்திலும் நம் போல்பவர் யார்? எல்லாத் தேசங்களிலும் சிறந்தது கவுடதேயம். எந் நகரினும் சிறந்தது எமது தக்ஷணராடாபுரம். எக்குடியும் நிகராகாத எமது குடிகோத்திரப் பெயர் பூரிசிரேஷ்டம். அப்படிப்பட்ட குடியிற்பிறந்த எல்லாரினும் எம் தந்தை சிரேஷ்டன். அவனுக்கு மக்களாயுதித்த அநேகருள்ளும் யான் சிறந்தவன். எம் தாய் குடிப்பிறப்பினும் எம் தாரத்தின் குடிப்பிறப்பு சிறந்தது. ஆதலால் எமது குணத்தை யறிந்தவர்கள் இவன் உத்தமனென்று புகழாது விடுவதில்லை. நம் பத்தினி குலத்தி லவதரித்த ஒருவரை அவர்க்குப் பகையாயுள்ள ஒருவர் அசத்தியனென்று கூறினமையால், அது உண்மையளவிற் பொய்யே யாயினும் அத்தோஷம் நம் பத்தினிமீது சாராவண்ணம் அவளை அக்கினியில் மூழ்கச் செய்து அதன் பின்னரே விவாகஞ் செய்தோம். ஆசாரத்தினாலும், கொடையினாலும், அறிவினாலும், விவகாரத்தினாலும், அன்பினாலும், விசாலத்தினாலும், உயர்மதியினாலும், நிறைந்த சம்பத்தினாலும், சத்தியத்தினாலும், வடிவழகினாலும், பெரும் புகழினாலும, கம்பீரத்தினாலும் இப்பெரிய வுலகத்தில் எமக் கொப்பானவர் யார்?" என்றான்.

அதுகேட்டு இடம்பன் அவனைத் தன் மூதாதையென உணர்ந்து, பொருக்கென எழுந்து அவன் பாதங்களில் வீழ்ந்து பணிந்து, மீண்டு மெழுந்து தன் கைகளை யூறிக் காதுகளைத் தொட்டு, தொட்ட கைகளை அவன் பாதங்களில் வைத்

த்து, 'அடியேன் இடம்பன் நமோ நம' என்றான். இதனை அவன் தூரநின்று சொன்னமாத்திரத்தில், அகங்காரனும் மனக்களிவுடையவனாகி அவனுக்கு ஆசிகூறி, 'ஐய! உன் பாவனையை நான் மெய்யென நினைந்து திகைத்துவிட்டேன். உலகமெல்லாம் ஒருசேர மயங்கும்படி நீயல்லாது செய்யவல்லவர் வேறியாவரிருக்கின்றார்? ஆவாபராந்தத்தில் உன்னைக் கண்டு நீ பாவனை பண்ணின இக்காலம் வரையில், என்னை மூப்பு வருத்தியபடியால் சிந்தை தளர்ந்தேன். உன் தந்தையாகிய உலோபனும், உன் தாயாகிய இச்சாதேவியும், இவ்வூரில் சுகஜீவியரா யிருக்கிறார்களா? உன் மனைவியாகிய வஞ்சனை தேவியும் உன் குமாரனாகிய அசத்தியனும் நன்றாக வாழ்கின்றார்களா? உனக்குப் புத்திரன் பிறந்த செய்தியைப் பலராற் கேள்வியுற்று நானும் என் மனைவியும் அந்நாளில் மகிழ்ந்தோம். அவனைப் பார்ப்பதற்கு மிக்க காதலுடையவனானேன். அவன் எங்கிருக்கின்றான்?' என்றான்.

இடம்பன் அதுகேட்டு, 'உன் மைந்தனும் என் தந்தையுமாகிய உலோபனும், என்னை யீன்ற த்ருஷ்ணாதேயும், மோகவேந்தனுடைய கட்டளையின்படி கேரளநாட்டில் வாழ்கின்றார்கள். யானும் என் மனைவியாகிய வஞ்சனையும் மைந்தனும் அரசனேவலால் இந் நகரில் அமர்ந்திருக்கிறோம். இப்போது உன்னால் காணப்பட்ட இந்த வஞ்சவேடத்தால் யாவரையு மயக்கிச் சுகித்திருந்து, இப்போது இங்கு வந்து புகுந்த உன்னுடைய பாத சேவையும் கிடைக்கப் பெற்றேன். நகரங்களுள்ளே தலைமை பெற்ற இராடா நகரத்தை விட்டு இந்த நகரத்துக்கு வந்தது என் மாதவமே யாயினும், நீ யிங்கே வந்த கா்ரியம் இன்னதெனக் கூறுமாறு பிரார்த்திக்கின்றேன்' என்றான்.

அதுகேட்ட அகங்காரன் மகிழ்ந்து நமது மோக வேந்தன் வேற்றரசரால் மனங் கலங்கினனென்பது கேட்டு ஆற்றாமல் இவ்விடம் வந்தேனென்றான். அதுகேட்ட இடம்பன், 'நமது மோகவேந்தன் வாழ்கின்ற நகரத்திலும் பகை

வர் ஓங்கியிருக்கின்றார்களென்பது பற்றியே, இவ்வுலகத்
திலுள்ள எல்லாத் தலங்களிலும் இந்தக் காசித்தலம் சிறந்த
தென்பதனாலும், ஸ்ரீ கங்காதரனும் தேவியும் இவ்விடத்தில்
எழுந்தருளியிருந்து, யார் இறந்தாலும் அவர்களுக்குத் தாரகப்
பிரம நாமத்தை உபதேசித்து அவர்கள் முத்தியடையும்படி
செய்தலாலும், கொடிய மூடரையும் சிவபெருமான் தமதுரு
வமாக்குதலாலும், மெய்த்தவஞ்செய்வோர் யாவரும் இந்தத்
தலத்தை யடைவார்களென்று நினைத்தே இன்ன தினத்தில்
காசிக்கு வருவோமென்று தான் இவ்விடத்துக்கு வருவதை
ஓலையிலெழுதி ஒற்றர் கையிற் கொடுத்தனுப்பினான். ஆதலால்,
மோகவேந்தன் இன்று இவ்விடம் வருவது உண்மையே,
அவன் வந்தால் அவன் கருத்து இது, அவன் செய்யப்போ
கிற காரியமிது என்று அவனது செய்கையால், வெளிப்படும்'
என்றான். அந்தச் சொல்லைக்கேட்ட அகங்காரன், 'இந்தக் காசி
யில் நம் பகைவனாகிய விவேகன் வரத் துணிவானானால் ஹரி
பக்தி சிவபக்தி யென்கிற மாதர் அவன்மேல் அருள்புரிவார்,
அந்த மாதரருளை அவன் பெறுவனாயின், மோகனும் யாமும்
அவனோடு எவ்வாறு போர்புரிந்து வெல்லுவது?' என்றான்.
அது கேட்ட இடம்பன், 'நமது காமனாதியர் போர்செய்வாரா
யின் அந்த ஹரிபக்தி சிவபக்தியென்னும் யோகினிகளுடைய
அருட்பார்வை விவேகனுக்குக் கிடைக்குமோ? தூர்த்தராய்
மனச்சுத்தி யடையாதவர் புண்ணிய தீர்த்தங்களில் மூழ்கித்
திருப்பதிகள்தோறும் போய் அவ்விடங்களிலுள்ள மூர்த்தி
களைச் சேவித்தாலும் அவருக்கு நற்கதி கிடைக்குமோ? ஒருக்
காலும் கிடைக்காது' என்று சொல்லி முடித்தான்.

இடம்பாங்காரச் சருக்கம் முற்றிற்று.

---

12. மோகன் காசிபுகு சருக்கம்

இப்படி அவரிருவரும் பேசிக்கொண்டிருக்க, அங்கே அவித்தியாபுரத்திலிருந்த மோகவேந்தன், 'தன் மகனுக்கு முடிசூட்டி அவனை அங்கிருந்து அரசு செய்யும்படி வைத்து விட்டு அவ்விடம்விட்டு நீங்கிக் காசிக்குச் செல்ல' ஆலோசித்தான். மூத்த மனைவியாகிய துன்மதியும், இளைய மனைவியாகிய பாஷண்ட விஞ்சையும் இருபுறத்திலுந் தொடர்ந்து வரவும், பெருஞ்சேனைகள் நாற்புறத்திலும் விஷம் படர்ந்து வருவது போலச் சூழ்ந்துவரவும், மருள் என்னும் யானைப்படையும், ஐம்பொறியாகிய குதிரைப்படையும், மனோரதமாகிய தேர்ப் படையும் திக்குக்களில் தாவிச்செல்லவும், பழியென்னும் பேரிகையானது கோடையிடிபோல் முழங்கவும், கொடி குடை சாமரம் என்பவைகள் எங்கும் நெருங்கவும், வஞ்சகம் பாவம் என்பவை முதலியவெல்லாம் கூடி யொரு வடிவெடுத்தாற்போல வெளிப்பட்டுச்சென்ற மோகவேந்தன் தனக்கெதிரே நரியான், செம்போத்து, காகம் என்பவை வலத்தி லிருந்து இடத்திற் செல்வதும், காடை, மயில், வலியன் என்பவை இடத்திலிருந்து வலத்திற் செல்வதும் கண்டும் அவை தீய சகுனங்களென்று அஞ்சாமல் விரைந்து வந்தான்.

அங்கே காசியிலிருந்த இடம்பனும் அகங்காரனும் இன்று நம்மரசனாகிய மோகன் இங்கு வரும்படியாய்க் குறித்த தினமாயிற்றேயென நினைந்து, காசியை விட்டு நீங்கி மோகனை யெதிர்கொண்டு உபசரிக்கும் பொருட்டு இரண்டுயோசனை தூரம் போயினர். போய் மோகனைக்கண்டு இருவரும் வணங்க மோகனும் அவர்க்கு ஆசிகூறி, 'நும் மனைமக்கள் சுகமாயிருக்கிறார்களா? என்று வினவ, அவர்களும், 'உமது அருட்டுணை யெமக் கிருக்கிற வரையும் எமக்கும் எம் மனை மக்களுக்கும் ஒரு குறையுண்டாகுமோ?' என்றார்கள். அவ்விருவருள் அகங்காரனை மோகன் நோக்கி, 'உன் தேசம்விட்டு இங்கு வந்ததற்குக் காரணம் யாது?' என்று கேட்க, அகங்காரன் அவனை

வணங்கி, 'உமது வரவை ஒற்றராலறிந்து உம்மைக் காணும் பொருட்டு வந்தேன்' என்றான்.

அதுகேட்ட மோகன், 'உன் நாட்டில் வேறு யாதும் விசேஷமில்லையா?' என, அகங்காரனும் இல்லையென்றான். அது கேட்டு மோகன் மகிழ்ந்து, 'இங்கே பகைவர் ஒருபோது வருவார் என்னுஞ் சொல்லைக் கேட்டு நாமும் அதை யறியும்பொருட்டு வந்தோம். அது உன் வாய்மொழியால் கானற்சலமாயிற்று. யாரோ உலகமுழுதும் இதொரு பொய்யைப் பரவச் செய்துவிட்டு மறைந்தார். ஆண் சிங்கத்துக்கு முன்னே யானையும் வருமோ?' என்று சொல்லிச் சிரித்து, இப் பொய்யைக் கேட்பவர் அறிவிலராவரெனக்கூறி, பூமியி லிடமில்லையென்னும்படி பலபடைகளும் நெருங்கி வர, இடம்பனும் அகங்காரனும் முன்னே செல்ல, தவமானது ஒதுங்கிப்போகும்படி அந்தக் காசிநகரை யடைந்தான்.

அலங்கரிக்கப்பட்டிருக்கிற அந்த நகரில் அபபிரதக்ஷிணமாய்ப் பிரவேசித்து, பகற்காலத்தில் இங்கு இருளுண்டாயிற்றே யென்று யாவரும் திகைக்க, தனக்கென்று அமைக்கப்பட்ட மாளிகையிற் புகுந்தான். புகுந்து துன்மதி சமேதனாக அங்கிருந்த பொன்மணி யாசனத்தின்மீ தேறினபோது அங்கிருந்தார் பலரும் சரணம் சரணமென்று அவனைத் தொழுதார்கள். தொழுதவர்களைத் தன் சமுகத்திலே வரிசைபெற இருத்தி, அவர்களுக்கெல்லாம் கண்ணருள் காட்டி, பாஷண்ட விஞ்சையை மற்றொரு புறத்தில் தழுவிச் சுகித்திருந்தான்.

மோகன் காசிபுகு சருக்கம் முற்றிற்று.

---

13. சாருவாகச் சருக்கம்

இவ்வாறு மோகன் காசியில் இன்புற்று வாழுங்காலத்தில், முன்னே இவன் ஏவலின்படியே தலங்கள் தோறுஞ் சென்ற சாருவாகன், சீடர் தன்னைச்சூழ அவ்வத்தலங்கள்

தோறும் சிறிது சிறிது தங்கி, தன் வித்தை முழுதும் அங்கங்கே நிலை பெறச்செய்து, அதனால் பரிசுத்தமாகிய விரதாதிகளைப் பங்கப்படுத்தித் தாழ்த்தி, வேதத்தை வெறுத்த சிந்தையனாகிய மோகவேந்தனுக்குத் தன் சித்தியை யுணர்த்தும் பொருட்டுக் காசியைநோக்கி விரைந்துவந்தான். அங்கே அரசனுடைய மாளிகையிற் சென்று, வாயில் காப்பவனாகிய சுரோத்திரேந்திரியனைக் கூவி அரசனுக்கு நம் வரவை யறிவிக்கக் கடவையென்றான். அவனும் அரசனிடஞ்சென்று வணங்கி அவன் வரவை யறிவித்தான். அதுகேட்ட மோகன் மகிழ்ந்து அவனை இங்கு அழைத்து வா வென்ன, அவ்வாயிற் காவலனும் 'ஐயா, உம்மை அரசன் வருகவென்றான்' என, இருண்ட அறிவினையுடைய சாருவாகன் விரைந்து வந்து அரசனுக்கு ஆசி கூறிப் புகழ்ந்து, கருணையோடும் பக்கத்திலிருந்த ஆசநத்திலிருந்து தான் செய்த காரியத்தைச் சொல்வானாயினன்: 'ஐயனே, உன் அருளின்படியே சென்று உலகத்திலிருந்த வேத மார்க்கத்தை விலக்கி என் விஞ்சைமார்க்கத்தில் எல்லாரும் மயங்கும்படிசெய்து, கொடிய பகைவர் மார்க்கஞ் சிறிது தலையெடுக்க அதையுங் கலைத்து மீண்டுவந்தேன். பரிசுத்த ஸ்தலங்கள் தோறும் செல்லும்பொருட்டு என்னோடு வெளிப்பட்ட கலியனும் இன்று இவ்விடத்தில் வந்து சேர்வான்'. இது சொல்லக்கேட்ட மோகன் அந்தச் சாருவாகனை நோக்கி மகிழ்ச்சியோடும், 'சாருவாகனே, உலகமுழுதும் உன் சொல்லைக் கேட்கும்படி செய்தது எவ்வாறு? என்று வினவ, சாருவாகனும் மோகனை நோக்கித் தான் வெற்றியடைந்து வந்த வரலாற்றைச் சொல்லுவானாயினன்:

'இவ் வுடலையல்லால் வேறாக ஒரு ஆன்மா வுண்டென்றும், இவ் வுடல் நீங்க அவ் வான்மா வேறோர் உடலிற் புகுந்து பரலோகத்திற் புசிப்பதுண்டென்றும், அங்ஙனம் புசிக்கும்பொருட்டு இவ்வுலகில் அறஞ்செய்ய வேண்டுமென்றும் உலகத்தார் கொள்ளுகின்ற ஆசையானது, கைக்கு எட்டின ஒரு மதுரமான கனியை உண்ணுமற் றள்ளி, ஆகாய மத்தியிலே ஒரு மரமுண்டு, அதற்கு நீரைப் பாய்ச்சி அது கருங்

கனியை அருந்திச் சுகிப்போம் எனச் செய்யும் விரதத்தை யொக்கும். மாதரது அநுபவத்தை விட்டு வாலிபம் வீண் போக உபவாசஞ்செய்தும், தாங்குதற்கரிய தவத்தை முயன்று கனி காய் சருகு தின்றும், தாம் கெட்டதோடும் அமையாமல் பிறருக்கும் கேடுண்டாக்கி உள்ளது சொல்பவனைப் பொய் சொல்பவனென்றும், கண்ணிற் றோன்றாத ஒன்றை உண்மையென்று சொல்பவனை மெய் உரைப்பவனென்றும் சொல்லித் திரிகிற துர்ப்புத்தி உடையவரைப்போற் கொடியர் யாவர்? நெடிதாகிய இவ்வுடலை இரு கூறாகப் பிளந்து பார்க்குமிடத்து அதிற் சீவனிருப்பது தோன்றுமா? என் அன்பர்களே, நீங்கள் சிந்தித்துப் பாருங்கள். உடலை இரு கூறாகப் பிளக்குமிடத்து ஆன்மா நிற்குமோ என்பிராயின், அது போகும் வழியாவது கண்ணுக்குப் புலப்படுமா? விண்ணுலகத்தில் இவ்வான்மா போய்ச் சுகித்திருப்பதை யாவர் கண்டு வந்தார்? இவற்றில் எள்ளளவாயினும் ஓர் உண்மை யுண்டானால் இன்றே என் சாருவாகன என்னும் பெயரைப் பரித்தியாகஞ் செய்து விடுகின்றேன். அத்துடன் என் விஞ்சைப் பிரசங்கக் கடையையும் கட்டிவிடுகிறேன். எவர்க்கும் இறப்பும் பிறப்பும் அவயவமும் ஒத்திருக்கின்றன. அப்படியாயின் வருணபேதமென்பது எப்படிக்கூடும்? கூடுமாயின், மேல்வருணத்தார்க்கு உறுப்பு சில அதிகமுண்டோ? அவர் இவ்வுலகத்திலே பிறவாமல் ஆகாயத்தினின்றும் விழுந்தாரோ? நரை திரை மூப்பு சாக்காடு இவை அவரை அடுக்காவோ? உலகத்தில் ஆண் பெண் என்னும் வேற்றுமையன்றி வேற்றுருவங் கண்டவர் யாவரோ? தன் மனைவி பிறன் மனைவி என்று பொறித்த குறி வேறுபாடுண்டோ? தன் பொருள் பிறர் பொருள் என அவ்வப்பொருளில் எழுத்து வெட்டி யிருப்பதுண்டோ? வலியவருக்கு எப்பொருளும் தமதே ஆகும். அங்ஙனம் வலியற்றவரே, இவள் பிறன் மனையாள், இது பிறன்பொருள், இதனை இச்சித்தல் பாவம், அதனோடு பழியும் வரும், ஈற்றிலே நரக கதியுமுண்டென்று கூறுவர். பூதங்கள் நான்கே, இன்பமும் பொருளுமாகிய இரண்டுமே புருஷார்த்தம், மனம் முதலிய

ஆறுமே பொறிகள், கண்ணுக்குப் புலப்படுகின்ற இவ்வுடலே ஆன்மா, இறப்பதே முத்தி. வேதத்திற் சொல்லப்பட்டதும் இதுவே என்று ஆதிநாளில் தேவகுருவாகிய பிருகஸ்பதி இந்திரனுக்கு உபதேசித்தானன்றோ? அமுதம் போலும் தெள்ளிய நீர்வாவி தமது அருகிருக்கப் பெற்றும் அதிலே நீரருந்தித் தாகந் தணியாது கானலைச் சிறந்த நீரென்றெண்ணி ஓடி உழல்வார்போல், கையிற் கிடைத்த இன்பத்தைத் தள்ளி இல்லாமையாற் கிட்டாத இன்பத்தைத் தேடித் திரிபவராகிய புத்தியீனர் பற்பலர் இரண்டுங் கெட்டவர்களாயிருக்கக்கண்டு அவர்களும் இன்பமடைய இவ்விதமாக அவர்களுக்குப் புத்தியூட்டி நல்லவழியிற் பொருந்தும்படி செய்தேன். யாவராலுங் கற்கப்படும் பல கலையினுள்ளும் யான் இங்கே எடுத்துக் கூறுவதே நீதியாகும்; நீதி வார்த்தையாகிய சாஸ்திரமே நிலையுடையது. அதனைச் சாதியாதிருப்பதொரு சாதி உலகிலுளதோ? குளிர்ச்சியும் தெளிவும் இயல்பாகவுடைய கங்காசலத்தை உண்பவர்கள் அசுத்தமாகிய கிணற்றுச் சலத்தை உண்பார்களா? மகா யாகங்கள் செய்கின்றோமென்று அரிதில் தேடிய பொருளையெல்லாம் அதன்பொருட்டு இறைத்து உண்ணாமல் வயிற்றையும் உடலையும் வாட்டி, தம்மை யடுத்தோரையும் கெடுத்து, அக்கினியினிடத்துக் கிடந்து வெம்பி, புகையினாலே தியங்கி, பெண்கள் அநுபவமும் நீங்கி, சுத்த அறிவில்லாதவராய், விழலுக்கு நீரிறைத்தவர்போல் பட்டவர்கள் பலருண்டு. இந்த அக்கிரமமுண்டோ? வேள்வியும், திரவியமும் இவ்வுலகில் ஒழிந்துபோன பிறகு விண்ணுலகிற் சென்று இன்பம் பெறுவோமென்பது, வேரோடு தீப்பட்டு வெந்ததொரு விருக்ஷமானது மீண்டும் தளிர்த்து வளர்ந்து கனிதர அதனை உண்ண நினைப்பதொக்கும். இறந்தவர்பொருட்டு உலகத்திலே அன்னதானம் செய்பவர்கள், அவ்வன்னதானத்தினால் வரும் புண்ணியத்தை அவ்விறந்தோர் அடைவரென்று கூறுவதும் உண்டன்றோ? அது உண்மையாயின், நெய் இல்லாமையால் தீபம் அணைந்துபோக அத் தீபத்தைக் குறித்து மற்றொரு தகளியிலே நெய்யை யூற்றி நிறையச்

செய்தால் அத் தீபம் பின்னும் பிரகாசிக்கவேண்டுமன்றோ? தம் முன்னோர் இறந்த திதிகளிலே அறுசுவையும் பொருந்த அன்னமிடும்போது அப் பிதிரர் பசி தீருவர் என்பர். மேல் தளத்திலே ஒருவனைப் பசியோடிருக்கவைத்து அவன் பசியைக்குறித்துக் கீழே ஒருவனுக்கு அன்னமிட்டால்மேலிருப்பவன் பசிதீருத லுண்டாயினன்றோ அது உண்மையாகக் கூடும்? எப் பொருள் எக் காலத்தில் எவ் வகையில் வந்தாலும் 'அதனை யிகழ்ந்து நீக்காமல் அப்பொழுதே அனுபவிப்பதே மெய்யாகிய பயனும். ஆதலால், இவ்வுடலே ஆன்மா, மாதர் போகமே முத்தி, கண்டதே காட்சி உண்டதே உறுதி, இவற்றைச் சிந்தித்துத் தெளிந்து கைக்கொள்ளுங்களென்று பலர்க்கு மெடுத்துக்கூறுவதே எனது உபாயம்'.

இங்ஙனஞ் சாருவாகன் சொல்லக்கேட்டு, சந்தேகன் இவனைநோக்கி, '"உண்டதே உறுதி, கண்டதே காட்சி" என்று நீ கூறினால் பெரியோர் கிருச்சிரம் சாந்தபனம முதலிய அரிய விரதங்களை அநுஷ்டித்தது யாதுபற்றியோ?' என்று வினவ, அதற்குச் சாருவாகன் அவனை நோக்கி, 'ஐயா, நன்று வினவினை. உலகமெங்கும் நமது ஒப்பற்ற நூலைபுணர்ந்து காதலரும் கன்னியரும் கூடிச் சுகிக்கும் இனிய இன்பங்களைக் கண்டு மனப்பொறாமல், வேதமொழியென்றும் அறமெய் வசனமென்றும் இன்பத்தை மாறுபாடு செய்யும் பாதகர்கள் வஞ்சனைசெய்து உலகில் பற்பலருக்கும் நீ சொன்ன அந்த துர்ப்புத்தியை யுண்டாக்கினார்கள். சிறு பொருளேனுந் தருமஞ் செய்தால் அது சுவர்க்கமளிக்கு மென்றும், பெண்ணாசையைத் துறந்தால் விண்ணுலகில் பெருஞ்சுகம் பெறலாமென்றும், அது எதுபோல் என்னில் மண்ணில் இடப்படும் வித்து அம் மண்ணிலே மறைந்துபோயினும் மீண்டும் அஃதொன்றுமே அநந்தமாய்ப் பலன் தருவது போலென்றும் பலவாறு கத்துவார். அங்ஙனம் அவர் கத்துகின்ற வீண் மொழியை மெய்மொழியெனக்கொண்டு ஊணாதிகளைத் துறந்து காணாத தெள்ளமுதைக் கனவிலுண்பவர் போலக் கண்ணுங் கருத்துங் கெட்டு விரதங்களை அநுஷ்டித்து வாழ்நாளை வீணாக

போக்குவர் அநேகர். அழகிய பெண்களை யிருபவிக்கு மனபத் துக்கும், அக்கினி மத்தியிலிருந்தும், விரதஞ்செய்தும், உப வாசமிருந்தும், பிச்சைக்காக எந்த வீடுகளிலும் பிரவேசித் தும் இப்படி வீண் துயரப்படுமவர்களது இடருக்கும் தார தம்மியம் பார்த்தால் எவ்வளவாகும்? புவியில் எப்படிப்பட்ட மூடரும் இதை யறியாரா?' என்று சொல்லினன்.

அதுகேட்ட சந்தேகன், 'நீர் கூறியது ஒக்கும் இன்பமே உறுதி என்பீராயின் துன்பமும் இடை யிடையே வந்து தொடர்வது யாது காரணம்பற்றி?' என்று வினவ, அதற்குச் சாருவாகன், 'ஜலத்திலே நுரையும் நெல்லிலே உமியும் இருப் பதைப் பார்த்து அவற்றை நீக்குவாருண்டோ? வல்லவர்கள் துன்பத்தை அடக்கி இன்பத்தையே தேடுவர்' என்று பதி லுரைத்தான். இவற்றைக் கேட்டிருந்த மோகவேந்தன் சாரு வாகனை நோக்கி, 'அமிர்தத்தை நீக்கி விஷத்தை யுண்பவர் யா வர்? நீ முன் கூறியவற்றிற்கு உத்தரமும் ஒன்றுளதோ?' என் றுரைத்து அவனையும் அவன் மொழிகளையும் மெச்சித் தன் னிரு கரங்களாலும் அவனைத் தழுவி அவனுக்குரிய வரிசை யெல்லாஞ் செய்து மகிழ்ந்திருக்குஞ் சமயத்தில், கலியன் கபடி சமேதனாக அவன் சமுகம் வந்து தலைப்பட்டான்.

சாருவாகச் சருக்கம் முற்றிற்று.

---

14. கலிச்சருக்கம்.

அப்படி வந்த கலியன் மோகனை வணங்கி நிற்க, மோகன் அவனை அங்கு ஓர் ஆசனத்திருத்தி அவன் அகத்து நிகழ்ச் சியை முகத்தினு லுணர்ந்து, அங்கிருந்த ஏனையோரை யெல் லாம் புறத்தே போகச் செய்து, உற்ற செய்தியைச் சொல் என்றான். கலியன் எழுந்து வணங்கி, 'ஐயனே, உமது ஆஞ் ஞைப்படி உலகெங்குஞ் சென்று தலங்கடோறும் கண்ட காட் சியை எவ்வாறு கூறுவேன்? ஸ்தலங்கள் தோறும் நம் பகை வரால் விளைந்த கேடுகள் பலவுள. முன்னே நம் ஒற்றர் கூறி

யது மெய்யே யன்றிப் பொய்யன்று. ஸ்தலங்கள் தோறும் யோகினிகளது அக்கினிக் கண்ணும் நெறித்த புருவமும் அதிகரித்த கோபமும் கடித்த பல்லும் சூலப்படையும் எடுத்த கபிறும் விபூதிமேனியும் நம் கண்ணால் விழித்து எதிர் நோக்கப் படுவனவோ? வைஷ்ணவ ஸ்தலங்கள் தோறும் அரிபக்தி யென்னும் யோகினியினது சங்கு சக்கரம் வாள் கதை வில் தரித்த கரங்களும், இரணியனைக் கொல்ல எழுந்த நரசிங்கனது கோபம் போலும் கொடிய கோபமும், துளசி மணியும், ஊர்த்துவ நாமமும் உயிர்களையெல்லாங் கொள்ளை கொள்ளுமே. விவேகனாதியவரை யோகினிகள் மிக்க அன்போடு புத்திரரைப்போற் காக்கின்றார்கள். அந்தப் பலங்கொண்டே விவேகனாதியர் நம்மவரைப் போல் உருமாறி, நம்மவர் இருக்கு மிடந்தோறும் தாமுஞ் சென்று நமது சேனைகளில் அநேகரைத் தம் வழிப்படுத்திக் கொண்டனர். அது கண்ட யான் அவரை மீட்டும் நம் வசந் திருப்புதற் பொருட்டுச் சென்றேன். சென்ற என்னை மார்க்கண்டேயரைப் பிடிக்கச் சென்ற யமனைச் சிவபிரான் எற்றவந்ததுபோல அந்தச் சத்தி எற்றிக் கொல்ல முயன்றாள். அதனை யுணர்ந்த நான் உயிர் தப்பி ஓடி வந்தேன். முற்காலத்தில் அப்படிப்பட்ட யோகினிகள் வசப்பட்டிருந்த சிலரில் மக்களைக்கொண்டு தந்தையரையும், தந்தை தாயரைக் கொண்டு பிள்ளையையும் கொல்லுவித்தேன். அது எவ்வாறெனில், பிரகலாதனைக் கொண்டு இரணியனையும், சண்டேசுரரைக்கொண்டு அவர் தகப்பனையும், சிறுத்தொண்டரையும் அவர் மனைவியும் கொண்டு அவர்கள் பிள்ளையையுங் கொன்றது நூல்களில் பிரசித்த மன்றோ? தாழ்ந்த செய்கைகளைச் செய்து என்னைச் சேர்ந்திருந்த அஜாமிளன் இறக்கும்போது அவன் மக்களைக் குறித்து நாராயணன் என்னு முன்னே அரிபக்தி யோகினி எமனும் அவனை யண்டாதபடி செய்துகொண்டாள். அங்கிலனென்னும் வேடனைச் சிவபக்தி என்னும் யோகினி காத்தது ஒரு கதையல்லவோ? இப்படி எந்த ஸ்தலங்களிலும் யோகினிகள் நிலைபெற்றிருந்து நம்மைச் சார்ந்தவர்கள் தம்மை யறியாமலே ஒரு செயல் செய்யினும்

அது தம்மதாகக் கொண்டு அவர்கள் தம்மைச் சார்ந்தவரென்று செய்துவரும் அநியாயம் சொல்லுந் தரமன்று. நான் சென்ற இடங்களிலே என்னை யெதிர்கொண்டு வந்து விரும்பி வணங்கினவர்களெல்லாம் இப்போது ஜப தபாதிகளை நியமமாக நடத்துமவர்களா யொழுகக் கண்டேன். என்னைக் கடைக்கண்ணாலேனும் நோக்குபவரையும் என்னோடு ஒருவார்த்தையேனும் பேசுபவரையுங் கண்டறியேன். இன்னும் நமது ஒற்றர் கூறியவை எல்லாம் ஓர் அணுவளவேனுந் தவறாது நிகழ்கின்றன. சத்துவசிரத்தை சிவபக்தி அரிபக்தி சாந்தி என்னும் நான்கு பெண்களும் உபநிடதையை விவேகனுக்கு மணமுடிக்குமாறு செய்கின்ற முயற்சியும் சிறிதன்று. இப்படி நம் பகைவர் செய்கின்ற பற்பல முயற்சியையும் உற்று நோக்குமிடத்து, இன்னும் சிறிது காலத்தில் அவர்கள் உலகெங்கும் பரந்து விடுவார் என்று எண்ணற் கிடமாகின்றது. அப்படிப் பரந்து விடுமுன் நாம் செய்ய வேண்டிய கிருதியை இப்போதே செய்தல் வேண்டும். செய்யோமாயின் கேட்டுக்கு ஆளாவோம் என்பது திண்ணம்' என்றான். அது கேட்ட மோகன் கோபமும் அச்சமும் அடைந்து, அவற்றை யடக்கித் தனது முடியை யசைத்து, 'கருமம் இவ்வாறாயிற்றோ? எங்கே தோற்றினாலும் நம் பகைவரை வேரறுக்காமல் விடுவேனோ? பாம்பு சினந்து படத்தை விரித்தாடினும் பறவைக்கு அரசாகிய கருடன் அதனை விடுவனோ? விவேகன் யோகினிகளது கிருபையைப் பெற்றாலும், பிரமன் புத்திரியாகிய உபநிடதையை மணந்தாலும், விவேகன் மனைவி சுமதியை அஞ்சேலென்று காத்தாலும், நான் சொல்வதை நீங்களெல்லோருங் கேட்டு ஒழுகுவீர்களாயின் அவனுயிரை யான் தொலைப்பது நிச்சயம்' என்று இவ்வாறு கூறி, அகங்காரன் இடம்பன் முதலாயினோரை யழைத்து, கலியின் சொன்னவற்றை யெல்லாம் அவர்க் கெடுத்துக் கூறி இனிச் செய்வது யாதென்றான்.

அது கேட்ட அகங்காரன் மோகனை நோக்கி, 'பகைவரது முயற்சி எத்தலங்களிலும் வெளிப்படையானதைக் குறி

த்துச் சந்தேகித்தலாற் பயனில்லை. அவர் வலி குன்றுமுன்
அடக்கிவிடுவதே இனிச் செய்யத்தக்கது. யோகினியரை
வெல்வது அரிதென்பது உண்மையே. ஆயினும் அவர் அருள்
கொண்டு அங்கீகரித்து நிற்பவர்களான விவேகனாதியரிடத்து
விடுதற்குரியவரை விடுத்து அவரால் அவர் சத்தியைக் கெடு
த்துவிடுவோமாயின் அவர்மேல் யோகினியர் வைத்த அருள்
சுருங்கும். அதன்மேல் எத்திறமிருப்பினும் நமக்கு அது
தொலைப்பது எளிதாம். அங்ஙனம் அவ்வருளைத் தவிர்ப்பது
கூடாதாகுமிடத்தும், நமது படை எல்லாவற்றையும் ஒன்று
கூட்டிக் காமன் முதலானோரோடு நாமெல்லாருங் கூடி நெருங்
குவோமாயின் நம்மோடு எதிர்ப்பவர் யாவர்? அப்பொழுதே
அவர்களை அரண் குறையாய் விடும்' என்று சுருக்கிச் சொன்
னான்.

அது கேட்டு அங்கிருந்தவர்கள் யாவரும் நமது பகைவ
ரை வெல்ல இதுவே உபாயம், இதுவன்றி வேறில்லையென்று
ஆர்த்தார்கள். அதுகண்டு மகிழ்ந்த மோகனும் 'யான் நினைத்த
தும் இதுவே' என்று கூறி அங்கிருந்த ஒற்றரை அழைத்
தான். அவர் வந்து தொழுது நிற்க அவரை நோக்கி, காமன்,
லோபன், கோபன், மதன், மானன், சங்கற்பன், மச்சரன்,
இராசதன், அதன்மன், அவமானன், வைரன், தாமதன், கல
கன் முதலாயினோரை ஆங்காங்குச் சென்று தேடி இந்தனை
நாட்களுக்குள் இங்குக் கொண்டு வாருங்களென்று ஆஞ்ஞா
பித்து ஓலை கொடுத்துப் போக்கினான். அவர்கள் போனபின்
மேற்றிசையிலே வசிக்கின்ற மானனால் விடுக்கப்பட்ட ஒற்
றன் ஓர் ஓலையோடு மோகவேந்தன் சமுகஞ்சென்று அவனை
வணங்கி நின்றான். அவ்வோலையை அரசன் தன் பக்கத்திலிரு
ந்த ஓர் அமைச்சனை வாங்கி வாசிக்கும்படி சொல்ல, அவனும்
அதை வாங்கி வாசிப்பானாயினான்: "ராஜாதிராஜனும் சர்வ
நரேந்திரனுமாகிய மோகவேந்தனது திருச்சமுகத்திற்கு மீளா
அடியனாகிய மானன் கைகூப்பி வரையும் விண்ணப்பம். நம்
பகைவனாகிய தருமன் நம்மவரைப்போல வேடம்பூண்டு
காஞ்சியையடுத்து அங்கிருந்து காமன் செய்கின்ற முயற்சி

களுக்கு மாறான செயல்களைச்செய்து அனேகரைத் தன் வசமாக்கினான். இன்னும் நம்மவர்களிருக்கும் ஊர்கள்தோறும் பகைவர்கள் பிரவேசித்திருக்கிறார்கள். சாந்திமாதும் அவள் தாயும் வாணியிடஞ் சென்று அவள் புத்திரியாகிய உபநிடதையை மணஞ் செய்விக்க வேண்டுமென்று அவளை வசியஞ் செய்தலே தொழிலாக அல்லும் பகலும் திரிகின்றார்கள். இவை என் காதுக்குக் கிட்டிய செய்திகள். இனிமேல் யாது நிகழுமோ அறியேன்". வாசித்து முடிக்க, அதைக் கேட்ட மோகன் அவ்வொற்றனை நோக்கி, 'சிறிதும் அஞ்சாமல் அத் தருமனை ஒரு நொடியிற் பிடித்துக் காலிலே தளைபிட்டு இங்குக் கொண்டுவரும்படி நாம் பணித்தோமென்று' மானனுக்குச் சொல்லக் கடவா' யென்றான். அவ்வொற்றன் சென்றவுடனே மோகன் தன்னைச் சூழ்ந்திருந்தவரை நோக்கி, 'ஈசன், அயன், திருமால் என்னும் மூவரும் தத்தம் தொழிலையன்றி இன்னும் சாந்தியை யடைந்தாரில்லை. அங்ஙனமாகவும் விவேகன் பொருட்டுச் சாந்தியாது தூதுபோகத் துணிவளோ? அவள் தாயாகிய சிரத்தையைப் பிடித்து வரும்படி முன்னுஞ் சிலரை யனுப்பி யிருக்கின்றேன். அவளைப் பிடித்துத் துன்பப் படுத்துவோமாயின் அவள் புத்திரியாகிய சாந்திக்கு உயிர்போவது நிச்சயம். அன்றியும் அகீர்த்தி புத்திரியைக் கொண்டும் ஒரு கணப்பொழுதில் அவளுக்குத் துன்பம் விளைவிப்போம். மித்தியா திட்டியை இக்கணத்திற்றானே என் அருகிற்கொண்டுவாருங்கள்' என்றுரைத்தான்.

கலிச்சருக்கம் முற்றிற்று.

---

15. மித்தியா திட்டிச் சருக்கம்



இங்ஙனம் மோகன் செய்த ஆஞ்ஞையை விப்பிரமை யென்பாள் ஒரு பாங்கி கேட்டோடி மித்தியாதிட்டியை யடைந்து, உன்னை அரசன் வருமாறு பணித்தான் என்றாள். உடனே மித்தியாதிட்டி மனக் களிப்போடெழுந்து, மணிச்சி

லம் பொலிக்கச் சிவந்த பூப்போலும் பாதங்களைப் பெயர்த்து அன்னமும் நாணி ஓட நடந்து இடையைக் கண்டு ஆகாயத்து மின்னற் கொடிகள் வெட்கி வெளிப்படாது உள்ளடங்கக் கொடிபோலத் துவண்டு செல்லும்போது, தன் பாங்கியைப் பார்த்து, ''நங்காய், நெடுநாளாக அரசன் சமுகத்தில் செல்லாதிருந்த யான் இன்றுபோய்க் கைகூப்பினாலும், அவன் முன்போல என்னை வருக என்று ஆதரித்து அழைப்பானோ வென்பது எனக்குச் சந்தேகம்' என்றாள். அதுகேட்ட பாங்கி, 'உன்னைக்கண்டும் உருகாதபுருஷர் உலகத்திலுளரோ?' என்றாள். அதற்கு மித்தியாதிட்டி, 'என் அழகை இகழ்வது உனக்கு இயல்போ?' என்று மறுத்து வினவ, மன்னவன் செய்யும் வரிசையினால் எனது உண்மையைக் கண்டறியலாமே என்று விப்பிரமை மறுத்துரைத்து, மீண்டும் அவளைப் பார்த்து, 'நீ விழிதடுமாறி நடப்பதென்னை? சென்ற இரவில் நீ துயின்றதில்லையா?' என்றாள். 'ஒருவருக்கு ஒரு மனைவியாயுள்ளவருக்கே இரவில் துயிலுதல் அரிதாயிருக்க, உலகிலுள்ள புருஷர் எல்லோருக்கும் பொது மனைவியாய் அவ்வவர்பாற் கலந்து வரும் தொழிலையுடைய எனக்கு நித்திரை அரிதாவது ஆச்சரியமோ?' என்றாள். அதுகேட்ட விப்பிரமை அவளை நோக்கி, 'நீ புரியும் அத்தொழில் அரசனுக்குடன்பாடாகுமோ?' என்ன, அதற்கு மித்தியா திட்டி, 'யான் அங்ஙனஞ் செய்வது அரசன் அனுமதிகொண்டே' என்றாள். 'அங்ஙனமாயின் நீ அரசன் அனுமதிகொண்டு கலந்தபேர்கள் யாவரென்று விப்பிரமை வினவ, 'காமன், அதன்மன், கோபன், அவன் மகன் கலகன், ஆங்காரன், உலோபன், அவன் மகன் இடம்பன், மானன், மதன், மச்சரன், சங்கற்பன் முதலாகிய அக்குலத்தவர் யாவரும் என் புருஷர்களே' என்று மித்தியாதிட்டி கூறினாள். 'இது உண்மையாயின் அவரவர் மனைவியருக்கு உன்னிடத்திற் கோப முண்டாகாதோ?' என்று விப்பிரமை யுரைக்க, 'என்னை அவர்கள் கொண்டாடா தொழிவாராயின் அவர்க்குத் தலைமையுண்டாவது எப்படி?' என்றாள். இவ்வாறு விப்பிரமையோடு சல்லாபித்துச் செல்லுகின்ற

மித்தியாதிட்டி, பார்த்த புருடர்கள் கண்ணும் மனமும் கவரும்படி அதிவிநோதமாக நடந்து வந்து மோக மன்னன் சபையை யடைந்து, அரசனை வணங்கி, மயிலென ஒதுங்கி, நந்தாவிளக்குப்போல ஒளிவிடும்படி நின்றாள். நின்ற அவளைக் கண்ட மோகன், 'நாளதுவரைக்கும் நன்கு வாழ்ந்தனையோ?' என்றான். அதற்கு அவள், 'உனது அன்பு எனக்கு உள்ளவரையிற் குன்றாத வாழ்வு அரிதாகுமோ?' என்றாள். அதுகேட்ட மோகன் அவளை நோக்கி, 'உன் முக தரிசனத்தால் வயசினால் முதிர்ச்சியுற்ற எனக்கு இளமை வாய்த்ததே' என்ன, அதற்கு மித்தியாதிட்டி, 'என் ஐயனே, உன்னைக் கண்டு களிகூராத கண்கள் நின்று விளங்குவனவாயினும் அவற்றால் யான் அடையத்தக்க சுகம் யாதோ?' என்று கூறி, என்னை இங்கே வரவழைத்த பணியாதென்று வினவ, அதற்கு மோகன், 'நங்காய், விவேகன் உபநிடதையை மணம் புரியக் கருதி அவளிடத்துச் சத்துவ சிரத்தையைத் தூதாக விடுத்தான். அவளும் நீயும் ஒருவருக்கொருவர் எதிரிகளாதலின் இக்கணத்திற்றானே அவள் செல்லும் வழியிற் சென்று அவளைப் பிடித்துக் கொண்டுவரக் கடவை' என்றான். அதைக் கேட்ட மித்தியாதிட்டி, 'சத்துவசிரத்தையைப் பிடித்துக்கொண்டு வந்து உன் சமுகத்து விடுப்பது எனக்குப் பெரிதன்று; சுவர்க்க பதங்களிலுள்ள பகைவர்களது மனைவியரைக் கொண்டு வருக என்று நீ கூறினும் அங்குச் சென்று அவரைக் கொண்டு வரும் வல்லமை யுடையேனென்பது அறிவாயன்றோ?' என்றாள். அதுகேட்ட மோகன் அவள் முகத்தில் தன் முகத்தைப் பொருத்தி முத்தமிட்டு, நீ இப்பொழுது சொன்ன உறுதிமொழிப்படி சத்துவ சிரத்தையைப் பிடித்துக்கொண்டு வந்து இங்கே விடுவாயாயின், விவேகனுக்கும் அவன் மனை மக்களுக்கும் அப ஜயம் கொடுத்தவளாவாய்' என்றான். அவ்வளவில் மித்தியாதிட்டி அவனிடம் விடைபெற்று அங்கு நின்றும் அகன்று விரைந்து நடந்து முன்னே புத்தனும் காபாலியும் சமணனும் சென்றவழியே தனக்கும் வழியாகக் கொண்டு சத்துவ சிரத்தை யிருக்குமிடந் தேடிச் சென்றாள்.

மித்தியாதிட்டிச் சருக்கம் முற்றிற்று.

16. சிரத்தை போக்கிடையூற்றுச் சருக்கம்

இங்ஙனம் முன்னாகச்சென்ற புத்தனும், காபாலியும், சமணனும், பின்னாகச் சென்ற மித்தியாதிட்டியும் முறையே முன்னும் பின்னும் சத்துவசிரத்தையைக் கண்டு, அவள் ஒரு கிளியாகவும் தாம் பூனைகளாகவும் அவளை வளைந்தார்கள். வளைந்து நமது கருமத்தை இக்கணத்திலே முடித்து விடுவோம் என்பாரும், அவள்மேற் பாய்வாரும், எற்றுவோமென்றெழுவாரும், தொடர்ந்து செல்வாரும் ஆயினர். அது கண்ட சத்துவ சிரத்தை யானவள் மனந்தளர்ந்து, ஓடவாயினும் பின்வாங்கவாயினும் காலெழாதவளாகி, பெருங் கடலினிடையே அகப்பட்ட சிறிய மரக்கலம் போலவும், சாயாகிரகத்தால் மறைக்கப் பட்டுக் கலங்குவதாகத் தோன்றுகின்ற சந்திரன் போலவும் தடுமாறி நின்றாள். அதுகண்ட மித்தியா திட்டியானவள் இதுதான் சமயமெனக் கருதி அவள் கூந்தலைப் பிடித்திழுக்கும் பொருட்டு அவளைக் கிட்டிவந்தாள். அப்போது சத்துவ சிரத்தையானவள் யோகினிகளுடைய கிருபையின் வலியாலும், தருமத்தின் வலியாலும் மித்தியா திட்டியினால் தொடப் பெறாதவளாய், யோகியரது உள்ளத்திலே ஓடியொளித்தாள். அதுகண்டமித்தியாதிட்டியானவள், கனவினிடத்தில் திரவியக் குவியல்களைக் கண்டுகளித்து அவை கையிற் கிடைக்க வருங்காலத்தில் தூக்கமொழிந்து கண்விழித்தவர் அவற்றைநினைந்துநினைந்து வருந்துவதுபோல, கையிற் கிட்டியும் கிட்டாது சென்ற சத்துவசிரத்தையை நினைந்து புலம்பி நின்றாள். அவள் அப்படி நிற்க, சமணன் முதலானோரும் தனித்தனியே சிரத்தையைப் பற்றினோம் என்று கூறி அவள்மேற் பாய்ந்தும் அவள் அவர்கள் கையில் அகப்[illegible]ாமல் முன்போலவே மறைந்து போகக் கண்டு இதென்ன [illegible]ம் என்று திகைத்தார்கள். திகைத்துத் தெளிவடைந்த[illegible]கு, அவள் எங்கேபோனாலும் அவளை நாம் தேடிப்பிடிக்[illegible]ல் விடுவதில்லையென்று ஓடுவார்; ஒருவரையொருவர் வலி

யாமல் தேடுவர்; தேடி மயங்குவர்; மயங்கித் தியங்குவர்; தியங்கித் திகைப்பர்; அப்பால் புத்தன் ஒரு பக்கஞ்செல்ல, காபாலி மற்றொரு பக்கம் நாட, சமணன் அப்பாலொருதிசை போக, மித்தியாதிட்டி தானும் ஒரு புறந்தொடர்ந்தாள். அச் சமயத்தில் இடம்பன் மகனாகிய அசத்தியன், சத்துவசிரத்தை சமணாதியர் கையிலகப்பட்டாள் என்று நாற்றிசையிலும் வெளியிட்டான். அது மெய்யென்று நம்பி யாவரும் துக்க சாகரத்தில் அழுந்தி, அந்தோ இதென்ன விபரீத காலமோ என்பார் சிலர்; வேத விரோதிகளாகிய சமணாதியர் சத்துவசிரத்தையைப் பிடித்துத் துன்பஞ்செய்கின்றனரே யென்பார் சிலர்; அவள் பாதங்களிலே தலையிட்ட பாதகரை என் செய்வோம் என்பார் சிலர்; அப் புலையர் பெண்கொலை செய்வதற்குச் சிறிதும் அஞ்சாரே என்பார் சிலர்; யாமெல்லோரும் இரக்கமற்ற வன்கண்ண ராயினோமே என்பார் சிலர்; சிரத்தை கௌரிமாலினுஞ் சிறந்த நாணுடையளாதலால் தானே தன்னுயிரை மாய்த்திருப்பாள் என்பார் சிலர்; அவளோ டுடன்பிறந்தவனாகிய தருமனிடத்துச் சென்று இச் செய்தியைத் தெரிவிப்பார் யார் என்பார் சிலர்; இதனை அந்தத் தருமன் கேட்கில் உயிர் தரியானே என்பார் சிலர்; கல்நெஞ்சராகிய புலையர்கையில் அகப்பட்டுத் துன்பமடைவாயென்று பிரமன் உனக்கு விதித்தானோ என்பார் சிலர்; புத்திரியாகிய சாந்தி இதனை யறிந்தால் இறந்தொழிவளே யென்பார் சிலர்; உன்னை அருமையாகப் பெற்று வளர்த்த தாயாகிய புனிதையானவள் இதனை யறிந்தால் எவ்வாறு சகிப்பளோ என்பார் சிலர்; வாணி புத்திரியை விவேக ராஜனுக்குத் தூதுசென்று மணம் பொருத்துதற்கு உரியவர் இனி யாவர் என்பார் சிலர்; இதனைக் கண்ணுரக் கண்டு அங்கிருந்து வந்தவர் யாவர் என்பார் சிலர்; இது பகைவர் கட்டிவிட்ட பொய்யென்பார் சிலர்; யோகினிகளுடைய கிருபா நோக்கம் அவளுக்கு மிகவும் உண்டென்பார் சிலர்; உண்டாயின் அவளை ஒருவர் நெருங்குவது எளிதோ என்பார் சிலர்; இந்தச் சிரத்தையைப் பிடித்து வருத்துவோர்க்குச் சானகியைத் திருடிச்சென்ற இராவணன் முதலானோருக்கு உண்டான கெடுதியே உண்டாகும் என்பார் சிலர்.

சிரத்தைபோக்கிடையூற்றுச் சருக்கம் முற்றிற்று.

---

17. சாந்திச்சருக்கம்



இவ்வாறாகப் பற்பலர் மனந் தடுமாறி நொந்திரங்கும்போது, சத்துவ சிரத்தையினிடத்தில் பேரன்புடையவளாகிய அவள் புத்திரி சாந்தியின் காதில், இந்தச் செய்தியானது காய்ச்சின நாராசம்போலப் பிரவேசித்தது. பிரவேசித்தவுடனே உயிர் வெதும்பி, நிலை குலைந்து, கீழே விழுந்து, அறிவிழந்து துடித்துப் பிணம்போலானாள். சிறிது நேரத்திலே போன உயிர் வரப்பெற்றுப் புலம்புவாளாயினாள். 'என்னை யின்றெடுத்த அன்னைபோலத் தருமனுக்கு ஒரு தங்கையே, யாவருக்கும் இலக்குமியைப் பொருத்துகின்ற பூங்கொம்பே, தன்னையே யன்றித் தனக்குவமையில்லாதவளே, உன்னைப் பிரிந்து யான் ஒரு கணப்பொழுதும் உயிர் வாழ்வேனோ? சுகந்தங்களின் சுகத்தை யறியாத குறவரது குடியிற் புகுந்த நாவிபோலாயினையே! புலையர்கை வசப்பட்டு வேடர்கள் சிற்றரிலே கட்டுப்பட்ட மானையும், மிலேச்சர் மனையில் அகப்பட்ட தலையீற்றுப் பசுவையும் நிகர்த்தனையே! பிரமன் முதலானோரும், வேதியரும், ஞானியரும், தபோதனரும் உன்னை யடுத்தல்லவா விளங்குவாராயினர்? இனி உன்னைப்போல அவரை விளக்க வல்லவர் யாவர்? தீயவர் உன்னைத் தீண்டிச் சிறையில் வைக்க நீயோ பொறுப்பாய், உன் நெஞ்சோ துயரப்படுகின்றது, தூயவர்களும் உன்னைத் தோற்றுவிட்டாரோ, யோகியருடைய மனத்தைவிட்டு நீ யெவ்வாறு நீங்கினையோ, தெய்வத் தலங்களிலும், புண்ணிய வனங்களிலும், நதிகளிலும், தடாகங்களிலும், பரிசுத்த மலைகளிலும் பொருந்தி நீ உலாவிவர இனி யெப்பொழுது காண்பேனோ? என்றிவ்வாறு தாயைப் பிரிந்த தலைக்கன்றுபோலக் கலங்கி, 'சமணாதியர் கையிலகப்பட்ட என் தாய் இனி மீள்வதில்லை; யானும் தீப்புகுந்து விண்ணுலகிற்சென்று அங்கு அவளைக் காண்பதே கருமம்' என்று அப்படியேசெய்ய யத்தனித்தாள்; அதுகண்ட கருணையென்பவள் அவள் கண்களின் நீரைத் துடைத்து

மார்போடணைத்து வியர்வையைத் துடைத்துத் தேற்றுவா ளாயினள். 'பெறுதற்கரிய என் அமிர்தமே, தாயபாயானது மெய்யாக நமக்கு வருவதாயின் நற்குறிகள் காணப்படுமோ, தோளும் கண்ணும் புருவமும் [illegible] துடித்திருமா? எனக்கும் இடப்புறத்தில் துடிப்பதைப் பார் [illegible] ஆதலால் உன் அன்னைக்குச் சிறிதும் தீங்கில்லையென்பது திண்ணம். அன்றியும் அவளுக்கு ஒரு தீங்கு செய்ய யாவராயினும் வல்லவராவரோ? தாயினும் சிறந்தவராகிய நண்பினர்க்கும் தீங்கு விளைவிக்கு மியல்பினராகிய நம் பகைவர் நம்மை வருத்தும் பொருட்டு இந்தப் பொய்ச்சொல்லைக் கட்டிவிட்டார். அதனை மெய்யென்று கொண்டாய், அது உன் பேதைமை. சுத்தமாகிய பளிங்கினிடத்தே எங்கெந்த வுருவங்கள் சார்கின்றனவோ அந்தந்த வுருவங்களை அது காட்டுதல்போல, உன் மனமும் ஒவ்வோர் சொல்லையும் நம்பித் துன்பத்தை யடைகின்றது. அந்தத் துன்பத்தை ஒழித்துவிடு. பரிசுத்த ஸ்தலங்கள் தோறும் போய் அங்கே உன் தாயைத் தேடி, அவள் அங்கேயில்லையாயின் அப்பால் சமணரியர் இருப்பிடந் தேடிப் பக்கத்திலே மறைந்திருந்து, அங்கே உன் தாய் இருக்கிற செய்தியை ஆராய்ந்தறிவதே இனிச் செய்யத்தகுந்த காரியம், ஆதலால் எழுந்திரு போவோம்' என்றாள். சாந்தியும் ஒருவாறு மனந்தெளிந்து போவோம் வாவென்ன, இருவருஞ் சேர்ந்து போயினர். அப்படிப்போன இருவரும் பலபல நதித்துறைகளையும், தெய்வ ஸ்தலங்களையும், புண்ணியாரணியங்களையும், மலைச் சாரல்களையும் அடைந்து அங்கங்கே தேடியுங் காணாமையால் சாந்தி பின்னும் இரங்கிச் சோருவா ளாயினள்.

"என் தாயே, தருமஞ் செய்வோரிடத்து இருப்பாயென்று அவரிடஞ் சென்றேன், அவரையும் நீங்கினாய். வேதியரிடத்துக் காணலாமென்று அவரிடத்துச் சென்றேன், அவரையும் துறந்தாய். மந்திரம் ஜபிப்பவரிடத்திற் சேர்ந்தாயென்று சென்றேன், அவரையும் மறந்தாய். விரதங்காப்பவரிடத்து வசிப்பாயென்று பார்த்தேன், அவரையுங் கைவிட்டாய். அப்பால், வேள்விசெய்வோரிடத்து உறைவாயென்று நாடி

னென், அவரிடத்துங் கண்டிலேன். பிரம சொரூபிகளாகிய முனிவரகத்திலே வாசஞ்செய்கின்ற உன்னைக் காணேனே, இனி என்னுயிர் தரிக்குமோ, வாவென்று வாய் திறவாயா?' என்று இவ்வாறு புலம்புகின்றவளைக் கருணை யென்பவள் தடுத்து, 'ஐயோ, நங்காய், ஆராயாது வாளா புலம்புகின்றனையே, சிரத்தைமாது பகைவர் கையில் அகப்படலாகாதென்று மறைந்து உபநிடதையிடஞ் சென்றாள் போலும். அன்றாயின், யோகிநியரிடத்துச் சென்றிருத்தல் வேண்டும். அதுவு மில்லையாயின், பெரியோரிடத்திற் சென்றிருத்தல் வேண்டும். ஆதலால், இப்போது சாருவாகன் முதலியோரிடத்தும் நம் உருவை மாற்றிக் கொண்டுபோய்த் தேடுவோம். அங்கே எந்தச் செய்தியும் செவ்வையாய் வெளிப்படும்' என்றாள்.

அவ்வாறே கருணையோடு சாந்தி செல்லும்போது, பித்தனோ அன்றிப் பேயோ என்று சந்தேகிக்கும்படி ஒருவனெதிர்ப்பட்டான். உடம்பை மூடிப் படர்ந்த தீராத அழுக்கும், மயிர்ச்சிக்கு நாற்றமும், நாசியினின்றும் ஒழுகுகின்ற சளி புகப்பெற்ற வெள்வாயும், அருவருத்த நிர்வாணமும், ஒரு கையிற் பிரம்பும், மற்றொரு கையில் மயிற்றோகையும், பாசிப் பல்லும், மெல்லப் பெயர்த்து வைக்கும் அடியும், பாழாகிய நெற்றியும், நீண்டு கூர்ந்த நகமும், நீலக்கரி போன்ற நிறமும் திரண்டுகூடி உருவெடுத்தாற்போல நின்ற அவனைக் கண்ட சாந்தியானவள் துணுக்கிட்டுப் பேரச்சமுற்று, நரகமே இவ்வுருவெடுத்து வந்ததோ, இவன் யாவனென்று கருணையை வினவினாள். அதற்குக் கருணை, 'என் அம்மே, இவன்றான் சமணனெனப்படுவோன், அவனிடஞ்சென்று உன் தாய் செய்தியை அறிவோம் வா' என்று சொல்லி யழைத்துக் கொண்டு, இருவரும் சமணனை அணுகினார்கள்.

சாந்திச்சருக்கம் முற்றிற்று.

---

18. சமணனுதியர் சருக்கம்



அந்தச் சமயத்தில் சமணன் என்பவன், தன் பாதங்களில் வீழ்ந்து மனமொத்து அன்போடு வணங்கின சீடர்களை நோக்கி, தனது திகம்பர சித்தாந்த மதத்தின் உண்மையை யெடுத்துப்போதிப்பானுயினன்: ஊனுண்ணவேண்டுமென்கிற விருப்பத்தாலே யாகங்கள் செய்கிரேமென்று பசுக்கொலை புரிகின்ற தீயோரைக் காணும்போதெல்லாம் கண்களை மூடிக்கொண்டும், அவர்கள் ஓதுகின்ற வேத வசனம் நமது செவியில் நுழையாதபடி செவிகளை யடைத்துக்கொண்டும், சக்ராயுதத்தையும் சூலப்படையையும் வேலையும் கையிலேந்திக் கொலை செய்வதற்கு ஆயத்தர்களாய்த் திரிகிற தெய்வங்களை இகழ்ந்துகொண்டும், சடாதாரிகளையும் நீறணிவோரையும் உருத்திராக்க மாலையைத் தரிப்போரையும் தரிசிக்காமல் பயந்துகொண்டும், எவர்க்கும் எதற்கும் தின்பஞ் செய்யாமையையே விரதமாகக்கொண்டும், சீவகோடிகளை யெல்லாம் நம்முயிர் போலக் காத்துக்கொண்டும், கொலை செய்யா விரதமே எவற்றினுஞ் சிறந்த விரதமென்று சாதித்துக் கொண்டும், உடம்பை மூடி அழுக்குப் படர்ந்தாலும் நீரில் முழுகாமலும், கையினுல் மயிரை ஒவ்வொன்ருயெரீதுக்கிக் கொண்டும், உறியிலே வாசஞ்செய்து கொண்டும் வாமநூலிலே விதித்தப்படி ஒழுகுவோ மாயின், நமக்கு உலகத்திலே சித்தியாதது ஒரு பொருளுமில்லை" என்பதும் பிறவும் சொல்லி முடித்தான். இவற்றைக் கேட்டிருந்த சீடர்களில் ஒருவன் எழுந்து வணங்கி, 'உலகத்தில் அவரவர் பக்குவத்துக்கேற்றதே ஒழுக்கமென் றறியாமல் எவராலும் போற்றப்படுவதாகிய வைதிகத்தை வாளா இகழ்ந்து கூறுதல் திருவடிகளுக்கு நன்ருமோ?' என்ருன்.

என்றலும் சமணன் சினந்து அங்கு நின்ற சிரத்தையை நோக்கி, 'ஓ சிரத்தையே, இந்த அறிவிலியைப் பற்றுதற்கு இங்கே வருக' என்ருன். அந்தச் சொல் முன்னே மாறுவேடந்

ரித்து மறைந்து வந்து நின்ற கருணைமாதின் செவிப்பட்ட மாத்திரத்தில் மனம் புண்பட்டாள். மற்ற சாந்தி யென்ப வளோ துணுக்குற்றுத் தப்பம்போ லசைவற்று நின்றாள். அதற்கிடையில் கருணையானவள் மனந்தெளிந்து அங்குவரு கின்றவளை யாரென வுற்றுநோக்கி, தாமத சிரத்தையென் றறிந்து சாந்திக்குச் சொல்ல, சாந்தி கவலை யொழிந்தாள். ஒழிக் கபின், இரும்புக்கும் பொன்னுக்கும் பொன்னென்பது பொதுப் பெயராதற்போல அழகு வாய்ந்த என் தாய்க்கும், பிறை போல நீண்டுவளைந்த பல்லும் மலைப்பிளப்புப் போன்ற பேழ் வாயும் உடைய இந்தக் குரூபப்பெண்ணுக்கும் இடப்பட்ட சிரத்தையென்னும் பெயரன்றோ நம்மை மயக்கியதென்று அடங்கினாள். இவர்கள் செய்தி இவ்வாறாக, அங்கே தாமத சிரத்தை சமணன் ஏவலின்படியே சென்று அந்தச் சீடனைத் தழுவினாள். தழுவினபோது அவனும் அவள் வசப்பட்டு நமது சமண மதமே இனிய மதமென்று ஆநந்தக் கூத்தாடி னான். அதுகண்டு சாந்தியும் கருணையும் அங்கு நின்றும் மீண்டு அப்பாற் சென்றனர்.

செல்லும்போது, பனம்பழம்போலத் தலையை முண் டித்துக்கொண்டும், மெல்லிய துவராடை யொன்றை மேலே போர்த்துக்கொண்டும், ஒருகையில் புஸ்தகமொன்றை யேந்திக் கொண்டும், நக்காய் நக்காய் பலியிடு என்று மனைகள்தோறும் சென்று கூவிக்கொண்டும் எதிரே வருகிற ஒருவனைச் சாந்தி கண்டு, கருணையைநோக்கி, இவன் யாரென்று வினவினாள். அதற்குக் கருணை இவன்றான் புத்தன், இவனருகே செல் வோம் வாவென்று சென்று அவனருகே அவளோடும் நின் றாள். அப்போது பலர் அந்தப் புத்தனடியில் வந்து விழுந்து வணங்கி எழுந்தார்கள். அதுகண்ட புத்தன் அவரை நோக்கி, 'புத்திக்கு விஷயமாகிற எப்பொருளும் நீரோட்டமும் தீபச் சுடரும்போலத் தோன்றி நித்தியமாகாமல் அழியும்; நெறிதப் பாமல் ஒத்திருப்பது புத்தியே யல்லாமல் உலகில் வேறு ஒன்றுமில்லை; விளக்கமாகிய புத்தியானது அகத்திலே யிருப்பதாயினும் பொருள்களெல்லாம் அதனிடத்தே வெளி

பட்டு நிற்கும். பற்பல வாசனைகளால் அந்தப் புத்தி பற்பல
ாய் நிற்பதல்லாமல் வேறில்லை. ஆதலால், பலவகைப்பட்ட
ாசனைகளும் விடயச் சார்பும் நீங்குமாயின் புத்தியானது
ழங்குபட்டு அசைவற்ற தீபம்போல விளங்கி நிற்கத் தலைப்
டும். இவ்வாறு நிறுத்துதற்கு முயற்சி செய்வதே தகுந்த
ாரியம். இதுவே சௌகத சித்தாந்தப் பொருள் முடிபு'
ன்று கூறினன். அதைக்கேட்டு அங்கு நின்றோர் யாவரும்
ண்மை உண்மையென்று வணங்கும்போது, சமணன் அந்
ப் புத்தன் முன்னே வந்து, 'என் வினவுக்கு விடைகூறு,
ங்கு வா' என்றான்.

அதற்குப் புத்தன், 'சமண மூடா! யானோ உன்னிடத்
துக்கு வருவது? நீ இங்கே வா' என்றான். இவ்வாறு இரு
ரும் ஒருவரோடொருவர் கோபித்து உரையாடுகையில், கரிய
மேகத்தை யூடு பிளந்து ஒளி வீசுகின்ற மின்னற்கொடி
போலக் கையிலே வாளொன்றை ஏந்திச் சுழற்றிக்கொண்
டும், என்பு மாலையை மார்பிலே தரித்துக்கொண்டும், மத்தப்
பூ எருக்கம் பூவைத் தலையிலே சூடிக்கொண்டும், மயானத்
துச் சாம்பரை எடுத்து உடம்பெங்கும் பூசிக்கொண்டும்,
கையிலே தலையோடொன்றை யேந்திக்கொண்டும், என்புக்
குண்டலங்களைக் காதிலே அணிந்துகொண்டும், கள் மயக்கத்
தாலே சோர்ந்து நடந்து பிதற்றிக்கொண்டும், கபாலி அங்கு
வந்தடைந்தான். அவனைக்கண்ட சமணன் அவனைக் கூவி, 'மயா
னம் எல்லாம் ஒன்று திரண்டு உருவெடுத்து வருவதுபோல
வருகின்ற ஏ கபாலீ! உன் வரலாறு என்னை? உன் நெறி
என்னை? எனக்குச்சொல்' என்றான். அதற்கு அவன் 'இவ்விர
தம் காபாலிகம் எனப்படும். எனக்குத் தெய்வம் வைரவன்.
எலும்புடனே தலையோட்டைத் தரித்து மயானத்திலே சாம்
பரை வாரிப் பூசி அங்கிருந்து உபவாசஞ்செய்து அன்போடு
வைரவம் என்னும் ஓமத்தை அமைத்து நரபலியிட்டு விலா
ஊனை எடுத்து மதுவைக் கலந்து அபிசாரஞ்செய்து ஓம முகத்
திலே ஆகுதி பண்ணிப் பின்பு நமது உதரத்தீக்கு மதுவை
வார்த்துத் தலையோட்டிலே உண்டுகளிப்பது பாரணமாகும்.

இதுவுமல்லாமல், ஒரு நரனை நங் கடவுளர் எதிரே நிறுத்தி அவன் கண்டத்தை அறுத்து அவன் இரத்தத்தையும் தசையையும் எடுத்துப் பூசை செய்வதுமுண்டு. இதுவே வைரவ விரதம்' என்றான். இதனைக் கபாலி சொல்லுந்தோறும் புத்தனும் சமணனும் தம் இரு காதுகளையுங் கைகளாற் செம்மி, அடிக்கடி தங் குரு நாமத்தை உச்சரித்துக்கொண்டு கபாலியை நோக்கி, 'இஃதொரு விரதமென்று உனக்குப் போதித்து இப் பாதகத்தை உன்னைச் செய்யுமாறு ஏவிய பாவி யாவன்? அதனைக் கைக்கொண்டு யாது செய்தனை! அந்தோ கொடுமை! கொடுமை!!' என்றார்.

என்ற மாத்திரத்தில், கபாலி கண்களிலே தீப்பொறி சிந்தச் சினந்து அவரை நோக்கி, 'சோதிக் கொழுந்தாகிய கண்ணுதலை அடையும் வழியை உபதேசிக்கின்ற நங் குருவாகிய ஞானதேசிகனைப் பாவி என்று கூறினீர். எனக்குபதேசித்த விரத பலத்தினால் எவ்வரிய செயலையும் யான் செய்ய வல்லவன். அது பெரிதன்று. நமது குருநாதன் சங்கரனோடு எத் தேவர்களையும் இவ்வுலகில் அழைக்க வல்லவன். ஆகாயத்திலே சூரிய சந்திர நக்ஷத்திரங்களைச் செல்லாது தடுக்க வல்லவன். நீரிலே உலகமுழுதையும் நிரப்புவன். அந்த நீரை ஒரு இமைப்பொழுதில் உண்பன். உலகெங்குஞ் சென்று ஒரு நொடியில் மீள்வன். மண்ணை விண்ணாக்குவன், விண்ணை மண்ணாக்குவன். இவையன்றி இன்னும் எத்தனையோ பேரதிசயங்களைச் செய்ய வல்லவன்' என்றான்.

அதுகேட்ட சமணன், 'மாயையினாலே உன்னை வஞ்சித்து இவ்விந்திரசாலத்தை உனக்கு அக் குரு தோற்றுவித்தான்போலும்' என்றான். என்றலும் கபாலி அவனைச் சினந்து நோக்கி, 'எம்பிரானோ இவ்விந்திர சாலஞ்செய்பவன்? சிவத்துரோகியாயினை யாதலால் இவ்வாளினால் உன்னைக் கூறு செய்து என் வைரவக் கடவுளுக்குப் பலிகொடுத்து விடுவேன்' என்று கூறி முழங்கிக்கொண்டு, வாளை யுருவிப் பூதகணங்கள் கொக்கரித்துப் பின்னே செல்ல முன் சென்றான்.

அது கண்டு சமணன் அஞ்சி ஓடிப் புத்தனைத் தழுவினான். அப்போது கபாலி ஈசனை நிந்தித்த உன்னைக் கொலைபுரியாது விடேனென்றான். புத்தன் கபாலியை நோக்கி, 'ஐயனே! உனது விரத நீதியை விசாரிக்கப் புகுந்த ஒருவனைக் கொல்வது தருமமோ! தருமமாகாதே' என்ன, கபாலியும் எடுத்த வாளை உறையிலிட்டான். அது கண்ட ஷேர் கபாலியை நோக்கி, 'எடுத்த வாளை உறையிலிட்டால் நாம் முத்தியடைவதெப்படி?' என்றார்.

அது கேட்ட கபாலி, 'கபாலாதிகள் தரித்து ஈசனைப் போல உருக்கொண்டு கௌரியைப் போல ஒரு பெண்ணைத் தழுவுவதே முத்தியாகும்; சங்கரன் மொழிந்ததும் இதுவே' என்றான். அது கேட்ட ஷேர் மீண்டும் அவனை நோக்கி, 'துறவிகளுக்கு முத்தியே யன்றிப் பெண்களைச் சேர்ந்து இன்பம் அநுபவிப்பவருக்கு முத்தி உண்டென்பீராயின், யார் தாம் அதனை உண்மையெனக் கொள்வர்?' என மறுத்தார். கபாலி அதனை உண்மையென ஒப்பி மௌனஞ் சாதித்து, இவரை மயக்குவதே தகுதியென் றெண்ணி, சிரத்தாய் இங்கு வருக என்றான். அது கேட்ட சாந்தி கருணையோடு கவன்று நின்றாள். அதற்கிடையில், இறந்தவர்களுடைய எலும்பு மாலை மார்பிலே விளங்க ஒரு கையிலே கபாலமும் மற்றொரு கையிற் சூலமுந் தரித்துக் குரூபியாகிய இராசத சிரத்தை அங்கு வந்து வெளிப்பட்டாள். அவளைக் கண்ட கருணை, இவள் இராசத சிரத்தை, உன் தாயாகிய சூத்துவ சிரத்தையல்லள் என்று சாந்திக்குச் சொன்னாள். அப்பால் அவ்விராசத சிரத்தை கபாலியைத் தொழுது, யான் இங்குச் செயற்பாலது யாதென்று வினவ, கபாலி அவளை நோக்கி இங்கு இச் சீடரை உன் வசமாக்கக் கடவையென்றான். அவ்வாறே அவளும் அச் சீடரைக் கடைக் கண்ணால் நோக்கிய அளவில், அவரும் ஓந்தி முறப்பட்ட மயிலென்ன மனஞ்சுழன்று, தம் வயந்தப்பி, அவள் வசமாயினர். அப்பால் அச்சீடர்கள்கபாலியைநோக்கி, 'ஐயரே நன்று போதித்தீர், உமது மதத்தில் இன்பத்தைக் கைமேற் கனியாகக் கண்டோம். இதுபோல மற்

றெம் மதத்திலும் நாம் கண்டதில்லை' என்று பன்முறை அவ
ளைப் போற்றி அன்பு கூர்ந்து, இது காறும் யாம் செய்து
வந்த தீமைகளுக்கு யாதேனும் பிராயச்சித்தம் செய்தருளல்
வேண்டுமெனவேண்டி நின்றார். அதற்குக் கபாலியு மிசை
ந்து ஓர் ஓட்டை எடுத்து மந்திரித்து அதிலே கள்ளை நிறை
யப் பெய்வித்து அதைத் தன் வாயிலே வைத்துச் சிறிதுண்ட
பின்பு அம் மிச்சிலை எடுத்துக் கபாலத்தோடு சிரத்தை கையிற்
கொடுத்து, இது தேவருக்குங் கிட்டத்தக்க தொன்றன்று
மூப்பை நீக்கி மரணத்தைப் போக்கிப் பாச பந்தத்தை அகற்
றும், இவ்வாறு சிறந்ததாகிய இதனை நாம் உன்மீதும் ஏனைய
சீடர்மீதும் வைத்த அன்பின் மிகுதியினாலே கொடுக்கின்
றோம், உண்ணுக வென்றான். அதனை அச் சிரத்தை ஏற்றுத்
தானும் சிறிதுண்டு சேடத்தைத் தன்னாற் றழுவப்பட்ட
சீடருக்குக் கொடுத்தாள். அதனை வாங்கி உண்ட சீடர் பேரா
னந்த முற்றவராய்க் கபாலியை நோக்கி, 'முன் அநேக வேசி
யர் வாயெச்சிலை உண்டறிவோம், ஆயினும் இதுபோலும்
அது மதுரந்தந்ததில்லை. இதனைத் தேவர்கள் உண்பார்களா
யின் தாம் முன் உண்டது அமிர்தமன்று ஆலாகலவிஷ
மேயா மென்பார். இச்சிரத்தையினது மொழிரசம் கி
கலந்தமையினாலோ அன்றி அவள் அதர சம்பந்தத்தினாலோ
இம் மது இவ்வாறு தித்திப்பது, அன்றி இம்மதுவினியற்கை
இதுவேயோ! இதற்கு மகிழின் கந்தமுமுண்டோ! எவ்வகைக்
கனியையும் இது பழித்துவிட்டதே! இம் மதுவை நாம் புசி
த்த மாத்திரத்தில் உடம்பெங்கும் பரபரத்து உள்ளங்களித்து
உருகி இன்பம் பெருகி புரோமஞ் சிலிர்த்து விட்டதே' என்று
கூறி, இஃது என்னை அற்புதமென்று கரங்கள் கொட்டிக்
கண்டவர்கள் நகையாடுமாறு ஓர் ஆடலாடினார். விழிசிவந்து
வாய்வெளுத்து, மொழி தழுதழுத்து, மெய் சோர்ந்து, தலை
சுழன்று, கோபத்தோடு நகைத்து, அகங்களித்து, முகப்
வேர்த்து எழுவார்; இடறி விழுவார்; இங்ஙனங் கண்டவர்
நகைக்க மயங்கி ஆடிய இருவரும் மெய்ம்மறந்து மண்ணில்
வீழ்ந்து கண்ணுறக்கமெய்தினார்.

அது கண்ட கபாலி சிரத்தையைநோக்கி, 'நமது தொண்டர்கள் உடம்பயர்ந்து விழுந்து உறங்குகின்ற சம்பிரத்தைப் பார்த்தனையா?' என்று கூற, அவர்களும் வெறிதெளிந்து எழுந்து கபாலியைத் தொழுது ஐயனே! என விளித்து, 'நாம் பருகுந்த இம் மதுத்திலே உள்ள இன்பம் தேவரும் அடைதற்கரியது. மது என்று மனத்திலே எண்ணுகினும் அது கொடுக்கின்ற இன்பம் இணையற்றது என்றால், அதை உண்ணுமிடத்து அது தருகின்ற இன்பத்தை எவ்வாறு கூறுவோம்! அவ்வின்பத்தை இன்று உமது திருவருளா லடைந்தோம்' என்றனர். கபாலி அவர்களைப் பார்த்து, 'தொண்டர்காள்! இவ்விதமாகச் சிறந்த மது யாவர்க்கும் கிட்டத்தக்க தொன்றன்று. இனி உமக்கு அட்டமாசித்தியும் பலிக்கும், தேவஸ்திரீகளும் நினைக்குமுன் வந்து உம்மைச் சேருவர்' என்று கூறினான். அதைக் கேட்டுப் பக்கத்தில் நின்ற சமணன் கபாலியைநோக்கி, 'யாமிது காறும் வீண்காரியம் புரிந்து விட்டோம். உமக்கு அட்டமாசித்தியும் பலிப்பது உண்மையாயின், யாம் இதுகாறும் தேடி அலைந்த சிரத்தையை இங்கிருந்தபடியே வரவழைப்பீராக' வென்றான். கபாலி அவனை நோக்கி, 'சிரத்தை இருக்கின்ற இடம் இது வென்று உமது கணிதநூலினு லுணர்ந்து சொல்வீராயின், உமக் கெதிரேதானே இவ்விடத்தில் வரவழைப்போம்' என்றான். அதற்குச் சமணன், 'இக்கணத்திற்றனே சிரத்தை இருக்கு மிடத்தைச் சோதிடத்தினால் ஆராய்ந்து கூறுகிறேன், வாரு' மென்று அம் முறைப்படி எண்ணத்தொடங்கினான். அப்போது மானன் என்பவன் தருமனைத் தேடி அவ்விடத்தை அடைந்தான்: அங்ஙனம் அடைந்த மானனைச் சமணன் நோக்கி, நீ இங்கு வந்த காரணம் யாதென்று வினவ அவன், 'மோகராசனது ஏவலின்படி தருமனைப் பிடித்து விலங்கிட்டுப் போக வந்தேன். உலகத்தில் யானவனைத் தேடிப் போகாத இடமில்லை. அவ்வாறு தேடியும் அவன் இருக்கின்ற இடம் எனக்குப் புலப்படவில்லை. ஆதலால் சோதிடத்தில் ஆராய்ந்து அத் தருமன் இருக்கிற இடத்தை எனக்குக் கூறல் வேண்டும்'

என்றான். அதற்குச் சமணனும் இசைந்து, 'அவ்வாறே பார்த்து உனக்குக் கூறுகிறேன் சற்று நில்' என்றான். அங்ஙனங் கூறிப் பலகையைக்கொண்டு, வாரம், திதி, நக்ஷத்திரம், இராசி முதலியவைகளை எண்ணிக் கிரகநிலைகளை ஆராய்ந்து, அவற்றின் பலன்களை நாடி, அவ்வழியே இருவரும் மறைந்திருக்கின்ற விடங்களை ஊகித்துணர்ந்து, கபாலியை நோக்கி, 'ஐயனே, சத்துவ சிரத்தை என்பவள் யோகினிகளது அருள் பெற்றுத் யோகிகளது உள்ளத்திலே மறைந்து வாசஞ் செய்கின்றாள். அப்பால் தருமன் இருக்கின்ற இடத்தை ஆராயுமிடத்து அவன் புண்ணிய ஸ்தலங்கள், தெய்வநதிகள், மலைச்சாரல்கள், தபோவனங்கள் முதலிய இடங்களி லெல்லாம் தன் தங்கையாகிய சிரத்தையைத் தேடிக் காணாமல் சரீரம் வாடி, இறுதியில் யோகிகளது மனத்திலே அவளிருப்பதை யறிந்து, தானும் அங்கே சென்று வாழ்பவனாயினான் எனப்புலப்படுகின்றது' என்று கூறினான். இவற்றைச் சமணன் கூறுதலும் பக்கத்திலிருந்து கேட்ட சாந்தியும் கருணையும், சேமித்து வைத்த வரிய திரவியத்தை யிழந்து துன்புற்றுப் பின்னர் அதனைக்கண் டடைந்தவர் போலக் களிப்புற்றுச் சிரத்தையைக் குறித்து அவர் மனத்தி லுண்டான ஐயம் நீங்கி, சோதிடத்திலே இவ்வளவு நுட்பமாக ஆராய்ந்துசொன்ன இந்தச் சமணன் நம்மையும் ஒருபோது ஆராய்ந்தறிவன்; ஆதலால் இவ்விடம் விட்டு நீங்குவதே நல்லகாரியமென்று இருவரும் அவ்விடம்விட்டு நீங்கினார்கள். அப்பால் கபாலி சமணாதியரை நோக்கி, 'சிரத்தையும் தருமனும் யோகியரது அருட்காவல் பூண்டு யோகிகளது மனத்தில் வாசஞ்செய்வது உண்மையானால் அங்கே போய் அவ்விருவரையும் பற்ற வல்லார் யார்? ஆயினும் என் அன்னையாகிய வைரவியை வரவழைத்து, அவளை விடுத்து அவ்விருவரையும் கொணரும்படி செய்வேன்' என்று கூறி, வைரவியை மனத்தில் நினைத்தான். அவளும் கபாலத்தையும் சூலத்தையும் கைகளிலே தாங்கி, எலும்புமாலைகள் பூண்டு, கண்களிலே நெருப்புப் பொறி சிந்த அட்டகாசஞ்செய்து பிரசன்ன மானாள். அது

கண்ட கபாலி அவள் பாதங்களில் வீழ்ந்து வணங்கி, 'தரு மனையும் சிரத்தையையும் இந்த க்ஷணத்திலே சென்று பற்றிக்கொணர்ந்து விடும்படி நீ திருவுளங்கொள்ள வேண்டும்' என்று அவளைப் பிரார்த்தித்தான்.

சமணதியர் சருக்கம் முற்றிற்று.

---

19. வைரவிவதைச் சருக்கம்

அதுகேட்ட வைரவி யென்பவள், விஷமெல்லாம் திரண்டு உருக்கொண்டு நின்றாற்போல எழுந்து சிலிர்ந்து, உலகங்களெல்லாம் குலுங்கும்படி நடந்துசென்று, சிரத்தையும் தருமனும் இருக்கின்ற இடந்தேடி அவர்களைக் கண்டாள். கண்ட பிறகு இவர்களைப் பற்றுதற்குரிய உபாயம் யாதென்று சிறிது நேரம் சிந்தித்து, முடிவில் இவ்வாறு செய்வேனென்று துணிந்து, தன் உருவை மாற்றி வேற்றுருவைத் தாங்கி, உயிர்களைக் கவரச் செல்கின்ற காலனைப்போல மாயமாகச் சென்று, யோகியாது மனத்திற் புகுந்து, அங்கிருந்த சிரத்தையையும் தருமனையும் ஒருசேரப் பற்றி, சிறு பறவைக் குஞ்சுகளைப் பருந்து பற்றிக்கொண்டு ஆகாயத்திற் சென்றாற்போல வெளிப்பட்டாள். அப்போது அந்த யோகியாது மனமானது, வேடர் பறவையைப் பிடித்துக் கொண்டுபோக அதனால் வெறுமை யடைந்து பாழாகிய சேக்கைபோலவும், யானை யுண்ட விளங்கனிபோலவும், அந்து உண்ட நெற்பதர்போலவும் பாழாயிற்று. அது நிற்க, மாயாரூபம் கொண்ட வைரவி அவ்விருவரையும் தன் இரு கைகளிலும் இடுக்கிக்கொண்டு, சந்திர சூரியர்களைக் கவர்ந்தெழுகின்ற ராகுவைப்போல எழுந்து வாயுவேகமாகச் சென்றாள். சென்றபோது சத்துவ சிரத்தையானவள் அவ் வைரவி கையி லகப்பட்டபடியே பேர்வாள், யான் செய்த தீவினை யாதென்பாள், நடுங்கி உலைவாள், தருமன்பொருட்டுக் கவலைப்படுவாள், கருத்தழிவாள், சோர்வாள், துவண்டுவிழுவாள், காற்றுடிபோலச் சுழலு

வாள். இவ்வாறு உடம்பு வெதும்பியும் மதிகலங்கியும் வெயர் வரும்பியும் கூந்தல் அவிழ்ந்தும் வளைகள் தகர்ந்தும் கைகள் நடுங்கியும் துன்புற்று நிற்க, அதனைக் கண்டவர், ஐயோ இவளுக்கு இப்படிப்பட்ட துன்பம் வரலாமோவென்று பெருமூச் செறிந்தார்கள். இப்படிப் புலி வாயி லகப்பட்ட மான்போல வருந்துகின்ற தங்கையைத் தருமன் பார்த்து, என் அம்மே! தளராதிரு என்று தேற்றி, வைரவியின் கைப் பிடியினின்றும் வழுவிப் புறத்திலே சென்று நின்று அவள் போக்கைத் தடுத்து, என் கையி லிருக்கிற வாளினால் இவ ளுடைய அவயவங்களைக் கொய்து கொல்லுவேன் என்று மனத்திற் குறித்துக்கொண்டு நின்றான். அப்போது மற்றொரு கையினால் இடுக்கப்பட்டிருந்த சிரத்தை பொறுத்தற்கரிய துன்பத்தை யடைந்து, யோகிநிகளை நினைந்து, 'என்னைக் காக் கும்படி உறுதி கூறிய உமது அருள்வாக்கு வீணாயிற்றோ? இந்தக் கொடுமையாகிய துராத்மாவின் சாமர்த்தியத்திற்கு அவள் முன்னே தனித்து நிற்கின்ற என் தமையனாகிய தரு மனது பலம் ஒரு பொருளாகுமா? இதற்கு என் செய்வேன்? என்பாள். 'அன்போடு என்னை வைத்து வளர்த்த பெரியோ ரே! இது உமக்கு முறைமையோ?' என்பாள். 'யோகிநிகள் சதிசெய்வதும் உண்டோ?' என்பாள். 'விதியோ இது?' என் பாள். 'முன்னொரு காலத்திலே கஜேந்திரன் முதலை வாயில் அகப்பட்டபோது அவனைக் காப்பாற்றி யருளினவன் நீ யல்ல வோ?' என்று அநிருத்தியைக் கூவுவாள். 'திரௌபதை மான பங்கமடைய நின்ற காலத்திலே அவள் மானத்தை அன்று காத்தருளினவன் நீ யல்லவா?' என்பாள். 'பிரகலாதனைக் காக் கும் பொருட்டுத் தூணிலே நரசிங்கம் தோன்றும்படி செய்த வன் நீ யல்லவா? என் உடம்பு இவ்வாறு உருகி யொழியப் பூமியில் யாரை யிணைந்து சுகித்திருக்கின்றனையோ? இந்தக் கொடியவள் என்னைத் தன் கையி லிடுக்கி என் எலும்புகள் நெரிய வருத்துகின்ற இச் செய்தியைப் பாராதிருப்பது என்ன பாராமுகமோ?' என்பாள். இப்படிப் புலம்புகிற சிரத் தையின் எதிரில் ஒரு சோதி தோன்றிற்று. அந்தச் சோதி

யானது, தருமனது தடையையும் சிரத்தையின் தடையை யும் விடுவித்து, வைராவியைக் கொன்று, தருமன் முன்னே வீசி யெறிந்துவிட்டுப் போயிற்று. இச் செய்தியை நோக்கு மிடத்தில், பொல்லாதவர் நன்மையை யடைவதும் நல்லோர் தீமையை யடைவதும் பழவினையால் ஒருபோது. நேர்ந்தா லும் நெடுங்காலம் நில்லாது என்கிற பெரியோர் வாக்கியார்த் தத்தை நன்கு விளக்கா நின்றது. இப்படி வெல்லுதற்கரிய வைராவியானவள் இறந்ததை நோக்குமிடத்தில், இதுபோல வே இனி மோகனுடைய வாழ்வும் அழியுமென்பதற்குச் சந் தேக மில்லையென விளங்குகின்றது. அதன் பிறகு சிரத்தை யும் தருமனும் இரவெல்லாம் நித்திரை செய்து நித்திரை நீங்கினவுடன் எழுந்து வருபவர் போல வரக் கண்ட தபோ தனர்களெல்லாம் பேரானந்த மடைந்து அவர்களைத் தொட ர்ந்தார்கள். அது கண்ட அவ்விருவரும் அரிபக்தியேஎம்மைக் காத்தது, யோகினியர் அருளைப் பெற்ற நமக்கு எவ்வகைத் தீமையுண்டாகிலும் அந்தத் தீமை விளக்கை யெதிர்த்த விட்டில்போல மாய்வது உண்மையென்பது இன்று விளங்கக் கண்டோம் என்று சொல்லி யோகினியரை நாடி விரைந்து சென்றார்கள்.

வைராவிவதைச் சருக்கம் முற்றிற்று.

---

20. சிரத்தை மீட்சிச் சருக்கம்



அவ்வாறு சென்ற இருவரும் அரிபக்தி யென்னும் யோகினியின் பாதங்களை வணங்கி, 'தீயவளாகிய வைராவி கையிலகப்பட்டுப் புலிவாயில் அகப்பட்ட மான்போலக் கலங்கி நின்ற எம்மை உன் கருணை நோக்கத்தாலே ரக்ஷித்தருளினாய்; உன்னைப்போலத் துன்பத்தை நீக்குவோர் யார்?' என்று புகழ்ந் தார்கள். அதனைக்கேட்டு மகிழ்ந்த யோகினி அவ்விருவரையும் நோக்கி, 'யானே விவேகனுக்கு மணம் செய்வித்து அவனு டைய பகைவரை வேரறுத்து அவனுக்கு முடியுஞ் சூட்டி

வைப்பேன். ஆதலால், நீங்கள் எதற்கும் அஞ்சாதிருங்கள்'
என்றாள். அது கேட்ட சிரத்தை, 'உன்னை ஆதரவாகக் கொ
ண்ட யான் இனித் தளரேன், யான் அஞ்சத்தகுவதும் யாது
மில்லை' என்றாள். மறுபடியும் யோகினியானவள் அவளை
நோக்கி, 'இப்போது நீ யடைந்த துன்பத்தை நினைந்து எடுத்த
காரியத்தைச் சோரவிடாது அதனையே நாடிச் செல்வாயாக,
பிற்கே நானும் துணையாக வருவேன்' என்றுசொல்லி, அவளை
உபநிடதையிடம் அனுப்பினாள். பிறகு தருமனை நோக்கி,
'நீயும் உன் காவலிற் போகக்கடவை' யென்றாள். அவளிடத்
தில் விடைபெற்றுச் சென்ற தருமன் சிரத்தை என்னு மிரு
வரும் சிறிது தூரம் கடந்து செல்லுகையில், சாந்தியென்
பவள் வந்து சிரத்தையைப் பேரன்போடு கட்டித்தழுவினாள்.
கருணை மாதும் தனது நாயகனாகிய தருமனைத் தழுவினாள்.
அவர்களும் முறையே எதிர் தழுவித் தமது கவலை தீர்ந்து
களிக்குமளவில், கருணையென்பவள் தனக்கும் சாந்திக்கும்
நடந்தவற்றையெல்லாம் எடுத்துச்சொன்னாள். அதைக்கேட்ட
சிரத்தை பெருமகிழ்ச்செறிந்து மீண்டும் சாந்தியைக் கட்டித்
தழுவி, 'என் கண்மணி! இவ்வளவும் வருந்தினையோ?' வென்று
உச்சிமோந்து, கண்ணீரில் முழுக்காட்டி, கவலையும் களிப்பு
முடையவளாய்ச் சிறிது நேரம் அடங்கியிருந்து, 'யோகினி
யின் கிருபையிருக்கிற வரைக்கும் நமக்குத் துன்பம் வரினும்
அது சூரியனைக் கண்ட பனிபோல நீங்கும்' என்கிற துணிவி
னால் தேறினாள். அப்பால் தருமனை நோக்கி, 'நீயும் உன்தேவி
யோடு உனது மனைக்குச் செல்லக்கடவை, நானும் என்
புதல்வியாகிய சாந்தியும் உபநிடதையிடம் போவோம்' என்று
சொல்லி அவர்களைப் பிரிந்து மகளுடன் விரைந்து நடந்தாள்.
அப்படி நடந்தவள் சத்திய லோகத்தை யடைந்து வாணி
யைக் கிட்டிக் கைகூப்பி வணங்கினாள். அது கண்ட வாணி
அவளை உபசரித்து உன் வருகைக்குக் காரணம் யாதென்று
வினவ, சிரத்தை வாணியை நோக்கி, 'அம்மே! யான் விவேக
ராஜன் விட்ட தூதாக இங்கு வந்தேன், என் பேர் சிரத்தை,
என் புதல்வியாகிய உபநிடதையை விவேகராஜன் மணம் புரி

யக் கருதினான். ஆதலால், அவளை நீ அந்த விவேகராஜனுக்கே தரல்வேண்டும்' என்றாள்.

அது கேட்ட வாணி அவளை நோக்கி, 'விவேக வேந்தனுக்குச் சுமதியென்னும் மனையாளிருக்கவும் நீ பெண் கொடுக்க வேண்டுமென்று கேட்பது அறியாமையா லல்லவா? மனையாளிருக்க வேறொரு பெண்ணைக் கொள்வாருமுண்டோ? அப்படி உண்டாயினும் நாங்கள் அது செய்வது தகுதியாமோ? அன்றி யாம் பெண் கொடுத்தோமாயினும் இரண்டு மனைவியரும் மனமொத்து வாழ்வாரோ?' என்று வினவி மறுத்தாள்.

அது கேட்ட சிரத்தை அந்த வாணியை நோக்கி, 'சுமதி தேவி தன் வயிற்றில் புத்திரோற்பத்தி யில்லாமையாலும், தனது நாயகன் துணைவலியின்றிப் பகைவரால் நலிகின்றதனாலும், பின் வருவதை முன்னமே யறியுந்திறமுடையளாதலாலும், தன் நாயகன் இரண்டாம் விவாகஞ் செய்துகொள்வது ஆவசியகந்தானென்று மனம்பொருந்தி யிருக்கின்றாள். சிவபெருமானது இடப்பாகத்தை இடமாகக் கொண்டருளிய உமாதேவி அவர் தலையை இடமாகக் கொண்டருளிய கங்கா தேவியுடன் மனம்பொருந்தி அன்பாயிருக்கவில்லையா? திருமாலின் மார்பை இடமாகக் கொண்டருளிய லக்ஷ்மீதேவி தன் நாயகனைப் பின்னை மணஞ்செய்து கொண்ட பூமிதேவியோடு வேற்றுமையின்றி வாழவில்லையா? ஆதலால் உத்தமியாகிய சுமதியும் உன் பெண்ணுக்கு மேம்படாதவளாயினும், அவளோடு உயிர்க்குயிராய் அன்பு கொண்டொழுகுவளென்பதற்குச் சிறிதும் ஐயமில்லை' என்றாள்.

இந்த வார்த்தைகளைக் கேட்ட வாணி அகமகிழ்ந்து முகமலர்ந்து, தனது நாயகனாகிய பிரமனுக்கு இந்தச் செய்தியெல்லாஞ் சொல்லி, பிறகு தன் மகளுக்குஞ் சொல்லி அவ்விருவர் மனக்கருத்தையும் உடன் பாட்டையும் பெற்று மீண்டுவந்து, சிரத்தையை நோக்கி, 'ஆர் பெற்ற நன் மகளும் என் மகளுக்கிணையாகமாட்டாள், அவளுக்குத் தகுந்த சீர்பெற்ற நாயகனும் அந்த விவேக வேந்தனே யன்றி வேறில்லை. ஆதலால்

உன் கருத்துக் கிசைந்தேன். இனி நீ சிறிது நேரமும் தாமதி யாமல் விரைந்துசென்று விவேக வேந்தனையடைந்து அவனை இங்குக் கொணர்வாயாக' என்றாள்.

அந்த மொழியைச் சிரமேற்கொண்ட சிரத்தை வாணி யை வணங்கி விடைபெற்றுத் தன் புதல்வியோடும் அங்கு நின்றும் நீங்கி, அகத்து மகிழ்ச்சி முகத்து நிகழ்ச்சியாக விவேக வேந்தன் இருக்கு மிடத்தை நோக்கிச் சென்று அவ் விடத்தை யடைந்தாள். அவளை வழியிற் கண்டவர்கள் பார் த்து, வந்து சேர்ந்தனையா என்று மகிழ்ந்து அவளைத் தழுவிக் கொள்வார் சிலர், உன் வரவைக் காட்டிய இந்தத் தினம் நற்றி னம் என்பார் சிலர், உன்னை யாரோ பிடித்துச் சிறையிட்டா ரென்று கேள்விப்பட்டு நொந்த நோய் இன்று தான் தீர்ந்த தென்பார் சிலர், முன்னே நாம் கேள்விப்பட்ட வார்த்தைக ளெல்லாம் பொய்யாய்விட்டன வென்பார் சிலர், இவள் அங் கே சிறைப்பட்டு மீண்ட துண்டானால் அவளுடைய முகம் பூர்ண சந்திரன்போல் விளங்குமோ என்பார் சிலர், சாந்தி யானவள்போய் இவளை எவ்விடத்துக் கண்டனளோ என் பார் சிலர், இவள் மனவருத்தம் ஒழிந்ததே நமக்குப் பெரும் பாக்கியம் என்பார் சிலர். இவ்வாறு யாவரும் தங்கள் தங் களுக்குத் தோற்றினவற்றை யெல்லாஞ்சொல்லி மிகுகளிப் படையா நிற்க, சிரத்தையும் விவேக வேந்தனை யடைந்து அவனை வணங்கி நின்றாள்.

அதுகண்ட விவேக வேந்தன் அவளை வாழ்த்தி, 'நீ இவ் விடம் விட்டு நீங்கின நாள் முதலாக இன்றளவும் நடந்த வற்றையெல்லாம் எனக்குச் சொல்வாயாக' என்று கேட்க, அவளும் நடந்தவை முழுதும் ஆதியோடந்தமாகச் சொன் னாள். விவேகன் அவளடைந்த துன்பத்தைக் குறித்துத் துக் கித்து, பிறகு அவள் முடித்த காரியத்திற்காக மனமகிழ்ந்து மெச்சி, அவளை நோக்கி, 'என் தங்காய், அரிபக்தி, சிவபக்தி என்னும் யோகினிகளுடைய அருள் நம்மிடத்திலுண்டு. புண் ணிய ரூபியாகிய நீயும் நம்மிடத்தி லிருக்கிறாய், தருமனும்

நம்மிடத்தில் இருக்கிறான் ; ஆதலால், சுமதியோடு கூடி யான் ஆராய்ந்து செய்யுங்காரியம் முடியாமற்போவதில்லை. பெருங் கடலிலே மரக்கலமேறிச் செல்லும்போது அடைந்த துன்பமுழுதும் மனவலியினால் பொருள் படுத்தாமல், கடலைக் கடந்து நாட்டை யடைந்து அங்கே அருமையாகிய திரவியங்களைச் சம்பாதித்து மீண்டுவந்து அந்தத் திரவியங்களை வறியோருக்குத் தருமஞ்செய்வார்போல, நீ வருந்திச்சென்று மீண்டு வந்து செய்த இந்த உதவிக்கு யான் செய்யத் தகுந்த கைம்மாறொன்றில்லை. இதனை நீ சொல்லுகிற அளவில்தானே எனக்கு இவ்வளவு* மகிழ்ச்சி யுண்டாயிற்றே! இனி நான் உபநிடதையை மணம்புரிந்து மோகனாதியரை வெல்லுவதில் ஐயமும் இல்லை' என்று இவ்வாறு விவேக வேந்தன் அவனுக்குப் பல இன் சொற்கள் கூறி மனமகிழ்வித்துத் தானும் மனமகிழ்ந்திருக்கும்போது, நியாயன் வந்து அவ்விடத்தை யடைந்தான்.

சிரத்தைமீட்சிச்சருக்கம் முற்றிற்று.

---

21. விவேகன் போதகரை வரவழைத்தசருக்கம்.

அவ்வாறு வந்து வணங்கி நின்ற மைத்துனனாகிய நியாயனை விவேக வேந்தன் நோக்கி, நம் பகைவனாகிய மோகனும் அவன் சேனைகளும் செய்கிற காரியங்களையும், நமது பக்கத்தார் தெய்வத்தலங்கள் தோறுஞ் சென்று அங்கிருந்து செய்யுந் தொழில்களையும் எனக்குச் சொல்லக்கடவையென்று பணிக்க, அவனும் சொல்லத் தொடங்கி, 'ஐயனே, நமது படைவீரராகிய நிரூபகன் முதலானோர் தெய்வத்தலங்கள் தோறும் வேற்றுருத் தாங்கிச் செய்கிற செய்திகளை ஒற்றரால் அறிந்த மோகராஜன் கலியனையும், சாருவாகனையும் அழைத்து, கலியனைத் தெய்வத்தலங்கள் தோறுஞ் சென்று நம்மவரைப் பற்றி வருமாறும்,சாருவாகனை உலகமுழுதுஞ் சென்று

தான் கற்ற மித்தியாபோதனைகளைப் புகட்டி வருமாறும அனு ப்பி[illegible]ம் காசியை யடைந்தான். அங்கே சத்துவ சிரத்[illegible]டைதயிடம் தூதுசென்றாள் என்பது கேட்டு, அவளை[illegible]க்கும் பொருட்டு மிச்சாதிட்டியையும் புத்தன் முதலானோரையும் அனுப்பினான். அப்பால், சோமநாதத் திலே தருமன் செய்கின்ற விரச்செய்கைகளை மோகன் கேள் விப்பட்டு, அவனையும் விலங்கு பூட்டிக்கொண்டு வரும்படி மானனை அனுப்பினான். இப்படி மோகனு லேவப்பட்டுச் சென்றவருள்ளே கலியன் என்பவன் தெய்வத்தலங்கள் தோறுஞ் சென்று நம்மவரை வருத்தத் தொடங்கியபோது, அவனை அரிபக்தி சிவபக்தி என்னும் யோகினிகள் எதிர்த்துச் சாடி யோட்டி விட்டார்கள். ஓடப்பட்ட கலியன் நாணம் மேற்கொண்டு மோகனையடைந்து, அரிசிவபக்தியாது அருள் நம் பகைவர்க்கு மிகவும் உண்டாயிருத்தலால் அவரை வெல் லுதல் யார்க்கும் அரிதென்று கூறினான். அதுகேட்ட மோகன் எல்லோரையு மழைத்து, காமன் முதலிய படைவீரரையெல் லாம் கொண்டு வாருங்களென் றனுபபினான். அந்தச் சொல் லைக் கேட்ட காமனாதியர் மோகனிடஞ் செல்ல வழிக்கொண் டார்கள். மற்றைச் சமனாதியர் செய்தி இந்தச் சிரத்தையின் வாயிலாகக் கேட்டாயல்லவோ? சாருவாகன் மதமும் இனித் தலையெடுப்பதில்லை; ஆதலால் இனிச் செய்யத் தகுந்ததாகிய காரியம் உன் திருமணமே; அதற்குத் தடை யாதேனு முண் டானால் திருவுளம்பற்றல் வேண்டும்' என்று சொல்லி முடித் தான். முன்னே சிரத்தைவாயிற் கேட்ட அமிர்த வசனத்து டன் இந்த நியாயன் சொன்ன இனிய மொழியும் விவேகனது செவிவழியே புகுந்து அவன் மனத்தி லுண்டாகிய காமாக்கி னிக்கு நல்ல நெய்யாக, அந்தக் காமாக்கினி சுவாலித்து ஓங்கி யெழுந்தது. அப்போது அவன் மந்திரத்தலைவராகிய எண் மருள் ஒருவனாகிய நியமன் என்பவன் எழுந்து கை குவித்து விவேகராஜனை வணங்கி, 'அண்ணலே! தெய்வ கடாக்ஷத்தால் மோகனாதியர் வலி குறைந்தார்கள் என்பதில் ஐயமில்லை. நம் மவர்கள் எந்தத் தலங்களிலும் வலி மிகுந்து வெளிப்படலு

மாயினர், கொடியோராகிய காமன், கோபன், மதன், மச்சரன் என்போரும் நெடுங்காலமாகத் தாம் தாம் பற்றிநின்ற ஸ்தலங்களையும் விட்டு நீங்கினார்கள். அப்படி நீங்கினவர்கள் மோகவேந்தனை யடைந்து போருக்கு ஆயத்தமாகு முன்பே நீ உபநிடதையை மணந்தருளல் வேண்டும், ஆதலால் நிருபகன் முதலாகிய நம்மவர் யாவரையும் அழைத்து வரும்பொருட்டு அவரவரிடங்களுக்கு ஒற்றரை யனுப்பவேண்டும்' என்றான். அதைக் கேட்ட விவேக ராஜனும் நன்று சொன்னாயென்று மகிழ்ந்து அவனை நோக்கி, 'ஒற்றர் கையில் திருமுகங்கள் கொடுத்து அவரை அவ்வவ்விடங்களுக் கனுப்பி நிருபகாதியரை விரைவில் வரவழைக்கக் கடவை' என்றான். அப்படியே அவனும் ஒற்றரைக் கூவி, 'இந்த ஓலைகளைக்கொண்டு விரைந்து சென்று நிருபகன் முதலானோரை யடைந்து அவர்களை இங்கே யழைத்து வாருங்கள்' என்று கட்டளையிட்டான். அந்த ஒற்றரும் அவனது கட்டளையைச் சிரமேற்கொண்டு, வாயுவினும் அதிவேகமுடையவராய்ச் சென்று நிருபகாதியரை யடைந்து திருமுகங்களைக் கொடுத்து வாய்மொழியாகவும் செய்திசொன்னார்கள். அந்தத் திருமுகங்கண்ட நிருபகாதியர் மழைமுகங்கண்ட பயிர்போல் விளங்கி, ஆடுவார் பாடுவாராகிப் பேரானந்தப் பெருஞ்சோதியைச் சும்மா பிடித்துத் துன்புறுத்திய பாவங்கள் தாழவும் நம்மவர் வாழவும் காலம் வந்ததேயென்று களித்து, பரஞ்சோதியாகிய தமது நாட்டரை வாழ்த்தினர். நிருபகன், பொறையன், நிச்சயன், சத்தியன், தருமன், சமன், தமன், சத்துவன், அவிரோதன், தவன், விராகன், சந்தோஷன் முதலான யாவரும் தத்தம் மனைமக்களோடு, வழிக்கொண்டு, காதல் முன்செல்லத் தாம் பின் சென்று விவேகனை யடைந்து வாழ்த்தி, அவன் பாதங்களை வணங்கினார்கள். விவேகனும் அவர்களை முகமலர்ச்சியோடு நோக்கி ஆசிகூறி, சூழ உட்காரும்படி நியமித்து, 'நமது மனைமக்களும் நீங்களும் தீங்கின்றி வாழ்கின்றீர்களா?' என்று வினவ, அவர்களுள்ளே தலைவனாகிய நிருபகன் எழுந்து வணங்கி, 'அண்ணலே! ஆதியந்தமாக யோகியாது அருளும் உன்

ஆதரவும்ளட்மிட்த்துள்ளனவன்றோ? அப்படியிருக்க எமக்குக் குறைவற்ற வாழ்வு அரிதாமோ?' என்றான். அந்த மொழியைக் கேட்ட விவேகன் மிகவும் மனமகிழ்ந்து, சிரத்தையைத் தூதுவிட்டது முதல் வாணி தன் மகளைக் கொடுக்கச் சம்மதித்தவரைக்கும் நடந்த செய்திகளையெல்லாம் எடுத்துச்சொல்லி, தான் மணமுடிக்க யத்தனஞ் செய்திருப்பதையும் விளங்கக் கூறினான். அதுகேட்ட யாவரும் பேரானந்த முடையவராய் விவேகனை நோக்கி, 'இறைவனே! உன் மணக்கோலத்தைக் காண்பதே எங்களுக்குப் பெறுதற்கரிய பெரும் பயனாகும். அந்தப் பயனை யெமக்குத் தருதற்கு நீ தாமதிப்பது என்?' என்றார். அது கேட்ட விவேகன், 'நன்று கூறினீர்! மணத்துக்கு வேண்டுவனவெல்லாம் சேகரிக்கக்கடவீர்' என்று சொல்லித் தானும் மணக்கோலஞ் செய்வானாயினன்.

விவேகன் போதகனை வரவழைத்த சருக்கம் முற்றிற்று.

உபநிடதை வேள்விச் சருக்கம்.

தன்னைக் கோலஞ் செய்துகொள்ளத் தொடங்கின விவேகன், சற்சங்கம் என்கிற பல ஆபரணங்களை யணிந்து, அந்தச் சாது சங்க சகவாசம் என்கிற நல்ல பரிமள சந்தனாதிகள் உடம்பின் மீது பூசி, விஷ்ணு சரிதாமிர்தம் சிவ சரிதாமிர்தம் என்கிற இரண்டின் கேள்வியாகிய ரத்ந குண்டலங்களை இரண்டு காதுகளிலும் தரித்து, அழகிய மார்பில் வியாச சூத்திரம் என்கிற செம்பொற் பூணூல் தரித்து, புலவாது இதயங்களென்கிற வண்டுகள் மொய்க்கப்பெற்ற மலர்தல் குவிதலில்லாத நல்லறிவென்கிற மலர்மாலை யணிந்து, தீமைகளை யார் தனக்குச் செய்யினும் அவற்றை உடனே மறந்து விடுதலாகிய பாதுகையைப் பாதங்களில் தொடுத்து, பிறர் செய்யும் அற்ப நன்றியையும் மறவாமையாகிய ரத்ந கிரீடம் கவித்து, கொலைத்தொழிலையுடைய பகைவர் வந்து உயிரைக் கேட்டா

ும் மனவைரத்தையொழித்துத் ததீசிமுநியைப்போல அன்போடு உடலுயிர்களைக் கொடுத்த லென்கிற பொற் கங்கணத்தைக் கையிலே தரித்து, மோகஞதியர் வலியை நீக்கும் வன்மையென்கிற வாகுவலயத்தைத் தோளிற் பூண்டு, உலகத்திலுள்ளவர்க்கு அபயப் பிரதானஞ் செய்தலென்கிற மோதிரம் விரலிலே யணிந்து, நித்திய நைமித்திகங்களைக் கைவிடாது பருவத்தில் முடித்தல் என்கிற நெற்றிப் பட்டங்கட்டி, பெருங்குணமாகிய வெண்பட் டாடையைத் தன் அரையில் விளங்குகின்ற உத்தரியத்தோடுஞ் சேர்த்துக் கட்டி, அரிசிவன் என்பவர் மீது வைத்த அன்பும் அது காரணமாக அவர்கள் திருவருள் கண்டு பொழியும் ஆநந்தக் கண்ணீரும் பிறர் துன்பங்கண்டு சகிக்கலாற்றாது நெஞ்சம் நெகிழ்ந் துருகிச் சொரியும் கருணைக் கண்ணீரும் ஆகிய முத்துமாலையை மார்பி லணிந்து, பழி பாவங்கட்கு அஞ்சி நாணுகிற நாண் என்னும் அரை நாணை இடையிலே தரித்து, மயக்கமாகிய இருளைக் கடிந்து உயர்ந்தோங்குவதாகிய வியாபகம் என்னும் சந்திர வட்டக்குடை நிழற் கீழிருந்து, விசாரணை மாதும் வாஞ்சை மாதும் இருபக்கங்களிலும் நின்று சாத்திரங்களென்கிற வெண்சாமரத்தை வீசிக்கொண்டிருக்கவும், வேதமாகிய குதிரையும் சத்தியன் என்னும் பாகனும் செலுத்துகிற தத்துவமாகிய தேரி லேறி, பக்தியாகிய குல ஸ்த்ரீகளின் பார்வை எல்லாப் பகங்களிலும் பொருந்த, சுத்திக்கு உயிர் போன்றவளாகிய சுமதி பின்னே தொடர்ந்துசெல்ல, மோக்ஷவாஞ்சை ஒரு பக்கத்தில் வர, எந்தத் திக்கிலும் நிருபகன்முதலிய இனத்தார் சுற்றிவர, இயமன் நியமன் முதலிய எண்மரும் தன் பக்கத்தில் வந்து நெருங்கவும், ஆசாரன் அந்துவிதன் சுசீலன் தருமன் முதலானோர் சூழ்ந்துவர, ஒரு பூர்ண சந்திரனைச் சூழ்ந்து செல்லுகிற பல நக்ஷத்திரங்கள்போல நிவிர்த்தி கருணை முதிதை உபேக்ஷை மைத்திரி நீதி முதலாகிய மாதர்கள் நல்வழியில் நடந்துவர, இத் தன்மையவாகிய பல சிறப்புக்களோடு விவேக ராஜன் எழுந்தருளுகிற மேன்மையை ஆலோசித்து மனமகிழ்ந்த பிரமன் வாணிக்குச்சொல்

ஷுதலும், அவள் தன் மகளாகிய உபநிடதையை அலங்கரிக்கும் விதத்தைச் சொல்லுவோம்.

தாரகமே திருமுகமாகவும், நாதமே நீண்ட கூந்தலாகவும், சுருதிகளே காதுகளாகவும், விதியே நாசியாகவும், அர்த்தவாதமும் நீதியுமே இரு கருங் கண்களாகவும், சற்குண நிர்க்குணங்களே இரண்டு கைகளாகவும், சிவபரங்களே தனங்களாகவும், அறிதற்கரிய மஹாவாக்கியமே சிற்றிடையாகவும், அருமையாகிய பிரகரணங்களே மலரடிகளாகவும், பஞ்சகோசங்களே பஞ்சப்பிராணன்க ளாகவும், சச்சிதாநந்தமும் உபபத்தியுமே மனமும் சீவனுமாகவும், உபக்கிரமம் உபசங்காரம் என்பவைகளே நடையாகவும், மீமாஞ்சையும் மஹாவாக்கியமுமே மென்சொல்லும் கண்டமுமாகவும், அகர முதலாகிய வடமொழி ஐம்பத்தோரக்ஷரங்களே மற்ற அவயவங்களாகவும் வாணி தேவி தான் பெற்றெடுத்த உபநிடதையைக் கீதையென்னுந் தோழியைக்கொண்டு பேருவகை யென்னுந் தீர்த்தத்தில் ஸ்நாநம் செய்வித்து, பக்குவமென்னும் பட்டாடை யுடுத்தி, செந்தொடர் மொழியாகிய மாலைசூட்டி, வருணமென்னுங் கலவைச் சந்தநம் பூசி, அலங்காரமாகிய திருப்பணிகளைப் பூட்டி, பிரமாணமாகிய மையைக் கண்களில் எழுதி, விந்துவென்னுந் திலகத்தை நெற்றியி லிட்டு, சத்தியும் பூர்வ ஞானமுந் திரண்டுருப்பெற்ற உபநிடதைக்கு இவ்வாறாகிய பல அலங்காரங்களைச் செய்தாள். இச் செய்திகள் அந்தப் புரத்தில் நிகழாநிற்க, அத்தாணி மண்டபத்திலிருந்த பிரமனும் விவேகனுக்கு இருப்பிடம் அமைக்கவேண்டி, மாதவரது உள்ளமாகிய தாமரை மாளிகையும், அதனுள்ளே அன்பென்னும் மெல்லணையும், கற்கப்படுகிற கல்வியாகிய கலை விதானமும், சொற்றொடராகிய பூமாலைத் தொங்கலும், கருணையென்னுந் தீபமும், இன்னும் வேண்டிய வெல்லாமும் அமைத்து, விவேகனது வரவை யெதிர் பார்த்திருக்கும் போது, சிரத்தை மாது சென்று பிரமனை வணங்கி விவேகனது வரவைக் கூறினாள். அதுகேட்ட பிரமன் முகமலர்ந்

தனது முதன்மந்திரியாகிய அன்பை நோக்கி, 'நீ விவேகவேந்தனை யெதிர்கொண்டழைத்து வா' என்றான். அந்த அன்பும் அவ்வாறே சென்று உபசரிக்க, விவேக ராஜனும் நிரூபகன் முதலாகிய தன் பரிவாரங்களோடு நகரை யடைந்து பிரமனது பாதங்களை வணங்கினான். அப்போது பிரமனும் முனிகணங்களும் பிறரும் ஆசிர்வாதம் செய்தார்கள். அது நிற்க.

விரக்தி, விராகன், தருமன், கருணை, சமன், சாந்தி முதலியோரும், இயமன் நியமன் முதலிய பேர்களும், விவேகனுடன் பிறந்த தங்கையரும் தாயரும் ஏனையரும் திருமண மண்டபச் சிறப்பைநோக்கி மிகவும் மனமகிழ்ந்து பரவசப்பட்டார்கள். நிர்மலவொளியாகிய தற்பரம் பொருளிலே அருவமாகியும் அயன் அரி அரன் என மூவுருக்கொண்டமையும், அயன் நான்கு திருமுகங்களோடு கமலாசனத்திலே இராசத குணத்தோடெழுந்தருளிச் சராசர ஜீவராசிக ளெல்லாவற்றையும் படைத்தமையும், சங்கசக்ரபாணியாய்ச் சத்துவ குணத்தோடு திருப்பாற்கடலிலே யெழுந்தருளிய அரியானவர் அந்த அயன் படைத்த உயிர்களை யெல்லாம் காத்து வருகின்றமையும், அந்த அரியே அடியார்கள்பொருட்டுத் தசாவதாரமெடுத்தமையும், பார்த்தனுக்கு இப் பிறப்பின்தன்மையிதுவென்று தெரிவிக்கும் பொருட்டு விசுவரூபங்கொண்டு உண்மையாகிய அர்த்த விசேஷங்களையெல்லாம் பகவத்கீதாரூபமா யருளிச்செய்தமையும், தேவர்களுக்கு அமிர்தம் பகிர்ந்தமையும் முதலிய பல திறங்களும், அப்பால் அரன் சூலம் மான் மழுக்களைத் தாங்கி, தாமதகுணத்தோடு கைலையில் எழுந்தருளி, தேவர்குறைநீக்க விஷபானம் பண்ணினமையும், காலனைக் காய்ந்து மார்க்கண்டனைக் காத்தருளினமையும், காமனை யெரித்துச் சனகாதியர்க்கு உபதேசித்தருளினமையும், அப்பர் முதலிய மூவருக்கும், திருவாதவூரடிகளுக்கும், அறுபத்துமூன்று நாயன்மாருக்கும் முத்திகொடுத் தருளினமையும் ஆகிய இவைபோன்ற திருவிளையாடல்களை யெல்லாம் நினைந்து நினைந்து, இவர்கள் திருவருளிருந்தபடி யென்னை யென்று மனமுருகிப் பரம் பொருளை நாடத் தொடங்கினார்கள். அதற்கிடை

23. சக்கர்தீர்த்தச் சருக்கம்

சில நாள் கழிதலும் நியாயன் என்பவன் வந்து விவேகனை வணங்கி, 'ஐயனே! உனது வலியானது சிற்றிளம்பிறை நாள்தோறும் வளர்ந்து வருதல்போல் வளருகின்றது, மோகன் வலியோ அபரபக்கத்துச் சந்திரனாயிற்று. மோகனாதியராகிய இருளி லழுந்தித் துன்புறும் மனுகுலமாகிய சகோர பக்ஷிகளுக்கு உனது ஞானமாகிய தண்ணிலவைக் கொடுத்து அவற்றின் பசிநோயைத் தேறுதல் செய்யாது அவை வாளா வருந்த நீ சுகித்திருத்தல் நன்றாமோ? அன்றியும் நீ மனுகுலம் தளர்வது கண்டும், அவர்க்கு நின் உபநிடதையாகிய கொம்பிற் பழுத்திருக்கும் ஞானக்கனிகளைப் படைக்கும் அன்பு குன்றியிருத்தல் உனக்கழகாகுமோ?

'பருவம் நோக்கி வான்மழை பொழிந்திடுவதும், பகலோன் இருள் துரப்பதும், தண்புனல் நதிகள் மற்றெவையும் பெருகுவதும், ஒப்பிலா நற்குணப் பெரியோர் அருள் சுரப்பதும் தமக்கொருபொருள் குறித்தன்றே.

'ஆதலால், இனி நீ சிறிதுந் தாழ்க்காது இக்கணத்திற்றானே நம்மவரோடுங் காசியையடைந்து மோகனாதியருடைய வலியை வேரோடு களைந்து வெற்றி மாலை சூடுதல் ஆவசியகமாயிற்று; இதுவே ஏற்றபருவம்' என்று கூறினான்.

அப்போது நியமன் என்பவன் எழுந்து விவேகனை வணங்கி, விறல் வேந்தே எனக் கூவி நியாயன் உரைத்த வாசகங்களைத் தழுவித் தானுஞ் சில சொல்வானாயினான். இதுகாறும் நீ எண்ணியவைகள் இடையூறின்றி முடிந்தமையால், வல்லவராகிய உனது படைவீரர் பின்னர் வரும் போரிலும் பகைவரைக் கடைபோகக் கடத்தல் நிச்சயம். இனி, கல்லும் முள்ளும் பயிலும் இக் காட்டை விட்டு நம் படைவீரர் யாவரோடும் புறம் போந்து நம் பகைவீரர் வசிக்கும் பதியை நெருங்கிய ஒரு புண்ணிய ஸ்தலத்தை அடைந்து, ஆதியில் சுயோதனனாலே காட்டுக்கு ஓட்டப்பட்டவராகிய பாண்டவர் அவ்

வனவாசம் விட்டு நீங்கி ஸ்ரீ கிருஷ்ணனைத் தூது போக்கித் தம்முரிமையைக் கேட்டு, துரியோதனன் மறுத்தபோது பெ[illegible]மெழுந்தமைபோல, நாமும் ஒரு தூதுவனை மோகன் பால்விடுத்து நம்முரிமையாகிய பூமியை நமக்குக் கொடுவென்று கேட்டு அவன் மறுப்பானேல் யுத்தத்திற்கு ஒருப் பட்டோமென்பதை யுணர்த்துவோம், அதுவே முறையாம்' என்ருன்.

அதுகேட்ட விவேகன் இதுவே தக்க சூழ்ச்சி என்று அவனுரையை மெச்சி, நியாயனை நோக்கி, 'நம் படையெல்லாம் சென்று வைகுதற்கேற்றதொரு புண்ணிய ஸ்தலம் சொல்வாய்' என்ன, நியாயனும் அவனை வணங்கி, 'ஐயனே, கங்காநதிச் சார்புடையதாகிய கவுடதேயத்தின்கணுள்ள ராடாபுரத்திலே சக்கரதீர்த்த மென்பதொன்றுளது; அது போலும் புனிதமுடைய தீர்த்தம் சத்தியலோகத்திலுமில்லை; அதன் சார்பிலே அளவிடலாகாப் பெருஞ்சோலை யொன்றுளது; அங்கே நம் படைவீரரோடு நாமும் செவ்வே வாசஞ் செய்யலாம்' என்ருன். விவேகனும் நன்றெனத் தனது சேனைவீரரோடு, நாட்டின்கணுள்ள நோயைத் தீர்த்தற்குக் காட்டின்கணுள்ள மூலிகை கால்பெற் றெழுந்தாற்போல, காட்டைவிட்டு நீங்கி நாட்டின் வழியாகச் செல்வானுயினுன். அச் சமயத்திலே அங்கே மோகனுதியர்க்கும் அவர் பத்தினியர்க்கும் இடந் துடிப்பதாயிற்று. அதுநிற்க, அங்ஙனம் போவானுகிய விவேகன் நாடுகளை யெல்லாந் தாண்டி ராடாபுரத்தை யடுத்துச்சக்கர தீர்த்தக்கரையை அடைந்து அங்கே தனக்கும் படைகளுக்கும் பாசறைகளமைப்பித்து வைகுவானுயினுன். அடுத்தநாள் நியாயனை நோக்கி, 'இது தகும் இது தகாது என்னு முணர்வும் அஞ்சாமையு முடைய வீரன் நீ யன்றி வேறில்லை; ஆதலின், மோகன்பாற் றூது போதற்குரியை நீயே ஆக; இன்றே மோகன்பாற் சென்று எமது கருத்தை யவனுக்கு அஞ்சாதுணர்த்தி, அதற்கவன் பொருந்துவனேல், சிவ ஸ்தலம் விஷ்ணு ஸ்தலம் புண்ணிய நதி புண்ணிய வனம் முதலியவற்றையெல்லாம் நீங்கி, துருக்கர் பப்பரர் எயினர்

சோனகர் முதலிய கீழினத்தர் வசிக்கின்ற நாடுகளை யடைந்து, அங்கே தனதரசியலை நடாத்துமாறு சொல்வாயாக; அதற்கு உடன்படானேல், நாளை யுத்தபேரிகை முழங்குமென் றுணர்த்தி மீள்வாய்' என்றான். அவ்வாறே நியாயனும் அப் பணியைச் சிரமேற் றாங்கி மோகன் வசிக்கின்ற காசியை நோக்கி நடந்தான்.

சக்கர தீர்த்தச் சருக்கம் முற்றிற்று.

24. காமனாதியர் சருக்கம்

முன்னே காசியினின்றும் மோகனிடம் விடைபெற்றுப் போன தூதர் ஆங்காங்குச் சென்று காமனாதியர்க்கு நிருபங்களைக் கொடுக்க, அவரவரும் அவற்றைச் சிரத்திற் சூடி எடுத்து வாசித்து நிமிர்ந்தெழுந்து, இருள் பரந்ததோ, விடமெலாம் திரண்டெழுந்தவோ, கொடியவினைகள்யாவும் ஒரு புடை யடர்ந்தவோ, நோயெல்லாம் உருப்பெற் றெழுந்தனவோ என்று தவசிக ளெல்லோரும் மருண்டஞ்சுமாறு தத்தம் படையோடும் போய்க் காசியை யடைந்தார். பெரும்பாரத் தால் முடியயர்ந்தும் முதுகுளுக்கியும் முறையே வருந்திய ஆதிசேடனும் பூமிதேவியும் காமனாதியர் படை வரவைக் கண்ட மாத்திரத்தில், கொடிய பாவங்கள் யாவற்றையும் சுவடறத் தொலைக்கு மியல்பினதாகிய இக் காசியில் இக் கொடியர் வந்தமையால் இனி மீளாது மாள்வர் என்பதில் ஐயமில்லை, நந்துயரமும் நீங்கிவிடும் என்று களித்தார். அது நிற்க. மோகனிடம் தூதர் சென்று காமனாதியரும் மனைமக்களும் படைகளும் வந்தனர் என்று கூற, மோகன் அவரை இங்குவர விடுமின் என்றான். அவ்வாறே, காமனாதியரும் தத்தம் மனைமக்களோடு சபையிற் புக்கு அவன்றாளை வணங்கினார். அவரையெல்லாம் மோகன் முகமலர்ந் தாசிகூறி அவரவர்க்கு ஏற்க ஆசனமிடுவித்து இருத்தி, 'நீவிர் யாவரும் செவ்வே வாழ்கின்றீரா?' என்றான். அதற்குக் காமனாதியர், 'எம் மனக் கோயிலின் எழுந்திடையறாது விளங்குகின்ற நீ எம்மைவிட்

டகலினன்றோ எமது வாழ்வுக்குக் குறை வருவது' என்றார். நன்றென்றரசனும் மகிழ்ச்சி காட்ட, காமன் எழுந்து அரசனை வணங்கி, 'ஐயனே, உனது அவித்தியாபுரத்தை விட்டு இங்கு வந்து வசிப்பதும் எம்மையெல்லாம் வரவழைத்ததும் யாது பற்றியோ?' என்றான்.

அதுகேட்டங்கிருந்த அகங்காரன் நகைத்து, நன்றிருந்தது உன்வாசகம் என்று எழுந்து, மன்னவன் முன்னே கூசாமல் நின்று, நெஞ்சு கொதித்து, அங்கிருந்தாரை நோக்கி விளித்து, 'நமது பகைவராகிய விவேகன் படைவீரர் தங்கள் மெய்யுருவை மறைத்து வேற்றுருத் தாங்கி உங்கள் நகரங்கள்தோறும் வந்து புக்கிருந்தது அறியீர்போலும்! ஆங்கவர் முயற்சியால் உங்கள் நாட்டில் எக்காலுமில்லா தொழிந்து போய்க்கிடந்த தவம் தானம் ஓமம் செபம் முதலியன மீளவும் தலையெடுத்ததறியீர் போலும்! அச்செய்தியை யொற்றராலுணர்ந்த நமதரசன் தனது நகர்விட் டிங்கு வந்தது குறியீர் போலும்! வந்த பின்னர்ச் சூழ்ச்சிசெய்து மறைந்து, பகைத்தொழில் புரியும் பகைவரைப் பற்றி யடக்குமாறு கலியனைப் போக்கியது புலங்கொண்டிலீர் போலும்! அவ்வாறே சென்ற கலியன் யோகினியரா லடைந்த துன்பங்களை நுஞ்செவியி லிட்டார் யாருமிலர் போலும்! அப்பால் அப் பகைவர் வெளிப்பட்டு நிற்பது காணீர் போலும்! அதுகண்ட நமதரசன் ஏவலிற்சென்ற சாருவாகன் நாடெங்குஞ் சென்று பெண்கள் போகமே முத்தியாமன்றி மற்றில்லை யென்று போதித்துவந்ததுங் கேட்டிலீர்போலும்! உபநிடதையை விவேகனுக்கு மணம்பொருத்துமாறு சென்ற சிரத்தையைப் பிடித்து வரும் பொருட்டுப் புத்தன் கபாலி என்பாரோடு மிச்சாதிட்டி சென்றதும் வினவிலீர் போலும்! மானன் தருமனைப் பற்றி வருமாறு போனதும் அறியீர்போலும்! நன்றிருந்தது நுஞ்செய்தி! இவையெல்லாம் நிகழ்வுணராது மங்கையரோடு மலர்ச்சயனத்திலே துயில் கூர்ந்தீர்போலும்! நன்று! நன்று! நுங்காவல் மிகச்சிறந்தது!' என்று கூறினன்.

இங்ஙனம் அகங்காரன் கூறியவற்றைக் கேட்ட காமன் முடிதுளக்கி நகையாடி, அச் சபையில் எழுந்து, 'ஓ நந் துணைவரே! நம்பகைவர் உருமாறி நமது நாட்டிற் பிரவேசித்தனராம்; உபதேசித்தனராம்; உபதேச மொழியைக் கைக்கொண்டு சிலர் நடக்கின்றனராம்; அஃதுணர்ந்தே அரசனார் இங்கு வந்தனராம்; யான் சித்தசனாகவும் எனக்கறிதற் கரியனவு முளவாம். இவற்றைக் கலியனார் கண்டறிந்தனராம். யோகினியாரது வலிமையைக் கண்டனராம். அவருக்கஞ்சி மைத்துனனார் அரசனை யடுத்தனராம். பெண்கள் சகத்தை அநேகர் துறந்துவிட்டனராம். ஆ! ஆ! பேராச்சரியமே! வெந்த பருப்பு முளைத்துக் காய்த்த கதைபோ லிருக்கின்றதே! நம்மோடு எதிர்க்கும் ஆற்றலின்றிப் பெண்களைச் சரணடைந்து ஓடி மறைந்து திரிவாரோடு சமர்செய்யப் புகுவார் யாவர்? புகினும் அஃதாண்மையாமா? உபநிட்டைபாற் றூதாகச் சென்ற சிரத்தையைப் பற்றி வருமாறு மிச்சாதிட்டியைப் போக்கியதோ டமையாது புத்தனையுஞ் சமணனையும் உடன்போக்கியது அறுபது கலசத்தை எழுபது குலாலர் ஒருவர்க்கொன்றாகக் கணித்துத் தூக்கப் புக்கதுபோ லாயிற்றே! பகைவர் மீறி வந்து ஓங்குகினும் அவரை யடக்குமாறு என் போல்வா னொருவனை யழைத்து, இது செய்யவென்று ஏவித் தனது நகரிலிருந்து அரசாள்வதை விட்டு இங்கு வந்தது அரசனுக்கு அழகாகுமா? இவ் வகங்காரனார் தமது நாட்டை விட்டு இங்கு வந்து அரசனுக் குறவு பாராட்டி மற்றெவரினும் தாமே விவேகியென மதித்து, இது தகும் இது தகா தென்பதின்றி இத்துணைச் சிறந்த புத்திகூறியது வியக்கற் பாலதே! இதைவிட இனி வேண்டப்படுவதியாது?' என்று சொல்லி எதிர் நகைத்துச் சினந்தான். அது கண்ட அரசன், 'சிங்கேறுபோலும் உனது வலிவெளிப்படின் எதிர்நிற்றற் குரியவர் யாவர்? அகங்காரன் கூறியது இயல்பேயாகும்; ஆதலின், அதனைப் பொருட்படுத்தலாகாது' என்று காமனைத் தணிவித்துத் தானு மிவை சில சொல்வானாயினான்.

'ஏ! காமா! பெண்டிரைத் துணையாகக் கொண்டு போர் கடக்கமுயல்வாரோடு போர்புரிய முயல்வார் வீரமன்றான்

றனையே! முற்காலத்தில் மகிடாசுரனையும் தாருகாசுரனையுங் கொன்று வெற்றியடைந்தவர் பெண்டிரன்றோ? சிவபக்தி ஹரிபக்தி யென்னும் யோகினிகளுடைய கிருபையுண்டானால் தோள்வலி யில்லாராயினும் பகைவரது போர்க் களத்தில் சிங்க ஏறுபோலச் சிறப்படைந்து நிற்க மாட்டாரா? ஆகலால், நமது பகைவர் அந்தப் பத்திமாதரது கிருபையை ஒருங்கே பெறுவதற்கு முன்பே யாமெல்லாம் திரண்டு சென்று அவரை வெல்லமாட்டோமாயின் பிறகு முடிப்பது கஷ்டமல்லவா? அது பற்றியும் இந்தக் காசிநகர் யாவர்க்கும் நற்பதவியைக் கொடுப்பதாகலாலுமே நான் பகைவரது செல்லுகை இங்கே பொருந்தாவண்ணமே வந்து நம் மனைவியரையும் இங்கே வரும்படி கட்டளை யிட்டதாகும். சிரத்தையைப் பிடிக்கச் சென்ற மிச்சா திட்டி, காபாலி, புத்தன், சமணன் என்பவர்கள் இன்னும் வாராமல் தாமதிப்பதற்குக் காரணமும் யாதோ அறியோம். தருமனைப் பிடித்து வரப் போனவன் செய்தியும் உணர்ந்திலேம். இடம்பன குமாரன் அசத்தியன் சிரத்தை சமஞநியர் கையில் அகப்பட்டானென்று சொன்னதை நம்பக்கூடுமா? அவன் சொல்லை யார் நம்புவார்? முன்னே நம் கலியனை வாட்டிய யோகினியர் கையில் அகப்பட்டாரோ என்னவோ அறியோம்' என்று கூறிச் சிந்தாகுலங் கொள்வானாயினன்.

இந்தச் சமயத்தில், அங்கே காபாலி தன் தெய்வமாகிய பைரவி மீண்டு வரத் தாமதித்தது கண்டு சமணனை நோக்கி, சோதிடத்திலாராய்ந்து என் தாய்க்கு உற்றதைக் கூறுகவென்று வேண்ட, அவனும் சோதிட நூலைக்கொண்டு ஆராய்ந்து நடந்ததைச் சொன்னான். அதுகேட்ட காபாலி உள்ளம் பதறி அறிவு குன்றி வாடி விழுந்து மீண்டெழுந்து, என் தெய்வமானவள் இப்படி மடிந்தாளென்றால் அந்த யோகினிகளுடைய அன்பு பூண்ட பகைவரை யாவர் வெல்வாரென்று அதிசயித்து, இனி இங்கிருக்க லாகாதென்றெழுந்து யாவரோடுஞ் சென்று காசியை யடைந்தான். அங்கே சூரியனுக்கெதிர்ப்பட்ட சந்திரன்போல முகப்பொலி விழந்து நின்ற

காபாலி, மிச்சா திட்டி, சமணன், புத்தன் என்பவர்களைக்
கண்ட கிங்கரர் அரசனிடத்தே சென்று அவர் வரவை யறி
விக்க, அரசன் அநுமதிகொண்டு அவரும் அவன் சமுகஞ்
சார்ந்து அவன் பாதங்களை வணங்கிநின்று, நடந்த செய்தி
யையும் தாமடைந்த துன்பத்தையும் சொன்னார்கள். அவற்
றைக் கேட்ட மோகன் மனம் பதறிக் காபாலியை நோக்கி,
வயிரவியைப் போக்கினது உண்மைதானோ என்று கேட்க,
அவனும், 'ஐயனே! அவள் போனதும் அநுமனால் இலங்கை
மாகாளி மடிந்ததுபோல மடிந்ததும் உண்மைதான்' என்றான்.
அது கேட்ட மோகனும் மற்றையவரும் ஜீவநாதாரமாயிரு
ந்த கைப்பொருளைப் பறிகொடுத்தவர் போலத் துயர மதிகரி
த்துக் கலங்கினார்கள். அப்போது சேநாதிபதிகளுக் கெல்லாம்
முதன்மை யடைந்திருக்கிற காமன் எழுந்து மோகன் முக
த்தை நோக்கி, 'ஐயனே, அற்பகாரியத்தின் பொருட்டு நீ
வருந்துதல் அழகல்ல. வாயுவின் வலியாலே பூர்வகாலத்தில்
மேருமலையானது தன் ஆயிரமுடியில் ஒன்றை யிழந்த துண்
டாயினும் தன் வலியை யிழந்து அவ் வாயுவை வணங்கின
துண்டோ? அதுபோல, நம்து காபாலியால் ஏவப்பட்ட வயி
ரவி மாண்டதனால் நமது வலியெல்லாம் ஒருமிக்கப் போய்
விட்டதோ? அடியேன் வலி ஒருபுறமிருக்க, அண்டாண்டத்
தையும் ஒருங்கே வெல்லவல்ல கலகனும் கோபனும் இருக்க,
அகங்காரனும் உலோபனும் இருக்க, மதன் மானன் சங்கற்பன்
என்னும் மூவருமிருக்க, மேலும் மச்சரன் முதலானோரு மிரு
க்க, இன்னும் உன் பணியைச் சிரமேற் சூடி நச்சரவம் பாய்
ந்து செல்வதுபோற் சென்று பிரமாதியரையும் பிடித்துப்
பித்தராக்கி மீள்வல்ல சதுரரும் உன்னைச் சூழ்ந்துநிற்க,
ஐயனே! உன்னை வெல்ல வல்லவர் உலகில்யார்? இருளெல்லாம்
திரண்டு ஒரு கடலுருவாய் வந்தாற்போன்ற நமது சேனையில்
ஒவ்வொருவனே திரிலோகங்களையும் வெல்லமாட்டானோ? அது
நிற்க, ராஜாதிராஜனே! எனக்காயினும் விடைதருவாயாக, சிர
த்தை போய்ச் சேர்வதற்கு முன்பே நான்போய் உபநிடதை
யை மணம் புணரவொட்டாமல் விவேகனைத் தடுத்து, அவன்

மீதுள்ள ஹரிபக்தி சிவபக்தி என்னும் யோகியாது கிருபை யையும் விலக்கி, அவனைச் சிற்றின்ப வாழ்விற் புகுத்தி ஒரு நொடியில் மீள்வேன்' என்றான்.

அதுகேட்ட மோகன் நன்றென்று கூறி, சிறுபடைத் துணைகொண்டு செல்வாயாகவென்று அவனுடனே அனுப் பும்படி சில படைத்தலைவரை யழைக்க நினைத்தான். நினை த்தபோது அவன் சபையில் ஒரு ஒற்றன் வந்து வெளிப் பட்டு, 'ஐயனே, விவேகராஜன் உபநிடதையை மணமுடித் துக் கொண்டு பெரியசேனைகளுடன் ராடாபுரத்தைவந் தடுத் தான்' என்று கூறினன். அந்தச் சொல்லைக் கேட்ட மோகனு திய ரெல்லோரும் இடிமேலிடியிடிக்கக் கேட்ட பாம்புக் கூட் டம்போ லாயினர். அவருள்ளும் மிகவும் பயந்து மனமயர்ந்த மோகன் அங்கிருந்தவரை யெல்லாம் நோக்கி, ஒவ்வொருவ ராக எனக்கு விடைதரக் கடவீரென்று கட்டளையிட்டு, 'விவேக னுதியரிடத்தில் அருள் செய்து நிற்கிற ஹரிசிவ பக்திகளா கிய யோகினிகளை விலக்கினேமல்லேம்; சிரத்தை நாதமென்ற காலத்திலாயினும் அவளைப் போய்ப் பிடித்து வந்தேமில்லை; அப்பால் விவேகனை மணம் புரிய வொட்டாமல் தடுக்காமலு மிருந்துவிட்டோம்; இவையாவையும் இதுவரைக்கும் நோக் காதிருந்த நாம் இனி முயற்சி செய்தால் உண்டாகும் பயன் யாது? இனி முயற்சி செய்தோமாயினும், தடங்கரையை யுடைத்துப் பரவிப் பாய்கின்ற ஏரிக்குக் கரைகோலுவதை நிகர்க்குமேயன்றி வேறென்ன பயனைத்தரும்? விவேகனுதி யர் செய்த முயற்சியெல்லாம் முடிவுறப் பெருகின; நமது முயற்சியோ பரந்தவெள்ளம் 'வடிவது போலாயிற்றே' என் றிரங்கி யுரைத்தான். அப்போது காமன் எழுந்து அரசனை வணங்கி, 'அரசரேறே, யாதுக்குத் தளர்கின்றீர்? விவேகன் உபநிடதையை மணம்புரிந்து கொண்டமையால் பேராண் மையனுகி விட்டானே? அவன் என் புஷ்பபாணத்துக்கு எதிர்நிற்கவும்வல்லனே? மழைக்குக் குடைபிடித்துப் பிழைத் தவர் இடிக்கும் குடைபிடித்துப் பிழைத்தல் கூடுமோ? விவே கன் புரிந்த மணம் என் யோகனுஸ்திரத்துக்கு என் செய்

யுமோ? காடு பசுமையுடைய தாயினும் அதிலுள்ளவற்றின் தளிரில் நெருப்புப் பற்றுமாயின் அந்த நெருப்பானது அந்தக் காடு முழுமையும் எரிக்காமல் விடுமோ?' என்று கூறினான். அந்தச் சொற்களைக் கேட்ட மோகன், 'நன்று கூறினை! நமக்கெதிர் நிற்க மாட்டாமல் ஓடிக் காட்டை யடைந்த விவேகனுதியர் இன்று நம் மூர்ப்புறத்தினை யடைந்தன ரென்றால் இனி நாம் பேசவேண்டுவதென்ன? இன்னும் நமக்கொரு வீரமும் அதை நாம் கேட்பது முளவோ? ஆயினும், இனிச் சும்மா விருப்பது தகாது, தகுந்தபடி செய்வதே கடன்' என்று கூறி, இடம்பனை யழைத்து, 'நீ உன் துணைவரோடு இவ்வூரெங்குஞ் சென்று விஷம்போலப் பரவி விவேகனுதியரது படையைச் சூழ்ந்து அவர்கள் வெளிப்படாதபடி காக்கக் கடவை' என்று அவனுக்குக் கட்டளை யிட்டான். அவன் போன பிறகு அநாசாரனை யழைத்து, 'நீ கங்காதீரத்திற் சென்று விவேகனுதியர் அத் துறைகளிலே படாவண்ணம் அவற்றைப் போய்க் காத்திருக்கக் கடவை' என்றான். அப்பால் அவமானனைக் கூவி, 'நீ காசி தேசத்துக்கு அப்பாற் சென்று விவேகனுதியரது துணைவர் காட்டைவிட்டு வெளிப்படாதபடி அவர்கள் வரும் வழிகளைக் காவல் செய்வாயாக' என்று கட்டளையிட்டான்.

காமனுதியர் சருக்கம் முற்றிற்று.

---

25. நியாயன் தூதுச் சருக்கம்

இவ்வாறு மோகன் இன்னுஞ் சிலரை அங்கங்கே சென்று வழிகளைக் காக்கும்படி யேவினபிறகு, மேலே செய்யத்தக்கது யாதென்று மந்திரிகளோடு ஆலோசிப்பானாயினன். அப்போது முன்னே விவேகனுதியரால் அனுப்பப்பட்டு வழிக்கொண்ட தூதனாகிய நியாயன் மோகனது நகரையடையக் கண்ட வாயிற்காவலர் மோகனிடஞ் சென்று, 'நியாயனென்பவ னொருவன் மிகுந்த கோபத்தோடு நாகத்தின் மேற் பாய்கின்ற கருடன்போலப் பகைக்கஞ்சாமல் இன்று

நம் கடைவாசலில் வந்தான்' என்று வணங்கிக் கூறினர். அது கேட்ட மோகன் நன்றென்று தலையசைத்து அவனைப்போ யழைத்து வாருங்களென்றான்.

அவ்வாறே வாயிற் காவலரும் விரைவிற்போய் நியாய னுக்குச்சொல்ல, அவனும் அஞ்சாமல் மோகன் முன்னே சென்று அவனைக் கைகுவித்து வணங்க, அவனும் எதிர்வணக் கஞ்செய்து ஏவலரால் ஆசனமொன்றிடுவித்துத் தனக்கெதிரே யிருத்தினான். இருத்தி நீ யிங்கே வந்ததற்குக் காரணம் யா தென்று வினவ, நியாயன் அவனை நோக்கி, 'ஐயனே! உனக் கஞ்சிக் காட்டில் வசித்த உன் தம்பியர் யாவரும் தீதின்றி இந்த நகர்ப்புறத்தை யடைந்தார்கள், உன் தம்பியாகிய விவே கன் சொன்னவற்றை உனக்குச் சொல்லவந்த தூதுவன் யான்' என்றான். அதுகேட்ட மோகன் அவற்றைச் சொல்லிக் கட வாயென்ன, அவனும்,'ஐயா! கேள்.மாநதன் இவ்வுலகமுழுதும் உனக்குக் கொடுத்துக் குற்றமற்ற எமது மூதாதையைச் சிறை யிட்டகாலத்தில் சிறிதும் இரக்கமில்லாமல் நமது வேந்தனைக் காட்டுக்கு ஓட்டி அவனை அங்கே சரீரம்வாடி அலையும்படிசெய் தாய். அவனை அப்படிச் செய்ததுமன்றி அவன் தாயாகிய நிவி ர்த்தியையும் மற்றவுறவினரோடு குலையும்படி தாக்கி அவர்களு க்கு அளவற்ற பிழைகளைச்செய்தும் இன்னமும் செய்து கொண்டிருக்கிற உன்போல இரக்கமில்லாதவர் யாவர்? அது நிற்க. உன்னால் அளவற்ற துன்பங்களை விவேகன் அடைந்தா னாயினும் பக்திமாதாது கருணையால் உபநிடதையை மணம் புரிந்து தன் துணைவரோடும் வெல்லுதற்கரிய படைவீர ரோடும் இன்று இந் நகர்ப்புறத்து வந்தடைந்தான். அப்படி வந்த விவேகன் அறிஞரால் புகழப்படுகின்ற அருமபெருந் தரும சீலனாதலால் இன்னும் உன்மீது கருணை யுள்ளவனாய், நீ செய்த பிழைகளுக்கு மாறு செய்யக் கருதாமல் என்னை உன்னிடத்துக்கு அனுப்பினான் என்றறியக்கடவை. இது வரைக்கும் இவ்வுலகமுழுதும் உன்னதென்று கட்டி அரசு செய்த செல்வத்தை இனி நீ விட்டு நீங்கி உயிர் பிழைக்க

வேண்டி உன் துணைவரோடும் விவேகனது அருட்பணியைச் சிரசாவகித்து, கானகவேடரும் கள்வரும் கடற்கரை வலையரும் சோனகரும் துருக்கரும் பப்பரரும் சாதியினரும் ஆகிய இவர்கள் வாழ்கின்ற இடங்களை நாடிச் சென்று அங்கே வசிக்கக் கடவை.

'தம்பியர்க்குத் தசரத ராமனும் வீடுமனும் தமக்குரிய அரசை மனம் பொருந்திக் கொடுத்ததை அறிவாயல்லவா? ஆதலால் நீயும் உன் தம்பியின் அரசுரிமையைக் கொடுத்தல் முறைமையாகும். அப்படிச்செய்வாயானால் எந்நாளும் உன்னை அவனுக்கு மூத்தோனென்று உலகத்தார் புகழ உன் பரிவாரத்தோடு நீயும் உன் மனை மக்களும் இவ்வுலகில் வாழ்ந்திருக்கலாம். அப்படிச் செய்யாமல் மறுப்பாயானால் அங்கதன் ராம தூதனாய்ச் சென்று கேட்க மறுத்த ராவணன்போலவும், கிருஷ்ணன் பாண்டவர் தூதனாய்ச் சென்று கேட்க உடன்படாத துரியோதனன் போலவும் உறவினரோடு நசிப்பது உண்மை' யென்றான். அதுகேட்ட மோகன் நகைத்துத் தலையசைத்து மிகவும் நன்று நன்றென்று கூறி, நியாயனை நோக்கி, 'என் தந்தை "உனக்கே முடிசூட்டி விவேகனைக் காட்டுக்கு ஓட்டினன்" என்று சொல்லாநின்ற நீயே என்னை நோக்கி "உன் தம்பிக்கு அரசாட்சியைக் கொடு" வென்று கேட்பாயாயின் உன்னையார் நியாயனென்று சொல்லுவது? நன்று சொன்னாய்! என் தந்தை "விவேகன் முதலியோரை ஒரு கணமேனும் தரிக்க இடங் கொடாமல் ஓட்டிவிடக் கடவா" யென்று எனக்குச் சொன்ன சொல்லைக்கேட்டும் சிறிது கருணை வைத்து அவரைக் காட்டுக்குப் போகவிடுத்த என்னிடத்தில் மீண்டு வந்து தன்னுரிமை கேட்கத் தூதுவிடுத்த விவேகனோ நீயோ உம்மில் யாவர் துணிந்தவர்? கலியன் முதலானோர்க்குத் தப்பினார்களென்றும், உபநிடதத்தின் மணம் பெற்றார்களென்றும், அரசுரிமையைத் தம்பியர்க்குக் கொடுப்பாயென்றும் வலிமையும் வழக்கும் பேசவல்லவர் உன்னையன்றி வேறு யாருளர்? நன்று நன்று! என் தந்தை அவ் விவேகனையும் அவன் தாயையும் புத்

திரனும் பத்தினியும் அல்லரென்று துறந்துவிட்டா னென்றால் பிதுர்த் துரோகியாகிய அவ் விவேகன் எவ்வாறு எனக்குத் தம்பியாவன்? உன்னாற் சுட்டப்பட்ட ராமனும் வீடுமனும் அன்று தமது அரசுரிமையைத் தம்பியர்க்குக் கொடுத்தது தந்தையர் பொருட்டோ அன்றித் தம்பியர்க் கிரங்கியோ அதனைச் சிந்தித்தாயில்லை! இந்த நன்னாடெல்லாம் தனக்காகக் கட்டிக் கொள்வதற்கும், ஈனர் வசிக்கிற நாட்டை எனக்குக் கொடுத்தற்கும் விவேகன் செய்த ஆலோசனை நன்றாயிருக்கின்றது! இளையவனாதலால் அவன் பிழையை இன்னமும் பொறுத்து மீண்டும் அவனுக்குக் காட்டைக் கொடுப்பதேயன்றி இந்த நன்னீர்க்கழனி நாடுகளை நான் கனவிலும் அவனுக்குக்கொடுப்பதில்லை. பக்திமாதரது அருள் தனக்கு உண்டென்றும் உபநிடதையை மணம்புரிந்து கொண்டே னென்றும் செருக்கடைந்து இந்த நாட்டில் வந்து அவன் சொல்லிய வன்மையெல்லாம் நான் கோபித்தெழுந்தால் வேரோடு அழிந்து போகாவோ?' என்றான். அதுகேட்டுப் பக்கத்திலிருந்த குதர்க்கன் எழுந்து மோகனைப் பார்த்து, 'பிரமாதி தேவரும் உன் வலியால் தவநிலை யழிந்தனரென்றால் உனக்கு எதிர் நிற்க வல்லவன் சிறியவனாகிய விவேகனோ?' என்று கூறி நகைத்தான். பின்னும் அவன் நியாயனை நோக்கி, 'நீதித்தலைவனே! பிணை யாளென்று தன் கலைமானுக்குக் கொம்பு முளைத் தோங்கினதைக் கண்டு புலிக்கெதிரே சென்று "இவ்வனமுழுவதும் நமது கலைக்குக் கொடுத்து நீ காட்டைவிட்டு நீங்கக்கடவை" என்று கூறியதுபோல நீயும் இங்கே வந்து சில புன் சொற்களைச் சொன்னாய்' என்று கடுத்துக் கூறினான். அவன் அப்படிக் கூறி முடித்தலும் உலோபனெழுந்து மோகவேந்தன் முகத்தை நோக்கி, 'பூலோகத்தில் ஒரு எள்ளளவிடமும் விவேகனாதியருக்குக் கொடுக்க நினைப்பாயாயின் உன் தந்தையாகிய மானதனுக்குப் பகையாகி அவனால் நீ நீக்கப்படுவா யென்பதற்குச் சந்தேகமில்லை. முடிவில் அவனும் புத்திரசோகத்தால் மாள்வதற்கும் சந்தேக மில்லை' என்று கூறினான். இப்படிப் பலவாறு கூறிநிற்குஞ் சமயத்தில், அக்கிரமன் அதர்மனோடு

மோகன் முன்னேவந்து வணங்கி நின்று, 'ஐயனே! ஒரு எலி யானது அஞ்சாமல் பாம்பின் கூட்டத்திற் புகுந்தாற்போல இங்கு வந்து உரிமைகேட்ட இந்த நியாயன் என்னும் பித்தனைப் பிடித்து விலங்குபூட்டிச் சிறைப்படுத்தாமல் இத்தனை பேரும் காலதாமசம் பண்ணுதற்குக் காரணமின்னதென்றறியேன்' என்றான். அவனுக்கிணங்க அதர்மனும் அரசனைப்பார்த்து, 'இந்த நியாயனை எப்படிச் செய்தாலும் தகும்' என்றான். இவற்றைக் கேட்ட நியாயன் அங்குள்ளாரெல்லோரையும் நோக்கி, இங்கே என்னைக் கைப்பற்றவல்ல வீரரும் உளரோவென்று கைகொட்டி நகைத்து, அதர்மனை நோக்கி, 'என்னைப் பிடிப்பதற்கு நீங்கள் ஒவ்வொருவராய் வருகிறீர்களா? அன்றி எல்லீரும் ஒருங்கே திரண்டு வருகின்றீர்களா? வாருங்கள், ஒரு நொடியிலே உங்களையெல்லாம் யமபுரத்திற் சேர்க்கின்றேன்' என்றான். அதுகேட்டுக் கோபன் மனங்கொதிக்க, வாய்துடிக்க, மீசைநிமிர, உயிர்பொங்க, கண்கள் தீப்பொறி சிந்த எழுந்து, நியாயன் உயிரை ஒரு நொடியில் உண்பேனென்று மோகனை நோக்கி, 'பக்திமாதாது அருளுண்டென்று தருக்கிக்குதிக்கின்ற இந்தத் தூதனைக் கொல்லுதற்கு இந்த அங்கிரமன் ஒருவனே போதும். ஆயினும் தூதரைக் கொல்லுதல் தகாதென்று பெரியோர் கூறினராதலால், இவன் உயிர் பிழைத்தான்' என்று கூறி, நியாயனைப்பார்த்துச் சினந்து இந்தச் சபையைவிட்டு அப்பாற்போவென்றான். அவன் சொன்னவுடனே நியாயனும் எழுந்து எமது வல்லமையை நாளையறிவீரென்று கூறி மீண்டுபோய் விவேகனிடஞ் சார்ந்தான். அவன் போனபிறகு உலோபன் அரசனைநோக்கி, 'இந்தச்சபையில்வந்து நம்மையெல்லாம்மதியாது தருக்கிநின்ற தூதனைப்பற்றிச் சிறையிடத் துணிந்து எழுந்தவர் நம்மில் ஒருவரையுங் கண்டிலேம் என்றால், இனி விவேகன் போருக்கு வருங் காலத்தில் அவனோடு போர்செய்யத் துணிவோர் யாவரோ?' வென்றான். அப்பால் மானன் என்பவனெழுந்து அரசனை நோக்கி, 'துரியோதனனிடத்திலே ஐவர் தூதுவிட்டுப் பெற்றது யாதேனுமுண்டோ? ஆதலால், பிறகு பகைவர்

நம்மை வெல்வது நிச்சயமாயினும் ஆகட்டும்; அவருக்கு நாம் இடங்கொடுத்தல் அழகல்ல' என்றான்.

நியாயன் தூதுச்சருக்கம் முற்றிற்று.

---

26. காமனுதியர் விராலாபச் சருக்கம்

அந்த மானன் என்பவன் இம்மொழிகளைக் கூற, அங்கிருந்த மோகவேந்தன் தனக்கருகே நின்ற காமனுதியரை நோக்கி, 'பகைவர் வலிமையையும் அவர் முயற்சியையும் அழிக்கும்படியான உபாயம் இன்னதென்று உங்கள் மனத்தில் ஆராய்ந்து சொல்லுங்கள்' என்றான். அதுகேட்ட காமன் அந்த மோகவேந்தனை அடிபணிந்து, 'நமக்குமுன்னே நம் பகைவர் வலி நிற்குமோ, பல மின்னல்கள் மின்னினாலும் அந்த மின்னலொளிக்குக் காடாந்தகாரம் அஞ்சுமோ?' என்றான்.

'மேலும், அழகிய மாதர்மீது ஆடவர்க்கு ஆசையுண்டாக்குவதே என் வடிவாகி, அவரவர் மனங்களிற் றோன்றி, அவர்களுக்குத் துன்பத்தை யுண்டாக்குகிற என்னாலும், என் மனைவியாகிய இரதியாலும், என் சின்னங்களாகிய குயில் முதலானவைகளாலும் மோகமடைந்து சிற்றின்பமாகிய வலையி லகப்படாதவர் எவ்வுலகத்திலு மில்லை. உருவமில்லாத பிரமப் பொருளொன்று நீங்கலாக, உருவமுள்ள எந்தத் தேவர்களாயினும் என் கையிலுள்ள ஒரு புஷ்ப பாணத்தால் தமது அறிவு முழுதும் நீங்கி, உன்மத்தராகிப் பித்தேறப் பெற்று, இன்சொற் சொல்லி, உடைதயிர்போல மனஞ் சுழன்று, செயல் மறந்து, அந்தப் பேதையரினும் பேதையராய்த் திரிந்து, அவர்க்குப் பின்னே செல்லுவார்கள். கடல் சூழ்ந்த இவ்வுலகத்தில் என்னை வெல்லுவோர் யாவர்? ஒருவருமில்லை. திரிமூர்த்திகளும் என் புஷ்ப பாணத்துக்கு ஆற்றாதவர்களாய் உலையிலிட்ட மெழுகுபோ லுருகி ஒருவன் வெள்ளி மலைமேலேறிக்கொண்டான்; ஒருவன் கடலிற்சென் றொளித்துக்கொ

ண்டான்; வேறொருவன் சந்தியலோகத்தி லேறிக்கொண்டான்; இம்மூவரும் இவ்வாறுசென் றொளித்தாலும் அந்த மலை முதலாகிய இடங்களிலும் என் புஷ்ப பாணம்போய் அவர்களை வருத்தாமல் விடாது. பிரமன் முகம் வெளுத்ததும், திருமால் மார்பு சிவந்ததும், சிவன் பாதியுடல் கறுத்ததும், இந்திரன் முகத்து இருகண் பற்றாமல் உடம்பில் ஆயிரங்கண் பெற்றதும் எதனாலே? என் பாணத்தாலன்றோ? என் பாணத்துக்கு லக்ஷ்யமாகாதவர் யாவர்? ஒருவருமில்லை. வேத முதலாகிய அறுபத்துநாலு கலைகளும் சரசுவதியானவள் அதிசயித்துக் கேட்கும்படி ஓதி யுணர்ந்தும் பிறருக்குச் சொல்லியும் உயர்ந்த பெரியோர்களுக்கும் உண்டாயிருக்கிற விவேகமானது, மாதரது கண்களாகிய அம்பு பாயுமளவுமே நிற்பதன்றிப் பாய்ந்த பின்னும் நிற்பதுண்டோ? செவ்வல்லி மலர்போலும் வாயினையும் அதரத்தையு முடைய மாதராசையை யெவர் கடக்க வல்லார்? அந்த மாதர் கண் பார்வையால் எவர் மன முருகாதவர்? இவ்வுலகத்தில் என் பேருள்ளவும் மாயமாகிய இரவைக் கடந்து ஞானக்கண்ணை விழித்து நோக்குவோர் யாவர்? மாதர் கண் பார்வையைக் கடந்தவர் போலச் சபையில் வந்து விரக்தி வார்த்தைகள் பேசுவோர் யாவரும் அந்த மாதரைத் தமது மனத்தினின்றும் நீக்கினவரில்லை. ஒரு நெருப்புக் கணையால் சதுரங்க சேனைகளும் பஞ்சுபோல நீறாவது காண்கிறோமல்லவா? அதுபோல எப்படிப்பட்ட மஹாவீரரும் என் பூங்கணை யத்தினால் மாய்வார்கள். அக்கினிதேவியை அன்று யமனுண்டதும், சந்திரன் தன் குரு பத்னீ கமநம் செய்ததும், இந்திரன் மகனுக்கு இரண்டு கண்களும் ஒன்றானதும், பஞ்சபாண்டவர் ஒரு மனைவியை மணந்ததும், சூரியன் ஒரு கன்னிகையைப் புணர்ந்து கன்னனைப் பெற்றதும், வருணனும் சூரியனும் குடத்தினுள்ளே தம் வீரியத்தை விட்டதும், மேலும் கண்டோர் நகைக்கும்படியான இத்தொழில்களை யெல்லாம் எப்படிப்பட்டவரும் செய்து தாழ்வடைவதும் எனது ஆண்மையா லல்லவா? அன்றியும், என் மனைவியாகிய இரதியானவள் யாவர்க்கும் கலவியின்பத்

தை யுண்டாக்குவதை எவர் கடந்தேறுவார்? என் சின்னங்களாகிய எக்காள முதலிய ஐந்தும் ஆடவர் ஐம்புலன்களும் அடங்கிப்போதலால், எவ்வுலகத்தாரையும் வெல்லுதற்கு எனது சின்னங்களே யமையும். எனக்குதவியாயிருக்கிற வீணையும், மேடையும், சோலைகளும், நதிகளும், கலவைச் சந்தனமும், மணற் குன்றுகளும், பஞ்சவாசங்களும், மணமுள்ள மலர்களும் உள்ளளவும் அறிவுள்ளவரென்று சொல்லப்படுவோர் யாவர்? முற்காலத்தில் திருமாலானவர் விருந்தையென்னும் பெண்ணை விரும்பிப் புணரச்செய்ததனும் என் புதல்வனுகிய விஷயாநந்தனல்லவா?' என்று இவ்வாறு காமன் தன் பிரதாபங்களையெல்லாம் சொல்லும்பொழுதில், கோபன் என்பவன் எழுந்துபோய் மோக வேந்தனுக்கெதிரே நின்று, இனி என் பராக்கிரமத்தைக் கேட்கக்கடவாயென்று சொல்வானுயினன்: 'மனத்திலுண்டாகிற விருப்பமானது பலிக்காமல் தடைப்பட்டால் எழுகின்ற கோபமே யுருவாகப் பெற்ற என்னையும், என் மனைவியாகிய கொலையையும், என் மகனுகிய கலகனையும் வெல்லுவோர் யாவர்? கங்காதரனுகிய சிவபெருமானது நியமத்தை நிலையழியச்செய்ததும், என் தேவியாகிய கொலையைக்கொண்டு இந்தக் காமனது உடம்பை நீறாக்குவித்ததும் அறியாதவர் யாவர்? துடிதுடித்துக் கண்கள் நெருப்புப்போலச் சிவந்து, படபடத்த சொற்களையுடையவராய் உடல் பதைத்து, மனங்கொதித்து எழுகின்ற கோபக் கொதிப்பைப் பொறுப்பவர் எவ்வுலகத்திலுமில்லை. தெளிவழியவும், கலைத்தேர்ச்சியழியவும், மனவிரக்க மழியவும் மிகவும் வருத்தி, அறிவுடையாரையும் குருடராகவும் செவிடராகவும் கொடியராகவும் செய்து பிறரால் இகழச்செய்வேன். பரிசுத்தமாகிய மனமும், தரும மார்க்க நிச்சயமும் உளவாயினும், கொடிய கோபமுண்டானுல் கற்றறிந்தோர்களும் தாய் தந்தையர், மூத்தோர், நண்பினர் என்றெண்ண விசையுமோ? கோபம் எனப்படுகிற கொடியேன் உண்டானுல் யார் தான் நிலைகெடாதவர்? நிவாத தீபம்போ லசைவற நிற்கும் மனத்தையுடைய தபோதனர்களும் கோபம் உண்டானபோது அயலார் பதை பதைக்

கச் சாபங்கொடுத்துத் தாம் வருந்திச்செய்த தவத்தையும் இழந்துவிடுவார்கள். வசிட்டன் மக்களை விசுவாமித்திரன் வேடராகும்படி சபிக்கச்செய்து, சகரன் மக்களைக் கபில முனிவரைக்கொண்டு உயிர் வாங்கினவளும் என் மனைவியாகிய கொலைமாதல்லவா? மேலும், சிவனிடத்திலடைந்து அவனைக் கொண்டே முப்புரத்தை யெரிப்பித்ததும், யானையை உரிப்பித்ததும், இராவணனுடைய உடலை நெரிப்பித்ததும், பிரமனை ஒரு சிரங் கொய்வித்ததும் அறியாதவர் யாவர்? திருமாலால் இரணியனைக் குடர்பறித்து, இராக்கதரைக் கொன்று, இராவணனை முடிதகர்த்துத் துன்புறுத்தினதும் என் மனைவியாகிய கொலைமாது தானே. க்ஷத்திரியருக்குப் பகைவனாகிய பரசுராமனைக்கொண்டு அவன் தாயாகிய ரேணுகாதேவியைக் கொல்லுவித்ததும், இந்திரனைக்கொண்டு விசுவரூபன் என்னுங் குருவைக் கொல்லுவித்ததும் அந்தக் கொலைமாதின் கொள்கையேயாம். ஆதலால், பொறுமையும் விவேகனும் இசைந்து வாழ்கின்ற இடமும் வெந்தொழியும்படி யெரித்து, மோகனையன்றி எவ்விடத்தும் வேறொருவரில்லை யென்னும்படி பறையறைவிப்பேன்' என்று படபடத்துச் சொல்லினான்.

இவ்வாறு கோபன் சொல்லி முடித்தவுடனே மோக வேந்தன் மனமகிழ்ந்து, தான் நினைத்த காரியத்தை முடித்தவன்போல நிற்குஞ் சமயத்தில் உலோபன் என்பவன் வந்து அரசனை வணங்கி, ஐயனே! என் சாமர்த்தியத்தையும் சற்றுக் கேட்கக் கடவையென்று சொல்லத் தொடங்கினான் :

'கிடைத்த பொருளைப் பற்றிக்கொண்டு ஒருவருக்கும் கொடாமையே உருவாகக் கொண்ட என் வெற்றியும், கிடைக்காத பொருள்மே லுண்டாகிற வாஞ்சையென்கிற என் மனைவியும் போர் செய்யத் தொடங்கினால், கற்றறிவுடையவரானாலும் எங்களை ஜெயிக்கமாட்டார்கள். நமக்குப் பகைவராகிய விவேகன் முதலானோரும் சுவர்க்க போகத்தை அநுபவிக்க நினைத்து விரத முதலியவற்றை யநுஷ்டித்து ஐம்புலன்களை

யும் ஒடுக்கி யாகாதிகளைச் செய்வதும் என் இச்சாரூபத்தின் தொழிலல்லவா? தேவகி புத்ரனாகிய ஸ்ரீ கிருஷ்ணன் பிரசே நன் என்னும் வேந்தனை யடுத்து சமந்தக மணியைத் தர வேண்டுமென்று கேட்டபோது அவ் வேந்தன் என்னிடத் தில் மணியில்லை நீ போவென்று சொல்லும்படி செய்தது யார்? முற்காலத்தில் ஸ்ரீ கிருஷ்ணன் பாண்டவர் தூதனாய்த் துரியோதன னிடத்துக்குப் போய் பாண்டவர்க்கு அரசு உரிமையைத் தரவேண்டுமென்று கேட்டபோது அந்தத் துரியோதனன் ஒரு எள்ளளவு மண்ணுங் கொடேன் என்று சொல்லச் செய்ததும் என் சொல்லல்லவா? பிரமனும் என் மனைவி யேவலாற் பிச்சைக்குப் புறப்பட்டான், சிவனும் பிச்சை யெடுத்தான், விஷ்ணுவும் மாவலியிடத்திற் சென்று மூவடி மண்ணை யாசித்தான். உலகத்திலுள்ள மனிதர் யாவ ரும் இரவும் பகலும் காடு மலை கடல் முதலிய இடங்களில் உழல்வதும் என் இச்சையின் தொழிலல்லவா? மதயானை யோடு எதிர்த்துப்போர்செய்வதும் கம்பத்தின் மேலேறியாடிப் பதும் பாம்பைப் பிடித்தாட்டுவதும் முதலாகிய தீத்தொழில் களைச் செய்வதும் என் மனைவி யேவலா லன்றோ? கஷ்டப்பட் டாயினும் வஞ்சனை செய்தாயினும் பொருள் சம்பாதித்து அதைக்கொண்டு மகிழ்ந்து இந்தப்பொருள் போதுமென்று திருப்தியடைந்திருப்பவர் இவ்வுலகத்தில் யாவருளர்? என் மனைவியான இச்சையானவள் பெருக்கமடைந்த காலத்தில் பரிசுத்தரான பெரியோரும் தமக்கினியவரிடத்தும் அருள் செய்யாதிருந்தற்குக் காரணம் யாவர்? அவளே யல்லவா? உல கத்திலுள்ள விறகையெல்லாம் உண்டும் பசியாறாத நெருப்புப் போல அண்ட பகிரண்டங்களை யெல்லாம் உட்கொண்டும் என் மனைவிக்குத் திருப்தி யுண்டாவதில்லை' என்றான்.

இந்தப்பிரகாரம் லோபன் சொல்லி முடித்தவுடனே, அவன் மகனாகிய இடம்பன் எழுந்து அரசனை வணங்கித் தன் வல்லமையைச் சொல்லத் தொடங்கினான்: 'மறுமைக் கொரு துணையாகிய நல்லொழுக்கத்தை முழுதும் மறந்து

பிறர் மதிக்கும் பொருட்டுச் செய்வதாகிய தொழில்களை யே உருவாகக் கொண்ட என்னை மறைக்க ஏற்பட்ட என் மனைவியாகிய வஞ்சனையை யார் வெல்ல வல்லார்? என் பேர் கொண்டவர்களுக்கு அவர் விரும்பின பொருளைக் கொடாத வர் யாவர்? முற்காலத்தில் தோலாடையைத் தரித்துவந்த சிவ னுக்கு விஷத்தைக் கொடுத்த பாற்கடலானது பொன்னு டையைத் தரித்துவந்த திருமாலுக்குக் கௌஸ்துப மணி யைக் கொடுத்தது. அன்றியும், இவ்வுலகத்தில் உள்ள மனித ராயினும் மேலுலகத்திலுள்ள தேவராயினும் என்னை யடை யாதவர் மதிப்பற்றவராய் அவிவேகியர் என்று சொல்லப்படு வார். வஞ்சனையும் நானும் கூடிப் போர்செய்தால், திருடனும் வசப்படுவான். அன்றியும், சுசிலனும் தனது ஆண்மையுடனே நெருப்புக்கெதிர்ப்பட்ட பஞ்சுபோல எரிந்து போகானோ? எனது ஆண்மையாகிய இது இருக்கட்டும், என் மகனாகிய அசத்தியனது மயக்கத்தைக் கடந்தவர் ஒருவருமில்லை. அக் காலத்தில், பதினாறுவயதே தன் ஆயுளெல்லையாகவுடைய மார்க்கண்டனைக் காக்கும் பொருட்டு யமனைக் கொன்று, தடு த்துக் கேட்டவர்க்குக் காலகாலனும் பொய் சொல்லினன். பிரமனும் தாழைமலரும் பொய் சொல்லி யல்லவா தமக்குப் பூசனை முதலிய இல்லாமற் போகப்பெற்றது? விவேக முதலி யவற்றை யழிக்கின்ற அந்த அசத்தியனாலே தருமபுத்திர னும் அக்காலத்தில் ஒரு பொய் சொன்னான். அப்படியிருக்க இந்தப் பூமியில் இக்காலத்தில் பொய் சொல்லாதவர் யாவர்?' என்றிவ்வாறு இடம்பன் சொல்லி முடித்தவுடனே மதன் என்பவன் எழுந்து வணங்கிநின்று சொல்லத் தொடங்கினான்:

'பெருஞ் செல்வத்தைக்கொண்டு மன மகிழ்வித்த உருவ மாகப் பெற்ற நானும் என் தேவியாகிய மறதியும் கூடினால் எங்களை வெல்லக் கருதிக் கொடிகட்டுவோர் ஒருவருமில்லை. நானும் ஐந்து தலைகளையுடையேன் என்கிற மதச்செருக்கா லன்றோ பிரமனும் சிவபெருமானால் நான்முகனானது? வச்சி ராயுதனாகிய இந்திரன், துர்வாசமுனிவர்கொடுத்த பூமாலையை

வாங்கி யெறிந்தது அவனேறின யானைமதமா, அவன் மதமா? ஆராய்ந்துபார்! அம்பருடைய மனத்தில் நிலைபெற்றிருந்து, பரிசுத்தருடைய சன்மார்க்கத்தையும் இகழ்விப்பேன். சேதி தேசத்தரசனாகிய சிசுபாலன் கிருஷ்ணனை வைததும், துரியோதனாதியர் இகழ்ந்ததும், இராவணன் நந்திதேவனை உதாசீனமாய்ப் பேசினதும், நகுடராஜன் சத்தருஷிகளை அவமதித்துப் பேசினதும், துந்துபி யென்பவன் திருமாலைப் போர் செய்ய அழைத்துக் கைலைமலையை யசைத்து வாலியோடு போர்செய்து மாண்டதும், பின்னும் அநேகமான அனர்த்தங்கள் நேரிடுதற்குக் காரணமாயிருப்பதும் நானல்லவா? என் மனைவியாகிய மறதியின் சிறப்பினை யெடுத்துச்சொல்ல வல்லவர் யாவர்? அறிவு, கல்வி, சத்தியம், அன்பு, உறவு, நட்பு, ஒழுக்கம் முதலானவைகள் மறதி வந்த காலத்தில் என்ன பயன் தரும்? பிரகலாதன் முற்காலத்தில் தன்னைக் காப்பாற்றினவனாகிய திருமாலோடு பிற்காலத்தில் போர் செய்ததும், சுக்கிரீவன் தனக்கு வாழ்வைக் கொடுத்த ஸ்ரீராமனிடத்திற் சொன்னபடியே செல்லாது தாமதித்ததும், மனமகிழ்ந்து கூடி நாளை உன்னிடத்துக்கு வருவேன் என்று சகுந்தலைக்குச் சொன்ன துஷ்யந்தன் அதனை மறந்திருந்ததும், அறிவுடையோராகிய அநேகரைக் கள் அவினி முதலியவற்றினும் அற்பர் செல்வத்தினும் கலந்திருந்து மயங்கி உன் வசத்திற் சேர்கிற எம்மை எதிர்த்து வெல்ல வல்லார் யாவர்?' என்று சொல்லி முடித்தான். மதன் இவ்வாறு சொன்னவுடனே மச்சரன் வந்து வேந்தனை வணங்கிச் சொல்லுகின்றான்:

'அந்நியர்க்கு உண்டாயிருக்கிற அறிவு அழகு செல்வம் முதலியவற்றைக் கண்டு சகியாமையாகிய உருவுடையேன் ஆகிய என்னையும், மனம் புழுங்கிக் கொண்டிருப்பதே உருவாகவுடைய என் மனைவியாகிய அருமையையும் வெல்ல வல்லவர் ஒருவருமில்லை. இராவணன் மூன்றரைக்கோடி வருடங்களை ஆயுளாகப் பெற்றிருந்தும் மாயனால் அது பொய்பட்டழிந்ததும், திலீபன் என்னும் வேந்தன் தொண்ணூற்றொன்

பது யாகங்கள் செய்து நூறாவது யாகஞ் செய்யும்போது
அவனது யாகப் புரவியை இந்திரன் கவர்ந்துகொண்டதும்,
கூனியாகிய மந்தரையின் சொல்லைக் கேட்டு ஸ்ரீராமனைத் தச
ரதன் காட்டுக்கனுப்பினதும், திருமால் மாவலியிடம் போய்
மூவடி மண்கேட்டு அவ் வேந்தன் கொடுக்கச் சம்மதித்து
தாரைவார்க்கும் சமயத்தில் சுக்கிரன் தடுத்ததும், ஆகிய
இவையாவும் நிகழ்ந்தது என் வலிமையாலன்றோ? எதிர்ப்பட்ட
வர்களைத் தாக்கித் துன்பப்படுத்துகிற அம்புகள்போல, அடு
த்தவர்களையெல்லாம் பித்தராக்கி மாய்விப்பேன். தேவர் மனி
தர் என்னும் இருதிறத்தாரும் அவரவர் செய்த புண்ணிய
பாபங்களால் அவற்றின் பயன்களாகிய சுக துக்கங்களை யநு
பவிக்கிறார்கள் என்று அமைந்திராமையாகிய பொறாமையை
ஒருவரும் வெல்லமாட்டார்கள். நானும் என் தேவியாகிய
அசூயையும் இவ்வுலகத்தாரையும் அவ்வுலகத்தாரையும் மன
மயங்கச்செய்து, உப்பிருந்த மட்பாண்டம் போல உட்கச்
செய்தால் சந்தோஷமென்பது எங்கேயிருக்கும்? பகைவனால்
உயிர் இழப்போமென்று நினையாமல், குற்றமுள்ள மனத்தை
யுடையவராய், விளக்கின் மேற்சென்று விழுந்தழியும் விட்
டில்போல, என் மகனாகிய வயிரனால் மடியாதவர் யாவர்? திரு
மாலானவர் நரசிங்க ரூபமெடுத்ததும், இரணியன் குடலைப்
பிடுங்கினதும், அசுரரும் தேவரும் என்றும் மாறாத பகை
கொண்டு போரிடுவதும், க்ஷத்ரிய சந்ததி முழுவதும் பற்றறக்
கொன்று அவர்களுடைய உதிரத்தால் தன் தந்தைக்கு நீர்க்
கடன் செய்வேனென்று சபதஞ் செய்து அவ்வாறே பரசு
ராமன் செய்ததும், வீமனானவன் துச்சாதனனைக் கொன்று
அவனுதிரங் குடிப்பதாய்ச் சபதஞ் செய்ததும், அந்தச் சப
தம் நிறைவேறினவுடனே அச்செய்தியைக் கேட்ட துரோப
தையானவள் தன்னது விரித்த கூந்தலை முடித்ததும், இவையா
வும் என் மகன் செய்கைகளாம். அவன் மகனாகிய அக்ரமன்
பகைவரையெல்லாம் சுடுகின்ற செந்தீயை நிகர்த்தவன். அவ
னது கொடுமையை யெடுத்துச் சொல்லவல்லவர் யாவர்? சிவ
பெருமான் தாருகாவனத்திருடியர் மனைவியரது கற்பென்கிற

வேள்வியை யழித்ததும், விஷ்ணுமூர்த்தியானவர் மோகினிவடி வங்கொண்டு தபோதனருடைய அறிவை மயக்கினதும், ஸ்ரீராமரானவர் மறைந்திருந்து வாலியைக் கொன்றதும், வசிஷ்ட முனிவன் கல்மாஷபாதன் என்னும் அரசனைச் சபித்ததும், அந்த வசிட்டமுனிவனை அரசன் தானுஞ் சபிப்பதாக நீரைக் கையிற்கொண்டதும், காட்டில் விருந்திட்ட வசிட்டனது காமதேனுவை எனக்குக் கொடுக்கவேண்டுமென்று சொல்லி அந்த வசிஷ்டன் கொடாமையால் விசுவாமித்திரன் தன் சேனைகளோடு வந்து போர்செய்ததும், தொடையில் அடிப்பது தருமமல்லவென்று வீரர் சொல்லுகின்ற கதாயுத்தம் செய்யுங்காலத்தில் துரியோதனன் தொடையில் வீமன் அடித்ததும், அகஸ்திய முனிவரைக்கொண்டு கடலைக் குடிக்கச்செய்து அந்தக் கடலில் ஒளித்திருந்த விருத்திராசுரன் யோகநிஷ்டை கூடி அஞ்சலியஸ்தனாய் நிற்குஞ் சமயத்தில் அவன் தலையை இந்திரன் அறுத்ததும், பகைவனை உன் மகன் வென்றானலன் பேடியே வென்றான் என்று சொல்லக் கேட்ட விராடராஜன், கங்கபட்டனென் றுருமாறியிருந்த தருமபுத்திரனைச் சூதாடு கருவியா லடித்ததும், இந்தப் பூபாரத்தை நீக்கும்பொருட்டு அவதரித்த திருமாலானவர் பாண்டுபுத்திரரால் பகைவருக்கெதிரே செய்த தொழிலும் என் பேரனாகிய அக்கிரமனானவன் செய்ததேயன்றி வேறு யாவர் செய்தார்? ஆதலால், மகிழ்ச்சியையும், சந்தோஷத்தையும், அவிரோதனையும், நியாயனோடு நீறுபடுத்தி, யாவரையும் உன் பாதங்களில் வீழ்ந்து வணங்கச் செய்வேன்' என்றான். அவன் அப்படிச் சொன்னவுடனே, மாநன் என்பவன் வந்து அரசனை வணங்கி, மண்ணுலகத்திலும் விண்ணுலகத்திலும் எனக்கெதிராவார் யாவரென்று இவற்றைச் சொல்லத் தொடங்கினான் :

'எத்திறத்தார்க்கும் வணக்க மமைபவனை மாறுறுவதே வடிவாகக்கொண்ட எனக்கும் என் மனைவியாகிய இச்சைக்கும் எதிர்நிற்போர் ஒருவருமில்லை. பார்வதியார் தன் தந்தைசெய்த யாகத்துக்கு வந்தபோது அவன் மரியாதை செய்யவில்லை

யென்று உயிர் விடினும், அந்த அவமானம் பொறாமல் சிவ பெருமான் அந்தத் தக்கனாகிய மாமனது சிரங்கொய்ததும், தேவர்களைத் துன்பப்படுத்தினதும் என் ஏவலால் நிகழ்ந்த காரியங்களல்லவோ? வனங்களி லுள்ள பெடை நண்டானது எதிர்சென் றழையாதாயின் ஆண் நண்டானது உயிர் நீங்கும்; கவரிமான் தன் மயிர்க்கற்றையில் ஒரு மயிர் உதிர்ந்தாலும் அல்லது சிக்குப்பட்டாலும் தன்னுயிரை விடுகின்றது. இந்தச் செய்தியைக் கண்டவர் என்னை விட்டிருப்பார்களா? மடுவில் குளிக்குங்காலத்தில் துரியோதநன் வீமனை யிகழ்ந்து அவமானப்படுத்தினதனால், வீமன் அந்த அவமானம் பொறாமல் அந்தத் துரியோதநனைக் கொல்லும்படி நேரிட்டது. வாலியானவன் தன் மனைவியாகிய தாரை சொன்ன சொல்லைக் கேளாமல் வந்து ஸ்ரீராமபிரானால் கொல்லப்பட்டது மானத்தின் செய்கையன்றோ? தேவர் முதலிய யாவரும் தத்தம் நிலையினின்று தாழ்வதே அவமானமாகும். நானும் என் மனைவியாகிய இலச்சையும் என் மகனாகிய உற்சாகனும் கூடினால், தாந்திதமன் முதலிய பகைவரைவென்று மண்ணுலகும் விண்ணுலகும் ஒருமிக்க வந்து உன் அடிவணங்கச் செய்வோம்' என்றான். அதன்பிறகு சங்கற்பன் என்பவன் வந்து மோகராஜனை வணங்கி, என்னை வெல்லுவோர் ஒருவரு மில்லையென்று தன் வல்லமையைச் சொல்லுவானாயினன்:

'இந்திரன் முதலான தேவரும் அசுரரும் சூரிய சந்திரரும் அஷ்டதிக்குப்பாலகரும் பிறரும் என் ஏவலை யன்றித் தமக்குரிய செய்வினைகள் ஒன்று மில்லையன்றோ? பிரமன் உலகத்தைப் படைப்பதும், திருமால் அதனைக் காப்பதும், சிவன் அதனை அழிப்பதும் ஆகிய இந்தச் செயல்களெல்லாம் என் காரியங்களல்லவா? சங்கற்பமாகிய நான் முயல்விப்பதை என் மனைவியாகிய கற்பனையன்றி வேறு செய்விக்க வல்லவர் யாவர்? அந்தக் காரியங்களைப் பல விகற்பப்படுத்துகிற என் புதல்வனாகிய விகற்பன் வலிக்கு எதிரே நிற்பார் யார்? என் மகனாகிய விகற்பனும், அவன் மனைவியாகிய யோசனையும்

அவன் மகனாகிய வெகுமுகனும் கூடி நின்றால், இவர்களுக் கெதிரே நிருவிகற்பன் முதலானவர்கள் நிற்பார்களோ!' என்று சொல்லிமுடித்தான்.

அதன் பின்னை இராசதன் என்பவன் வந்து அரசனை வணங்கி, 'விண்ணுடரில் பிரமதேவனும், மண்ணுடரில் அரசரும் என் ஏவலை மறுக்காமற் செய்வார்களானால் மற்றவர்களைச் சொல்லவும் வேண்டுமோ!' என்று சுருக்கமாகச் சொல்லி நின்றான்.

அதன் பிறகு தாமதன் என்பவன் வந்து வணங்கி, 'என்னைவிட்டு நீங்கினவர் பதினான்கு லோகங்களிலுமில்லை. முதல்வனாகிய சிவபெருமானும் என் கட்டளையை மேற்கொண்டல்லவா உலகங்களைச் சங்கரிக்கத் தொடங்கினான்? அவனே யவ்வாறானபோது என்னோ டெதிர்த்துப் போர்செய்ய வல்லார் வேறு யார்? ஸ்ரீராமபிரானானவர் ஏழுநாளளவும் தர்ப்ப சயனத்திற்கிடந்து பிரார்த்தித்தும், வருணன் வராமல் தாமதித்து அவருக்குக் கோபத்தை யுண்டாக்கித் துன்பத்தை யநுபவித்தது யார் செய்த காரியம்? என் காரியமன்றோ? இராக்காலத்தில், அடர்ந்த காட்டில், இளமைப்பருவத்தை யுடைய தமயந்தியைவிட்டு நளராஜன் பிரியும்படி செய்தது யார்? என் மகளாகிய நித்திரையல்லவா! அவளால் தமது வளங்களை யிழந்தவர்களுக்கு ஒரு எல்லையுண்டோ? பால், தேன், அமிர்தம், மாதர்போகம் முதலியவைகளையும் வேம்பாக வெறுத்து என் மகளை விரும்பாதவர் உலகத்தில் ஒருவருமில்லை' என்றான்.

பெரிய உலகமானது அசத்தோ சத்தோ, பிரமப்பொருள் ஒன்றோ இரண்டோ, நரக சொர்க்கங்கள் உளவோ இலவோ யாரறிந்தவர் எனச் சித்தந் தடுமாறச்செய்கிற சந்தேகன், 'எனக்கெதிரே அந்த நிச்சயன் என்பவன் நிற்பானோ'? என்றான்.

அதன் பின்னே சாருவாகன் வந்து வணங்கி, 'மாறுபாடாகப் பெறவேண்டிய பேற்றை மறுமையிற் பெறுவோ

மென்று வெவ்வேறு வகையாய்ச் சொல்லுகிற விதண்டா வாதிகளையெல்லாம், மாதர்போகமே நற்கதியாவது இதினும் வேறு நற்கதி யில்லையென்று சொல்லி மருட்டி விடுவேன்' என்றான்.

அதன்பிறகு புத்தன் வந்து வணங்கி நின்று, 'உருவம், வேதனை, குறிப்பு, பாவனை, விஞ்ஞானம் என்பவை அழிந் தழிந்து கெடுவதே பந்தம்; முழுதும் அற்றொழிவதே இன்ப வீடு என்று சொல்லிப் பகைவரை வெல்லுவேன்' என்றான்.

அதன் பிறகு அருகன் வந்து வணங்கிநின்று, 'கடல்போ லப் பெருகுகின்ற வினைப் பயன்களை யெல்லாம் அநுபவித்து, அவை தொலைந்தபிறகு வந்து பொன்னெயில் வட்டத்திற் பொருந்துதலே முத்தி யென்று சொல்லிப் பகைவரைப் போரில் வெற்றி கொள்வேன்' என்றான்.

அப்பால் கலியன் என்பவன் வந்து வணங்கி, 'முற்காலத் தில் நளராஜன் கால் கழுவுஞ் சமயத்தில் பாதி திலையளவு கால் நனையாதிருந்ததே ஹேதுவாகக் கொண்டு அவனுக்கு அளவற்ற துக்கத்தை விளைத்தது நானன்றோ? என்னை வெல் லுவோர் யாவர்' என்று சொல்லினான். இவ்வாறு சாருவா கன், புத்தன், சமணன், கலியன் முதலியோர் தத்தம் வல் லமைகளைச் சொல்லிநின்ற சமயத்தில், மோகவேந்தன் பக் கத்தில் ஒரு ஆசனத்தின் மீதிருந்த ஆங்காரன் வந்துநின்று தன் மேன்மைக ளெல்லாவற்றையும் சொல்லத் தொடங்கி னான் :

'தேகாபிமானத்தைப் பற்றிக்கொண்டு நான் என்னுஞ் செருக்கையே வடிவாகக் கொண்டிருக்கிற என்னாலும், பொ ருள் சம்பாதித்து அதன்மீது அதிக ஆசை வைத்து இது என்னது என்பதே வடிவாயிருக்கிற என் மனைவியாகிய அகந் தையாலும் அஹங்கரியாதவர் ஒருவருமில்லை. பேரினாலும், பிறப்பினாலும், செல்வச் சீரினாலும், கல்வித்திறத்தினாலும், மற்றெல்லா விதத்தாலும் நானே பெரியன் என்கிற என்னைச் செயிக்க வல்லார் யாவர்? பிரமனும் திருமாலும் தம்மைத்

தாம் பெருமைப்படுத்தி அகங்கரித்தபோது, அதை அடக்கு வோன் போலச் சிவபெருமான் இடையே தோன்றி என் அடிமுடிகளைக் கண்டுவாருங்க ளென்றதும் என் குணத்தைக் கொண்டல்லவா? எம்மையன்றி ஈசன் என்பவன் யார் என்று அகங்கரித்த இந்திரர் ஐவருமல்லவா தருமன், பீமன், அருச் சுனன், நகுலன், சகாதேவன் என்னும் ஐவராய் இவ்வுலகில் வந்து பிறந்தனர்? தாரகத்தி னுட்பொருள் யாது, அதனைச் சொல்லக்கடவையென்று தன்னருகே யிருந்த பிரமனைச் சிர சிற் குட்டி, எல்லார்க்கும் குருவாகிய சிவபிரானுக்கும் குரு வாகிய குமரவேள் உபதேசித்தது என் செயலாலன்றோ? விசுவாமித்திர முனிவன், பிரமன் முதலிய யாவரையும் நான் படைப்பேனென்று அவமதித்து, அநுஷம் முதலிய நாண் மீன்களைந்தையும் தென்றிசையில் விளங்கும்படி அமைப்பித் தது என் காரியமன்றோ? நற்றவப் பயனாகப் பிரமன் முதலி யோரிடத்தில் பெருஞ்செல்வமும் பெரு வரங்களும் பெற்ற இரணியன் இராவணன் முதலானோரை நாங்களன்றி ஈச்சுர னென்பவன் யாவன் என்று சொல்லும்படி செய்தது என் னையன்றி யாவர்? மிகவுந் தாழ்ந்தவரும் கொடுங் கோபங் கொண்டு தம்மைத்தாமே மதித்து எம்மைப்பார்க்கினும் ஈச னொருவன் எவ்விடத்துளன் என்று சற்றும் அஞ்சாமல் சொல்லுவதும் என் வல்லமையன்றோ? மடந்தையும் நானும் எதிர்நின்றால் சாந்தியும் சமனும் எங்களுக்கெதிர் நிற்க வல்ல ரோ? வேங்கைப்புலிக்கெதிரே பசுக்கள் நிற்குமோ? இவ்வுலக முழுதும் உனதேயாக்கி விவேகன் முதலானோரை யடக்கி விடுவேன்' என்றான். இவ்வாறு சொன்ன தன் படைஞர் வலிமை யெல்லாங்கேட்டு மோகவேந்தன் மிகுதியாய் மன மகிழ்ந்திருந்தான்.

காமனாதியர் வீராலாபச்சருக்கம் முற்றிற்று.

27. நிருபகாதியர் விராலாபச் சருக்கம்



அப்படியிருக்கும்போது, நியாயன் ஒரு நொடிப்பொழுதிற் சென்று உலகிலுள்ள மார்க்கங்க ளெல்லாவற்றையு மறிந்துவந்து விவேகனை அடிவணங்க, அவனை நோக்கி மோகனுடைய எண்ணம் யாதென விவேகன் வினவ, நியாயன், 'அந்த மோகன் முதலானோர் நியாயநெறியிற் கட்டுப்படார்; போர் செய்து அவர்களை வெல்லவேண்டுமேயன்றி வேறு வழியில்லை' என்றான். இதைக் கேட்ட விவேகன் நன்று நன்றென்று நகைத்து நிருபகாதியரைநோக்கி, 'நாம்படையெடுத்துப் போய் மோகனாதியரை வெல்லுதல் வேண்டும் ஆதலால் நீங்களனைவரும் ஆயத்தமாய் வரவேண்டும்' என்று நியமிக்க, அவர்களெல்லோரும் விவேகனை நோக்கி, 'பகைவரை வெல்லுதற்கு நாங்களிருக்கத் தேவரீரும் அந்தக் காரியத்தில் பிரவேசிக்க வேண்டுமோ?' என்றார்கள். அது கேட்ட விவேகன் நிருபகாதியரை நோக்கி, நீங்கள் 'காமனாதியரை எவ்வாறு வெல்லுவீர்களென்று வினவ, நிருபகன் விவேகனை நோக்கி, 'சுவாமீ! அநங்கனாகிய காமன் புஷ்பபாணத்தைக் கொண்டு போர் செய்யவருவான். ஆயினும், அவனை வெல்வது எமக்கொரு பொருளல்ல. விரும்பத் தகுந்த பொருள்களில் உள்ள குற்றங்க ளெல்லாவற்றையும் விரித்து அவற்றி னிழிவெல்லா மறிவித்தலே சொரூபமாகிய எனக்கு வாய்த்த மனைவி யுக்தியாதோடு நான் யுத்தசந்நத்தனாய்நின்றால் என்னை வெல்ல வல்லவர் யாவர்? காமனுக்குண்டா யிருக்கிற வன்மை யெல்லாம் மாதரேயன்றி வேறல்ல. அவர்களுடைய பெண்மைக் குணங்கள் பாமர ஜனங்களை மயக்குமேயன்றி எம்போல்வாரை மயக்க வல்லவோ? குறும்பி யொழுகுகின்ற காதை வள்ளையென்றும், புழுக்களாகிய பேன்க ளடர்ந்த தலைமயிரை மேகமென்றும், பீளை யொழுகாநின்ற கண்களைக் குவளை மலரென்றும், பல்லாகிய எலும்பை முத்தென்றும், எச்சில் வடிகிற வாய் விளிம்பை ப் பவளமென்றும், மார்பில் திரண்டெழுந்த இரண்டு சிலந்திகளை யானையென்றும், அவை கச்சுக்குள்ளே

யடங்கி யிருந்தும் எம்முயிரைக் கவர்கின்றன வென்றும் பித
ற்றுகிற பேதையர்போலப் பிராந்தி யடைந்தவர் யாவர்? இன்
னமும் சளி நீரொழுகுகின்ற நாசியையும் கோழை யெச்சில்
களையு முடைய முகத்தைப் பூர்ண சந்திர பிம்பமென்றும்,
நரம்பைக்கொண்டு கட்டப்பட்ட எலும்புருவாகிய தோள்
களை மூங்கிலென்றும், குடல், நரம்பு, தசை, வழும்பு, உதி
ரம், எலும்பு, சுக்கிலம், புலால் நாற்றம் முதலியன நெருங்
கின ஒரு பொந்தின்மேல் ஒரு தோலை விரித்து மூடி பல
துவாரங்கள் தோறும் அருவருப்பு நீங்காத மலமொழுகக்
கண்டும் அந்த மலபாண்டத்தை மாதரென்று பெயரிட்டுக்
கொண்டாடுகிறார்கள். இதென்னபாவம்! மாதருடையகோலா
கலங்களை யெல்லாம் ஆராய்ந்து தெளியாத மனத்தை யுடைய
வர்களே அம் மாதரை விரும்புவார்கள்; ஆராய்ந்தவர்கள் அவ
ர்களை அருவருத்து வெறுப்பார்கள். யௌவனபருவத்தில் தமது
அவயவ சௌந்தரியத்தைக் காட்டி ஆடவரை மயக்குகின்ற
மாதர்கள் முதுமைப் பருவமடைந்து கொக்குப் போல் தலை
மயிர் வெளுத்துக் கையில் கோல்கொண்டு அதுவே கண்ணாக
நடப்பதைக் காண்கிறோமல்லவா? மேலும் அந்த மாதர் தம்
முடம்பின் அருவருப்பை நோக்கியன்றோ பட்டாடையால்
அவ்வுடம்பு முழுதும் மூடுவது? அன்றியும் தம்முடம்பின்
துர்க்கந்தம்வெளிப்படாதிருத்தற்கன்றோ சுகந்தத்தையுடைய
மஞ்சள் குங்குமக் குழம்பு சந்தன முதலியவற்றைப் பூசிக்
கொள்வது? அவ்வாறன்றிப் பசி தீரும்பொருட்டோ அவற்
றைப் பூசிக்கொள்வது? இன்னும் அவர்கள் பல்விளக்கி நாவழி
த்து வாயை நீரால் கொப்புளித்துத் தாம்பூலாதிகள் தரிப்பது
யாதுக்கு? தம் ஊத்தைவாய் திறந்தால் தீ நாற்றம் வெளிப்படு
மெனக்கருதி அதனை மறைக்கும் பொருட்டன்றோ? அன்றி
யும், பட்டாடை யணிந்து ஆபரணங்கள் பூண்டு தம்முடம்பை
யலங்கரித்துக் கொண்டாலன்றித் தமக்கென்று ஒரு இயற்கை
யழகு அவர்களுக்குண்டோ? சநகாதியர் நால்வர், பிருங்கி,
தத்தாத்திரேயர், அநுமார், சுகர், நாரதர், துருவாசர், சட
பரதர், போதாயனர் முதலானவர்களை மாதரது அழகு என்கெ

ய்தது? பீஷ்மரை முற்காலத்தில் ஒரு பெண்ணானவள் தன்னைக் கூடும்படி முயன்றும், அந்த முயற்சி பயன் படாமையால் அவர் குருவைக்கொண்டு சொல்லுவித்தும், அதுவும் பயன் படாமையால் பரசுராமரைக் கொண்டு போர்செய்வித்தும் அவள் எண்ணம் முடிவு பெறவில்லையன்றோ? என் மனையாளாகிய யுக்தியென்பவளைக்கொண்டு இவ்வுலகத்தி லுள்ள மாதராசையை வென்றால் காமதேவன் இறவாதிருப்பானோ? மன்மதனையும் அவன் மனைவியாகிய இரதியையும் நான் வென்று, என் மனையாளாகிய யுக்தியைக் கொண்டு யோசனையையும் கற்பனையையும் தோற்பித்து, சந்தேகனை என் மைந்தனாகிய நிச்சயனைக் கொண்டு நாசப்படுத்துவேன்' என்றான்.

நிரூபகன் இப்படிச் சொல்லிமுடிக்க, பொறைமையென்பவன் எழுந்து விவேகனை வணங்கி, கோபனை நான் உயிர் வாங்குவேனென்று இவைகளைச் சொல்லத் தொடங்கினான்: 'பிறர் கோபங்கொண்டு செய்கின்ற எவ்வகைப் பெரும் பிழைகளையும் மனத்திற் கொள்ளாத பொறுமையே வடிவாகக்கொண்ட எனக்கும், எனது பொறுமைத் திறத்தை வற்புறுத்து தலையே வடிவமாகக் கொண்டு என்னோடு கூடி வாழ்கின்ற மரியாதைக்கும் எதிர்நிற்க வல்லார் யாவர்? வைதாரையும் வாழ்த்தி, அவர் குற்றங்களைச் சிறிதும் நோக்காத என் மேன்மைபோல வேறொரு மேன்மையுண்டோ? எல்லாருக்கும் பொதுவாயிருக்கிற பரம்பொருள்போல, எவரெவர்க்கு எதுவெது இயற்கையோ அவ்வவ்வியற்கைகளுக்குப் பொருந்தநடப்பதுபோல இன்பந்தருவது வேறொன்றுமில்லை. கீழ்மக்கள் ஒரு தீச்சொல்லைச் சொன்னால் அவர்களுக்கெதிரே வாய் திறவாமல் மௌநமாயிருப்பதே அவரை வெல்லுதற்குரிய வுபாயமன்றி வேறுபாயம் யாது? ஒருவனிடத்தில் கோபமாகிய தீ மூண்டபோது, அதனை எனது முகமலர்ச்சியும் நகையும் இன் சொல்லுமாகிய பெரு வெள்ளத்தினால் அவித்துவிடுவேன். நான் இன்சொற் சொல்லுங்காலத்திலும் அதனைப்பொறாது பிறர் என்னை யடித்தாலும் அவரை

வெறுத்துக்கொள்ளாமல் இது நமக்கு நல்ல அநுபவமாகு மென்று கொள்வேன். இந்தப் பூமியானது தன்மீது மலசலாதிகள் விடுத்தும் தோண்டியும் பலவாறு உபத்திரவப்படுத்துகிற மக்கள் முதலாகிய சீவர்களைக் கோபித்துக் கொண்டது எக்காலத்தாயினு முண்டோ? தருமபுத்திரனானவன் தன் மனைவியாகிய துரோபதையை இராஜ சபையில் துகிலுரியச்செய்த போது என் செய்தான்? நகை, முகமலர்ச்சி, இன்சொல் முதலிய என் சின்னங்கள் கோபத்தை வென்றுவிடும் என்பதில் யாதொரு சந்தேகமுமில்லை. ஒருவன் என்னை வாழ்த்தினாலும், வசையுரைத்தாலும், சந்தனம் பூசினாலும், சதையை யறுத்தாலும் இந்தத் துன்பங்களெல்லாம் நாம் முற்காலத்திற் செய்த தீவினையால் நேர்ந்தன என்று மனத்திற் கொண்டு கோபத்தை வெல்லுவேன். என் மகனாகிய அடக்கன், ஆமையானது தனது ஐந்துறுப்புக்களையும் ஒரு துன்பம் நேரிடா திருக்கும் பொருட்டுத் தன் உடம்பில் அடக்கிக் கொள்வதுபோல, ஐம்புலன்களையும் ஒரு தீமை நேரிடா திருக்கும்படி தனக்குள்ளே யடக்கிக்கொள்வான். அதனால் தாமதனைத் தலை கவிழும்படி செய்வான். என் மகன் வேறொருவன் உண்டு. அவன் பேர் சன்மானன். அவன் அவமானன் என்பவனைக் கண்ணிற் காணவொண்ணாதபடி அழித்தேவிடுவன். என் தாரமாகிய மரியாதை யென்பவள் எவ் வுயிர்களுக்கும் மேன்மையை யுண்டாக்கி அவமரியாதையை அழித்துவிடுவாள்' என்றான்.

இவ்வாறு பொறை யென்பவன் எடுத்துச் சொல்லி முடித்த வளவில், விராகன் எழுந்து விவேகராஜனை வணங்கிநின்று, அந்தக் கொடிய லோபனை யான் வெல்வேனென்று இவற்றைச் சொல்லத் தொடங்கினான்: 'எப்படிப்பட்ட சிறந்த பொருளையாயினும் இகழ்ந்துவிடுதலே வடிவமாகிய என்னையும், அப் பொருளைக் கனவினும் நினைக்காமல் முற்றத் துறத்தலே வடிவமாகக் கொண்ட என் மனைவியாகிய விரக்தியையும் வெல்ல வல்லார் இவ்வுலகத்தில் ஒருவருமில்லை. பொரு

ளுடையோர்க்கு நெருப்பினாலும் கள்ளராலும் பயமுண்டு; அரசருக்கு வேற்றரசரது பகையாகிய பயமுண்டு; உயிரை விரும்பினவர்களுக்குக் காலபய முண்டு; வைராக்கியர்க்கு ஒரு பயமுமுண்டாகாது. பேராசையினால் கீழ்மக்கள் பின்சென்று உழன்றும் தம் வறுமை நீங்கப்பெறாதவர் சிலர் இவ்வுலகத்தில் உண்டல்லவா? வருந்தி முயன்றாலும் வராத காலத்தில் வராது; முயலாத காலத்திலும் வருங்காலமானால் அப்பொருள் தானேவரும். ஒருவன் இறக்கும்போது அவன் தேடின பொருள்களில் ஒன்றாயினும் அவனோடு தொடர்ந்து போவதைக் கண்டிலேம். தம்முயிர் நீங்கும்படி நேரிட்டாலும் தம்முடம்பு வற்றி எலும்புக்கூடாய் விட்டாலும் தமது வறுமையை நல்லோர்கள் தம் மீது மிகுந்த அன்புள்ளவரிடத்திலும் சொல்லமாட்டார்கள். எவ்வளவு சோறுண்டாலும் சாணளவாகிய வயிறு நிறைவதில்லை. அதை ஆலோசித்து அமைந்திராமல் கண்டவர்களைப் பின்சென்று கையேற்பது யாதுக்கு? காட்டில் கனிகாய் கிழங்குகளுண்டு, காணாறு முதலியவற்றில் நீருண்டு, வாசஞ்செய்வதற்கு மலைக்குகை முதலியவையுண்டு, நடப்பதற்கு ஞான மார்க்கமுண்டு; ஆதலால், எமக்கு இனிதாகப் பொழுது கழியும். எனக்கும் என் மனையாளாகிய விரக்திக்கும் எதிரே லோபனும் அவன் மனையாளாகிய இச்சையும் வந்து நிற்கவல்லரோ? அவர்களாலுண்டாகிற பாசபந்தங்களை ஒரு நொடிப்பொழுதில் நாங்கள் வெல்லக்கடவோம். பிறக்கும்போது கூடப்பிறப்பவரும் இறக்கும்போது கூட இறப்பவரும் இல்லை. இடையாகிய காலத்தில் வந்து பொருந்தியிருக்கிற தாய் தந்தை மனைவிமக்கள் முதலியோர்கள் மெய்யுறவினராவரோ? பிறவிதோறும் உண்டாகி வருகிற தாய் தந்தை முதலானோர்க்கு ஒரு அளவுண்டோ? துக்க சுகங்களையநுபவிக்கிற இவ்வுயிர் பிரியும்போது பறவை விட்டு நீங்கின கூடுபோல வழிதானால், வேறு மெய்யுறவு யாது? அநேக அரசர்கள் துறவைப்பார்க்கிலும் சுகமில்லையென்று இந்த இல்லற வாழ்க்கையைவிட்டு நீங்கிக் கானக மடைந்து தவஞ்செய்து வீடுபெற்றிருக்கிறார்கள். காதி மைந்தனாகிய விசுவாமித்திரன்

இல்வாழ்வில் இன்ப மிருக்கின்றதா து[illegible]ல் இன்ப மிருக்கின்றதா வென்று நிச்சயிக்கும் பொருட்டு வசிட்டருக் கெதிரே போய்ச் சோதித்தது சுகப்பேறு அன்றோ? பிரமன், விஷ்ணு, உருத்திரன் என்னும் திரிமூர்த்திகளாலும் தரப்படும் இன்பம் எம்மால் தரப்படும் இன்பத்துக்குச் சமானமாகுமோ? என்னோடும் என் மனைவியோடும், லோபனும் அவன் மனைவியும் எதிர்த்துப் போர் செய்ய வல்லரோ? கடலோடு கிணறு எதிர்த்து வெல்லுமோ?' என்றான்.

இப்படி விராகன் சொல்லி முடித்தவுடனே, சந்தோடன் எழுந்து விவேகனை வணங்கி நின்று தனது ஆற்றலைச் சொல்லத் தொடங்கினான்: 'ஒரு பொருள் கிடைத்தாலும் கிடைக்காவிட்டாலும் மனப் பூர்த்தியே வடிவமாகக்கொண்ட நானும், பெற்றதைக் கொண்டு மகிழ்தலே வடிவமாகக்கொண்ட என் மனைவியாகிய மகிழ்ச்சியும் புறப்படுவோமானால் எமக்கெதிரே நிற்கவல்லார் ஒருவருமில்லை. மனத்தால் நன்றுயாராய்ந்து தெளிந்த இன்ப நிலையாகிய அழியாப் பொருளையடைந்திருப்பவர் நீர்க்குமிழி போல அழியும் பொருளை ஒரு பொருளாய் நினைப்பரோ? இன்பத்தைப் பார்க்கினும் துன்பமே சுகமெனக் கருதி மகிழ்கின்ற என்னிடத்தில் மச்சரன் வந்து போர் செய்வது எவ்வாறு? தாருகாவனத்திருடியர் மழு மான் முதலிய பொருள்களை வருவித்துச் சிவபெருமான் மீதேவினபோது அவர் அவற்றையெல்லாம் ஏற்றுக் கொண்டது சந்தோடன் என்று சொல்லப்படுகிற என் காரியமல்லவா? முற்காலத்தில் ஸ்ரீராமரானவர் தமக்கு முடி சூட்டத் தசரதன் முயன்றபோதும், அதற்கு மந்தரையின் துர்ப்போதனையால் கைகேசி அந்தக் காரியம் நிறைவேறவொட்டாமல் தடுத்து அவரைச் சடை முடி சூடச் செய்தபோதும் அவரது திருமுகம் செந்தாமரை மலர்போலப் பொலிவடைந்திருந்தது என் செய்கையா லல்லவா? சூரியனுக் கெதிரே இருள் நிற்குமோ? சிங்கத்துக் கெதிரே யானை நின்று போர் செய்ய வல்லதோ? அதுபோலவே பிறர் செல்வங் கண்டு

பகிழ்கின்ற எனக்கெதிரே மச்சான் நிற்க வல்லனே? வெல்லனல்லன். ஆதலால், அந்த மச்சரனை நானே உயிர்வாங்குவேன்; அவன் மனைவியாகிய அசூயை யென்பவளையும் என் தேவியாகிய மகிழ்ச்சியைக் கொண்டு கொல்விப்பேன்; என் மகனாகிய அற்புதயனைக்கொண்டு நாசனைக் கொலை செய்விப்பேன்' என்றான்.

சந்தோடன் இவ்வாறு சொல்லி முடித்தவுடனே, தாந்தி நாயகனாகிய தமன் வந்து விவேகராஜனை வணங்கிச் சொல்லத் தொடங்கினான்: 'பொங்கிய பாலில் வார்த்த நீர்போலவும் மதயானையை அடக்குகின்ற அங்குசம் போலவும், கருத்தினின்றும் விம்மி யெழுகின்ற மானனை வென் றடக்குகின்ற என் வல்லமைக்கு நிகரான வல்லமை யுள்ளவர் வேறுயாவர்? முற்காலத்தில் சிவபெருமான் மதுரையில் வையை யாற்றங்கரையில் மண் சுமந்தும், பாண்டியனால் பிரம்படி பட்டும், வளையல் விற்றும், பாணனுக்காக விறகு சுமந்தும் மானனது மேன்மை குன்றும்படி செய்த திருவிளையாடல்களெல்லாம் என் வல்லமையால் நிகழ்ந்தனவல்லவா? ஸ்ரீகிருஷ்ணபகவான் திருவாய்ப்பாடியில் வெண்ணெயைத் திருடி யுண்டதும், மத்தினால் அடி யுண்டதும், பசுக்களை மேய்த்ததும், உரலிற் கட்டுப்பட்டதும், அருச்சுனனுக்குத் தேர்ப்பாகனா யிருந்ததும் மானனுக்கு வைரியாகிய என்னால் நிகழ்ந்தனவல்லவா! உடம்பைச் சுமையாய் நினைத்துப் பரம்பொருளையே நோக்கிக் கொண்டிருக்கிற மேலோர்கள் இது துக்கமென்றும் இது மானமென்றும் இது ஈனமென்றும் கருதி இவற்றிற்கு அஞ்சுவார்களோ? கற்பாறைமேல் பந்தை ஓங்கியடித்தாலும் அந்தக் கற்பாறைக்குப் பந்தினால் ஒரு கெடுதி யுண்டாகுமோ? இச்சையைத் தாந்தியைக்கொண்டு பெருமையழித்து, மானனது புலைத்தொழிலை யானே யழித்து, என் புதல்வனாகிய தனிவத்து ஜோக்குவானைக் கொண்டு விடயாநந்தனது செய்கையை நீக்குவேன்' என்றான்.

அதன் பிறகு, சமன் எழுந்து விவேகனை வணங்கிக் கீழ்வருமாறு சொல்லத்தொடங்கினான்: 'அறிவாகிய நல்ல மந்

ரியால், மன்மாகிய அரசன் தீநெறிக்கட் செல்லாமல் பொறி யாயைந்தனையும் அடக்கி, நன்னெறிக்கட் செலுத்துவது என் டைமையாகும். கவுடராஜன் தொடராமல் அவனுண்மையை வென்றடக்கும் வலியுள்ளோர்க்கு முறையே ஐம்புலன்களால் அழிகின்ற யானை, சேல், விட்டில், வண்டு, அசுணம் என்பன போலக் கெடுதலும் உண்டாகுமோ? புத்தியிற் றோன்றுகின்ற உண்மையாகியபொருளைப் பஞ்சேந்திரியங்களாகிய கள்வர்கள் திருடிக்கொண்டு போகாமல் காப்பாற்றித் தமது இடமென்கிற களஞ்சியத்தில் பத்திரப்படுத்தி வைப்பவருடைய ஞானச் செல்வத்துக்கு ஒரு நாளும் அழிவுண்டாமோ? ஐம்புலன்களை யும் வென்றவர்க்கு எத்தனை செல்வம் கிடைத்தாலும் அவரை ஆங்காரப்பேய் பிடிக்குமோ? பிடியாது. அகங்காரன் மனைவி யாகிய மமதை யென்பவள் என் தேவியாகிய சாந்தியின் கடைக்கண் பார்வை படுமுன்னே தன்வலி குன்றி அழியமாட் டாளோ? என் மகனாகிய அகமுகனது வீரத்தன்மை சொல்ல லாகுமோ? யானையானது சிங்கத்துக்கெதிரே நில்லாதது போல, வெகுமுகன் என் மகனாகிய அகமுகனுக்கெதிர் நிற் பனோ? ஆங்காரனது வலியை இப்பொழுதே அழித்து, இவ் வுலகத்துக்கு ஒரு கெடுதி நேரிடவொட்டாமற் செய்வேன்; இதுவே யென் வல்லமை' என்றான்.

இப்படி அவன் சொல்லி முடித்தவுடனே சத்துவன் எழுந்து, சுமதிநாயகனாகிய விவேகனை வணங்கித் தன் ஆற்ற லைச் சொல்லலுற்றான்: 'வெவ்வேறு வகைகளாகிய உயிர்க ளெல்லாவற்றுள்ளும் பொருந்தி யிருந்தாலும், தானொன்றாக வே தோன்றி அழியாமல் விளங்குகின்ற ஒளியை அறிந்த வாறு சொல்லுவதே எனது ஞானமாகும். மேன்மையாகிய பலனை விரும்பி முயற்சி செய்யாமலும், விருப்பு வெறுப்புக ளில்லாமலும் உலகிலுள்ள எல்லாப் பொருட்பற்றும் நீங்கி யிருத்தலே என் செய்கையாகும். அகந்தை ஆசை என்பவைக ளற்று, சித்தி அசித்தி யென்பவற்றில் அலையாமல், முயற்சி யும் திடமும் அடைந்திருப்பவன் எவனோ, அவனே நான் மகி

றும்படியான கருத்தாவாவன். காரியாகாரியங்கள், பிரவிர்த்தி நிவிர்த்தி, அஞ்சுதல் அஞ்சாமை, பந்தமோக்ஷங்கள் என்பவற்றை உள்ளபடி யறிவிப்பது என்னறிவாகும். மனம், இந்திரியங்கள், பிராணன் இவற்றின் தொழிலெல்லாம் நன்றாக யோக ஞானங்களில் நிலைபெறச் செய்வதே எனது திருதிக் குணமாகும். முன் சொன்னது விஷம் போன்றும் பின் சொல்வது அமிர்தம் போன்று மிருப்பதாகி மதித்தெளிவிலுண்டாகிற சுகமே என் சுகம். மேலும், தாமதன் இராசதன் என்பவருடைய பேருமில்லா தொழித்துப் பூர்ண ஞானியருள்ளத்தில் விருப்புட னிருப்பேன். என் மனைவியாகிய புனிதையின் பெருமையைச் சொல்ல வல்லவரும் அறிய வல்லவரும் இல்லை. அவள் அந்தணர் பதம், துளவம், பசுக்கிடை, உயர்ந்தோர் மனம், நதிதீரம், புண்ணியத் தலம், செந்தழல் என்னும் இவற்றிற் சேர்ந்திருந்து மோகனது தொந்த வினைகளைத் தொலைக்க வல்லவள். பிரமாதியர் மூவரும் முப்பத்து மூக்கோடி தேவரும் மற்றையர் யாவரும் அந்தப் புனிதையானவள் எவ்விடத்தில் வாழ்கின்றாளோ அவ்விடத்திலே வாழ்வார்க ளென்றால் அவள் பெருமைக்கோ ரெல்லையுண்டோ? மகிடாசுரனைக் கொன்ற துர்க்கா தேவிபோல, இவளும் அகீர்த்தி யென்பவள் பெற்ற அசுத்தனை உயிர்வாங்க வல்லவள். என் மகனாகிய தர்மன் அதர்மனை ஒரு கணத்தில் வலி தொலைப்பான் என்பது எல்லாரும் அறிந்த விஷயமே' என்றான்.

இவ்வாறு சத்துவ னெடுத்துச்சொல்லி முடித்தவுடனே, சமாதானன் எழுந்து விவேகனை வணங்கித் தனது ஆற்றலைச் சொல்லத் தொடங்கினான்: 'பெரிதாகிய யானையினிடத்தும் சிறிதாகிய எறும்பினிடத்தும் அமர்ந்திருப்பவன் ஒருவனே யென்று அணுவையும் மேருவையும் சமமாகக் கருதுகின்ற என்னோடு விரோதித்துப் பகைகொள்வோர் ஒருவருமில்லை' என்றான்.

இவ்வாறு சமாதானன் சொல்லி நீங்கினபிறகு, நல்விருத்தி நாயகிக்குக் கணவனாகிய தவன் எழுந்து விவேகனை வணங்கி,

பிரமாதியர் மூவரும் என் குணமாகிய ஏணியைக் கொண்டன்றோ மேல்வீடாகிய முத்தியை யடைகின்றார்கள்? படைத்தல், காத்தல், அழித்தல் என்கிற முத்தொழில்களையும் நடத்துகின்ற மும்மூர்த்திகளும் முனிவோர்களும் முத்தரானதும், மாநடர் தேவேந்திரன் முதலிய தேவராவதும் என் செயல் கொண்டன்றோ? அரிய தவத்தைச் செய்து அதன் பயனை யடையாமல் பயனில்லாததாகிய இல்லறவாழ்க்கை செய்து வாழ்வடைந்தவர் யாவர்? தவத்தை முயன்று செய்தவர் புல்லரேயாயினும் அவர்களும் பெருஞ் செல்வத்தையும் பேராயுளையும் பெறுவார்கள். பெருந் தவத்தினர் நினைத்தால் அவரது நினைவின்படியே கற்பக விருக்ஷம், அமிர்தம், அப்ஸரசுக்கள், உச்சைசிரவம், ஐராவதம் முதலிய சுவர்க்க போகங்களெல்லாம் இந்தப் பூலோகத்தில் வந்துசேரும். என் பாலனாகிய பரோபகாரனைப்போல அருள்செய்வோர் யாவர்? அவன் தனது தவப் பயனை யன்றித் தனது உயிரையும் விரும்பினோர்க்குக் கொடுப்பவன். ஒரு சிறு புறவின் பொருட்டுத் தன் உடம்பின் தசையை யறுத்துக் கொடுத்தது மன்றித் தானும் துலை புகுந்த சிபிச் சக்ரவர்த்தியின் செய்கை யாவரால் நிகழ்ந்தது? என் மகனாகிய பரோபகாரனாலன்றோ? மண்ணுலகினும் விண்ணுலகினும் என் புதல்வ னில்லையாயின் புண்ணிய மென்னும் பொருளும் செல்வமும் மேன்மையும் ஒருவருக்கும் கிடையாது. பரத் துரோகனை அருளாகிய வாள்கொண்டு என் மகன் கொல்லும்படி செய்து, காமனும் அவன் மனைவியாகிய இரதியும் அறற்றும்படி அவர்கள் புதல்வனாகிய விடயாநந்தனை என் கை வாளினாற் கொல்வேன் யான்' என்றான்.

'முற்காலத்தில் ஒரு பசுவானது உயிர் நீங்கின தன் கன்றின்பொருட்டு வந்து ஆராய்ச்சிமணியை அசைத்தபோது மநுமுறைகண்டசோழன் தன் மகனாகிய வீதிவிடங்கனைக் கொலை செய்வித்தது யாராலே? அப்படிப்பட்ட என் மனைவியாகிய நீதியோடு யானுஞ் சென்று அக்ரமனை உயிர்வாங்குவேன்' என்று நியாயன் சொன்னான்.

அதன் பிறகு சசிலன் எழுந்து விவேகனை வணங்கி, 'என் மைத்திரியைக்கொண்டு கபடியின் உயிரையுண்டு அபிர்த சீலமாகிய என் செய்கையால் வஞ்சகி மணாளனாகிய அசத்தி யனோடு போரிட்டு இடம்பனைக் கொல்வேன்' என்றான்.

அப்பால் கருணை யென்பவள் எழுந்து விவேகராஜனை வணங்கி, அநீதி யென்பவள் என்னெதிரே நிற்க வல்லளோ வென்று சொல்லிச் சென்றாள்.

அப்பால் முதிதை யென்பவள் வந்து அரசனை வணங்கி நின்று, ஐயனே! தீவினை என்பவள் எனக்கெதிர் நிற்கவல்ல ளோ வென்று சொன்னாள்.

அதன் பிறகு, விவேகனுக் கெதிரேயிருந்த அமைச்சர்க ளாகிய எட்டு யோகரும் பிறரும் தத்தம் ஆற்றலைச் சொல்லக் கேட்டு உள்ளம் மகிழ்ந்திருந்த விவேக ராஜன் மேலே நடத் தின காரியத்தைச் சொல்லுவோம்.

நிருபகாதியர் வீராலாபச் சருக்கம் முற்றிற்று.

---

28. விவேகன் காசிபுகு சருக்கம்

அப்பால் விவேகராஜன் மனமகிழ்ச்சியோடு தன் படை ஞரைநோக்கி, மோகன் படையும் அவனுயிரும் இன்றோடு முடிந்தமையால் நம் படைஞர் யாவரும் காசியிற் பிரவேசிக் கக் கடவரென்று கட்டளை யிட்டவுடனே யோகமாகிய யானை யும், வேதமாகிய குதிரையும்; தத்துவங்களாகிய தேர்களும், மெய்ஞ்ஞானமாகிய வீரரோடு ஆரவாரித்த தன்மையைச் சொல்ல வல்லார் யாவர்?

ஒப்பற்ற இறைவனை மானதன் பிரவிர்த்தியைச் சேர்ந்து பெற்ற மோகனுதியர் பிணித்த பிணிப்பை விடுவிக்கும் பொரு

ட்டு எழுகின்ற முயற்சியோராகிய விவேகனுதியர், முற்காலத்தில் இந்திரசித்து நாகபாசத்தால் பிணித்து இளையபெருமாள் முதலானோரை வருத்தும்போது ஸ்ரீ கருடபகவான் அந்தப் பிணிப்பை விடுவிக்க வந்ததுபோல் எத்திசையிலும் வந்து நிறைந்தார்கள். ஞானமாகிய சாரதியால் நடத்தப்படுவனவும், வேதமாகிய குதிரைகளால் இழுக்கப்படுவனவும், மயக்கத்தையுடைய சேனைகளை வென்று வைதிகமாகிய வீதியிற் செல்லுவனவும் சேனை நடுவில் அநந்தகோடி சூரியர்கள் போலப் பிரகாசிப்பனவும் ஆகிய பல தேர்கள் திரண்டு வந்தன. காமமாகிய வாழைத் தோட்டத்தைச் சாய்த்து, கோபமாகிய காட்டைவேரோடுகளைந்தெறிந்து, லோபமாகிய ஓடையையிறைத்துக் கலக்கி, லோகவாசனை யானது தமக்கெதிரில் சிறிது வீசினும் மனம் பொறுக்காமல் அருவருப்பனவாய், விவேகராஜன் கட்டளைப்படியே முன்னே செல்லுகின்றனவாகிய பலகோடி ஞான யானைகள் வந்து நெருங்கின. மேலோர் கருத்தை யறிந்து அவர் செலுத்தும் நெறியேசென்று, பஞ்சகதிகளையும் விடாமல் எல்லாவற்றையும் மடியும்படி நூறி, பூர்ண ஞானமாகிய நுரையைக் கக்கி, வந்தெதிர்க்கின்ற வாதியரை வாயடக்கி, வேதமாகிய ஏழிசைக் குரல்களு மெழ ஆரவாரித்துக் கனைக்கின்ற அநேகவாயிரங் குதிரைகள் வந்து நின்றன. செல்வமுள்ள காலத்திலும் அது இல்லாத காலத்திலும் உயிருக்கு முடிவுண்டானாலும் ஞான தீரம் குறையாமையாகிய வீரத்தன்மையும், இன்சொல்லும், மோனவாளும், யாவருக்கும் இதஞ் செய்தலாகிய முயற்சியும் உடைய காலாட் படைகள் அநேக வாயிரமாக வந்து திரண்டு நின்றன. இத்தன்மையையுடைய நால்வகைப் படைகளும் கூடிச் செல்லும்போது, விவேக ராஜன் தனது இளைய மனைவியாகிய உபநிடதையைக் கீதையோடும் அங்கு வைத்து, சிரூபகனுதியர் தன்னைச் சூழ்ந்துவர, சுமதியோடும் அறிவுருவமாகிய தேர்மீதி லேறினான். அந்தச் சமயத்தில் மாதவரும் யோகியரும் விவேகன் வல்லமையால் மோகனுதியர் இனி மடிவார்களென்று மனமகிழ்

ந்து ஆநந்தக் கூத்தாடினார்கள். விவேக ராஜனாகிய சூரியன் தேரேறினவுடனே மோகனாதியாராகிய வஞ்சகர் தொழிலென்கிற குவளைமலர்கள் இதழ் குவிந்தன; பூமிதேவியின் முகமென்னுந் தாமரை மலர்ந்தது; விவேகராஜனது படைகள் நடப்பதனால் எழுந்த புழுதியானது நீர்க் குமிழிபோலப் பொய்யாகிய இவ்வுலக வாழ்க்கையை மெய்யாகக் காண்கிற அவிவேகிகளுடைய கண்களில் விழுந்து தூர்த்து விட்டது. சபதி நாயகனாகிய விவேகனது அறிவுருவாகிய தேரானது நல்ல சகுனங்களோடும், நாதமாகிய கீதங்களோடும், வேதங்களாகிய வாத்தியங்களோடும் தான் செல்லுதற்குரிய நெறியே சென்றது. சென்று காசிமா நகரத்தை யடைந்தவுடனே, அங்கிருந்த மோகனாதியர் பெருங் காற்றினால் பாசியானது நீரோ டொதுங்குவது போல ஒதுங்கினார்கள். விவேகன் அந்தக் காசிமா நகர முழுதும் சூரியப் பிரகாசம்போலப் பிரகாசிக்கக் கண்டான். அன்றியும், சூரியன் தான் செல்கதியா லிளைத்தபோது அந்த இளைப்பாறித் தங்கிச் செல்லுதற்குரிய உயர்ந்த கோபுரங்களையும், அந்தக் காசிமா நகரமாகிய பெண்ணானவள் மோக்ஷமாகிய பெருஞ் செல்வம் என்னிடத்துள்ளது யாவரும் வந்து அநுபவிக்கலா மென்று தன்கைகளால் அழைப்பதுபோலத் தோன்றுகின்ற கொடிச்சீலைகள் நெருங்கிய மதில்களையும், மற்றைத் தேவாலயங்கள் முதலியவற்றையும் கண்களிகூரக் கண்டுகொண்டே போய்க் காசி விசுவநாத சுவாமியின் சந்நிதியை யடைந்து, சுவாமியையும் அன்னபூரணியம்மையையும் தரிசித்துக் கண்களித்து, மயிர்பொடிக்கக் கண்களில் ஆநந்தக் கண்ணீ ரொழுகப் பூமியின்மேல் விழுந்து, சாஷ்டாங்கமாய் வணங்கியெழுந்து, கோயிலைப் பிரதக்ஷிணஞ்செய்து, ஸ்ரீ பஞ்சாக்ஷரத்தைச் செபித்து, பலவகையான தோத்திரங்களைப் பண்ணோடு பாடி, சுவாமியின் சந்நிதானத்திற் கெதிரே கை குவித்து அஞ்சலிசெய்து நின்று இவ்வாறு துதி செய்வானாயினன்:

‘பரதேவதையாகிய சிவபிரானே, முற்காலத்தில் எம்மினத்தார்களில் ஒருவர் உன்னைக் கல்லா லெறிய அவர்க்குக்

சாருனை ஈந்தருளின நின் கடைக்கண் எம்மினத்தாரல்லாதாரி லொருவன் பூவா லெறிய அவன் பொடியாய் விழ நோக்கின தென்றால், உன் திருவுளக் கிடையைத் தெரிந்தாரைவல்லார் யாவர்? சூழ்ந்து வணங்கின தொண்டரை மேன்மை யடை வித்து அவர்களை வாழச்செய்த உன் திருவடி உன்னை உன்னி ருப்பிடமாகிய கைலாய பர்வதத்தோடு தலையாற் சுமந்த ராவ ணனை அழுத்திவிட்டதின் கருத்து யாருக்குத் தான் புலப் படும்? எம்மினத்தோர் வைதாலும் வாழ்த்தினாலும் அவர்களு க்குப் பேற்றை யருள்செய்கிற உன் புன்சிரிப்பு முப்புரத் தாரை ஒருங்கே நீறுசெய்த திருவிளையாடலை யாரறியவல் லார்? நீ எழுந்தருளியிருக்கிற இந்நகரத்தில் வந்திறந்த எல்லா வுயிர்களும் முக்தி யடையுமானால் உயிர்களைப் படைப்போனா கிய பிரமனுக்கும் உயிர் கவரும் காலனுக்கும் என்ன வேலை யிருக்கின்றது?' என்றிவ்வாறு பலவகையாய்ப் புகழ்ந்து நின் றுருகா நின்ற விவேகனைச் சிவபிரான் தன் தேவியாகிய அன் னபூரணி யம்மையோடும் மனமகிழ்ந்து நோக்கி, மோகன் முதலானோரை யழித்து அத்துவிதத் தனி நாதனாகிய பரப் பிரமத்தைச் சிறை நீக்கக் கடவையென்று ஆசீர்வதித்துச் சிவபத்தியையும் காவலாக்கிப் போக விடை கொடுத்தருளின வுடனே, விவேகன் வணங்கி விடைபெற்றுவந்து திருமாலின் சந்நிதியிற்போய் அவரை வணங்கி அவரருளையும் ஹரிபக்தி யையும் பெற்று விடைகொண்டு நீங்கி, கங்காநதிக் கரையை யடைந்து தன் படைகள் தன்னைச் சூழ்ந்திருக்க அவ்விடத் தில் வாழ்ந்திருந்தான்.

விவேகன் காசிபுகு சருக்கம் முற்றிற்று.

---

29. படையெழுச்சிச் சருக்கம்

இவ்வாறு விவேகன் வந்திருக்கிற செய்தியை மோக வேந்தன், கேள்விப்பட்டு மிகுந்த கோபங்கொண்டு தன்ன ருகே யிருந்த படைத்தலைவரை நோக்கி அவரோடு சொல்லு

வானையினன்: 'நம்மால் மனங் கலங்கிக் காட்டிற் போய் ஒளித்திருந்த விவேகன் பட்டபாட்டையும் தனது அச்சத்தையும் நினையாமல் படைகொண்டு இந்த நகரத்தில் வந்திருக்கிறனென்று கேள்விப்பட்டும் அவனோடு போர் செய்யாமல் எவ்விடத்திற்போ யொதுங்கியிருப்போம்? அந்த விவேகன் ஓடாயிருந்த காட்டிலும் போய் அவனை யழிக்காமல் விட்டனர். இங்கு வந்திருக்கிறனென்று கேள்விப்பட்டும் போய்ப் பொருது வென்றேயில்லை, வந்து சொன்ன தூதர்பின்னும் சென்றே மில்லை. இப்படி நாமிருந்தால் நமக்கு யார்தான் அஞ்சுவார்கள்?' என்றிவ்வாறு பலவற்றையுஞ் சொல்லி, 'இனி என் படைகள் விரைந்து செல்லுதல் வேண்டும். ஆதலால், மதமென்கிற மதயானையின்மீது பழியாகிய பறையை வைத்து முழக்குங்கள், என் விடயத்தேரையும் விரைவில் கொண்டு வாருங்கள்' என்றான்.

இப்படி மோகன் சொன்னவுடனே காமன் எழுந்து நின்று, 'ஐயனே! உனது ஒப்பற்ற ஆண்மையைக் காண்பவர் உலகில் யாருளர்? அது இருக்கட்டும், இப்பொழுது போர்க்களத்திற் போய் நிருபகன் முதலானோரை அடியேங்கள் வெல்லும் விதத்தை எங்களுக்குக் கட்டளையிடக் கடவை' என்றான்.

காமன் இப்படிச் சொன்னவுடனே பழிப்பறை முழக்கங்கேட்டுப் படைகளெல்லாம் சிவன் உண்பதற்கு முன்னே பாற்கடலில் பரவின நஞ்சுபோலப் பரவின. எப்படியெனின், இரதிபதியாகிய காமன் சேனையானது செப்பொன் மணிச்சிலம்பு பொலியாகிய பறை சத்திக்க புருவங்களாகிய விற்களோடும் கண்களென்கிற அம்புகளோடும் கொங்கைகளாகிய யானைகளோடும் அல்குலென்னும் தேரோடும் கிளர்ந்தெழுந்தது.

கோபன் சேனையானது கோபமாகிய மதயானையோடும் குடிலமாகிய வலிய தேர்களோடும் உரத்த சொல்லாகிய வாத்

தியத்தோடும் புருவமாகிய நிமிர்ந்த விற்களோடும் நெருப்புப் பறக்கிற கண்களாகிய அம்போடும் மிகுந்த ஆவேசத்தோடும் புறப்பட்டது. வாயிதழ் துடித்தலும், உதட்டைப் பற்களால் அழுத்தலும், கடைக்கண்கள் நெருப்புப்போலச் சிவத்தலும், பாய்கின்ற புலியைப்போலப் பம்படத்தலும் ஆகிய செய்கைகளோடு கூடிய படைகள் அநேகமாகத் தொடர்ந்து நடந்தன.

உலோபனது படையானது யாசிக்கிற சத்தமாகிய மகுதளத்தோடும் ஏழுலகங்களிலும் செல்லு மாற்றலாகிய குதிரைகளோடும் கையேற்றலாகிய வாளாயுதத்தோடும் புறப்பட்டது.

சம்பாதித்த பொருளை யார்வந்து கேட்டாலும் இல்லையென்று கடுஞ்சொற் சொல்லலும், அயலாருடைய கைப்பொருளைப் பெறும்பொருட்டுக் கையை நீட்டலும், இந்தத் தொழில்களையே எப்பொழுதும் பாராட்டலும் ஆகிய இயற்கையையுடைய படைகளும் அளவற்றனவாகப் பிரயாணப்பட்டன.

வலிய மச்சரன் படையானது செல்வமுடையாரைக் குரூரமாகப் பார்க்கிற பார்வையாகிய ஈட்டியும் பொறாமையாகிய கொலைவாளும் பிறரை நிந்தித்தலாகிய அம்புகளும் கொண்டு வெளிப்பட்டது.

மானனது படையானது நானென்னும் பாசத்தையும் நல்லோர்க்கெதிரே குவியாத கையாகிய குடையையும் எப்படிப்பட்ட சமயத்திலும் எவரையும் வணங்காமையாகிய கதாயுதத்தையும் கொண்டு புறப்பட்டது.

மமதையின் தந்தையாகிய அகங்காரனது சேனையானது யாம் எழுது என்கிற கவண் கல்லையும், யாம் எல்லாமறிவோம் என்கிற மழுவையும் கொண்டுவந்து திரண்டு நின்றது.

இவ்வாறு மோகவேந்தனது படைகள் எல்லாம் திரண்டு முன்னே செல்ல, மோகவேந்தனும் காமன் முதலிய படைத் தலைவர் தன்னைச் சூழ்ந்துவரத் தானும் ஒரு தேர்மேலேறிக் கையில் நெருப்பும், மனத்திற் கொதிப்புமாக நின்றான்.

அப்பொழுது, அவனுக்குக் காணப்பட்ட கெட்ட சகுநங்கள் பலவா யிருந்தன. அவை யாவையெனின், படைத் தலைவர் வாய்கள் நீர் வறத்தலும், தேரிற் கட்டின குதிரைகள் தூங்குதலும், பேய்கள் தம் கைகளில் குறைக் கொள்ளிகளை யேந்தித் தேர்க்கொடிகளின் மீதேறிக் கூத்தாடுதலும் ஆகிய இவைபோல்வனவாகிய குறிகளே. அன்றியும், மேகங்கள் உதிர மழையைப் பொழிந்தன. பொன் மயமாகிய மேரு மலையும் அசைந்தது. பகற்காலத்தில் ஆகாயத்தினின்றும் சில நக்ஷத்திரங்கள உதிர்ந்தன. பூமியும் கிடுகிடென்று நடுங்கினது. சமுத்திரமுங் கலங்கிற்று. மேகமானது மின்னலில்லாமலே யிடித்தது. எல்லா நதிகளும் மேற்றிசை நோக்கி யோடின. மோகன் தோள்மாலை புலால் நாற்றம் வீசிற்று. அவன் படைத்தலைவருக்குப் புருவமும் இடதுதோளும் துடித்தன. இப்படிப்பட்ட கெட்ட சகுநங்களைப் பார்த்தும், மோகவேந்தன் சற்றும் அஞ்சாமல் இந்த க்ஷணமே விவேகனுயிரை யுண்பேனென்று தேர்மேலேறிச் சென்றான்.

இப்படி யிவன் வருவதைக் கேள்விப்பட்ட விவேகனாதியரும் தம் படைகளோடுங்கூடி எதிரே நடந்தார்கள். இவர்கள் நடந்தவிதமும் சிறிது சொல்வோம்:

நிரூபகன் சேனையானது விடயங்களாகிய வலிய பகைவரை யழிக்கின்ற வாளாயுதத்தோடும், எவ்வுடம்பையும் வெறுத்துக் கோபிக்கின்ற கோபத்தோடும், மாதர் செலுத்துகிற கண்களாகிய அம்புகள் தம்மீது தைக்காதபடி யணிந்த கவசத்தோடும் வெளிப்பட்டுக் காமனது வலி யழியும்படியாக நடந்தது.

பொறை யென்பவனது படையானது சிரிப்பென்கிற கவசத்தையும், மோன நிலையாகிய வீரத்தையும், இன் சொல்லாகிய வேலாயுதத்தையும், வணக்கமாகிய வில்லையும் கொண்டு கடுங்கோபத்தோடு நடந்தது.

விராகனது சேனையானது தைரியமாகிய சக்கரத்தையும், மனப்பற்றின்மையாகிய தண்டாயுதத்தையும், எவற்றையும் விரும்பாமையாகிய ஈட்டியையும் கொண்டு உலோபனை யழிக்க வுத்தேசித்துச் சென்றது.

அடக்கனது சேனையானது தாழ்ந்து மேன்மை யடைதலாகிய பேரிகையும், வெற்றியாகிய வெண்சங்கும், செல்வப் பெருக்காயிருக்கிற காலத்திலும் கடல்போல ஒடுங்குதலாகிய மனவலியும், ஆழ்ந்த நல் லறிவாகிய வச்சிராயுதமும், இவை போல்வன பிறவும் கொண்டு மமதையை வளைந்துகொண்டது.

சந்தோடனது பெரும்படையானது அந்நியர் வாழ்வையும் தமதுபோல மதித்தலாகிய எழுவும், அவரிடத்திற்செய்யும் அன்பென்னும் பாசமும், முகமலர்ச்சியாகிய குடையும் கொண்டு மச்சரனை வளைந்துகொண்டது.

சமன் தமன் என்னும் இருவர் சேனைகளும், மனம் ஐம்புலவழியிற் செல்லாதபடி தடுத்தலாகிய ஆயுதங்களைக் கொண்டு அகங்காரம் மானம் என்னும் இருவர் படைமீதுஞ் சென்றன.

மற்றும் விவேகராஜன் படைகள் யாவும் தத்தமக்குரிய ஆயுதங்களைக்கொண்டு புறப்பட்டன.

இவ்வாறு புறப்பட்டுவந்த விவேகனுதியர் படையும் மோகனுதியர் படையும் கடுங்கோபங்கொண்டு ஒன்றோடொன்று முடுகித் தாக்குவது எப்படியிருந்ததென்றால், வடவைத்தீயும் கருங்கடலும் ஒன்றோடொன்று போர் செய்வதுபோலிருந்தது. இப்படி இருதிறத்தாரும் போர்செய்யுங் காலத்

தில், கருநிறத்தையுமுடைய நீரானது வெண்ணிறத்தையுடைய நீரோடு கலந்தாற்போலக் காணப்படுதலால் எப்படிப் போர் செய்வதென்று விவேகன் படைத்தலைவர் கேட்க, விவேகன் அவர்களை நோக்கி, 'ஓ படைத்தலைவரே, நமது படையின்னதென்றும் பகைவர் படையின்னதென்றும் உங்களுக்குத் தெரியும்படி சில குறிகள் சொல்லுகிறேன், தெரிந்துகொள்ளுங்க' ளென்று சொல்வானாயினன்:

'பாலகன் வரும்போது பால் சுரக்கிற கொங்கைகள், நாயகன் வரும்போது அவனை மயக்குகின்றன. அதுபோல மேலோர் செயலுங் கீழோர் செயலும் வேறல்லவாயினும் அவரவர் மனத்தின் தன்மை வேறுபட்டிருக்கும். அறிவுடையாரும் அறிவில்லாதாரும் ஆகிய இருதிறத்தார்க்கும் வேற்றுமையாதெனின், அறிவுடையார் தமக்குப் பிறர்செய்த துன்பத்தைப் பொறுத்தலே யன்றி அவர்கள் இனிப் படுந் துன்பத்தைக் குறித்தும் மனம் வருந்துவார். அறிவில்லாதார் தமது சரீரத் துன்பத்தைக் குறித்து மனந்தளர்வார். மனமுருகுஞ் செய்கை நல்லார் பொல்லார் என்கிற இருவர்க்குமுளதாயினும், நல்லார் ஈச்சுரனது அருட்கண்ணோக்கத்தால் உருகுவர்; பொல்லார் மாதரது மருட்கண்ணோக்கத்தால் உருகுவர். பொன்னும் பித்தளையும் நிறத்தால் ஒத்திருக்குமாயினும், உரை கல் முதலிய பரீக்ஷைகளால் வேறாகும். அதுபோலப் பகைவர் படையும் நமது படையும் செய்கையாலும் குணத்தாலும் வேறுபடும். இப்போது நான் சொன்ன குறிகளைக்கொண்டு பகைவர் படையையும் நம் படையையும் பாலையும் நீரையும் பிரிக்கிற அன்னப்பறவைபோல வேறு பிரித்துப் பகைவர் படையை அழித்துவாருங்கள்' என்றான். அவ்வாறே நிரூபகன் முதலான படைவீரர் சென்று ஊக்கத்தோடும் பகைவர் படையைத் தாக்குதலும் அப் பகைவர் படை வலியிழந்து முறிந்தோடிச் சாய்ந்தது.

படையெழுச்சிச் சருக்கம் முற்றிற்று.

---

30. காமனுதியர்வதைச் சருக்கம்



இவ்வாறு முறிந்தோடுகிற தம் படைகளை நோக்கின மோகன் படைத் தலை வீரராது புதல்வராகிய கலகன் முதலானோரும் அவர்கள் புதல்வரும் உலகம் நடுங்கும்படி வாளாயுதங்களை யேந்திக்கொண்டு வந்தார்கள். அவர்கள் பெயர்கள் யாவையெனின்:— விடயாநந்தன், கலக்கன், வயிரன், அனந்தன், உற்சாகன், விகற்பன் முதலியவையேயாம். இவர்கள் யாவரும் வஞ்சனையாகிய தேரையும், கோபமாகிய குதிரையையும், மதமாகிய யானையையுங்கொண்டு விவேகன் படையைச் சூழ்ந்துகொண்டார்கள். துர்க்குணமாகிய வயிர வாளும், கோபமாகிய கொடிய வேலும், வன்குணமாகிய வலிய தண்டும், மனக்கரவடமாகிய வில்லும், இருட்குணமாகிய அக்கினிக் கணைகளும் ஏந்தி எழுந்துவந்து தாக்கி விவேகன் படையைச் சாய்த்தோடச் செய்தார்கள். இதைக் கண்ட விவேகன் படைவீரர் எதிர் நில்லாதோடினது யாதுக்கெனின், அவர்கள் ஊரிலுமிராது வனத்துக்குப் போய்விட்டவர்கள் இப்பொழுது அவர்களுக்கெதிரே நிற்பார்களோ? ஆனால் இவர்கள் தம் பகைப்படைக்கு ஒதுங்கிப்போவது எது போலிருந்ததென்றால், ஆட்டுக்கடாவானது உறுதியாய்ப் பாய்வதற்குப் பின் வாங்குதல் போலிருந்தது. இதனை ஆலோசியாத பகைப்படைஞர் மிகவு முயர்ந்தவரா யெண்ணி நுனிக்கொம்பிலேறினதுபோல மிகுதியாய்க் கர்வித்ததை விவேகன் படைத்தலைவர் கண்டார்கள். அவர்கள் பெயர்கள் யாவையெனின்:— சுகன், நிருவிகற்பன், சுசகன், சத்தியன், நியாயன், அகமுகன், தவன், சன்மானன், அவிரோதன், பரோபகாரன், சமாதானன், தர்மன், தீர்க்காயு, மனந்தெளிந்தோன், இயமன், அற்புதயன் என்பவையேயாம். இவர் பதினறுவரும் விவேகனை வணங்கி, எங்களுக்கு விடைதந்தால் பகைப்படையை ஒரு கணத்தில் அழித்துவருவோம் என்று கேட்க, அப்படியே விவேகராஜனும் அவர்களுக்கு விடை தந்தனுப்பினான்.

இவ்வாறு விவேகனால் அனுப்பப்பட்ட சுகன் நிருவிகற்பன் முதலிய படைவீரர்கள், விரதமே யானையாகவும், வேதமே குதிரையாகவும், சத்தியமே விமானமாகவும், ஞான தத்துவங்களே தேராகவும் கொண்டு அவரவர்களுக்கேற்ற வாகனங்களின்மீ தேறினார்கள். ஏறினவர்கள் ஹரிநாம சிவநாமங்களாகிய வாளாயுதங்களைக் கைக்கொண்டு, விபூதி கோபி சந்தனங்களாகிய கவசத்தைப் போர்த்துக்கொண்டு, சிநேகமும் நல்லொழுக்கமும் ஆகிய சங்குசக்கரங்களைத் தாங்கி தீய வஞ்சகராகிய காமனாதியரை வந்து சூழ்ந்துகொண்டார்கள். அப்பொழுது மோகனாலேவப்பட்ட காமன் முதலானோர் மிகு கோபங்கொண்டு, இது ஊழிக்காலமாமென்று சொல்லும்படி ஆரவாரித்தெழுந்து வந்து, நிரூபகன் முதலானோரை, வாயுவானது ஆதிசேடனை யெதிர்த்து நின்றாற்போல, எதிர்த்து நின்றார்கள். அன்றியும், நிரூபகன் முதலானோர் சர்ப்பசமூகத்தின் மீது கருடன் சீற்றங்கொண் டெழுந்தாற்போ லெழுந்து, அம்பு, வாள், ஈட்டி, வேல் முதலிய ஆயுதங்களைப் பிரயோகித்துக் காமனாதியர் வலியழியும்படி மோதினார்கள். இவ்வாறு போர்புரிந்த காலத்தில் காமன் மகன் தவன் கைவாளினால் இறந்தான். மானன் மகன் சன்மானனால் உயிர் நீங்கினான். கலகன் வந்தெதிர்த்துச் சமாதானனால் உயிரிழந்தான். துக்கன் சுகனால் நசித்தான். அக்கிரமன் நியாயனால் ஆவி நீங்கினான். கலக்கன் நிச்சந்தேகனால் நிலவுலகத்தை விட்டான். வயிரன் அவிரோதனால் மாண்டான். பரத்துரோகன் பரோபகாரனால் மடிந்தான். அசத்தியன் சத்தியனால் முடிந்தான். அனந்தன் அற்புதயனால் அழிந்தான். வெகு முகத்தன் அகமுகத்தனால் ஒழிந்தான். விகற்பன் நிருவிகற்பனால் கழிந்தான். அசுத்தன் சுசீலனால் வீடினான். சஞ்சலன் தருமனால் ஒடினான். விடயசங்கன் இயமனால் இறுதி யடைந்தான். இவ்வாறு தத்தம் பகைவரோடு போர் செய்து காமன் முதலானோர் மைந்தர் இறந்ததைக் காமனாதியர் கண்டு, புத்ரசோகத்தால் தனித்தனி புலம்புவாராயினர். எப்படியெனின், காமன் தன் புதல்வனாகிய விடயாநந்தன் இறந்ததைக் குறித்துத்

தன் தேவியாகிய இரதியோடு மனம்வருந்தி, 'அப்பா மகனே, உன்னைக்கொண்டு எல்லாவுயிர்களையும் மயக்கி நான் வாழ்ந்திருந்தேன். நீ போனபிறகு இனி நான் உயிர் வாழே' னென்றான். கோபன் தன் புதல்வனாகிய கலக்கனை யிழந்ததனாலுண்டான துக்கத்தால் மிகவும் மனம் புழுங்கி, 'இனி நான் இங்கிருந்து அடையும் பயன் யா' தென் றரற்றினான். இடம்பன் தன் மகனாகிய அசத்திய னிறந்ததற்கு மனந்தளர்ந்து, 'மகனே நானும் உன் தாயாகிய வஞ்சனையும் இனி உயிர் வாழமாட்டோ' மென்றான். இவ்வாறே மற்றையோராகிய மதன், வயிரன், சங்கற்பன் முதலானோரும் தத்தம் புத்திர நாசத்தைக் குறித்து வருந்திப் புலம்புவதை அகங்காரன் நோக்கி அவரை யழைத்து, 'மக்களை யிழந்த நாமெல்லோரும் அஞ்சாமற் சென்று அந்த விவேகன் படைத்தலைவராகிய நிரூபகனாதியரைப் பொருது வெற்றியடையாமல் இப்படிப் புலம்புவது நமது வீரத்தன்மைக்கு அழகாமோ?' என்றான். அகங்காரன் இப்படிச் சொல்லுதலும், அந்தச் சொல்லைக் கேட்ட காமன் முதலானோர் உயிர் நீங்காதிருந்த கோபனைத் தமது மனத்திற் கொண்டு எழுந்துவந்து மோகவேந்தனை வணங்கி, 'எம் புதல்வரைக் கொன்ற பகைவரை இப்பொழுதே நாங்கள் போய் நாசப்படுத்திவருகிறோம், எமக்கு விடை தந்தருளல்வேண்டு' மென்றார்கள். அதற்குச் சம்மதித்த மோகவேந்தனும் அப்படியே விடை தந்தனுப்பினான்.

அப்பால் காமன் கோபன் முதலானோர் விரைவிலெழுந்து சென்றார்கள். எப்படியெனின், காமன் தன் கரும்பு வில்லில் அரும்பு நாணிட்டு, தாமரை முதலாகிய பஞ்ச பாணங்களைத் தொடுத்துக் குங்குமக் கவசம் பூண்டு, முதுகில் அம்பறாத் தூணியும் அரையில் உடைவாளும் ஒற்றைக் காலில் புகழ்க் கழலும் அணிந்து, முற்காலத்தில் சிவபெருமானுக்கெதிரே போனதை நிகர்க்குமென்று சொல்லும்படி, இருளாகிய மதயானை, குயிலாகிய எக்காளம், மீனக்கொடி, பெண் படை, கடற்பேரிகை, சந்திரவட்டக் குடை முதலிய சின்னங்க

ளோடும் தென்றற்றேரின்மீ தேறினன்; இரதியும் வசந்தனும் தொடர்ந்தார்கள். இப்படிக் காமன் நேரேறிப் புறப்பட்டா னென்பதை யறிந்த நிருபகன் தன் தேவியாகிய யுத்தியோடுங் கூடி விசார வாள் ஞான கவசம் தைரியப் படை முதலியவற்றோடும் விடய கோபம் அதிகரிக்க விரதத் தேர்மேலேறி வந்தான்.

கோபனனவன் புருவவில் வளைத்து, கண்ணினின்றும் சிதறுகிற நெருப்புப் பொறிகளாகிய அம்புகள் தாங்கி, கோபங்கொண்டு,பற்களால் உதட்டைக் கடித்தலாகிய முரசம் முழங்க, வெயர்வையாகிய கவசம் பூண்டு, வன்சொல்லாகிய சுரிகையைக் கைப்பிடித்து, ஹிம்ஸை யென்னுந் தேவியோடு கூடிப் பெருமூச்சென்னும் தேர்மே லேறினன். இப்படி இவன் வருகையை இவன் பகைவனுகிய பொறையென்பவன் கண்டு மௌனமாகிய தண்டும் இன்சொல்லாகிய அம்பும், வணக்கமாகிய வில்லும், முகமலர்ச்சி யென்னும் குடையும், புன்சிரிப்பாகிய கவசமுங் கொண்டு தன் தேவியாகிய மரியாதையோடும் மெய்ஞ்ஞானமாகிய மதயானைமீ தேறி வந்தான்.

அதன் பிறகு லோபனனவன் இடம்பன் வஞ்சனை யென்பவர் தன்னைச் சூழ்ந்துவர, சரீரம் தளர்ந்தாலும் முயற்சியாகிய வலியை விடாமற் கைப்பொருளாகிய கதாயுதத்தோடும் இச்சையென்னுந் தேவியோடுங் கூடி வாணிக விமானத்தின்மேலேறி வந்தான். இவன் வருகையை யுணர்ந்த விரக்தியும் நிராகனும், அமிர்தசீலனும் அசோரனும் தம்மைச் சூழ்ந்துவர, வைராக்கிய மென்னும் யானையின்மேல் எல்லாப் பொருள்களையும் வெறுத்தலென்னும் கூர் வேலும் விரதமாகிய பாசமுங்கொண்டு எதிர்த்து வந்தார்கள்.

அப்பால் மதனனவன் இவ்வுலகத்தில் தன்னை நிகர்ப்பவர் ஒருவருமில்லை யென்கிற விருதும், லகரியாகிய சாமரமும், மருட்குடையும், தீமையையே செய்கின்ற செருக்கென்னும்

படைகளும் பொருந்தப் பெற்றுத் தன் தேவியாகிய மறதி யென்பவளோடுங் கூடி இறுமாப்பு என்கிற யானையின்மே லேறி வந்தான். இந்த மதன் விந்தமலையும் கடலும்போல் வருவதை யறிந்த அடக்கனானவன், அகத்திய முனிவர் போல, முன்னுணர்ச்சியும் உண்மையும் ஒழுக்கமும் வணக்கமும் வலிய படைகளாய்ச் செல்லா நிற்க, பெருங் கல்வி யென்னும் யானையின்மே லேறிவந்தான்.

மச்சரன் என்பவன் தன் தேவியாகிய அசூயையுடனே கொடுந்தொழில் என்னும் படைகளோடும் வந்ததை யறிந்த மகிழ்ச்சி தன் நாயகனாகிய சந்தோடனோடு, உள்ளன்பும் செஞ்சொல்லுமாகிய படைகள் சூழக் களங்கமற்ற மனக் குதிரையின்மீ தேறினாள்.

அப்பால் அறியாமையை யானையாகக் கொண்டு தமக் கெதிரின்மையைச் சொல்லுதலென்னும் ஆயுதத்தோடு மம தையும் அவள் நாயகனாகிய அகங்காரனும் வருதலை யுணர்ந்த சமனும் அவன் தேவியாகிய சாந்தியும் மதியாகிய சக்கரத் தைக்கொண்டு இந்திரிய மென்னும் மலையையிடித்துத் தகர்த் தலாகிய யானையின்மீ தேறி வந்தார்கள்.

பிறகு தாமதன் அதிநித்திரை யென்னும் தன் மகனும் சோம்பி யென்னும் மனைவியும் தொடர்ந்துவரப் புறப்பட்ட தை யறிந்த ராசதன், முயற்சியென்னுந் தன் மனைவியோடும் சிரத்தை யென்னும் மகளோடுங் காரியன் என்னும் மகனோ டும் ஈனர்புத்தி யென்னும் தேர்மே லேறி வந்தான். இவர்கள் இப்படி வருவதை யறிந்த சத்துவன், தன் தேவியாகிய புனி தையோடும் புதல்வனாகிய தருமனோடும் புதல்வியாகிய சிரத் தையோடும் தவயோகியர் மனமாகிய தேர்மீ தேறி வந்தான்.

அப்பால் கற்பனைக்கு மணாளனாகிய சங்கற்பன் நெருப் புப்போல வருவதை யறிந்த நிருவிகற்பன் நீரைப்போலப் புறப்பட்டான்.

சந்தேகன் வருவதை யுணர்ந்த நிச்சயன் யானையை யில க்காக்கி ஒரு சிங்க மெழுந்ததுபோல எழுந்தான்.

அப்பால் கலியன் தன் மனைவியாகிய கபடியோடும் மக னாகிய அதர்மனோடும் வருவதையறிந்த சுசீலன் தன் மனைவி யாகிய மைத்திரியோடும் மகனாகிய தர்மனோடும் எதிரே வந்தான்.

அப்பால் உலகாயதன் முதலாகிய மதவாதியர் வருவதை யறிந்த வைதிக புராதநரும் வந்தார்கள்.

இவ்வாறு வந்த இருதிறப் படைகளும் ஊழிக்காலத் தில் எழுகின்ற சண்டமாருதமும் ஊழித்தீயும் ஒன்றோ டொன் றெதிர்த்துத் தாக்குதல்போலத் தாக்கின.

ஞான சூரராகிய நிரூபகன் முதலானோரும் அஞ்ஞான வீரராகிய மோகன் முதலானோரும் தத்தமது நால்வகைப் படைகளை யேவியும் அம்பு வேல்முதலாகிய ஆயுதங்களைப் பிரயோகித்தும் போர்செய்தது அமிர்தமும் நஞ்சும் எதிர்த் துப் போர்செய்தல்போ லிருந்தது.

முற்காலத்தில் ஸ்ரீராமரது வாநர சேனையோடு இராவ ணனது ராக்ஷஸ சேனையும், சுப்பிரமணியரது தேவ சேனை யோடு சூரபன்மனது அசுர சேனையும் போர்செய்ததுண்டு. அந்தப் போர்கள் இந்தப் போருக்கு நிகராக மாட்டா. மேகங் கள் பல கூடிப் பெருமழை சொரிந்தாலும் ஒரு பெரிய மலை க்குச் சலநமுண்டாகாததுபோல, மோகனது படைத்தலைவ ராகிய காமனுதியர் விரகாக்கினியை மூள்விக்கிற சோகாஸ்திர முதலிய ஆயுதங்களைப் பிரயோகித்தும் விவேகன் படைஞ ரைச் சிறிதும் மெலியச் செய்யவில்லை. விவேகன் படைஞர் பிரயோகித்த யுக்தியென்னும் அம்புவந்து உடல்முழுதும் தொளைத்தும் மோகன் படைஞராகிய காமனுதியர் சிறிதும் அஞ்சாதவரா யிருந்து போர்செய்தார்கள். உலகத்தில் பலர்

இறந்தொழிவதைக் கண்டும் தம்மை யென்றும் இறவாதவராய் மதித்திருப்பவர்க்கும் அச்சமுண்டாகுமோ? மோகன் படைகள் அஞ்சாதெதிர்த்துப் போரிட்டும் தாம் இறந்தொழிவதன்றி வேறு பயன் காணவில்லை. சிங்கக் கூட்டத்துக்கெதிரே யானைக்கூட்டங்கள் பயமற்று நின்று போரிட்டாலும் வெற்றியடைதலுண்டென்று கதையினுங் கேட்டறிந்ததுண்டோ? இல்லை. இப்படியிருக்கிற சமயத்தில் விவேகன் படைஞரெல்லோரும் மணிமந்திரங்களால் வசப்படாத பாம்பின் விஷப் பல்லைப் பிடுங்கி அதை வசப்படுத்தல்போலக் காமஞதியரது செருக்கழிந்தொழியும்படி கொடிய ஆயுதங்களைப் பிரயோகித்தார்கள். அந்தக் கொடிய ஆயுதங்கள் யாவையெனின்:— வேத வாள், விரத பரசம், விழிப்பெருங் கருணை வேல், மெய்யுணர்வாகிய கதாயுதம், இன்சொல்லாகிய அம்பு, சந்தோஷசித்தமாகிய ஈட்டி, வைராக்கிய மென்கிற வச்சிராயுதம் என்பனவைகளே. இவ்வாயுதங்களை இவர்கள் மேன்மேலும் பிரயோகிக்கக் காமஞதியர் படைகள் முறிந்தோடத் தலைப்பட்டன. எப்படியென்றால், காமன் படைஞர் நிலைகுலைந்தார்கள்; குரோதன் படைஞர் உயிரிழந்தார்கள்; உலோபன் படைஞர் போர்க்களத்தைவிட்டோடினார்கள்; மதன் படைஞர் மடிந்தார்கள்; மச்சரன் படைஞர் உடல் துணிந்தார்கள்; கவுடன் படைஞர் வாய் புலர்ந்தார்கள்; மானன் படைஞர் திசைதப்பியோடினார்கள், இராசத தாமதர் படைஞர் உயிர்விட்டார்கள்.

இவ்வாறு போரி லிறந்தவர்கள் போக மற்றவர் புறத்திலோடினதையும் விவேகன் படைஞர் தொடர்ந்து வந்ததையும் நோக்கின காமன், தன் கருப்புவில்லை வளைத்துப் புஷ்பபாணங்களைத் தொடுத்துத் தென்றற்றேரேறி மாதர்ப்படையோடு இருளாகிய யானையைச் செலுத்தி, அறிவாகிய கவசம் பூண்ட விவேகன் படைஞர்களுடைய நெஞ்சிலும் மார்பிலும் புயத்திலும் பல கணைகளைப் பிரயோகித்து, மாதர் சேனைகளோடு தானும் போர்செய்த விதத்தைச் சொல்லவல்லார் யாவர்? விவேகன் படைஞரது உடம்பின்மேல் மாதர் கண்க

ளாகிய அம்புகள் கோடாநுகோடியாய்ப் பாய்ந்தும் அவர்கள் சிறிதும் மனங் கலங்கவில்லை. காமனது அம்புகள் பாய்ந்த போதும், அவை யாவும் கற்பாறைமீ தறைந்த முளைபோலப் பயன்படா தொழிந்தன. அந்தச் சமயத்தில் நிரூபகனும் யுக்தியோடு கூடின தேரைக் காமனது தேருக்கெதிரே செலுத்தி நின்று, காமன் விட்ட புஷ்ப பாணங்களைத் தன்கை வாளினால் வெட்டி, அவனது மீனக்கொடியையும் அறுத்து வீழ்த்தினான். அப்பொழுது காமனானவன் கரிய இருட்காலத்தில் களவாக நல்ல அழகும் இளமைப் பருவமும் அன்புமுள்ளவளாகிய அயலான் மனைவியொருத்தி வலியவந்து தழுவுதலாகிய பாணமொன்றனை யேவுதலும், அந்தக் கணையை நிரூபகன் நிராசை யென்னுங் கணை யொன்றினா லறுத்துத் தள்ளினான். அன்றியும், மாதர் உடம்புகளைப் பைம்மறியாய்ப் பார்த்தலாகிய வேலாயுதத்தை யேவிப் பொடியாக்கினான். மறுபடியும், காமன் அநேக கோடி பாணங்களை யேவ, அவன் கருப்புவிற்கள் முறிந்து போனவற்றுக்கோ ரெல்லையில்லை. தவச்செல்வனொருவனை ஒரு அறிவில்லாதவன் வைது இளைத்ததுபோல, காமன் தன் வல்லமை முழுதும் நிரூபகன் மேற் காட்டியும் ஒருபய னடையவில்லை. முற்காலத்தில் பரமசிவன் அற்பகாலத்தில் தன் நெற்றிக்கண்ணா லெரித்துவிட்ட குறையுமொழியும்படி ஆராய்ந்து தெளிதலென்னும் கணை யொன்றினால் உயிர் நீக்கினது மல்லாமல் தனது மனைவியாகிய யுக்தியைக் கொண்டு இரதியையும் வெல்லுவித்தான்.

காமன் உயிர் நீங்கினபிறகு கோபன் மனம் பதைத்து, ஹிம்சை யென்பவளைத் தன் நெடுமூச்சுத் தேர் செலுத்தும்படி நியமித்து, பொறையனது உயிரை வாங்குவேனென்று கடுஞ்சொற்களாகிய கவண்கற்கள் அநேககோடிகளை விடுத்தான். ஞானவீரன் அவை யாவற்றையும் மோனமாகிய ஒரு கேடகத்தால் நீறுபடுத்தினான். மறுபடியும் கோபனானவன் புருவமாகிய வில்லை வளைத்துக் கண்களிலிருந்து வெளிப்படுகிற நெருப்பாகிய கணைகளைச் செலுத்த, அவற்றையும் பொ

ஷ்றயன் இன்சொல்லாகிய வாளினுல் விலக்கினுன். மேலும் கோபன் பிரானையைத் தன் கையா லறைய அதைப்பொறை யன் புன்சிரிப்பு என்னும் வேலினு லொழித்துக் கோபனது உயிரை நீக்கி உடம்பையும் கீழே விழுத்தினுன். இப்படிக் கோப னிறந்ததைக் கண்ட ஹிம்ஸை யென்பவள், மிகவுந் துக்கித்துத் தானும் உயிர்விட்டாள்.

அப்பால், உலோபன் விராகனை உயிர்வாங்குவேனென்று சினந்துவந்து, பஞ்ச காலத்தில் ஒருவறியன் வந்திரக்க இவன் ஏழையென்று நினைத்து அன்பில்லாதவனுண்பிந்தஉணவென் னும் வேலாயுதத்தை விடுக்க, விராகன் அந்த வேலாயுதத்தை அவ்வுணவைமறுத்த லென்கிற ஒரு வெற்றிவேலால் வெட்டி விழுத்தினுன். இழிகுலத்தோர் கொடுந் தொழிலாற் சம்பாதி த்த பொருளை நல்ல நாட்களில் தருமதானஞ் செய்தலென் னும் கடுங்கணையொன்றை உலோபன் செலுத்த அதை விரா கன் மேலோரிடத்திலும் இரவாமை யென்னுங் கணையொன் றினுல் வெட்டித் தள்ளினுன். மறுபடியும், லோபன் தன் மனையாள் இச்சிக்கும் பொருளாகிய அம்பைச் செலுத்த, அதையும் விராகன் தன் இயற்படையாலறுத்து எந்தப்பொரு ளையும் வேண்டாமையென்னும் வேற்படையை யேவினவு டனே, லோபனும் அவன் மனைவியாகிய இர்சையும் மடிந் தொழிந்தார்கள். அப்பால் ஆங்காரன் முதலானோருடைய வலியைச் சமன் முதலானோர் அழித்தொழித்தார்கள். இந் தப்பிரகாரம் காமனுதியர் இறந்தொழிதலும், வைதிகராகிய விவேகனுதியர்மேல் சார்வாகன் முதலானோர் போர் செய்யத் தொடங்கினுர்கள்.

காமனுதியர் வதைச்சருக்கம் முற்றிற்று.

---

31. உலகாயதன் வதைச் சருக்கம்

கொடுங்கோல் செலுத்தி யுலகத்தையாளுகின்ற மோகன் அடிமைத் தொழிலைச் செய்கின்ற மூர்க்கருள்ளே வேத நெறிக்குப் புறமாகிய மதங்களை மேற்கொண்டு விவேகன்

படைமேல் புலிபோலப் பாயாநின்ற கொடியோர் கூட்டத்தி லொருவனாகிய உலகாயதனென்று சொல்லப்பட்ட ஒரு கொடியவன், மின்னற்கொடிகள் ஆகாயத்தை விட்டு இவ்வுல கத்தில் வந்தாற் போல விளங்குகின்ற மாதரது போகத்தை யநுபவிக்காமல் வீணே பொழுது போக்கி என்ன பயனை யடையத் தவஞ்செய்ய முயல்கின்றீர்? அறிவிலிகாள்! என்று உலகத்தாரை யிகழுஞ்சொல்லை முன்னாகச் சொல்லிக்கொண்டு வாதப்போர்க்களத்தை யடைந்தான். அடைந்தவன் விவேகன் படையிற் புகுந்து சிற்றறிவாகிய மதயானையைத் தார்க்கிக ராஜனெதிரே நடத்தி, தெளிவில்லார் சொன்ன நூலாகிய வில்லை வளைத்துத் தீத்தொழிலாகிய நாண்பூட்டி. மையலையுண் டாக்குகின்ற சொல்லாகிய கணைகளைத் தொடுத்துப் போர் செய்யத் தொடங்கினான். எப்படியென்றால், வேத வேதாங் கங்களின் நெறிகளை யாராய்ந்தறிந்த தார்க்கிகராஜன் தோள் பூரிப்பைக் கண்டு, இவன் நெஞ்சு பறைபறைந்தாலும் நேரே நின்று போர் செய்வானென்று தெளிந்து வஞ்சகனாகிய உல காயுதன் சில சபத வார்த்தைகளைச் சொல்வானாயினான். குளிர்ந்த நதிநீரை விட்டுக் கானனீரால் தாகந் தணிப்பவர் போல மாதரது சுகாநுபவத்தைவிட்டு முத்திப்பயனை யடை யு மூர்ந்தர் இடிபோன்ற விதண்டாவாதிகளால் வருந்திப் புண் பட்ட செவி குளிரவும் மோகன்கேட்டு மனமகிழவும் சொல் லுகிறான்: மனமுதலாகிய ஆறு பொறிகளாலும் காணத்தகு ந்த காட்சிப்பிரமாணமல்லாமல் அநுமானம் உபமான முதலிய வெல்லாம் யாம் விரும்பேம்; அவற்றை விரும்புவோர் மெய் யுணர் வில்லாதவ ராவர். அந்தப் பிரமாணங்களைக் கொண்டு அளவிட்டறிதல் யாவர்க்கும் அரிது. பூதம் எவ்வியல்புடைய தென்றால், கடின சீதங்களாகிய இயல்போடு சலநமே வேறா கப் பெறப்படுகின்றன. அந்தப் பூதங்களாவன: நிலம் நீர் நெருப்பு வாயுவாகிய இவைகளே; அவற்றின் குணங்கள் கந் தம் இரதம் உருவம் ஊறு என்பனவே; இவை நித்தப்பொரு ள்கள். இவை ஒன்றொடொன்று சம்பந்தித் திருப்பதும் இய ற்கையேயாம். பல வடிவங்களாயிருக்கிற கடாதிகள் மண்ணி

லுண்டாதல் போலப் புத்தி குணம் பொறிபுலன்றிகள் யாவும் அந்தப் பூதங்களி லுண்டாகும்; எதுபோல வென்றால், கடலி லுண்டாகின்ற குமிழியைப் போலாகும். ஒரு பூதம் நீங்கி ஞல் அதன் புலனுமொடுங்கும். மற்றுள்ள சராசரங்கள் நிலை பெற்றிருக்கும். அவை போலக் காரியங் கெட்டால் அதுவும் தன் காரணத்திலடங்கும். இவ்வகையாய்ச் பேசுகின்ற சபத வார்த்தைகளை யிகழ்ந்து பின்னைப் படுத்துகின்ற மகைவரது பெரும்படை நடுங்கும்படி அவன் ஊகமென்னும் படை சேர்த்துப் போரில் வெற்றியடைய முயல்வானுயினன்.

'நானிவ்வாறு சொன்ன இந்தச் சூளுறவுக் கெதிராக உட லெடுக்கச் செய்யும் வினையும் ஆன்மாவும் வினைப்பயன்களை நுகர்விக்கும் இறைவனும் உண்டென்று சொல்லுதல் மலடி மகன் முயற்கொம்பிற் கால்வைத் தேறி ஆகாயத்திற் பூத்த தாமரை மலரின் வாசனையை நுகர்ந்தது போலாகும்.

ஒருவன் செய்த கருமம் அவனைத் தொடருமென்றால், இவ்விடத்தில் இறந்துபோனபோது தொடரும் விதம் யாது? தூலவினை யழிந்தாலும் விரைவா யொடுங்கிச் சூக்குமத்தை யடையும்; தீபம் அவிந்தால் ஒளி யெங்கே யுண்டாயிருக்கும்? இதற்கு விடை சொல்வாயாக. அறிவும் உருவும் ஒவ்வாதிருப் பது கருமத்தாலே யென்னில், விரல்கள் ஒன்றையொன் ெருவ்வாமல் நீண்டும் குறுகியுமிருப்பது எந்தக் கருமத் தாலே சொல்லக்கூடவை. இன்பதுன்பங்கள் கருமத்தாலே உண்டாவன வென்றால், நீர் சந்தனம் முதலியவைகளும் நெருப்பும் பொருந்துதலால் உடம்பிலுள்ள தோல் முதலிய வை சுருளுதல் குழைவடைதல் முதலிய செய்கைகள் நிகழு கின்றன. இதற்குக் காரணமாவது எந்தக் கருமம்? உடற்குண மல்லாமல் வேறே ஆன்மாவுண்டென்றால் அவ்வான்மா கூடற்புரையில் புகுந்திருக்கிறனே? அறு பொறியாலும் அவ்வான்மா அறியப்படுவோ னல்ல னென்பாயாகில், அச் சொல் ஆமை மயிருக்கும் முயற் கொம்புக்கும் அளவு சொல் லுதற்கு நிகராகும். இறைவன் அருவமாகில் ஆகாயம்போல

அறிவில்லையாகும். உருவமாகில் பூத சம்பந்தியாகி லொன்றுகும். இவ்விரண்டு தன்மையு மூண்டென்றால் அச்சொல் ஆகாயமானது இமயமலையை யேந்திக்கொண்டு தெரு வழியாய்ப் போயிற்றென்று ஒருவன் சொல்லுவதற்கு நிகராகும். பூதங்களால் அன்னமுண்டாகும்; அதனால் உடல்களும் புத்தி மனங்களும் வேறு வேறாய்த் தோன்றும். அறிவில்லாதவனே! இவ் விஷயங்களையெல்லாம் முன்னமே வேதங்கள் மொழியா நிற்கவும் உலகத்தார் மூர்க்கராய்த் தெளிவில்லாமல் அலைகின்றார். இதென்ன ஆச்சரியம்! நீர்ப்பெருக்கில் நின்றும் நாவறண்டு தாகத்தோடு நிற்கின்ற அறிவிலிகள்போல மேலுலகத்திற் சென்று வெறும்பயன் பெறவிரும்பி இவ்வுலகத்தில் மின்கொடிபோன்ற மாதரது சுகானுபவத்தை யிழந்து மாண்டு போகின்ற பேயர்க்கு அறிவுறுத்த வல்லார் யார்? இந்திரன் தன் மனைவியாகிய இந்திராணியைத் தன் தொடைமீது உட்கார வைத்தும், பிரமன் தன் மனைவியாகிய சரஸ்வதியைத் தன் நாவிற் பதித்தும், விஷ்ணு தன் மனைவியாகிய இலக்குமியைத் தன் மார்பிலணைத்தும், சிவன் தன் மனைவியாகிய பார்வதியைத் தன் இடப்பாகத்திற் சேர்த்தும் மாதர் சுகானுபவத்தை அனுபவியாநின்றார்கள். ஆதலால், நீங்களும் இந்த மின்கொடி போல்வாராகிய மாதரை விருப்பத்தோடு கூடிச் சுகித்து வாழ்ந்திருங்கள். மூங்கில்போன்ற தோளிணையுடைய மாதரது பாதத்தி லூட்டிய செம்பஞ்சின் சுவடு தம் தலைமீது படும்படி அவரது புலவியை நீக்கி, இளமுலைப் போகத்தை யநுபவிக்காதவர்களாய், உமியைக் குத்திக் கைநோவார்போலப் பொய் வேஷந்தாங்கிச் சிலர் இவ்வுலகில் திரிவர். இதென்ன பாவம்! மாதரது கனத்து இறுமாந்து விம்முகின்ற ஒளிபொருந்திய முலைத்தடத்தில் மூழ்கி அவரது சிவந்த அதரமாகிய புதிய அமிர்தத்தையுண்டு, அவரது கூந்தலாகிய மணமலர் பெய்த சோலையின் இனிய நிழலில் இன்புற்று வாழ்ந்திராமல் சிலர் வீணாகவே காட்டில் காய் கனி கிழங்குகளைப் புசித்து மறுமையின்பத்தை விரும்பித் திரியாநிற்பர். பிணங்கிய மாதரைப் பிணக்கந்தீர்த்து மகிழச்செய்வதும், அவரைக்

கூடி இன்புறுவதும் ஆகிய இவைகளே ஆயதவமாகும். அவரது இளமுலையில் தோய்ந்து திளைப்பதே ஜீவன் முக்தியாம். இந்த மதத்தை இவ்வுலகத்தில் எவர் மேற்கொண்டாரோ அவரே ஜீவன் முக்தர். முக்தி ஒன்று உண்டென்றும் அதனைப் பெறவேண்டுமென்றும் வீணாக இவ்வுடம்பை வருத்துவதனால் என்ன பயன்? அந்த முக்தியைக் கண்டவர், கேட்டவர், அவர்க்குச் சாக்ஷி சொல்பவர் உண்டாயின் அவர்களைக் காட்டுங்கள்; காட்டமாட்டீராயின், நீதிநெறி தவறாமல் பொருளைச் சம்பாதித்து அதைக்கொண்டு கோவைக்கனி போன்ற அதரத்தையுடைய மாதரது சுகானுபவத்தை அனுபவியுங்கள். மாதரது யாழோசையினும் இனிமையாகிய சொல்லையும், ஏந்திய இளமுலைகளையும், செம்பொன்னாற் செய்யப்பட்டதை நிகர்த்த வடிவத்தையும், பவழம் போன்ற வாயையும், முடிமாலையின் நறுமணத்தையும் அனுபவித்துச் சுகிக்காமல் வீணே காலங்கழிப்பவர் அறிவிலிகளே! அவர்களுக்கும் பிணத்துக்கும் வேற்றுமையுண்டோ? சந்திரனில்லாத இரவும், தாமரைகள் மலராதபொய்கையும், குங்குமக் குழம்பணிந்த கொங்கைகளையுடைய மாதரின்பம் அனுபவியாதவரது வாழ்வும் சமானமாகும். இவ்வுலகத்தில் மாதர் போகம் அனுபவியாதார் மக்கட் பதடியென்று சொல்லப்படுவார். உலகத்தில் மானுட ஜன்ம மெடுத்தவர் கற்கவேண்டுவது காமநூலையே. கற்றபின் அதற்கேற்ப நிற்கவேண்டுவது மாதர் தோளிற்றூங்கிச் சுகிக்கும்பொருட்டுத் தம்மை விற்றாயினும் விரகநோயைத் தீர்த்துக்கொள்வதே' என்றான்.

இவ்வாறு பலவற்றைக் கூறி உலகாயதன் போரில் வெற்றியடைந்தவன்போலக் களித்து நிற்குஞ்சமயத்தில், தார்க்கிகன் வந்து விவேக வேந்தனை வணங்கி,'யான் சென்று ஒரு கணப்பொழுதில் இவ்வுலகாயதனது செருக்கை அழித்து வருகிறேன்; எனக்கு விடை தந்தருளவேண்டும்' என, அவ்வாறே விவேகனும் விடை தந்தனுப்பினான். அப்பால் அந்தத் தார்க்கிகன் சென்று லோகாயதனை எதிர்த்து

நின்று, 'ஓ அறிவிலீ! நீ காட்சிப் பிரமாணமே உண்மை;
அநுமானம் ஆகமம் என்பன பொய் என்றாய். அவ்வாறு
யின், உன்னை ஈன்ற தாயானவள் அக்கணத்திலே இறந்
தொழிந்ததை நீ காட்சிப்பிரமாணமாகக் கண்டாயோ?
அன்றி நீ இருத்தலால் உன் தாயொருத்தி இருத்தல்வேண்டு
மென்று கொண்டது காட்சிப் பிரமாணமா, அநுமானப் பிர
மாணமா? ஒரு நதியில் பெருவெள்ளமானது சந்தனமரம்
முதலிய பொருள்களை வாரிக்கொண்டு வருவதைக் கண்டவர்
கள், இவ்வெள்ளம் இவ்வாறு வருதற்குக் காரணம் மேற்றி
சையில் பெருமழை பெய்திருக்கலாம் என்று, கருதுவது
காட்சியா? அல்லது அநுமானமா? உலகத்தில் ஜோதிஷமும்
வைத்தியமும் முற்காலத்திலேயே பெரியோர்களால் சொல்
லப்பட்ட பிரகாரம் பலித்து வருகின்றமையால் வேதாதி
நூல்களின் வாக்கியங்கள் உண்மையேயாம். பாக்கு வெற்
றிலை, சுண்ணாம்பு இம்மூன்றும் ஒன்றாய்க் கூடினால் அக் கூட்
டத்தில் செந்நிறம் உண்டாதல் இயல்பேயாயினும் அவற்
றைக் கூட்டுவோன் ஒருவன் வேண்டுமன்றோ? அதுபோலப்
பூதாதிகள் பிரபஞ்சரூபமாகத் தொழிற்படுதல் இயல்பேயா
யினும் அவற்றை அவ்வாறு தொழிற்படுத்தற்கும் ஒரு
முதல்வன் வேண்டுமன்றோ? பூதகாரியங்கள் யாவும் உதித்து
நின்று அழிந்துபோகின்றதனால் இவற்றை இவ்வாறு தொ
ழிற்படுத்துவோனாகிய இறைவனொருவன் உளனென்று நீ
தெரிந்துகொள்வாயாக. அது எதுபோலவெனில், மண்ணி
னின்றும் குடம் முதலிய பொருள்கள் உண்டாமென்பது
இயற்கையேயாயினும் ஒரு குயவனில்லாமல் தாமே உண்
டாகாத தன்மைபோல என்றறி. நீ மாதரின்பம் பெரிது,
மாதரின்பம் பெரிது என்று பலகால் வியந்தோதுகின்றனை.
ஆனால் அம்மாது என்னும் பொருள் காணப்படுகின்ற அவ்
வுடம்பின் கண்ணேயுள்ள தோலா? இரத்தமா? ஊனா? என்
பா? நரம்பா? மச்சையா? சுக்கிலமா? இவற்றில் எதனை நீ விய
ந்து மாது மாது என்று கூறுகின்றனை. கோழைமிகும் தொழு
குகின்ற வாயோரத்தில் ஊறும் எச்சிலை அமிர்தமென்றுபுகழ்

ந்து, வயிற்றுக்கிய உவர்நீர்ச் சாலின் துவாரத்தில் ஒப்பற்றஇன்ப முண்டென்று மருண்டு பேரின்பவீட்டை இழந்தனையே. அழுக்கு, வேர்வை, சீ, பீளை முதலியவைகட்குப் பிறப்பிடமாயுள்ள நவத் துவாரங்களையுடைய புழுக்கூட்டிற்கு மாது என்னும் ஒரு பெயரையிட்டு அதன் இன்பத்திற்கு இச்சிப்பது உன் பேதைமையின் காரியமே யன்றி வேறன்று. வெயிற்காலத்தில் குளிர்ந்த நீரை விரும்பியும் மழைகாலத்தில் நெருப்பை விரும்பியும் நீ அடைகின்ற சுகமும் ஒரு சுகமாகுமோ? அழிவற்றதும், பரிசுத்தமானதுமாகிய சச்சிதாநந்தமே மேலான சுகமாம். ஒருவன் ஆராயத் தக்கது வேதாந்தமே. ஆராய்ந்தால் ஒழியத்தக்கது ஆசைப்பெருக்கமே. அது ஒழிந்தால் அடையத்தக்கது இறைவனது கருணையே. அதை யடைந்தால் மூழ்கத் தக்கது ஆநந்தக் கடலே. இவை யாவும் உண்மையென்று துணிவாயாக' என்று இவ்வாறு அநுமானப் பிரமாணம் முதலியவும், இருவினைகளும், ஜீவனும், இறைவனும் உண்டென்றும், மாதர் போகம் மோக்ஷமன்றென்றும் சொல்லிமுடித்து நின்ற தார்க்கிகனோடு போர்செய்வதற்குப் புத்தர் ஆயத்தப்பட்டு வந்தார்கள்.

உலாயதன்வதைச் சருக்கம் முற்றிற்று.

---

32. புத்தர்வதைச் சருக்கம்

சௌத்ராந்திகன், யோகாசாரன், மாத்திபமிகன், வைபாஷிகன் என்னும் இவர்களுள் முதல்வனான சௌத்ராந்திகன் மோகனது ஏவுலால் கோபித்தெழுந்து, ஒரு மூடன் யமனைப் போருக் கழைப்பதுபோலத் தார்க்கிகனைப் போருக்கழைத்து எதிர்வந்து நின்றான். அச் சமயத்தில் அவனுக்கு இடக்கண் துடித்தல், தலைக்குமேல் பருந்து வட்டமிடல், முதலிய துர்நிமித்தங்கள் காணப்பட்டன. காணப்பட்டும் அவைகளுக்கு மனந்தளர்ந்து பின்னிடாமல் நின்று சில சபதவார்த்தைகளைச் சொல்லுவானாயினன்:

முற்று முணர்ந்து, கொலை முதலான தீமைகளை வெறுத்து, சாந்த குணத்தை யடைந்து, பர துக்கம் பொறுக்காதவனாய், தேவர்கள் முனிவர்கள் முதலியோர் வணங்கும்படி முற்காலத்தில் பிடகநூலை அருளிச்செய்த எமது தெய்வமே அருட் டெய்வமாவன். காட்சி, அநுமானம் எனப் பிரமாணம் இரண்டு; அவற்றால் விரும்பிக் காணவருகின்ற பொருள்கள் ஞான ஞேயங்கள். அவையும் கணத்திலழிவன. அப் பொருள்கள் உரு, அரு, வீடு, வழக்கு என நான்கு; அந்த நான்கும் ஒவ்வொன்று இவ்விரண்டாய் எண்வகையாய் விரியும். இதுவே எனது பிடகாகமத்தின் றுணிபு. இந்த எண்வகையின் விவரம் யாதெனின், உருவின் வகை பூதம் உபாதானம் என்றிரண்டாகும்; அருவின் வகை சித்தம் கன்மம் என்றிரண்டாகும்; வீட்டின் வகை குற்றம் கந்தம் என்றிரண்டாகும்; வழக்கின் வகை உள்ளது இல்லது என்றிரண்டாகும். இன்னும் இவற்றின் விரிவெல்லாம் நான் எவ்வளவா யெடுத்துச் சொல்லினும் உனக்குப் புலப்படாது' என்றுசொல்லி இருதோள் கொட்டி ஆரவாரித்தான். அன்றியும், 'இப்பொழுது நான் சொன்ன இந்த நான்கேயன்றிவேறு பொருளில்லாதிருக்கவும், ஆன்மா, ஆகாயம், காலம், திக்கு, இறை என்பனவும் உளவெனச் சிலர் கூறுதற்குக் காரணம் மதுபானமோ, உன்மத்தமோ அறியேன். ஆயினும், அந்த ஆன்மா முதலியவை உளவென்னுங் கக்ஷியையும் ஒரு க்ஷண காலத்தில் வெல்லுகிறேன்' என்று அதற்கு வேண்டிய யுக்திகளையெல்லாம் பிடக நூல்களினின்றும் எடுத்துச்சொல்லி ஆரவாரித்து நின்ற சௌத்ராந்திகனை நோக்கின தார்க்கிகனும் அந்தச் சௌத்ராந்திகனது கக்ஷிகளையெல்லாம் பலவகையாகிய யுக்திகளை யெடுத்துச்சொல்லிக் கண்டித்து நின்று ஆரவாரித்தான். இதைக் கண்ட யோகாசாரன் விரைந்தெழுந்து தார்க்கிகனோடு விதண்டாவாதப் போர்செய்யத் தொடங்கினான். தார்க்கிகன் அந்த யோகாசாரன் சொன்ன கக்ஷிகளையும் க்ஷண காலத்தில் பலவகையாகிய யுக்திகளாற் கண்டித்து நின்றான். அதன்பிறகு மாத்தியமிகன் எழுந்து தார்க்கிகனை யெதிர்த்துத்

தன் வல்லமையெல்லாம் காட்டியும் தார்க்கிகனை வெல்லமாட்டாமல் அவனால் அபஜயப்பட்டு நின்றான். அப்பால் தார்க்கிகன் தாமதியாமல் புத்தன் தன் மார்பிலெறிந்த வேற்படையை யறுத்து அவனையும் வென்று வெற்றிமாலை சூடிப் புலி போல நின்றான். அப்படி நின்ற தார்க்கிகன்மேல் வைபாஷிகன் என்பவன் பாம்புபோற் சீறிவந்து நின்று, மஞ்சளும் சுண்ணாம்பும் கூடினால் அவற்றின் கூட்டத்தில் செந்நிறம் தோற்றுவதுபோலப் பொருளும் அறிவும் கூடுதலால் சகம் தோன்றும், இதனை யறிந்தவர்கள் விடைவார்கள் என்னும் சொல்லாகிய பாணத்தைப் பிரயோகித்தான். அந்தப் பாணத்தைத் தார்க்கிகன், ஞானம் உள்ளிருப்பது, ஞேயம் புறத்திருப்பது, இவ்விரண்டுங் கூடுதலில்லையாகும்; மேலும் நீ சொல்லுகின்ற ஞானம் அருவம், ஞேயம் உருவம், இவை யொன்றோடொன்று பொருந்துதல் இசையாது என்னுஞ் சொல்லாகிய பாணத்தால் அறுத்துத் தள்ளினான். இவ்வாறு ஞானமே பொருளாய்த் தோன்றுமென்றும், அங்கமே பொருளாய்த் தோன்றுமென்றும், ஞானமும் பொருளுங் கூடினால் சகமுண்டாகுமென்றும் வாதித்த சௌத்ராந்திகன் முதலானோரை வென்று நின்ற தார்க்கிகனோடு சமணர் வந்தெதிர்த்து நின்றார்கள்.

புத்தர் வதைச்சருக்கம் முற்றிற்று.

---

33. சமணர் வதைச்சருக்கம்

அசோகத்தை விரும்பி, மயிற்பீலியைக் கைக்கொண்டு, பாயையுடுத்து, ஆடையை விடுத்து, உதிரந்தோய்ந்த புலால் நாற்றம் நாறுகின்ற சரீரத்தை யுடையராய் நின்று, உணவைக் கையினாலுண்டு, இல்லற வாழ்க்கையை நீங்கி, வேதமார்க்கத்தைத் தவறி நடக்கின்ற சமணருள்ளே, நிகண்டவாதி ஆசீவகன் என்று சொல்லப்பட்ட இருவகையின ருண்டு. அவருள் முந்தினவனாகிய நிகண்டவாதி தார்க்கிகனை

யெதிர்த்து நின்று அவனை நோக்கி, எலிப்படை பாம்பின் எதிரே நின்று கர்ச்சிப்பதுபோலச் சிற்சில வார்த்தைகளைப் பிதற்றி, ஆத்யந்தங்கள் வேறுபடும்படி ஒரு பசுநூலாகிய பேரணி வகுத்துங் கொண்டு, வேதநூலாகிய கோட்டையை இடிப்பேனென்று சொல்லிக்கொண்டு போர்செய்ய முயன்றான்.

'கலைகளோடு கூடிய சந்திரன் குளிர்ச்சி யடைந்திருப்பதுபோலக் கடையிலா அறிவு முதலாகிய எண்குணங்களையு முடையவனாகி, ஞானவாளைக் கைக்கொண்டு நியமம் முதலாகிய நான்கு குற்றமு மொழித்து, நாநா அற்புதச் செய்கைகளைப் பெற்று, மலர்களையுடைய அசோகமரத்தின் கீழ் முக்குடை நிழலில் தேவர்களும் வாழ்த்தும்படி எழுந்தருளி விளங்குகின்ற அந்த அருகனே எமது கடவுளாவன். ஐம்பொறிகளின் வழியே மனஞ் சென்று புலன்களை நுகர்தலொழித்து முக்காலத்தும் நிகழுஞ் செய்தியை ஒரு க்ஷணகாலத்தில் அறிந்துகொள்ள வல்லவனும், தன்னை வழிபடுவாரையும் வழிபடாதவரையும் சமமாக நினைக்கின்ற மனத்தை யுடையவனும், பதினெண் குற்றத்தையும் நீக்கினவனும் ஆகிய அவ்வருகனே எல்லாத் தேவர்களுக்குந் தேவனாவன். பசித்தல், தாகித்தல், பயம், கோபம், சந்தோஷம் முதலிய பதினெட்டுக் குணங்களையும் வெறுத்து வட்டமாகிய பொன்மதிற்குள்ளே வாழ்கின்றவனாகிய அவ்வருகன் இகலன் வந்து வினவினபோது அவன் மனங்கொள்ளும்படி ஒரு சொல்லைச் சொல்லினான். அவன் சொல்லிய நூல்களுள்ளே பத்து பதார்த்தங்கள் உள்ளன. அவை அநாதியாய் காலம், ஜீவன், தன்மாத்திகாயம், அதன்மாத்திகாயம், புண்ணியம், பாவம், ஆகாயம், புற்கலம், பந்தம், வீடு என்று சொல்லப்படுவன. இவை யாவும் ஒருவரால் படைக்கப்படாமல் தாமே உண்டாவன. நிற்றல் போதல் முதலிய நிகழ்ச்சியை யுடையதாய், அந்வய வ்யதிரேகங்களைச் செய்து ஒரு கணத்தி லழியும்படி செய்வதே காலமாகும். தன் சரீரத்தில் கரும

பிற் சுவைபோல நிறைந்திருப்பதே சிவனாகும். தன்மாத்தி காயமும் அதன்மாத்திகாயமும் எவையெனின், பொருளைச் சார்ந்து ஒரு கணத்தில் சலித்தலையும் நிலைத்தலையும் செய்வன வேயாம். புண்ணியம் நன்மையைச் செய்வது; பாவம் தீமை யைச் செய்வதாய்ச் சேர்ந்து நிற்கும்; புற்கலமாவது எவ் விடத்திலும் அணுரூபமாய் வியாபித்து இரும்பு பொன் மரம் முதலிய உருவங்களா யிருக்கிற பொருளேயாம்; அறுதொழி லே பந்தமென்று சொல்லப்படும்; அத் தொழிலை யொழித் துத் தவத்தொழிலை மேற்கொண்டு பழவினைகளை யநுபவித் தொழித்தலேவீடாகும்' என்றான். இப்படிச் சொன்ன நிகண்ட வாதியை ஒரு க்ஷணகாலத்தில் வெல்வேனென்று தார்க்கி னெழுந்து, ஒரு மதயானையின்மீது சிங்கவேறு பாய்ந்தாற் போலப் பாய்ந்து நின்று, அந்த நிகண்ட வாதியை முன்னிலை யாக்கி, 'ஓ பேதாய்! அருகனுக்கு அனந்த ஞானகுணங்க ளுண்டென்று சொன்னாயன்றி அவனிடத்துள்ள தீக்குணங் களை யெடுத்துச் சொன்னாயில்லை. ஜீவகோடியி லொருவனா கிய அருகனுக்கு ஞானகுணங்களும் அஞ்ஞான குணங்களு மாகிய இரண்டு முண்டன்றோ? தருமஞ் செய்து அந்தக்குற் றத்தை நீக்கிக்கொண்டானென்றால், தருமஞ் செய்வித்தவன் வேறாவான்; செய்த அருகன் வேறாவான்; அநவஸ்தாதோஷ மும் ஏற்படுகின்றது. இந்திரிய சம்பந்தமொழிந்து எல்லாவற் றையு மறிந்தானென்றாய். அவன் தேகியாதலால் மனமுமிந்திரியங்களு ண்டு; அல்லவென்றால் எல்லாவற்றையும் அறியுமாற்றலுண் டாகாது. வழிபடுவோர்க்கும் வழிபடாதோர்க்கும் விருப்பு வெறுப்புக்களின்றிச் சமமா யிருப்பனென்றாய். அப்படியா யின்; அவன் வெற்றுடம்புள்ளவனாவன்; பொன்னெயிலுவட் டத்தில் அரசர்போலிருப்பதற்கோர் பயனுமில்லை. மனமுத லிய பொறிகளில்லாதவன் இகலன் கேட்ட கேள்விக்கு விடை சொன்னதெப்படி? அவன் வினவினதும் இவன் விடை சொன்னதும் ஊமையர் தம்முள்ளே சொல்லிக்கொண்டதை நிகர்க்கும். சிவன் உடம்பில் நிறைந்திருப்பானென்றாய். அப் படியானால், உடம்பை யிருகூறாய் வகிர்ந்தபோது சிவனும்

இருகூறாகி, வகிர்ந்த வுடம்பின் கூறுகளில் தங்கியிருத்தல் வேண்டும். அவ்வாறு தங்கியிராமையை நீயுமறிந்திருக்கிறா யாதலால், கரும்புஞ் சுவையும்போ லென்ற வுவமை பொருந் தாது. நீரும் குடமும்போலத் தேகம் அழிந்தபோது சீவ னும் அழிந்தொழிவதாய் முடியும். கருத்தா வொருவ னிருந்து புண்ணிய பாவ வினைப்பயன்களை இசைவியானாயின் அப்பயன் களை யநுபவிப்பாரில்லை. அம்பானது தன் குறியைச் சென்ற டைவதுபோல வினைப்பயன்களாகிய புண்ணிய பாவங்களும் செய்த சீவர்களை யடையும் என்பையாயின், அந்த அம் பைச் செலுத்துதற்கு ஒரு வில்வல்லான் வேண்டும். ஆதலால் நீ சொன்ன உபமானம் பொருந்தாது. உடம்பை வருத்தினால் வீடுண்டாகு மென்றாய். அப்படியானால், நோவாளியி னுட ம்பு வருந்துவதனால் அவனுக்கும் வீடுண்டாகவேண்டும். உல கத்தில் வருந்தினவர்க்கு இன்பமுண்டாகுமென்றாய். அப்படி யானால் உன் மூக்கை வாளால் அரிந்துகொண்டு இன்பத்தை அநுபவிக்க நான் பார்க்கவேண்டும். அப்படிச் செய்வாயாக. முன்னைய வினைகளெல்லாவற்றையு முற்று மநுபவித்த பிறகு பொன்னெயில் வட்டத்திற் புகுவானென்றாய். அவ் வினைகள் கடலின் மணற்றொகையைப் பார்க்கினும் மேற்பட்டிருத்த லால் அவற்றை யநுபவித்துப் பின்பு பொன்னெயில் வட்டத் திற் புக நினைத்தல், கடலின் நீர்முழுதும் வற்றின பிறகு அதி லுள்ள மீன்களை உண்ணப் பூனை எண்ணங்கொள்ளுதலை நிகர்க் கும். பந்தத்தை யறுத்துப் பேரின்ப வீட்டை யடைவிப்ப தற்குரிய ஒரு கருத்தா வின்றி நீயே யடைதல் கூடாது. அது எதுபோலவென்றால், கிணற்றில் நீர்மொண்ட தோண்டி எடுப்பாரின்றித் தானே மேல்வந்ததுபோலாகும். ஆதலால், உடம்பை வருத்தாமல் கருத்தனை நோக்கித் தவஞ்செய்து வீடடையக் கடவை'யென்றான். அருகன் தேவனல்லனென் றும், அவன் ஆதிவேதஞ்சொல்லத் தகுந்தவன் அல்லனென் றும், பத்துப்பொருள்களில் காலம் ஆகாயம் என்னுமிரண் டொழிய நின்ற எட்டுப் பொருள்களினிலக்கணம் வழுவாமெ ன்றும் பலவகை யுக்திகளைக்கொண்டு கண்டித்து வென்று

நின்ற தார்க்கிகனோடு வாதித்து வெல்லுவேனென்று ஆசீவ
கனென்பவனொருவன் புறப்பட்டு வந்து நின்று, தார்க்கிகனை
நோக்கித் தன் மதக்கோட்பாடுகளெல்லாவற்றையும் விரிவா
யெடுத்துச் சொல்லி வாதிக்க, தார்க்கிகன் அவற்றை யெல்
லாம் ஒரு நொடிப்பொழுதில் தன் தர்க்கயுக்திகளால் பஞ்சு
போலப் பறக்கடித்தான். இவ்வாறு நிகண்டவாதி ஆசீவகன்
என்கிற சமணரைத் தார்க்கிகன் வென்றபிறகு, மோகனொரு
வன் நீங்கலாக மற்றக் காமன் முதலானோர் போரிலழியும்படி
வென்று வாகைமாலை சூடின நிரூபகன் முதலானவர்கள் பஞ்
சகோசமென்னும் போர்க்களத்தின் ஒரு பக்கத்தில் நின்று
விவேகனை வணங்கி நின்றார்கள்.

சமணர் வதைச் சருக்கம் முற்றிற்று.

31. மோகன் வதைச்சருக்கம்

விவேகன் தன்னை வணங்கி நின்ற நிரூபகன் முதலான
வரைத் தன் அருட்கடைக் கண்ணால் நோக்கி மனமகிழ்ந்து,
அவர்களெல்லார்க்கும் இன்சொற் சொல்லிப் போர்செய்தவரு
த்தத்தை யொழித்து, சொன்னபடியே தமது சபதத்தை முடி
த்துவந்த துணைவரோடும் சுமதியென்னும் தன் தேவியோ
டுங்கூடி ஆநந்த சாகரத்தி லழுந்திக்களித்திருக்குங் காலத்தில்,
காமன் முதலிய வீரர்கள் யாவரும் யுத்தகளத்தில் விவேக
னது படைவீரரால் இறந்தொழிந்ததை மோகன் அறிந்து
மிகவும் மனங்கலங்கித் துக்கசாகரத்தில் மூழ்கினான். அதைக்
கண்ட அவன் மனைவியாகிய துன்மதியானவள் தன் துணைவ
னாகிய மோகனை நோக்கி, 'நீ இப்படித் துன்பப்படுதல் தகாத
காரியம்; நமது புதல்வனாகிய அஞ்ஞானும் நானும் அழியா
திருக்கையில் இறந்தொழிந்த நமது படைஞர் யாவரும் மறு
படியும் பிழைத்தெழார்களோ? நமது உறவினர் யாவரும்
மாண்டதனால் நமது வலிகுன்றிப்போயிற்றென்று துக்கித்தல்
யாதுக்கு? மூண்டெரியாநின்ற செந்தழல் நீறு பூத்திருப்பது

கண்டு அதன்மீது விறகுகள் பலவும் போய் விழுந்தால் அவ்
ற்றை அந்த நெருப்பானது சுட்டு நீறாக்காமல் விடுமோ? உன்
வலிக்கு எதிர்நிற்பவர் யாவர்? பிரமன் முதலானவர்களுடைய
அறிவை மயக்கின வுனக்கு இந்த விவேகன் படைஞரை
வெல்லுதல் அருமையோ? நான் விடயத்தேரைச் செலுத்து
கிறேன், நீ அந்தத் தேர் மேலேறி இந்தப்பகைவரை வெல்ல
க்கடவை' என்று சொன்னாள். அதைக் கேட்ட மோகன்
அவ்வாறே செய்கிறேனென்று சொல்லி, வலிய மனத்தி
லுள்ள வஞ்சனையாகிய வில்லில் அநாதரவாகிய நாண் பூட்டி,
தீமை புன்மைகளாகிய அம்புகளையும் அம்புக் கூட்டையும்
தன் முதுகிலே தாங்கி, எதனையும் அறியாமல் மயக்குத
லாகிய உடற் கவசம் பூண்டு, தீச்சொற்களாகிய வீரக்கழலைத்
தரித்து, பிறவிகளொழியாமல் வரப்பண்ணுகிற வினையாகிய
சக்கரத்தை யேந்தி, துர்ப்போதனை யென்னும் வேலாயுதங்
கைக்கொண்டு, அயுக்த மென்னும் சுரிகையை ஒரு பக்கத்
திற் கட்டி, விகடமாகிய கச்சையை அரையிற் றரித்து,
மடமையென்னும் கேடகம் தாங்கி, மற்றுமுள்ள தன் ஆயு
தங்க ளெல்லாவற்றையும் அவ் வவற்றுக்குரிய இடங்களி
லணிந்து, தன் மனைவியாகிய துன்மதியாற் செலுத்தப் படு
கிற விடயத் தேர்மே லேறினான்.

அந்தச் சமயத்தில் விவேகனானவன் இவன் வரவைக்
கேட்டு, கீழோர்க்குள்ள துர்க்குணம் அவர்கள் இறந்தொழிந்
தாலன்றி அவர்களை விட்டு நீங்காதாதலால் இந்த மோகனை
இனி வைக்கப்படாது, மாள்விப்பதே தகுந்தகாரியமென்று
துணிந்து, சிவ பக்தியாகிய அணங்கு தந்த சிவகவசந்தரித்து,
விஷ்ணுபக்தியாகிய அணங்குதந்த திருவெட்டெழுத்தென்
னுஞ் சக்கராயுதம் தாங்கி, அந்தச் சிவசரிதம் விஷ்ணுசரிதங்
களாகிய கச்சையும் உடைவாளும் தரித்து, பிறவியை யழிக்கி
ன்ற பிரமோபதேசமாகிய வீரபட்டங் கட்டி, நாதப்பிரம
மாகிய வீரக்கழலணிந்து, அங்கநியாசம் கரநியாசம் என்னும்
கேடகம் தாங்கி, சிவபெருமானது ஸ்ரீ பஞ்சாக்ஷரமாகிய

சூலமேந்தி, பதினெட்டுப் புராணங்களாகிய ஆயுதங்களையுந் தரித்து, தாரகமாகிய வில்லையேந்தி, அதில் ஆவிருதகியென்னும் நாணேற்றி, சிவநாம விஷ்ணுநாமங்களாகிய அம்புகள் அமைக்கப்பெற்ற தனது இதயமாகிய அம்பறாத்தூணியையும் தாங்கி, தன் குணங்களாகிய மற்ற ஆயுதங்களெல்லாவற்றையுந் தரித்து, தத்துவத்தேரி லேறித் தன் மனைவியாகிய சுமதியோடும் போர்க்களத்தைச் சேர்ந்த காலத்தில், முற்காலத்தில் இராவணன் ஸ்ரீராமரோடு போர்செய்யவந்ததுபோல மோகன் இவ் விவேகனோடு போர்செய்யத் துணிந்துவந்தான். வந்தவன், சுமதியாகிய தேவியோடு, நிரூபகன் முதலாகிய படைஞர் சூழ்ந்துவரவும், அவர் நடுவே ஞானியர் நெருங்கி நின்று புகழ்ந்துவரவும் தத்துவத்தே ரேறி, தேவர் கூட்டத்தினடுவே இந்திரன் விளங்குவதுபோல, விளங்குகின்ற விவேகனைக்கண்டான். கண்டவுடனே, தன்படைஞர் மாண்டதையும் பகைவர் வெற்றியடைந்ததையும் நோக்கி மனமயங்கி, தன் மதியின் போதனையால் அறியாமையை மேற்கொண்டு யுக்தாயுக்தங்களை யறியாமை யென்கிற புருவங்க ளிரண்டும் நெலேறவும், கலக்க மென்னும் கண்கள் சிவக்கவும், குடிலமாகிய வில் வளைத்து, கொடுந்தொழில்க ளாகிய அம்புகள் கோடாநுகோடியாகத் தெரிந்தெடுத்து விவேகன் மேலும் அவன் படைவீராகிய நிரூபகாதியர் மேலும் மலைகளின்மீது சோனை மாரி பெய்வதுபோலச் சொரிந்து ஆரவாரித்தான். அந்தச் சமயத்தில் விவேகனானவன் மோகனோடு போர்செய்யத்துணிந்த தன் படைஞராகிய நிரூபகாதியரைத் தடுத்து, நான் செய்யும் யுத்தத்தைப் புறத்தேயிருந்து பாருங்கள் என்று சொல்லித் தன் வில்லை வளைத்து, ஒரு கடுங்கணை தொடுத்தேவி மோகன் விட்ட கணைகளெல்லாவற்றையும் பொடியாக்கினான். அதைக் கண்ட மோகன், வேதங்களால் சத்தியமென்று சொல்லப்படுகிற யாகபலபோகமென்கிற வாளாயுதத்தால் இந்த விவேகனது அறிவை யழிப்பேனென்று அதனை யேவ, விவேகன் அதற்கு மாறாக எல்லாப்பதங்களும் அசத்தியமென்றுழிக்கிற புத்தியாகிய வடிவேலொன்றைவிடுத்து அதைப்பொடி

செய்து வெற்றியடைந்து நின்றான். பின்னும் மோகனானவன் குதர்க்கமாகிய ஒரு கடுங்கணையை விடுத்தான். அதை விவேகன் தர்க்கமென்னுங் கணையாற் கண்டித்தான். அது கண்ட மோகன் சௌகதமென்னும் வாளை யெறிந்தான். அதை விவேகன் கன்மகாண்டமென்னும் அம்பினால் கண்டித்து வீழ்த்தினான். இவ்வாறு இவ்விருவரும் போர்செய்யுங் காலத்தில், மோகன் மனைவியாகிய துன்மதியென்பவள் அவிஞ்சையென்னுஞ் சூலத்தை யெடுத்து விவேகன் மனைவியாகிய சுமதியின் மீது எறிந்தாள். அதைச் சுமதியானவள் விஞ்சை யென்னும் வேல்விட்டுத் அறுத்துவீழ்த்தி, நல்லொழுக்கமென்னும் வேல் விட்டுத் துன்மதியின் உயிர்வாங்கினாள். அவளிறந்ததைக் கண்ட மோகன் தேர் நடத்துவாரின்றி வேறு பேச்சுத் துணையுமின்றி மிகவுந் துக்கித்து, யானையுண்டவிளங்கனிபோலவெற்றுடம்பாய் நின்றான். அப்பால் மோகன் துன்மதி புத்தியின்று தூண்டலும்சிறிது தெளிந்து தன்மாயையாகியகணையையேவ, அந்தக்கணையின் மாயாவல்லபத்தால்,முன்னே யிறந்த காமனாதியோர் உயிர்பெற்றெழுந்து விவேகன் மீது தங்கள் தங்கள் ஆயுதங்களை ஒருமிக்கச் செலுத்துதலும், விவேகனும் சிறிது மயங்கி நின்றான். அந்தச் சமயத்தில் யுக்தியென்பவளெழுந்து நின்று, 'ஐயனே! மோகனது மயக்கமாகிய இதனை யாராயாமல் துக்கிக்கலாகாது. அரிநாமமாகிய உன் அம்புப் புட்டிலில் மாயாதீதம் என்கிற கணையொன் றிருக்கிறதே அதை யெடுத்துப் பிரயோகிக்கக் கடவை'யென்றான். அது கேட்ட விவேகன் ஆம் ஆம் என்று மனமகிழ்ந்து அந்தக் கணையை யெடுத்துப் பிரயோகித்தவுடனே மோகனது வஞ்சகத்தொழில்கள் யாவும் சூரியனைக் கண்டு அந்தகாரம் நீங்குவது போல நீங்கின. பின்னும் அந்தக் கணையொன்றை யெய்தான். அது சென்று மோகனது கன்னெஞ்சிற் பட்டுருவிக் கங்காநதியில் முழுகி விவேகனது அம்பறாத் தூணியை வந்தடைந்தது. அந்தக் கணை தன் மார்பிற்பட்டு உருவியோடினமையால் மோகன் முகங்கவிழ மண்மேல் விழுந்திறந்தான். அவனிறந்தவுடனே அவன் மனைவியாகிய துன்மதியும், நெருப்போடு

புகையு மழிவதுபோல இறந்தொழிந்தான். இதைக் கண்ட தேவர்கள் மலர்மழை பொழிந்தார்கள். தேவ துந்துபி முழங்கிற்று. வேதங்கள் ஆரவாரித்தன. முனிவர் வாழ்த்தினர். யோகிய ரிதயங்கள் களித்தன. விவேக ராஜன் வெற்றிமாலை சூடிச் சுமதியாகிய தன் மனையாளோடும் தேரை நடத்தி நிருபகாதியர் சூழப் போய்த் தனது அரசிருக்கையைச் சேர்ந்தான்.

மோகன் வதைச்சருக்கம் முற்றிற்று.

---

35. மானதன் புலம்புறு சருக்கம்

அப்பால் மோகனாதியராகிய மைந்தரெல்லாரும் இறந்தொழிந்த செய்தியை மானதனென்னும் தந்தைக்கும் பிரவிர்த்தியென்னும் தாய்க்கும் சொல்லும் பொருட்டுச் சில தூதர் விரைவாகப் போய் மானதனைக்கண்டு வணங்கி, 'ஐயனே! நீ பெற்ற புதல்வனாகிய மோகவேந்தன் முதலியோர் தம் உறவினரோடும் விவேக வேந்தனது படைவீரர் தாக்குதலால் போர்க்களத்தில் தம் உயிரிழந்தொழிந்தனர்' என்று சொன்னார்கள். அச்செய்தியைக் கேட்டலும், மானதன் நெருப்புப் பொறி பறக்க உலைக்களத்திற் காய்ந்த கூரிய வேற்படையானது தன் இரண்டு செவிகளிலும் நுழைந்தாற்போலத் தவித்து, தன்மேல் இடி விழப்பெற்ற மலையின் உச்சியில் வாழ்கின்ற பாம்புபோல ஏங்கித் துடித்து, 'யாரோ சில பாவிகள் வந்து நீ பெற்ற பிள்ளைகள் மடிந்தொழிந்தனர் என்றார்கள். அது உண்மையோ? அல்லவோ? அன்றித் தூதர்வந்து இவ்வாறு சொல்லக் கனவு கண்டேனோ? விவேகனுக்கு மோகனாதியரை வெல்லத் தகுந்த சாமர்த்திய முண்டோ? இந்தப் பொய்வார்த்தையை யாரோ கற்பித்து விட்டதுபோலக் காணப்படுகின்றது!' என்று இவ்வாறாகப் புலம்பி எழுந்து, இனி நானேபோய் இச் செய்தியின் உண்மையை அறிந்து வருவேனென்று நெருப்பின் மீது நடப்பவன்போல அடி பெயர்த்துவைத்து, கண்ணும் சிந்தையுங் கலங்கி, அந்த மோகனாதி

யர் இறந்து விழ்ந்த யுத்தகளத்தை யடைந்து, விவேகன் முதலிய புதல்வர்களால் மோகன் முதலிய புதல்வர்கள் இறந்து கிடக்கின்ற நிலைமையை நோக்கி, நஞ்சுண்டவன்போல மனமயங்கி, வாய்குழறி, மண்ணில் வீழ்ந்து புலம்பத் தொடங்கினான்:

'மேகவண்ணனாகிய திருமாலையும் வேதாதிகாரியாகிய பிரமனையும், பார்வதி நாயகனாகிய பரமசிவனையும் வென்று அத்விதீயமாகிய பிரமத்தையும் பந்தித்த மோகனே! இப்படிப் புலம்புகின்ற என் முகத்தைத் திரும்பிப் பாராயோ? எல்லாப் பொருள்களையும் படைத்தவன் யானேயன்றி வேறொரு தெய்வம் அல்லவென்று சொல்லுகின்ற அகங்காரனே! நான் பெற்ற செல்வமே! உன் பாட்டனைக் கொடிய பாசத்தால் கட்டின உனது பால லீலையை இன்னம் ஒருகால் நான் காணப் பெறுவேனோ? காமனே! நிரூபகனுக்கு எதிர் நிற்கமாட்டாமல் உன் வீரத்தன்மையை யிழந்து உயிர் நீங்கினையோ? உன் கரும்பு வில்லில் வண்டு நாண் பூட்டி, பஞ்ச பாணங்களைத் தொடுத்து, இனி யொருகால் நீ உலகங்களை யெல்லாம் வெல்லக் காண்பேனோ? கோபனே! மண்ணும் விண்ணுங் குலையும்படி யெழுகின்ற வாக்கும், நெருப்புப் பொறி பறக்கும் பார்வையும், கோரமாகிய நெட்டுயிர்ப்பும், பெருவேர்வையுங்கொண்டு இனி யொருகால் நீ முனிவரிடத்தில் அடையக் காண்பேனோ? லோபனென்னும் புதல்வனே! வைராக்கியன் விட்ட விரதமாகிய வேலினால் வலி யிழந்து எல்லா உலகங்களிலும் சென்று விளையாடிய உன் கால் ஓய்ந்து இந்த யுத்தகளத்தில் தூங்குகின்றாயே. மதனே! மச்சரனே! மானனே! இராசதனே! தாமதனே! சங்கற்பனே! சந்தேகனே! உங்களுக்கும் உங்கள் மனைவியர்க்கும் உங்கள் புதல்வர்க்கும் இப்படிப்பட்ட தீங்கு விளையுமென்று சிறிது மறியாமற் போனேனே!' என்றிவ்வாறு பலவகையாய்ச் சொல்லிப் புலம்பி ஏங்கிப் பரதவித்து மனம் நொந்து உருகி மானதன் சோர்ந்து விழுந்தான்.

அச் சமயத்தில், மக்கள் மாண்டதும் மணாளன் சோர்ந்ததும் பிரவிர்த்தியானவள் கேள்விப்பட்டு, அவ்விடத்துக்கு வந்து தன் மக்களாகிய மோகனாதியரும், மருமக்களாகிய தீவினை முதலோரும் போர்க்களத்தில் இறந்து கிடந்ததை நோக்கி மிகவுந் துக்கித்து ஏங்கி யழுது புலம்பத் தொடங்கினாள்: 'ஓ மக்களே! நான் வாழ்ந்த வாழ்வையெல்லாம் பொய்யாக்கி, பருந்து பந்தலிட்ட படுகளத்தில் நீங்கள் யாவரும் இறந்து கிடக்கின்றதைப் பார்த்தும் இன்னமும் யான் உயிரோடுகூடி வாழ்ந்திருக்கின்றேன்! என்னைப்போல் வன்னெஞ்சுடையார் இவ்வுலகத்தில் யாரிருக்கிறார்கள்? உங்கள் பாட்டனாரை உங்கள் தாதை சிறைப்படுத்தின அக் காலத்தில் அவரை நீங்க ளெல்லோரும் பிணித்த பேராற்றலானது இன்று இந்த நிவிர்த்தி மக்களாகிய விவேகன் முதலானோர்க் கெதிரில் பயன் படாதொழிந்ததோ? அக்காலத்தில் திருமால் சிவன் என்னும் இருவரையும் வென்ற நீங்கள் அவ் வரிபக்தி சிவபக்தி யென்னும் இருவரைத் துணைகொண்டு வந்த விவேகாதியர்க்கு இன்று இளைத்துத் தோல்வி யடைந்தது புதுமையா யிருக்கின்றது! கத்துருவின் புதல்வருக்கு விநதை புத்திரனாகிய கருடன் சத்துருவா யிருந்தும் எல்லாரையும் மடிக்காமல் சிலரைத் தப்பவிட்டிலனோ? அவ்வாறாக யாய் உங்களில் ஒருவரையாயினும் தப்பவிடாமல் கொன்ற விவேகன் மிகவும் புத்திசாலியாவன். கௌசலையின் புதல்வனாகிய ஸ்ரீ ராமபிரானைக் கைகேசியானவள் வனம் புகுவித்ததைக் கேட்டு இறவாமலிருந்த கௌசலையை வைத நான் இன்று என் மக்கள் இறந்தொழிந்ததைக் கண்டும் உயிரை விடாதிருத்தல் நன்மையாமோ?' என்றிவ்வாறு பலவாறாய்ப் புலம்பித் தானும் உயிர் நீங்கினாள்.

அப்பொழுது மானதன் செய்தியை அறிந்து வரப் [illegible]னார் வந்து விவேகனை வணங்கி, மோகன் தாயாகிய [illegible]த்தி இறந்ததையும் தந்தையாகிய மானதன் சோர்ந்த[illegible]யும் சொன்னார்கள். அந்தச் சொல்லைக் கேட்டவுடனே

விவேகன் இரக்கமுற்று, தனக்கெதிரே யிருக்கிற கலைமகளைக் கை குவித்து வணங்கி, 'தாயே! புத்திர சோகம் பொறுக்க மாட்டாமல் அயர்கின்ற எமது தந்தையாகிய மானதனை மனந்தேற்றி வரக்கடவை' என்று பிரார்த்தித்தான். அதைக் கேட்ட கலைமகள், அவ்வாறே செய்கிறேனென்று விரைந்து சென்று, போர்க்களத்தில் இறந்து கிடக்கின்ற பிரவிருத்தியையும், தன்னை மறந்து அயர்ந்து கிடக்கின்ற மானதனையும் கண்டு, அந்த மானதன்மேல் தனது அன்பென்னும் தீர்த்தத்தைத் தெளித்து இன் சொல்லாகிய மருந்தூட்டித் தேற்றுதலும், மானதன் ஒருவாறு தெளிந்தெழுந்து, தன் மனைவியாகிய பிரவிருத்தி எங்கே யிருக்கிறளோ என்று கேட்க, கலைமகள் அந்தப் பிரவிருத்தியானவள் படுகளத்தில் இறந்து கிடக்கிறுள் என்றுள். அதைக் கேட்ட மானதன், மயிலினுல் வலியிழந்த பாம்பானது கருடன் தாக்க உயிர் பதைப்பது போல மைந்தர் மடிந்த துக்கத்தின்மேல் மனைவி மடிந்த துக்கம் வந்து தாக்குதலால் மிகுதியாய் மன மயங்கிப் பின்னும் சிலவற்றைச் சொல்லிப் புலம்புவானுயினன். 'யான் உண்ணும் அமிர்தமும், மெய்யுறவும், என்னுயிரும், என் கண்ணும், கருத்தும், கருமமும், அக் கருமத்தால் அடையப்படுகின்ற செல்வமும், அச் செல்வத்தின் பயனும், என் எண்ணமும் ஆகிய உன்னைவிட்டு நான் எவ்வாறுபிழைத்திருப்பேன்?' என்று இவ்வாறு பலவகைப்படச் சொல்லி, இனி அரைக் கணப்பொழுதில் அக்கினியில் மூழ்கி உயிரை விடக்கடவேனென்று ஒருப்பட்ட மானதனை அங்கு வந்த கலைமகள் தனது அங்கையா லமைத்து, இனிய சொற்களால் அவன் பிழைக்கும்படி அறிவு மூட்டித் தெளிவிக்கத் தொடங்கினுள்.

மானதன் புலம்புறு சருக்கம் முற்றிற்று.

36. கலைமகள் தேற்றச் சருக்கம்



'மானதனே! அறிவிலார் போல் நீ மயங்குவது யாதுக்கு? நல்லோரால் சொல்லப்பட்ட நூல்களெல்லாம் பொருந்துணர்ந்தவனீ நீயல்லவோ? அப்படிப்பட்ட நீ இவ்வாறு துக்கிக்கலாமோ? இவ்வுலகமுழுதும் பின்னாலே நிகர்ந்து அழிந்துபோம் என்கிற உண்மைச் சொல்லேயாயினும் கேட்டிலேயோ? நிலம் நீர் முதலிய பஞ்சபூதங்களும், அவற்றால் உண்டாக்கப்படுகிற எல்லாவுயிர்களும், ஆயிரங் கண்களையுடைய இந்திரனும், மற்றுந் தேவர்களும், எல்லாப் பொருள்களையும் படைத்த பிரமதேவனும் மாண்டொழிவதை அறிந்திலேயோ? இப்படியே தோன்றும் பொருள்களெல்லாம் அழிவனவேயன்றி நிலைத்திருக்கமாட்டா வென்பதை அறிந்த நீ இப்படித் துக்கித்தல் தகாதகாரியமாம்' என்று கலைமகள் பலவாறு சொல்லித் தேற்ற, மானதன் தேறி, 'ஓ கலைமகளே! உன் சொல்லாகிய குளிர்ந்த நீரும் துக்கமாகிய உலையிற் காய்ந்த என் நெஞ்சாகிய இரும்பின் வெப்பத்தைத் தணிக்கமாட்டாததனால் என்னுடைய துயரத்துக்கு ஓரெல்லையுண்டோ? நான் எவ்வாறு உயிர்தரித்திருப்பேன்?' என்றான்.

இப்படிச் சொல்லிய மானதன் வசநத்தைக் கேட்ட கலைமகள் அவனை நோக்கி, 'என் மனைவி, என் மக்கள், என் சுற்றம் என்கிற இவ்வாசையினால் இத் துக்கம் உனக்கு விளைந்தது. ஆதலால், நீ இவ்வாசையை விட்டொழிப்பாயாக' என்றாள். அதைக் கேட்ட மானதன் மீட்டும் கலைமகளை நோக்கி, 'தாயே! என் தாய் சொல்லைக் கேட்டு என் தந்தையைச் சிறைப்படுத்தினேன். என் மக்களைக்கொண்டு அவனைப் பிணிப்பித்தேன். அந்த நிவிர்த்தி மக்களுக்குத் துன்பத்தையுண்டாக்கி, அவர்களால் இத்தனை பேரையும் கொல்லும்படி யமனை வருவித்தேன். ஆதலால், இனி ஒருபொழுதும் உயிர் வாழேன். எவர் சொன்னாலும் தெளிவடைய மாட்டேன். அக்கினிப் பிரவேசமாகி உயிர் விடுப்பேன்' என்றான்.

இப்படி மானதன் சொல்லைக் கேட்ட கலைமகள் மானதனை நோக்கி, 'நல்லறிவுடையோர் தாமே தம் உயிர்க்கொலை செய்துகொள்ள நினைப்பரோ? மனைவி மக்களது அன்பின் மிகுதியால் மனமயங்கி இவ்வாறு சொல்லுகின்றனை. அம் மயக்க மொழிந்து தெளிவடைவாயாக. பெரிய பாற்கடலில் தோன்றின ஆலாகல விஷம் போன்ற மோகனாதியர் போகட்டும். அமிர்தம் போன்ற விவேகனாதியாகிய மக்களும், நிவிர்த்தி யென்னும் மனைவியும், இன்னும் பல உறவினரும் உனக்குப் பெருஞ்செல்வமாய் அமைந்திருக்கின்றார்களே! உன் அறிவாகிய சந்திரனை மூடிக்கொண்ட துக்கமென்கிற மேகத்தைத் தெளிவென்கிற காற்றினால் அழித்து, இளைய மனைவியாகிய அந்த நிவிர்த்தியை அழைத்து அவளோடு கூடி வாழ்வதைப் பார்க்கிலும் உனக்கு வேறொரு உறுதியில்லை' என்று இவைபோன்றனவாகிய இன்சொற்கள் பலவுங் கூறி, தலைக்கேறின விஷத்தை இறக்கும்படி மந்திரிப்பவர்கள்போலக் கலைமகளானவள் மானதனைத் தேற்ற, அவன் தெளிவடைந்து கலைமகளை நோக்கி, 'அம்மா! இவ்வுலகத்தில் இளைய மனையாளிடத்து வைத்த மோக மிகுதியால் மூத்த மனையாளை மறப்பது இயற்கை யென்று சொல்லுவார்கள். அந்நீ செய்கையும் செய்யாது அவ்விருவரையும் சமமாகப் பார்ப்பதையும் ஒழிந்து, இளைய மனைவியாகிய நிவிருத்தியையும் அவள் மக்களையும் உறவினரையும் நீக்கி, மூத்த மனைவியின் உறவினரால் அவர்களுக்கெல்லாம் துன்பத்தை யுண்டாக்கின பாவியாகிய நான் நாணமில்லாமல் எப்படி அவர்கள் முகத்தில் விழிப்பேன்?' என்றான். அதைக் கேட்ட கலைமகள் மானதனை நோக்கி, 'உலகத்தார்க்குப் பகையும் உறவும் மாறி மாறி வருவதுண்டு. அதைப்பற்றி நீ துக்கிக்க வேண்டியதில்லை. கணவனுக்கும் மனைவிக்கும் பகையும் உறவும் உண்டோ? உன் இளைய மனைவியாகிய நிவிருத்தி நீ முன்னே செய்த குற்றங்களைப் பாராட்டமாட்டாள்; அதற்கு நீ அஞ்ச வேண்டியதில்லை' யென்று சொன்னான். இந்தச் சொல்லைக் கேட்ட மானதன் இருசெவியுங் குளிர்ந்து, துக்க சாகரத்தில்

மூழ்கி இறக்குஞ் சமயத்தில் ஒரு 'கைமரக்காய்' கிடைத்தாற் போல மிகவும் மனமகிழ்ந்து கலைமகளை நோக்கி, நீ கருணை செய்ததனால் என்னுயிர் தரிக்கப்பெற்றேன் என்று சொல்லி அவள் வார்த்தையைச் சிரமேற் கொண்டான்.

கலைமகள் தேற்றச் சருக்கம் முற்றிற்று.

---

37. விவேகன் முடிசூடு சருக்கம்

அந்தச் சமயத்தில் கலைமகள் மானதனை அவ்விடத்தில் நிறுத்தி, 'உன் மனைவியாகிய நிவிருத்தியையும் மக்களாகிய விவேகன் முதலானோரையும் ஒரு இமைப்பொழுதில் அழைத்து வருகிறேன்' என்று சொல்லி, அன்ன வாகனத்திலேறிச் சென்று விவேகனைக் கண்டவுடன், விவேகன் நிகழ்ந்த செய்தி யாதென்று கலைமகளை வினவ, அவளும் ஆதியந்தமாக நிகழ்ந்த சங்கதி முழுதும் சொல்லினாள். அதுகேட்ட விவேகன் மகிழ்ந்து அந்தச் செய்தியை எல்லார்க்கு மறிவித்து, 'இனி என் தந்தையினிடம் போவேன், நீங்களெல்லாம் அவ்விடத்தில் வந்து சேருங்கள்' என்று சொல்லி, மனப்பரிவாகிய குதிரையின்மீதேறி விரைவாகச் சென்றான். கலைமகள் முன்னும் தான் பின்னுமாகச் சென்ற விவேகன் தன் தந்தையைக் கண்களிக்கக் கண்டு வணங்கினான். அப்படி வணங்கின புதல்வனை மானதன் விரைந்தெடுத்து மார்போடு றுகத் தழுவிக்கொண்டு, உச்சி மோர்ந்து தன் பக்கத்தி லிருத்திக்கொண்டு, சிறிது நேரம் நாணத்தினால் முகங் கவிழ்ந்திருந்து, பின் தெளிவடைந்து அன்போடு நோக்கி, 'ஐயனே ! உன் சொல்லை உறுதியாகக் கொள்ளாமல் நானடைந்த துன்பங்களுக்கு ஓரளவில்லை. அத்துன்பங்களெல்லாம், இரும்பானது பரிசவேதியால் மாற்றுயர்ந்த பொன்னானாற்போல, உன் வரவால் நீங்கப் பெற்றேன், இனி உன் சொல்லை நான் எக்காலத்தும் மறவேன்' என்றான். இப்படி மானதன் சொல்லக் கேட்ட விவேகனும் தந்தையை நோக்கி, 'யான் இதுவரையும் வனத்தில் போய்ச் செய்த தவப்

யனால் பின்னும் வந்து உன் திருவடியை வணங்கப் பெற்றேன்; எனக்கு உன்னை யன்றி வேறோராதரவில்லை' யென்று சொல்லி நின்றபோது, பொறையென்னும் புதல்வன் பின் செல்ல, நிவிருத்தியும் தன் மணாளனாகிய மானதனுக்கு எதிரே வந்து அவனைக் கண்களிக்கக் கண்டு வணங்கி, அவனது சிந்தையாகிய பெருங்கோயிலி லிருந்தாள். பொறையனும் தந்தையாகிய மானதனை வணங்க, அவனும் அந்தப் பொறையனை மகிழ்வோடு எடுத்து மார்பி லணைத்துக்கொண்டான். அப்பால் நிரூபகன், வைராக்கியன், சமன், தமன், சந்தோஷன், சமாதானன், சத்துவன், தவன், அட்டாங்கயோக மந்திரத்தலைவர் என்று சொல்லப்பட்ட புதல்வரெல்லாரும் வந்து மானதனை வணங்கினார்கள். அவர்கள் யாவரையும் மானதன் தனித்தனி எடுத்துத் தழுவி, இனிய வசனங்களைச் சொல்லித் தன் பக்கத்தில் இருத்திக்கொண்டான். பிறகு, தருமன், நிச்சயன், அடக்கன், சன்மானன், சுகன், பரோபகாரன், அற்புதன், அவிரோதன், நிரவிகற்பன், மோனன் முதலாயுள்ள பேரெல்லாரும் பாட்டனை வணங்கி நின்றார்கள். அவர்களுக்கும் மற்றை மருகியர் முதலானோர்க்கும் இன்சொற் சொல்லி ஆசி கூறிக் கலைமகளை நோக்கி, உன்னால் அடியேன் உய்ந்தேன் என்று சொல்லி மனமகிழ்ந்திருந்தான். அப்படி மானதனிடத்து நிவிர்த்தி வர்க்கத்தாராகிய விவேகன் முதலிய எல்லோரும் வந்து அமைந்திருக்குங்காலத்தில், அவனிடத்தில் அரிபக்தி சிவபக்தி என்னும் ஞானயோகினிகள் இருவரும் முறையே கருடவாகனத்தின்மீதும் இடபவாகனத்தின் மீதும் ஏறி வரக் கண்டு, மானதன் முதலிய எல்லோரும் எழுந்து வணங்கி வாழ்த்தினார்கள். அவ் விருவரும் அவர்கள் வழிபாட்டுக்கு மகிழ்ந்து, தம் வாகனங்களில்நின் றிறங்கி, மானதன் சமர்ப்பித்த சிந்தையாகிய பொற்பீடத்தில் எழுந்தருளி, அருகே நிற்கிற கலைமகளை நோக்கி, இவ்விடத்து இருக்கக்கடவை என்று அன்போடு சொல்லி அருட்கண்ணால் நோக்கினார்கள். அப்பால் மானதன் அந்த யோகினிகளை வணங்கி, 'தாய்மாரே! உங்களை யான் முன்னே அறிந்து கொள்

ளாத குற்றத்தை ஒழித்து நிலைபெற்ற புகழை எனக்குத் தந்த மக்களால் நீங்கள் இவ்விடத்து எழுந்தருளுதற்கு என் சிறு குடிலாகிய இது என்ன தவஞ் செய்ததோ!' என்றான். அந்தச் சமயத்தில் அந்த யோகினிகளுடைய அருள்பெற்ற விவேகன், தாய் அருகே வரக்கண்ட கன்றுபோல, அடைந்து வணங்கித் தந்தையை நோக்கி, 'இவ்விருவ ரருளால் தீவினைகள் யாவும் நீங்கப்பெற்று இன்பத்தை யடைந்தேன்' என்று விஸ்தரித்துச் சொன்னான். அதைக் கேட்ட மானதன் விவேகனை நோக்கி, 'நீ என்னைப் பிரிந்துபோன பிறகு இவர்களுடைய கருணையால் திருமணஞ்செய்துகொண்டேன் என்று நீ சொன்ன மாது இங்கு வரவில்லையே?' என்று வினவினான். அதைக் கேட்ட விவேகன், 'ஆம் அது உண்மைதான், உபநிடதை யென்னும் அந்த மாதைக் கீதையென்னும் பாங்கியோடு நான் அருந்தவஞ்செய்த ஏடாபுரத்தில் வைத்து வந்தேன். உமது கிருபையினால் அவர்களையும் இவ்விடத்திற்கு வரவழைப்பேன்' என்று சொல்லிச் சத்துவன் மகளாகிய சிரத்தையை நோக்கி, அந்த உபநிடதை யென்னும் மாதை இவ்விடத்துக்கு அழைத்துவாவென்று சொல்ல, அவளும் அச்சொல்லைச் சிரசா வகித்துச் சென்று ஏடாபுரத்தை யடைந்து உபநிடதையை நோக்கிச் சொல்வாளாயினள்:

'மோகன் முதலானோரும் அவன் கிளைஞரும் ஒருங்கே மடிந்தொழியும்படி, போர்செய்து, நமது தலைவனாகிய விவேகனும் அவன் படைவீரரும் வெற்றிமாலை சூடி, தந்தையாகிய மானதனை யடைந்து, ஹரிபக்தி சிவபக்தி யென்னும் யோகினியருடைய அருளால் சுகமாய் வாழ்ந்திருக்கிறார்கள். அன்றியும், உன்னைப் பெற்றவளாகிய கலைமகளும் அவ்விடத்தில் வந்திருக்கிறாள். உன் மாமன் உன்னைப் பார்க்கவேண்டுமென்னும் விருப்பங்கொண்டு உன்னை யழைத்துவரச் சொன்னா'ரென்று சொல்லுதலும், அதைக் கேட்ட உபநிடதையானவள் அகமுகமலர்ச்சியுடையவளாய் உடல் பூரித்து, சிரத்தையை இன்சொல்லாகிய அமுதத்தால் களிக்கச்செய்து,

[illegible]
[illegible]
தையோடும் சூழ்ந்து தபோதனருடைய [illegible] சிவிகைமீ
தேறிவந்து மானதன் சமூகத்தை யடைந்து, முன்னே இர
ண்டு யோகினிகளையும், அதன்பிறகு சமைகளையும், அதன்
பிறகு மாமனாகிய மானதனையும், அதன்பிறகு நிவிர்த்தியை
யும் அடிவணங்கித் தன் நாயகனாகிய விவேகனையும் தன் மனத்
தால் வணங்கி அருகே யிருந்தாள்.

அப்பொழுது மானதன் தன் மருகியாகிய உபநிடதை
யைக் கண்டு களிப்படைந்திருந்தான். அந்தச் சமயத்தில் அங்
கிருந்த யோகினியரிருவரும் மானதவேந்தனை நோக்கி, 'இனி
நீ உன் புதல்வனாகிய விவேகனுக்கு முடிசூட்டி மண்ணுல
கம் விண்ணுலகம் என்னும் இரண்டுலகங்களிலும் அரசாட்சி
செய்யும்படி யேற்படுத்துவது நன்மை' யென்றார்கள். அது
கேட்ட மானதன் மனமகிழ்ந்து அவ்விருவரையும் வணங்கி,
அவர்களை நோக்கி, 'முற்காலத்தில் பிரகலாதனுக்கும் விபீஷண
னுக்கும் துருவனுக்கும் முடிசூட்டுவித்ததும், மார்க்கண்டனு
க்கும் அசுவத்தாமனுக்கும் தண்டி முதலானோர்க்கும் நித்தி
யத்துவம் கிடைக்கச்செய்ததும நீங்களல்லவா? அவர்க்கருள்
செய்ததுபோல இப்போது என் புதல்வனாகிய விவேகனுக்கு
முடிசூட்டும்படி நியமித்ததற்குக் காரணம் என் தவப்பயன
ன்றோ?' என்று வணிமொழிகள் கூறி, பிறகு தன் இதய மண்
டபத்தைப் புதிய வெண்சுதையால் புதுக்கி, புண்ணிய கரு
மங்களாகிய விதானத்தை மேலே பரப்பி, பரிசுத்த விரதமென்
னும் மலர் மாலைகளைத் தொங்கக் கட்டி, கல்வியென்னும்
செம்பொன் மணிகளாற் சமைக்கப்பட்ட சிங்காசனத்தை
அந்த மண்டபத்தின் நடுவே யமைத்து, தெளிவென்னும் சுடர்
மணி விளக்கேற்றி, இன்னுஞ் செய்யவேண்டிய அலங்காரங்க
ளெல்லாவற்றையுஞ் செய்யுங்களென்று தன்னருகே யிருக்
கின்றவர்களுக்குக் கட்டளையிட்டு, அந்த மண்டபத்தின் ஒரு
பக்கத்தில் ஹரிசிவ பக்திகளாகிய யோகினியர், நாமகளோடு

றிருக்கவும், நிவிர்த்தியானவள் தன் புத்திர வர்க்கத்தோடு ஒரு பக்கத்தில் வீற்றிருக்கவும், கருணையும் முதிதையும் உபேக்ஷையும் நீதியும் மைத்திரியும் தத்தம் கணவரோடு ஒரு பக்கத்தில் கண்களிக்க நோக்கியிருக்கவும், மக்களும் மகளிரும் மற்றுள்ளவரும் கூடி அருகேயிருக்க, சுமதியும் உபநிடதையும் வேந்தனும் பெரியோர்களுடைய அருட்கடலில் மூழ்கித் தத்தமக்குரிய ஆடையாபரணாதிகளணிந்து வந்து சிங்காதனத்தில் வீற்றிருந்தார்கள்.

அப்போது சதுமறைப் பேரிகை முதலியவை முழங்கவும், விதிமுறையாய்ச் செய்யப்பட்ட வெற்றி வெண்குடையை நிரூபகன் ஏந்தவும், பொறையனும் விராகனும் இரண்டு பக்கத்திலுங் கவரிவீசவும், மானதனானவன் மாதவருடைய ஆசியாகிய முடியை விவேகனுக்குச் சூட்டினான். அப்பொழுது ஹரிநாமசங்கீர்த்தனமும் சிவநாம சங்கீர்த்தனமும் மங்கள கீதங்களும் உலகமெங்கும் வியாபித்தன. தேவர் மலர்மாரி சொரிந்தார்கள். முனிவர் எழுந்து ஆனந்தக் கூத்தாடினார்கள். கலைமகளும் யோகினியிருவரும் விவேகனுக்கு இவ்வித ஆடம்பரங்களோடு முடிசூட்டித் தமது பொருளாகிய அருளை அவனகத்தில் வைத்து அவனிடத்தில் இனிது வாழ்ந்திருந்தார்கள். அந்தணர் அறுதொழில் முதலிய சற்கருமங்களைப் பயன் குறியாமற் செய்வாராயினர். முன்னே மோகன் முதலானோரால் உலகத்தை விட்டோடிப் போன அஷ்டதிக்குப பாலகர் முதலானவர் விவேகவேந்தன் அரசுரிமை பூண்டிருத்தலால் இந்தப் பூமண்டலத்தை யடைந்து இனிது வாழ்வாராயினர். எல்லா வளங்களும் தழைத்தோங்கும்படி மேகங்களும் மழைபொழிந்தன. கறவைப் பசுக்கள் பெருகின. புலியும் மானும் ஒரு துறையில் நீருண்டன. பூமிதேவிக்கு அதிபாரம் நீங்கிச் சரீரம் தடித்ததனால் ஆதிசேடனுக்குத் தலைச்சுமை நீங்கிப் பூமியை யொருமலர் போலுந் தாங்கலாயினான் அந்தக் காரணத்தாலன்றோ இன்றும் பூமிக்குப் பூவென்னும் பெயர் நிலை பெற்றிருக்கின்றது. பொறை

யன், வைராக்கியன், சத்தியன், சமன், தமன், நிச்சயன், அட்க்கன் முதலிய யாவரும் உலகெங்கும் பரந்து உலாவலாயினர். விவேக வேந்தன் மோகனுதியராகிய வன்பகை தொலைத்து முடி சூடிய பிறகு இவ்வுலகமுழுதும் ராகுகேதுக்களால் விழுங்கி யுமிழப்பட்ட சந்திரன் போலப் பிரகாசித்தது. விவேக வேந்தன், தன் தாயாகிய நிவிர்த்தியோடு கூடித் தந்தையாகிய மானதன் களித்திருக்க, தானும் தன் மனைவியாகிய சுமதி உபநிடதை யென்பவர்மீது அன்புள்ளவனாய், நிரூபகன் முதலானோர் தன்னைச் சூழச் செங்கோல் செலுத்தி வாழ்ந்திருந்தான்.

விவேகன் முடிசூடு சருக்கம் முற்றிற்று.

---

38. மாயைச் சருக்கம்



இவ்வாறு விவேகன் முடிசூடி அரசாட்சி நடத்திவருங் காலத்தில், ஒரு தூதனானவன் அஞ்ஞன் வாழ்ந்திருக்கும் ஊரையடைந்து அஞ்ஞனை வணங்கி, ஐயனே, நம்மவர் யாவரும் இறந்தார்களென்று சொன்னான். அந்தச் சொல்லைக் கேட்ட அஞ்ஞன் இடியோசையைக் கேட்ட நாகம்போல மனங் கலங்கித் துன்பக்கடலி லழுந்தி, மறுபடியும் ஒருவாறு மனந் தெளிந்து, அந்தத் தூதனை நோக்கி, போர் நடந்த விதம் இன்னதென்றும் இறந்தவர் இன்னாரின்னாரென்றும் சொல்லவேண்டுமென்று கேட்க, அந்தத் தூதன், மோகன் காசியைச்சேர்ந்தது முதல் அவனும் அவன் உறவினரும் இறந்தது வரையும் ஆதியந்தமாகச் சொன்னான். அந்தச் செய்தியை முழுதும் கேட்ட அஞ்ஞன் மிகவும் துக்கித்துப் பதைத்து நிலத்தில் விழுந்து தானும் இறந்தவன்போலாகி, மீட்டுந்தெளிந்து, என் பாட்டனாகிய மானதன் எவ்விடத்திலிருக்கிறானென்றுகேட்க, தூதன், 'ஐயனே! உன் பாட்டன் நிவிர்த்தியோடும் தன் மக்களாகிய விவேகனுதியரோடும் கூடி வாழ்ந்திருக்கிறான். பிரவிர்த்தியும் தன் மக்களாகிய மோகனுதிய ரிறந்த துன்பம் பொறுக்காமல் மடிந்தாள்' என்றான். அந்தச் சொல்லைக் கேட்ட

அஞ்ஞன், ஆட்டுவிப்பா ரில்லாத சூத்திரப் பாவை போலவும், பகைவன் கப்பல் வந்து தாக்கத் திசை தப்பிக் கலங்கும் கப்பல்போலவும் மனமுயர்ந்து, மறுபடியுந் தெளிந்து, 'என் இன்னோன்னலியும் வஞ்சகமும் என்னிடத்திலிருக்கும்போது நானிப்படி யிருக்க வேண்டியதில்லை, மோகனுதியவர் இப்பொழுதே யெழுப்புவேன்' என்று துணிந்து, கடலைக் கடப்பதற்கு ஒரு புணையை யடைந்தாற்போல, மாயையினிடத்திற்குப் போய் அவள் பாதத்தை வணங்க, அவள் இவனை யெடுத்து மார்போ டணைத்து, உன் மனத் துயரத்துக்குக் காரணமென்னவென்று கேட்டாள். அது கேட்ட அஞ்ஞன், 'முற்காலத்தில் உன் பிள்ளையாகிய மானதன் உன் சொற்படியே தன் தந்தையாகிய பிரமத்தை நவத்துவார புரந்தோறும் சிறையிட்டு, விவேகன் சொல்லைக் கேளாமல் என் தந்தையாகிய மோகனுக்கு முடிசூட்டின செய்தியெல்லாம் உனக்குத் தெரியாத தல்லவே. அப்படியிருக்க, காட்டுக்குப்போன விவேகன் யோகினிகளுடைய அருளால் உபநிடதையை மணம் புரிந்து, பல படைஞரோடு கூடிவந்து, அரசாட்சிசெய்கிற என் தந்தையோடு போர்செய்தபோது, விவேகனுதியரால் என் தந்தை முதலானவர் யாவரும் மடிந்தார்கள். நானொருவன் மாத்திரம் உயிர் பிழைத்தேன். பிறகு, மக்களை யிழந்த துன்பத்தைப் பொறுக்கமாட்டாமல் பிரவிர்த்தியும் இறந்தாள். உன் மகனாகிய மானதனும் விவேகனுதியராகிய நன்மக்களிடத்திற் சேர்ந்து விவேகனுக்கு முடிசூட்டிக் களித்திருக்கிறான். நீயேயன்றி இனி யெனக்கு வேறு கதியில்லை யென்று சோதிடனால் வல்லார் சொன்னதும் தப்பாமல் பலித்தது. அவர்களே உபநிடதை யொரு மகளைப் பெறுவாள், அவளால் நான் இறப்பது நிச்சயமென்று சொல்லி யிருக்கிறார்கள், அச்சொல்லுந் தப்பாது. விவேகனுதியர் படைஞர் உலகமுழுதும் நிறைந்து அவித்தியா புரத்தையும் நிறைக்கிறார்கள், இனி உன் மகனையும் சிறை விடுவிப்பார்க ளென்பதற்குச் சந்தேகமில்லை' என்று சொன்னான். அதுகேட்ட மாயையானவள் நெஞ்சு துணுக்கிட்டு, பனியைக் கண்டு கருகிப்போன தாமரை மலர்போல

முகங்கருகிப் பதைத்து, அஞ்ஞானமார்போடணைத்து, 'அப்
பா, நீ மனங் கலங்கவேண்டாம். விவேகன் உபநிடதையோடு
கூடி மகனைப் பெறுதிருக்கும்படிசெய்வேன்' என்று சொல்லி,
கர்மகன் துணையும், வேதச் சிறுவராகிய மீமாஞ்சன், தர்க்
கன், சாங்கியன், யோகன் என்னும் நால்வரும், ஹரிபக்தி சிவ
பக்திகளாகிய மாதரீன்ற சிறுவராகிய வைஷ்ணவன் சைவன்
என்னு மிருவரும் தன்னருகே வரும்படி மனத்தில் நினைத்த
வுடனே அவர்களும் வந்து சேர்ந்தார்கள். மாயையானவள்
அவர்களை நோக்கி, 'முன்னாளில் நான்செய்த முயற்சியை நீங்
கள் அறியீர்போலும்! என் மகனாகிய மானதனைக் கொண்டு
என் மணாளனை நவத்துவார புரந்தோறும் சிறைசெய்வித்தது
யாமெல்லாம் பிழைக்கத்தானே. மூத்த மனைவி மாண்டதனால்
என் மகனாகிய மானதன் இளைய மனைவியாகிய நிவிர்த்தியின்
போகத்தை அநுபவிப்பானாயினன். அவன் மகனாகிய விவே
கனும் தன் மூத்த மனைவி யிருக்க உபநிடதை மாதை மணம்
புரிந்தது நன்றோ? அப்படி அவன் மணம்புரிய முயன்ற
போது, இது தகாத காரியமென்று நீங்கள் தடுக்கக்கூடாதா?
தடுத்தீரில்லை. "வருமுன்னர்க் காவாதான் வாழ்க்கை யெரி
முன்னர், வைத்தூறு போலக் கெடும்" என்ற நியாயத்தையும்
எண்ணாமற் போனீர்கள். இனியாயினும் நீங்கள் பிழைக்கும்
வகையைக் கேளுங்கள், சொல்லுகிறேன். விவேகனைச் சேர்
ந்து, அவன் உபநிடதையைக் கூடிப் பிரபோதன் என்னும்
மகனைப் பெறுதிருக்கும் படி உங்களாலியன்ற புத்தியுக்தி
களால் விலக்குவீராக' என்றாள். அதுகேட்ட அந்த மீமாஞ்
சன் முதலானோர் மாயையை நோக்கி, 'தாயே! நீ சொன்னது
உண்மையே. நாங்கள் உன் சொல்லைத் தட்டுகிறவர்களல்ல.
ஆனால் இந்தச் செய்தி முழுதும் ஆதிகாலத்தில் நாங்களறிந்
தோமில்லை. விவேகன் உபநிடதையினிடத்தில் வைத்தவிருப்
பத்தை மாற்ற இனி எவராலு முடியாது. ஆயினும், நீ சொன்
னபடியே செய்கிறோம்' என்று சொல்லி, விவேகனிருக்கு
மிடத்தை யடைந்து வாயிற் காப்பாளரைக் கொண்டு தமது
வரவை விவேகனுக்கறிவிக்க, அவனும் உள்ளேவரும்படி கட்
டளையிட்டான்.

பிறகு, இவ் வறுவரும், சுமதி யுழைக் கண்டு களித்து, உபநிடதையின் சொல்லாகிய தேனைப் பருகி, வேதாந்தி, நிருபகன், பொறையன், அடக்கன், மெய்யன், சமன், தமன் முதலானோர் சூழ விற்றிருந்த விவேக வேந்தனைக் கண்டு வணங்கி, 'ஐயனே, எல்லா மறிந்திருக்கிற உனக்கு யாம் சொல்ல வேண்டுவதொன்றில்லை யாயினும், நாங்கள் சொல்லுஞ் சொல்லைக்கேட்டு அப்படிச் செய்வதே அரசியல்' என்றார்கள். விவேகன் அது யாது சொல்லுங்க ளென்றான். மீமாஞ்சன் முதலானோர் சொல்லுவாராயினர்: 'மூங்கிலோடு மூங்கில் உரிஞ்சுதலா லுண்டாகிற நெருப்பு கிளை முழுதும் சுட்டெரிப்பது போல உபநிடதையும் நீயும் கூடினால் பிரபோதன் என்னும் ஒரு புதல்வன் பிறப்பான்; பிறந்தால் அவன் உன்னை மட்டோ, உன் குல முழுதையும் நாசஞ் செய்வான். ஆதலால், அவ்வுபநிடதையி னிடத்துள்ள உன் விருப்பத்தை நீக்கி, சுமதியோடு கூடி வாழ்தலே நீதி நெறியாகும்' என்றார்கள். அந்தச் சமயத்தில் மீமாஞ்சரில் பட்டாசாரிய னென்பவ னொருவன் விவேகனை நோக்கி, இறைவனன்றி வேதம் சொன்னபடியே வேள்வி செய்வாராயின், செய்தவர் சுவர்க்கத்தை யடைந்து, அங்குள்ள போகங்களை யநுபவித்துக் களிப்போடு வாழ்தலே வாழ்வென்று சைமினிநூலிற் சொல்லப்பட் டிருக்கின்றது என்றிவ்வாறு சிலவற்றைச் சொல்லலாயினன் :

மாயைச்சருக்கம் முற்றிற்று.

---

39. மீமாஞ்சச் சருக்கம்.

'அதிட்டத்தாருக்கு உபய காரணத்தால் உயர்ந்த வினையுண்டாகி, ஆகாய முதலிய பிரபஞ்சம் வித்தும் முளையும் போலக் கிடைத்து, நீரொழுக்கம் போல அநாதியாய்த் தோன்றி நிலைபெற்று அழியாதிருக்கும். இவ்வகைக்கு ஒரு இறைவனில்லை. விண்ணுலகத்துத் தேவர், மற்றைப் பெயர், பயன் என்பவைகளைக் கொடாமல் தந்திரமாகிய வேதஞ் சொல்லுகின்ற தனிப்பெயரைத் தருதலால் இந்திரனுக்கு என்று சொல்லப்

படுவது முதல் ஆகமங்களி லெடுத்துச் சொல்லப்படுகிற மந்தி
ரச் சொற்களல்லால் வானவர் வேறில்லை. காண்டல், நினைத்
தல், ஒப்பு, கட்டுரை, பொருள், அபாவம் என்னு மிவை யா
றே பிரமாணங்க ளாவன. வேதங்கள் நித்தியம். காற்றில்லா
மல் மூங்கிலோசை வெளிப்படாததுபோல நாவோட்ட முத
லிய இல்லையாயின் வேதம் புலப்படாது.

"சாம முதலியவைகள் அறிவை நீக்கும். அவை அறி
வைப் பெருக்கும் என்றால் வேதம் பொய்யாகும். எந்த
வேதம் அறிவை யுண்டாக்குமோ அந்த வேத மில்லையாயின்
அறிவானது ஊமையும் குழந்தையும் போலாகும். ஒருவரா
லுஞ் சொல்ல வொண்ணாத மறுமைப் பயனை விளக்கமாகச்
சொல்லுதலாலே வேதத்தை முனிவர் சித்தர் முதலானோர்
பரம்பரையாய் ஓதி வருகின்றார்கள். தாதுக்கள் பிரத்தியயங்
கள் பிராதிபதிகம் ஆகிய இவற்றைப்பற்றி விரிவாகச் சொல்
லுதலா லந்த வேதத்தை யோதினால் சொர்க்கத்தை யடை
வது உண்மையாகும். தெய்விகமாகிய வேதம் ஆறங்கங்களை
யும் உபவேதம் மூன்றையும் தன்னுள்ளே யடக்கி, தோற்ற
நாசங்க ளில்லாமல் என்றும் ஓரியல்பா யிருப்பதாகும். ஆறங்
கங்கள் எவையெனின், சிக்ஷை, கற்பம், வியாகரணம், நிருத்
தம், சோதிடம், சந்தம் என்பவைகளே. உபவேத மூன்
றென்பன எவையெனின், ஆயுர்வேதம், தநுர்வேதம், காந்
தர்வவேதம் என்பவைகளே. இருக்குவேதம் மந்திரங்க
ளெல்லாவற்றையுஞ் சொல்லும், தைத்திரிய வேதம் யாகங்
களைச் சொல்லும், சாமவேதம் இவ்விரண்டையுஞ் சொல்லும்
அதர்வணவேதம் ராஜநீகத்தைப் பற்றிச் சொல்லும். உயிரா
னது நித்தியமாய் அறிவுடையதாய் அநேகமாய் தெருள் மருள்
இரண்டையும் பொருந்துவதாய் அருவமாய் வினைக்கேற்றசரீர
த்தை யடைந்து இந்திரியங்களின் வாயிலாக எல்லாவற்றையு
அறிவதாகும். உலகத்தில் எருக்கள் கெட்டு வயலிற் சேர்ந்து
பயிர்களை விளைவித்தல்போல தூல கன்மங்கள் கெட்டுச் சூ
க்ஷும கன்மங்கள் ஆன்மாவைப் பொருந்தி நின்று இன்

துன்பங்களைக் கொடுக்கும். வேதங்களெல்லாம் பக்தி வைராக்கியம் ஞானம் பிரமத்தினுண்மை என்பவற்றை விஸ்தரித்துச் சொல்லினும் சற்கருமங்களைச் செய்வதற் கேதுவாகவே சொல்லாநின்றன. கன்மம் நித்தியம், நைமித்திகம், காமியம், நிஷித்தம், பிராயச்சித்தம் என ஐந்து வகையாகும். இந்தக் கன்மங்களெல்லாம் சீவகோடிகளுக்குத் துன்பத்தை யொழித்து இன்பமாகிய பயனைத் தரும். இவற்றுள், நித்திய கன்மங்கள் எவையெனின், நீராடல், சந்தியாவந்தனம், ஜபம், ஹோமம், தேவதார்ச்சனை, வைசுவதேவம், விருந்து, ஆதானம், இஷ்டி, அக்கிஷ்டோமம், பசுபந்தம், த்ரேதாக்கி முதலியவைகளாம். அயனங்கள், விஷுவங்கள், சங்கிராந்திகள், உபராகங்கள், புஷ்கலங்கள், பர்வங்கள், அர்த்தோதய மகோதயங்கள் ஆகிய இந்தத் தினங்களில் புண்ணிய தீர்த்த ஸ்நானம் தானம் முதலியவை செய்தல் நைமித்திகங்களாம். அசுவமேதம், ராஜசூயம், பௌண்டரிகம் முதலிய வேள்விகளும் சோமவார விரதம் முதலியவும் காமியங்களெனப்படும். களவு செய்தல்...

ஞ்சமுண்டல், பிறனில் வேட்கை முதலியவை நிஷித்தங்கள் எனப்படும். அநசனம், பராகம், சாந்திராயனம், க்ருச்சிரம், நீரிற் கிடத்தல், காற்றைப் புசித்தல், தீயிடை நிற்றல், கோயில் விளக்கல், தீர்த்தயாத்திரை இவைபோல்வன யாவும் பிராயச்சித்தமெனப்படும். சீவனிருக்குமளவும் நித்திய நைமித்திகங்களைச் செய்தால் பிராரத்தங்கள் தொலையும். காமியத்தால் சுவர்க்கமுண்டாகும். நிஷித்தத்தை விட்டால் ஆகாமியத் துன்பம் நீங்கும். பிராயச்சித்தத்தால் சஞ்சிதமொழியும் இந்தச் சஞ்சிதம் முதலாகிய பந்தங்களைப் பஞ்சகர்மங்களாலும் நெருப்பிற்பட்ட பஞ்சுபோ லழியப்பண்ணிச் சுவர்க்கலோகத்தை யடைந்து அவ்விடத்தில் வாழ்ந்திருத்தலே முத்தியெனப்படும். இதுவே வேதமுடிவாம். கர்மத்தால் உலகமுண்டாகும். கடவுளென் றொருவனில்லை. வேதவாக்கியம் ஒருவனாற் சொல்லப்பட்டதல்ல. சுவர்க்கமே முத்தி என்றான்.

இவ்வாறு சொன்ன மீமாஞ்சனுக்கு ஒருமைப்பாடுள்ளவனாகிய வேதாந்தியானவன் தானுஞ் சிலவற்றைச் சொல்

லத் தொடங்கினான்: 'காரணங்கள் சடமாதலால் அவை
ஒரு கருத்தனில்லாமல் தோன்றமாட்டா. அதிட்டம் உயி
ருக்கு ஊட்டுமென்றால் அதற்கும் அறிவில்லாமையாலும்
காரணங்களோடு சேர்ப்பதென்கிற அதிட்டமும் பொருந்
துதலில்லாமையாலும் இந்த வுலகமானது ஒரு இறைவனால்
நிலைபெற்றிருக்கின்றது. நசித்த வினை பின்னும் நின்று பயன்
தருதல் எரு நசித்துப் பயிரை விளைத்தலுக்கு நிகராகும் என்
றால், வேள்வியின் பயன் அந்த வேள்வியைச் செய்த தேசத்
திற்றானே உதவவேண்டும். அன்றியும், கருமம் அசேதன
மாகையால், அதற்குரிய கூலிகொடுக்க ஒரு இறைவன் வேண்
டும். வேதம் சுயம்பு என்றாய், சுயம்புவென்று வேதம் சொல்
லுமானால், வேறு பிரமாணமுண்டாயினும், சொல்லப்பட்ட
பாரதமும் ஒரு சுயம்புவாதல் வேண்டுமென்று சொன்னா
யில்லை; சொல்லாகையால் ஒருவனால் சொல்லப்படவேண்டும்.
பேதாய், காரியம் காரணமில்லாமல் தானே யுண்டாகுமோ?
வேதமும் இறைவனது திருவாக்கிற் பிறந்ததேயாகும் அந்த
இறைவனும் ஒரு புருடனாதலால், ராகமுதலிய குணங்கள்
அவனையும் வந்து சூழுமாதலால் அவன் சொல்லிய வேதமும்
உண்மையல்ல வென்பையாயின், அவ்விறைவன் காமமுதலா
கிய மூக் குற்றங்களும் நீக்கினவனும் முழுதுணர்ந்தவனுமா
கையால் அவன் தன் கருணையால் தந்த வேதம் எக்காலத்தி
லும் ஒரு குற்றமில்லாதிருப்பது, இது சத்தியம். பரம
காரணத்வம் முதலியவற்றை யுடைய இறைவர் ஒருவருளர்
என்பதற்கு வேதாகமாதிகளும் அநுமாநமும் பிரமாணங்க
ளெனப் பெரியோர் கொள்வார்கள். வேதமானது ஒரு சுயம்
புவால் சொல்லப்பட்டு வந்ததாதலால் அவ் வேதமும் சுயம்
புவென்று சொல்லப்படும். அப்படிச் சொல்லுதல் எதுபோலு
மெனின், அரசர் வாய்மொழி யெழுதின வோலையை இவ்
வுலகத்தார் திருமுகமென்று சொல்லி யேற்றுக்கொள்ளுதலை
நிகர்க்கும். அப்படிப்பட்ட காரணமும் அவயவத்தைப்
பொருந்தினால் கடபடாதிகள்போல அழியும்; அவயவத்தைப்
பொருந்தா தாயின் ஒன்றோடொன்று பொருந்தமாட்டா;

இவ் வகையால் இவ்வுலகு தோன்றிற்றில்லை. வித்தும் மூளை யும் மழையினாற் செழித்துவளர்ந்து வெயிலினா லழிவது போல உலகம் தோன்றி நின்று அழியும். உயிர் எங்கும் நிற்கு மென்றால், ஊழ்வலியடைந்து நின்றழிதலில்லையாம். கடத் தில் ஆமணம்போல உடலில் தங்குமென்பாயாயின், உடலழி ந்தபோது எங்கேயிருக்கும்? யோகியானவன் பரகாயப்பிர வேசம் செய்துவருவதையும் வேத மரியாதையையும் அறிந் தாயில்லை. அந்தச் சீவன் சுவர்க்க போகத்தை யநுபவிப்பதே முத்தியென்றால், அதுவும் வினையினால் வருவதைப் பெற லால் கடாதிகள்போல அழிவதாகும். இந்தத் தன்மையால் முக்தியானது நித்திய நிரதிசயமானதென்று சொன்ன வேத த்தோடு விரோதிப்பதையும் அறிந்தாயில்லை. இன்ப துன்பங் கள் வேறு வேறுடம்புகளி லிருத்தலால் உயிர் அநேகமென்று சொன்னாலும் ஒன்றென்று சொன்னாலும் அந்தரிந்திரிய வுபா தியினால் பின்பு அனேக விதமென்று விளங்குதலன்றி, தன் தன்மையால் முன்னே சொல்லப்பட்ட உயிர் ஏகமன்றி வே றன்றென்று வேதமுடிவுஞ் சொல்லாநிற்கும். சற்கருமமா னது சித்த சுத்தியைத்தரும், முக்தியைத் தராது. ஆதலால் வேதமுடிவை யறிந்து, ஞானநெறியை யடைந்து, மோக்ஷத் தைப் பெற்று வாழக்கடவாய்'என்றான். இவ்வாறு வேதாந்தி சொல்லக்கேட்டு, மீமாஞ்சன் பாம்பின் வாயிலிருந்து வெளிப் பட்ட வெண்மையாகிய சந்திரன்போல விளங்கினான். ஈசன் ஒருவனுண்டு, அவனால் உலகமுளது, கன்மமும் அவனை யன் றித்தானே பயன் தருதலில்லை, முக்தியும் அதனாலுண்டாகா தென்று இவை யாவுஞ் சொன்ன வேதாந்திக்கெதிரே சமுச் சயன் என்பவனொருவன் வந்து சிலவற்றைப் பிதற்றுவானா யினான்:

மீமாஞ்சச் சருக்கம் முற்றிற்று.

[illegible] தேருவைக்கொண்டு ஆகாயத்
[illegible] வருதாமல் ஈசுவரார்ப்பணமாய்ச்
[illegible] அகண்ட சச்சிதாநந்த பிரமஞானத்
[illegible] இடைக்கொண்டு உயிர்கள் இன்பவீட்டை
[illegible]டையும் என்றான். இப்படிச்சொல்லக்கேட்ட உபநிடதத்
[illegible] தலைமைபூண்ட வேதாந்தியானவன் சமுச்சயனை நோக்கி,
[illegible]ற்கருமத்தால் முக்தியுண்டாமென்றால், கருமத்தாலுண்
டான எல்லாப்பொருள்களும் மாடமாளிகை மேடையாதி
கள் அழிவதுபோல ஒரு கணப்பொழுதிலழியும்; அன்றியும்,
முக்தியடைந்தவன் மறுபடியும் பிறவிக் கடலிலழுந்தவேண்
டும். பொருந்தின கேவலன் மீண்டால் பிறவிக்கும் வீட்டுக்
கும் பேதமுண்டோ? முக்தருக்கு எக்காலத்திலும் பிறவி
யில்லையென்றும், முக்தி நித்தியமென்றும் சொன்ன மே
லோர் திருவாக்குக்கும் அது விரோதமாகும். மெய்யுணர்
வாற் பெறப்படுகிற வீடும் கருமத்தாலுண்டாகிற பொருள்
கள்போல அழியுமென்றால், சூரியனை மறைத்த மேகத்தைச்
சண்டமாருதம் விலக்குதல்போலப் பொய்யுணர்வை மெய்
யுணர்வு விலக்குதலேயன்றி நித்த சுத்த சொரூபமான சச்சி
தாநந்த வொளியை யுண்டாக்குந் திறத்ததன்று. இருளும்
ஒளியும்போலக் கருமமும் ஞானமும் பொருந்துதலும் இசை
யாது. அதுவுமன்றி ஞானத்தாலன்றி மற்றொன்றால் முக்தி
யடைய வொண்ணாதென்று சொன்ன வேத வாக்கியத்துக்
கும் விரோதமாகும். கருமமானது சித்த சுத்தியை யுண்டா
க்கி முக்தியையுங் கொடுக்குமென்றால் சித்த சுத்தி யல்லது
வேறொன்றும் முக்தியைத் தராது. கருமத்தாற் சித்த சுத்தி
யுண்டாகி, அந்தச் சித்த சுத்தி வாயிலாக ஞானமுதித்து, அத
னால் முத்தியடையவேண்டும் என்று சொன்ன வேதாந்திக்
கெதிரே மாலைக்காலத்து நக்ஷத்திரங்கள் போலச் சமுச்சயன்
அற்பவுணர்ச்சி யுடையவனாய் நிற்கும்போது, சாங்கியன்
வந்து வேதாந்தியை நோக்கிச் சொல்லத்தொடங்கினான்:

சமுச்சயன் சருக்கம் முற்றிற்று.

41. சாங்கியமதச் சருக்கம்

'கடல்சூழ்ந்த இவ்வுலகமுதலாகிய எல்லா வுலகங்களுக்
கும் உபாதான காரணமாகி நின்ற பகுதி இது, புருடன் இவன்
என்று பகுத்துணர்ந்து, தான் வேறாகி நிற்பதே முத்தி
யென்று கபிலர் சொல்வார். சொல்லப்பட்ட பகுதி புரு
டன் என்னு மிரண்டனுள்ளே பகுதியில் முக்குணங்களுந்
தோன்றும். அவற்றால் இவ்வுலகந்தோன்றும்; இவ்வகையால்
காரணமில்லாமல் காரியந் தோன்றாது; அந்தப் பகுதி சடரூ
பத்தையும் சலரூபத்தையு முடையதாம். அந்தப் புருடன்
சேதந ரூபத்தையும், அசல ரூபத்தையு முடைய னவன்.
அவனுக்கேற்ற போக மோக்ஷங்களைத் தருதற்பொருட்டுப்
பகுதியானது தானே சுதந்தரமாய் நின்று இவ்வுலகத்தைத்
தோற்றுவிக்கும்? இத்தன்மையாகிய பகுதியின் வகையைச்
சொல்லுமிடத்தில், மூலமென்றும், புரியட்டகமென்றும்,
விகுதியென்றும் மூன்று வகையாம். அதனைப் பரமென்றும்,
சூக்குமமென்றும், தூலமென்றும் சொல்வார்கள். அவற்
றுள், சித்தமூல மென்னும் சத்தமுதலாகிய ஐந்தும் மனம்
புத்தி அகங்காரங்களும் ஆகிய இவ்வெட்டும் புரியட்டக
மென்றும், தேகாதிகளுக்கேற்ற பிரபஞ்சக் கூறே விகுதி
யென்றும் அறிஞர் சொல்வார்கள். நித்தியமாய்த் தான் ஒன்
றினின்றும் தோன்றாமையால் எல்லாவற்றுக்கும் வித்தாகிய
அந்தப் பகுதி விகுதியாகா தெனவும், புத்தி ஆங்காரம் பஞ்ச
தன்மாத்திரைகள் ஆகிய இந்த ஏழும் பகுதி விகுதியென
வும், அந்தக்கரணமிரண்டும் தன்மாத்திரைகளைந்தும் பகுதி
யிற் றோன்றினமையால் விகுதியெனவும் சொல்லுவார்கள்,
அகங்காரத்தில் மனத்தினோடு இந்திரியங்கள் பத்தும், பஞ்ச
தன்மாத்திரைகளில் பஞ்ச பூதங்களுந் தோன்றுதலால்,
அவைகள் விகுதியாகு மேயன்றிப் பகுதி பகுதியுடன்
விகுதியாகா. புருடன் ஒன்றில் தோன்றாமையாலும், அவ
னிடத்தில் ஒன்றுந் தோன்றாமையாலும் விகுதி பகுதி
களை நீங்கி நின்று அசங்க வுதாசீநனென்றும், அநேகனென்

றும் சொல்லப்படுவான். அன்றியும், அவன் நித்தியனாவன், அவனை மதித்தற்கு வேறு கருத்தாவில்லை. பகுதியும் புருடனும் அநாதியாகும். அந்தப் பகுதி காரண காரிய கருத்தாத் தன்மைக் கேதுவாகும். இந்தப் பகுதி புருடர்களியல்பு இப்படி இருக்கையால், பகுதி யிடமாய் நின்று அதனுள் பதிவுமொரு முக்குணங்களையும் புருடன் அநுபவிப்பான். அந்தக் குணத்திற் பற்றாய் நிற்பதே உயர்ச்சி தாழ்ச்சிகளாய்த் தோன்றும் யோனிதோறும் பிறத்தற்குக் காரணமாம். அதை விட்டால் கொடிய பிறவி யில்லையாகும். பகுதி யிதுவென்றும், புருடன் இந்தன்மையனென்றும், வெவ்வேறாய்ப் பகுத்துணர்ந்து, அந்தப் புருடன் பகுதிக்கு வேறானவனா யிருத்தலே முத்தியாகும். இதுவே நிச்சயம். இதைப் பார்க்கிலும் வேறொரு நிசசயமுண்டென்று சொல்ல வல்லவர் யாவர்? பகுதியும் முக்குணங்களும் ஒத்தே இன்ப துன்பங்களையும் முத்தியையும் புருடன் அடைவான்.' அவன் சுயமாய் உலகத்தைத் தோற்றுவிப்பனென்றும், அவன் அநேகனென்றும், அவனுக்கு ஈசனில்லையென்றும் இப்படிப் பலவற்றையும் சொன்ன சாங்கியனை நோக்கி வேதாந்தியானவன் சொல்லத்தொடங்கினான்: 'பகுதியானது உலகை ஒரு சர்த்தாவின் ஏவலால் படைத்ததோ? அன்றிச் சுயமாய்த்தானே படைத்ததோ? ஏவலாற் படைத்ததென்றால் நீயும் எமது வழி வந்தவனானாய். சுயமாய்த் தானே படைக்குமாயினும், எல்லாவற்றையும் படைத்தல் இசையாது. பகுதி யியல்பாகிய இன்பதுன்ப மோகங்கள் அதத்தன்றிப் புறத்தில்லாமையால் கடபடாதிகள் ஒருவனாற் பிறவாது தாமே யுண்டாதல் வேண்டும். அதுவன்றிப் புருஷார்த்தத்தைத் திருத்தலால் ஒருவனது தருதற்றொழிலும் உளதாகின்றது. இதற்குச் சுருதியின் பலமும் உண்டு. சொல்லப்பட்ட பகுதி அசேதனமாயிருத்தலால் பிரபஞ்சத்தை வருவிக்கவும் மாட்டாது. [illegible]யென்றால் குயவனின்றி மண்தானே குடத்தையுண் [illegible]தோறும் தேர்கள் இழுப்பாரில்லாமல் தாமே [illegible]வேண்டும். முடிவற்ற பகுதி அசேதனமாயிருந்தும் ஆற்

நன்னீர் பெருகுவதும், மடியில் பால் ஒழுகுவதும் போல
கத்தைத் தோற்றுவிக்குமென்னில், நீரானது ஒருவன்
ய்த பள்ளத்தின் வழியே பெருகியோடா நிற்கும்; பசு
மடி தன் கன்றுக்கிரங்கிச் சுரந்து பாலைச் சொரியும். அத
ம் பகுதியானது சேதனனுடைய ஏவலினால் எல்லா வுல
களையும் முற்காலத்தில் வகுத்ததென்று சொல்லவேண்
பசும்புல்லானது பாலாகும் விதம்போலப் பகுதியும்
வுலகாகுமென்றால், பசுவானது பசும்புல்லைப் பதமாய்த்
றாற் பாலாகும், பசும்புல் தானே பாலாகுமோ? நீர், மண்
பவை கூடி வித்தினையும், முளையையும் விளைப்பதுபோலப்
குதியும் ஒன்றோடொன்றாய்க் கலந்து ஒரு கருத்தனின்
றித் தானே யுலகை யுண்டாக்குமென்றால், வித்துப்போல
வயவியாய்த் தரியாது அழிந்துபோம்; தன் சுதந்தரமும்
க்குப் பொருந்தாது, ஜடமாதலால் ஒருவன் இல்லாமற்
பொருந்தியிருக்கும் உறுதிப்பாடும் கூடாது. முக்குணங்க
ம் தாழ்தலும் உயர்தலும் ஒருவனாற் செய்யப்படுதல் திட
தலால் வெவ்வேறாகி ஜகத்தை இறைவனொருவனின்றி
றயாய் வகுத்தல் பகுதியினால் ஆகுமோ? சிறிதும்
து. இரு காலும் இல்லாத ஒரு முடவனானவன் இரு
ணும் இல்லாத ஒரு குருடன் மீதேறி வருவதுபோலப்
தியைப் புருடன் நடத்துவானென்றால் அவ்விருவர்க்கும்
வாகிய அவயவம் உள. அவற்றின் உதவியும் உண்டு.
தி அருவாகையால் அதனை நடத்துதல் அப் புருடனுக்
இசையாத காரியமாம். காந்தத்தி னெதிரே இரும்பு
செகின்ற காட்சிபோலப் புருட னெதிரே பொருந்திய
தியானது உலகத்தை வகுக்குமென்றால், அவ்விருவகை
ம் சந்நிதானமொன்று எக்காலத்தும் இருக்கும். இவ்
ந்து மீளவும் உற்பத்தியாகுமென்று சொல்லுதல்
ரியங்கள் பதினொன்றென்றும், ஏழென்றும்;
ன்றும், ஒன்றென்றும் ஒன்றுக்கொன்று
சொல்லுகின்ற சொன் மயக்கத்தாலும்,
பொருந்தாமையாலும், நிச்சய ஞானம்

உண்டாகாது. ஆதலால் உனது சாங்கியமதம் குற்றமுள்ளது. புருடன் அநேகனென்றதும் கற்பனையேயன்றி இயற்கையா லல்லவாம். மற்றென்னெனின், சூரியன் ஒன்றாயிருந்தும் பிம்பம் கடங்கள்தோறும் உரு வெவ்வேறாகி யுதிக்குந் தன்மைபோலாம். பகுதிக்கு அறிவில்லையாதலால் அது புருடன் பயன் கொள்ளத்தகு மிச்சையினால் இவ்வுலகத்தைத் தராது. புருடன் இச்சையைக் கொண்டு உலகத்தைத் தந்தானென்றால் அவனுக்கு என்றும் அதுவுள்ளதாகி மிருவதனால் போகமேயன்றி மேலாகிய வீடு அடையவொண்ணாது. அந்தப் புருடன் இச்சையினால் உலகத்தைத் தருவானெனின் ஐயயானால், நீயும் வேதாந்தியாவாய். இச்சை எமக்கு ஆரோபிதமாகும், உனக்கு மெய்யாகும். இவ்வகையால் எமக்கு முத்தி கிடைக்கும், உனக்குத் தண்டயுண்டு. இதுவரைக்கும் பூருவபக்ஷமாகும், இனிச் சித்தாந்தத்தைக் கேட்பாயாக. உன்னை நீ யறிந்து, இரண்டற்று ஒன்றாகி, சச்சிதாநந்தத்தை யடையக்கடவாய்' என்று வேதாந்தி சொல்லக் கேட்ட சாங்கியனும் உதயகால தாமரை மலர்போல முகமலர்ச்சி கொண்டிருந்தான். அக் காலத்தில் தார்க்கிகன் வந்து வேதாந்தியை நோக்கிச் சிலவற்றைச் சொல்லத்தொடங்கினான்;

சாங்கியமதச்சருக்கம் முற்றிற்று.

---

42. தார்க்கிகன்மதச் சருக்கம்

'திரவியம், குணம், கர்மம், சாமாநியம், விசேடம், சமவாயம் என்று சொல்லப்பட்ட ஆறு பதார்த்தங்களோடு அபாவமென்றொன்று சேர்ந்து ஏழாகும். அந்த ஏழில் 'திரவியமானது பூதமைந்து, காலம், திசை, ஆன்மா, மனம் என்னும் ஒன்பது வகையாயிருக்கும். குணமானது உரு, சுவை, கந்தம், பரிசம், கணனை; பரிமாணம், பேதம், சையோகம், வியோகம், பரத்வம், அபரத்வம், ஆபாரம், திரவத்வம், ஸ்நேஹம், சத்தம், புத்தி, சுகம், துக்கம், இச்சை, துவேஷம், முயற்சி, தர்மம், அதர்மம், வாசனை என்னும் இருபத்து

ான்கு வகையாயிருக்கும். கருமமானது குவிதல், விரிதல், டை, கீழ் மேற் செல்லுதல் என்னும் ஐவகையா யிருக்கும். ாமாநியமானது சாதி உபாதியென்கிற இருவகையாயிருக்கும். விசேடமானது ஒரேவகையாயும் சமவாயமானது ஒரே கையாயுமிருக்கும் அபாவமானது அந்நியோந்நியாபாவம், த்தியந்தாபாவம், பிராகபாவம், ப்ரத்வம்ஸாபாவம் என்னும் நான்கு வகையதாகும். இனிக் கௌதமத் தியலையுஞ் சொல்லக் கேட்பாயாக. பிரமாணம், பிரமேயம், சமுசயம், ரயோசனம், திட்டாந்தம், சித்தாந்தம், அவயவம், தர்க்கம், ர்ணயம், ஆவர்த்தம், செற்பம், விதண்டை, ஹேத்வாபாசம், லம், சாதி, நிக்கிரகம் எனப் பதினாறு வகையதாம். அவற்றுள்ளே, பிரமாணமானது பிரத்யக்ஷம், அநுமானம், உபமானம், சப்தம் என நால்வகைத்தாம். பிரமேயமானது ஆன்மா, சரீரம், இந்திரியம், பொருள், புத்தி, சித்தம், ப்ரவிர்த்தி, தோஷம், பிரேத்தியபாவம், பேறு, இடர், முத்தி எனப் பன்னிருபகுதியதாம். சமுசயமானது மூவகையாயும், அவயவமானது ஐவகையாயுமிருக்கும். திரவியங்களுள்ளே மண்முதலாகிய நான்கு பூதங்களுள்ளே, பரமாணுக்களென்பவையும், ஆகாயம், காலம், திக்கு, ஆன்மா, மனம் என்னும் ஐந்தும் நித்தியப் பொருள்களாம். அவற்றுள்ளே, மண்முதலாகிய நான்கு பூதங்களும் தோன்றுவதும் ஒடுங்குவதும் சொல்லுவேன் கேள். சகத்துக்குப் பிரமம் உபாதானமன்றாதலால் சச்சிதானந்த ரூப மகத்துவ மின்மையால், கந்த முதலிய நான்குமுண்மையால், மண்முதலாகத் தொகுத்த பரமாணுக்கள் அதிட்டமாகிய ஆன்மாவைத் தொட்டுச் சலித்து நீங்காமல் ஒன்றோடொன்று இசைந்து உபாதானமாய்ச் செய்யும். இவ்வகையால் உண்டாகிற வுலகத்தில் உபாதானம் குணங்கள் உண்டாகும். இந்த நான்கினுள்ளும் மண்ணின் குணம் நான்கும் காரண காரியங்களினும் பொருந்தும். அவை அநித்தியம்; நீர் காற்று என்பவற்றின் குணம் முடியாது என்றும் நித்தியமாகிய உலகத்தைக் காக்கும்; இறைவிருப்பாகிய அனுநீக்க அவை நீங்கும். சமவாயி முதலாகிய மூவகைக் காரணத்

தால் சகத்தையெல்லாம பரமான்மாவாகிய இறைவன் முக்குணத்தோடு கூடி நின்று படைத்தல் காத்தல் அழித்தல்களைச் செய்வான். அவனே எம்மை யாண்டருளும் பரமதயாநிதி. இவ்வினை நல்வினைகளைச் செய்து அவற்றுக்கேற்ற வுடல்களெடுத்து உழலும் சீவான்மாக்கள் அளவற்ற பலகோடிகளென்று சொல்லலாம். அந்த உடல்தோறும் மனம், மற்றுள்ள பகுதித்தொகுதி யென்பவையாவும் அணுரூபமாயும் நித்தியமாயும் அங்கங்கேயுண்டு. இவற்றின் பாகு பாடுகளெல்லாவற்றையும் ஆராய்ந்தறிந்து, தானே தானுதல் தத்துவ ஞானத்தின்றன்மையாம். அந்த ஞானத்தால் பொய்யுணர்வு நீங்கிவிடும். அது நீங்கினவுடனே சாதிபேத தோஷம் நீங்கும். அது நீங்குதலும் தருமாதருமப் பிரவிர்த்தி நீங்கும். அது நீங்குதலும் பிறவித்துன்பம் நீங்கும். அது நீங்குதலும் இருபத்தொரு வகையாகிய துன்பங்களும் நீங்கும். இந்திரியங்கள் அவற்றின் விடயங்கள் துக்கசுகங்கள் என்பவற்றை விடுத்தலே கைவல்லிய பதமாம். இதுவே உண்மை நிலை' என்று சொன்னான். இவைகளைக் கேட்ட வேதாந்தியானவன் தார்க்கிகனை நோக்கிச் சொல்லத் தொடங்கினான்:

தார்க்கிகன் மதச் சருக்கம் முற்றிற்று.

---

43. வேதாந்தி மறுத்தற் சருக்கம்

'பரமாணுத்துவணுகத்தின் பரிமாணம் திரணுகத்தின் பரிமாணத்துக்குக் காரணமாகாமையாலும், கணனையைக் கொண்டாகையாலும், தன் சாதியைத் தந்திடு நியமமின்மையாலும், சகத்துக்கெல்லாம் பிரமம் காரணமாகாது, பரமாணுவே காரணமென்று நீ சொன்னது பொருந்தாது. அன்றியும் உயிர்களின் அதிட்டத்தால் ஒன்றோடொன் றசைந்து கூடுதலால் சகமுண்டாகும். எனில், அவ்விசை வுண்டாதற்குக் காரணம் வேண்டும். அது திட்டமோ அதிட்டமோ? திட்டமென்றால், அது முயற்சி யென்பதல்லது அசைத லென்பதோ? அவ்விரண்டுங் கூடாமல் உலகு தோன்றுங் கால

தில் உடலின்மையால் அதிட்டமென்பாயாயின், அது அணு வுக்கோ சீவனுக்கோ? அணுவுக்கேயென்பாயாயின், அது அப சித்தாந்தமாகும். அது உயிருக்கென்பாயாயின், பரமாணுக்கள் நெருங்கும் பொருட்டு அசையாத அணுக்களில் அந்த அதி ட்டமின்மை சொல்லாலல்லவோ. அதிட்டமாகிய உயிரை அணுத்தொடுதலால் அதற்கும் அசைவுண்டாமெனின், சகத் துக்குத் தோற்றம் எக்காலத்து முண்டு. உயிரை யெப்பொழு தும் அணுத்தீண்டுதலால், பின்னும் அணுச்செறிவு எங்கு முண்டென்றால் காரியமும் அவ்வாறேயாகும். ஓரிடத்தில் விதிக்கப்பட்டதென்றாலும், உறுப்பில தென்றாலும், உறு துண்டாயினும், அழியும், செறியும் விதங்கூடாது. ஒரு புறத் தில் அவயவத்தைக் கற்பனையாலுண்டாக்கி, அதனாற் கூடிச் சகத்தை அணுவுண்டாக்குமாயின் அது கற்பனையாம். இந் தக் கூட்டம் பொருந்தும் வகையால், அந்தக் கற்பனையா லுண்டாகும் சகமுங் கற்பிதமாகும். இதனால் ஒழியாத கவலை யையுடைய இவ்வுலகம் கந்தர்வ நகரத்தையும் கனவையும் நிகர்க்கும். அணுமுயற்சியுண்டானால் உலகழியாது, இல்லையா னால் உலகமில்லை. அணுமுயற்சியுண்மையும் இன்மையுமில்லை யாயின் எப்போதும் அதிட்டத்தை அணுப்பொருந்துதலால் அதற்கு ஒருகாலும் முயற்சி நீங்காது. கந்த முதலிய நான்கு காரணமும் தூலமும் அழிகின்ற கடாதிகளுக்குண்டாய் வந்த மையால் கந்தாதிகள்போல மற்ற மூன்றும் பரமாணுவுக்கும் வரவேண்டும். அப்படியே முடியுமென்றால், அந்த அணுவா னது ஒருகாலும் சகத் காரணமாவதற் கியையாது. துக்க சுகங் கள் வெவ்வேறாய்த் தோன்றுதலால் உயிர்கள் பலதொகை யாமென்றும், பேரறிவாலும் சிற்றறிவாலும் பரனும் சீவ னும் வேறாகத் தக்கதென்றும் சொன்னாயானால், அவ்விரண் டும் உபாதியினால் வந்ததல்லாமல் இயற்கையால் வந்ததல்ல ஆதலால் அநேக மென்றும் வேறென்றும் சொல்லவொண் ணாது. இருபத்தொரு துக்கங்களும் நசித்தால் முக்தி யுண்டா மென்று சொல்வாயாயின், உண்மையாயும் அகண்ட சச்சிதா நந்தமயமாயும், அழியாநிலையதாயு மிருப்பதுவே முத்தியெ

ன்று நால்வேதமும் சொல்லாநின்ற சொற்கள் பழுதாகு மாத லால் உனது தார்க்கிக மதம் தகுதியானதன்று, பழிப்புக் கேதுவானது' என்றான். இவ்விதமாக வேதாந்தி சொல்லுத லும், கேட்ட தார்க்கிகன் கார்காலக் குயில்போல வாய் பேசா தடங்கினன். அதன் பிறகு யோக மதஸ்தின் ஒருவன் வந்து, வேதாந்தியை நோக்கிச் சிலவற்றைச் சொல்லத் தொடங்கி னான் :

வேதாந்தி மறுத்தற் சருக்கம் முற்றிற்று.

---

44. யோகமதச் சருக்கம்

'எமது யோகம் அங்கி, அதற்கு இயமாதியெட்டும் அங் கங்கள். அவற்றுள், கொல்லாமை, வாய்மை, கள்ளாமை, பிர மசரியம், கருணை, வஞ்சமின்மை, பொறை, திடன், ஊண், சுசியென்னும் பத்துப் பகுப்புள்ளது இயம மெனப்படும். இந்தப் பத்தில், வேதமார்க்கத்தாலன்றித் திரிகரணத்தாலும் ஒருயிரையும் அழிக்காதிருத்தல் கொல்லாமையாம். உண்மைப் பொருள் பற்றிச் சொல்லுஞ் சொல் வாய்மையாம். பிறர் பொருளைக் கவர மனத்தாலும் நினையாதிருத்தல் கள்ளாமை யாம். விலக்கப்பட்ட நாள்களில் மாதர்போகத்தை நீக்கியிருத் தல் பிரமசரியமாம். தன்னுயிர்போல எவ்வுயிர்க்கும் இரங்கு தல் கருணையாம். நடுவு நிலைமையாயிருத்தல் வஞ்சமின்மை யாம். ஒருவர் தன்னை வருத்தினால் அதற்கு மனம் வருந் தாமை பொறையாம். வேதமார்க்கத்தா லன்றி முத்தியடைய வொண்ணாதென்று துணிந்திருத்தல் திடனாம். மிதாகாரம் கொள்ளுதல் ஊணாம். நீர்மண் இவைகளைக்கொண்டு மாசு தீர்ப் பது சுசியாம். தவம், மகிழ்ச்சி, உண்மை, தானம், பூசை, நூல்கேட்டல், இலச்சை, மதி, செபம், நோன்பு என்னும் இப் பத்துப் பகுப்புள்ளது நியமமெனப்படும். இவற்றுள், தவமா வது வேதத்திற் சொல்லப்பட்ட கிருச்சிர முதலியவற்றாலு ண்டாகும் சரீரவருத்தம் பாராட்டாமலிருப்பதாம். மகிழ்ச்சி யாவது செயலில்லாமல் வரும் பொருள் மேல் சந்தோஷம்

உண்மையாவது வேதத்திற் சொல்லப்படுகிற கன்மத்தில் சிரத்தையாம். தானமாவது அறநெறியில் வந்த பொருளைந் தக்கோர்க்குக் கொடுத்தலாம் பூசையாவது திரிமூர்த்திகளையும் இயன்றளவு வணங்கி வழிபடுதல். நூல் கேட்டலாவது வேதாந்தசாத்திர சிரவணஞ் செய்தல். இலச்சையாவது உலகவொழுக்கத்தையும் வைதிகவொழுக்கத்தையும் விடுதற்கு வெட்குதல். மதியாவது வைதிகத்தில் விசுவாசம். செபமாவது தனக்குரிய தைவமந்திரத்தைச் சிந்தித்தல். நோன்பாவது அருட்குருவைக் கொண்டு உய்ய வுபாயந்தேடுதல். இனி, ஆதனம் சோத்திகம், கோமுகம், பதுமம், வீரம், சிங்கம், பத்திரம், முத்தம், மயூரம், சுகம் என வொன்பது வகையினையுடையதாகும். அவற்றுள், சோத்திகமாவது தொடைக்கும் முழங்காலுக்கும் நடுவே இரண்டு உள்ளங்கால்களையுஞ் செலுத்தி யிருமாந்திருத்தல். கோமுகமாவது பின்புறத்தில் சகனப்பக்கத்தில் இருகாற்பரட்டை மாறிவைத்து அவற்றில் கைப்பெருவிரலால் மாறி வளையப் பிடித்திருத்தல். பதுமாசனமாவது இரண்டு தொடைகளின் மேலும் இரண்டுள்ளங்காலையு மாறித் தோன்றவைத்தல். வீரமாவது வலத்தொடையில் இடக்காற் பரட்டைச் சாத்தி இறுமாந்திருத்தல். சிங்கமாவது பீசத்தின் கீழே சீவனியிற் பரட்டைச் செலுத்தி இடது முழங்கையை முழங்காலின்மேல் வைத்து, அங்குலியை விரித்து நாசியைப் பார்த்திருத்தல். பத்திரமாவது பீசத்தின் கீழ்ச் சீவனிப்புறத்தில் இரண்டு பரடும் வைத்து அந்தப் பாதத்தை இருகையாலும் இறுகக்கட்டி அசையாதபடி யிருத்தலாம். முத்தம் என்பது இடப்பரட்டால் சீவனியை அழுத்தி வலக்காற்பரடு அந்த இடக்காற் பரட்டின் கீழுமுன் தும்படி யிருத்தலாம். மயூரமாவது முழங்கை யிரண்டும் உந்திப்புறத்தழுந்தும்படி பூமியிற் கையூன்றி, மண் மொருமித்துக் காலை நீட்டித் தலை நிமிர்ந்திருத்தலாம். சுகமாவது எப்படி யிருந்தால் சுகமாயும் அநுகூலமாயும் திடமாயு மிருக்குமோ அப்படியே யிருத்தலாம்.

'இனிப் பிராணாயாம விதியைச் சொல்லுகிறேன் கேள்: உந்தியின் கீழே நாடி யுதிக்குங் கிழங்கொன்றுண்டு; அதனிட

த்தில் நாடியின் முளைகள் அநேகமா யுண்டாகும். அந்த நாடிகள் எழுபத்தீராயிரமாம். அவை யாவும் கீழும் மேலும் நாபியின் பக்கமுமாகச் சக்கரம்போலச் சூழ்ந்திருக்கும். அவ்வெழுபத்திராயிர நாடிகளுள்ளே பிரதானமானவை பத்து நாடிகளாம். அவையாவை யெனின்:—இடை, பிங்கலை, சுழுமுனை, காந்தாரி, அத்தி, சிங்குவை, புருடன், அலம்புடை, குகு, சங்கினி என்பனவாம். இவற்றுள்ளே இடை பிங்கலைகள் சுழுமுனைக்கு இடம் வலமாயிசைந்து மாறிக்கொண்டேயிருக்கும். இம்மூன்று நாடிகளுக்கும் ஐந்து தொளைகளும் ஐந்து முடிச்சுகளும் உண்டு. இந்த நாடிகளின் தன்மையையறிந்து, வெயில் காற்றில்லாத தனியிடத்தில், சுத்த சரீரியாய், வெண்ணீறணிந்து நியாசஞ்செய்து, மெல்லிய ஆசனத்தின்மேல் தருப்பையை விரித்து, அதன்மீது மான்தோல் முதலியவற்றை விரித்து, அதில் உட்கார்ந்து, விநாயகரை வணங்கி, இஷ்ட தேவதையையும் ஆசாரியனையும் துதித்து, கிழக்கு முகமாய் அல்லது வடக்கு முகமாய் ஆசனத்திலிருந்து, வாய்பேசாமல், உடம்பசையாமல், புருவ நடுவில் சந்திரன் அமிர்தத்தைச் சிந்துவதாகப் பாவித்து, இரு கண்ணும் நாசிநுனியிற் பொருந்தும்படி மாறாமல் விழித்து நோக்கி, இடை நாடியினால் வாயுவை வாங்கி வயிறு முழுதும் பூரித்து, அதன் நடுவில் அக்கினி சொலிப்பதாகப் பாவனைசெய்து, விந்துவுடன் கூடி, ரேபத்தைச் சிந்தித்து, பிங்கலை நாடியால் அந்தக் காற்றை வெளிப்படுத்தி, பின்னும் பிங்கலையால் பூரித்து இடைநாடியால் வெளிப்படுத்தி, இவ்வாறே நாளொன்றுக்கு அவ்வாறு விசை முக்காலத்திலுஞ் செய்து, மூன்று அல்லது நான்கு வருஷகாலம் முயன்று வந்தால் நாடிகள் சுத்தியாகும்; சுத்தியானால் உடம்பு லேசாகும், சாடராக்கினி சொலிக்கும், நாதம் செழிக்கும், ஒளி யதிகரிக்கும். இவ்வாறு நாடி சுத்தியான பிறகு, பதினாறு மாத்திரையால் வாயுவையிடைகலையாற் பூரித்து, பதினாறினால் கும்பித்து, சிவமந்திரத்தையேனும் விஷ்ணு மந்திரத்தையேனும் தியானித்து, அதன் பின்னே பிங்கலையால் முப்பத்திரண்டு மாத்திரையிற்

போக்குதலாம். இந்தக் கும்பகத்தில் பூரகரேசகத்தோடு கூடின கும்பகமென்றும் அவற்றோடு கூடாத கும்பகமென்றும் இருவகையுண்டு. இவற்றிற்கு முதலில் பூமியை விட்டெழுதலும் இடையில் உடல் நடுங்குதலும் முடிவில் வெயர்த்தலும் குறிகளாம்.

பிரத்தியாகாரமாவது மனமானது விடயங்களிற் செல்லாதபடி தடுத்தலாம். தாரணையாவது மனோவியாபாரமின்றி லக்ஷியத்திற் சாரப்பண்ணுதலாம். தியானமாவது ஆதார ஆதேயங்களிரண்டையும் ஆராய்தல். ஆதாரம் மூலாதார முதலாக அறுவகையாம். மூலாதாரம் இலிங்கத்தின் கீழே குதத்தின்மேலே முக்கோண வடிவாயிருக்கும். அந்த மூலாதாரத்தில் ஒரு குண்டலி சத்தியுண்டு; அது படத்தையுடைய பாம்பின் வடிவங்கொண்டு மும்மண்டலமிட்டுக் கொண்டிருக்கும்; அதற்கு அதிதெய்வம் ஒற்றைக்கொம்பினையுடைய விநாயகர். சுவாதிஷ்டானமென்பது அறுகோணமாய் இலிங்கத்தினடியிலிருக்கும்; அதற்கு அதிதெய்வம் பிரமனுவன். உந்தியின் நடுவில் வட்டமாய் மணிபூரகமானது விளங்கும். அதற்குத் திருமால் அதிதேவதையாவன். மார்பில் அநாகதம் சக்கரரூபமாய் விளங்கும்; அதற்கு உருத்திரன் அதிதேவதையாவன். விசுத்தியென்பது கழுத்தில் நிலைபெற்றிருக்கும்; அதற்குச் சிவான்மாவே அதிதெய்வமாகும். ஆக்கினையென்பது புருவநடுவில் அறுகோணமாயிருக்கும்; அதற்குப் பரமான்மாவே அதிதெய்வமாம். இது நிற்க, சமாதியாவது ஆறுதாரங்களைக் கடந்து மேற்போய், அசைவையொடு பிரமரந்திரத்தளவுஞ் சென்று, அவ்விடத்தில் வாழைமொக்குப்போல் முகங்கவிழ்ந்திருப்பதாகிய ஒரு ஆயிரவிதழ்க் கமலத்தைச் சோதியுட் சோதியென்னும் மகோச்சாரணத்தால் மலரச்செய்து, அந்தப் பூவினிதழ் நுனியில் சந்திரனையடக்கி, அக்கினி பீசத்தால் மூலாக்கினியையெழுப்பி, நாடிவலயத்தைப் பேதித்து, இளகச்செய்து, அந்தச் சந்திரனிடத்தினின்று பெருகிவருகிற அமிர்த வெள்ளத்தில் அழுந்துதலாம், இவ்விதமாகச்சொல்லப்பட்ட எண்வகையாகிய இயம

முதலியவற்றை அங்கமாகக்கொண்டு விளங்குகின்ற யோக
மானது, அவ்வங்கங்களாற் றோன்று மொளிகளெல்லாம்
சூரியனுக்கெதிரே நக்ஷத்திரங்கள் ஒளிமழுங்குதல் போல
மழுங்கிப்போகும்படி யெங்கும் வியாபித்துப் பேரொளியாய்
விளங்கும் வண்ணம் பாவித்திருத்தலாம். இந்த யோகத்தின்
பயன் யாதெனின், எவ்வகையாகிய பிணிகளும் நீங்கிப்போத
லும், வினைகள் யாவு மொழிதலும், எல்லாச் சித்திகளும் கை
கூடுதலுமாம். இந்த யோகியர்க்கு மூன்றுலகங்களினும் கிடை
த்தற்கரிய பொருள் ஒன்றுமில்லை. பிரமாதியருடைய தொ
ழில்களும் இவரால் அரைக்கணத்தில் செய்து முடிக்கக்கூடும்.
ஆதலால், இந்த யோகமதம்போலப் பெருமையுள்ள மதம்
வேறொன்றில்லை. அன்றியும், வாயிலிரண்டையுந் தடுத்து,
ஐம்புலன்களை யொடுக்கி, மனத்தை லக்ஷ்யத்தில் வைத்து,
ஆதாராதேயங்களை யறிந்து, அசையாமல் அந்தத் தேவ
தைகள் அபிமுகமாய்த் திரும்பச் செய்து, பிரமரந்திரத்தி
னிடையே சென்று, சந்திர மண்டலத்தில் அமிர்த வெள்
ளத்திலழுந்தி, சோதி சொரூபமாகப் பாவித்தலாகிய இந்த
யோக நெறியினுஞ் சிறந்தது வேறொன்றில்லை' யென்று
சொன்னான். இதைக் கேட்ட வேதாந்தியானவன் அவனை
நோக்கி, 'நீ சொன்ன சொற்களெல்லாம் உண்மையேயாயி
னும், நான் சொல்வதையும் நீ சற்றே சிரத்தையுடன்
கேட்பாயாக. என்னெனின், இந்தப் பாவனையை விட்டு ஒன்
றாகும்படி நீயே நீயாகுந்தன்மையை நோக்கிச் சச்சிதாநந்த
சாகரத்தில் மூழ்கக் கடவாய், இதினுஞ் சிறந்த தொன்றில்லை'
யென்றான். இதைக் கேட்ட யோகமதஸ்தன் அப்படியே
யாகட்டுமென்று சொல்லியமைந்திருக்கிற சமயத்தில், பஞ்ச
ராத்திரி யென்பவன் வந்து வேதாந்தியை நோக்கித் தன்
மதக் கோட்பாட்டைச் சொல்லத் தொடங்கினான்:

யோகமதச் சருக்கம் முற்றிற்று.

---

45. பாஞ்சராத்திரச் சருக்கம்

அருமையாயும், அநந்தகோடி அற்புத குணங்களால் அலங்கரிக்கப்பெற்றவனாயும், ஆதியாயும் ஞானவொளியுருவமாயும், எங்குந்தானேயாகியும் விளங்கும் இறைபரவாசுதேவரானவர் தமது பெருங்கருணையால் உலகத்தை யுண்டாக்க வேண்டுமென்று சுயேச்சையால் உருவங்கொண்டார். அவர், பிரமதேவனைத் தமது திருநாபியில் தோன்றுவித்து அவனைக்கொண்டு உலகையுண்டாக்கி, அவனது புருவத்தில் உருத்திரனை யுண்டாக்கி, அவனைக்கொண்டு உலகை யழிப்பித்து, உலகைக் காப்பாற்றுந் தொழிலைத் தான் பூண்டு விளங்குவார். இவ்வுலக முழுதும் தமது திருவடியை வணங்கி, நற்கதியடையும்படி கிருபையால் இவ்வைவரினையும் ஐந்து ராத்திரியில் திருவாய் மலர்ந்தருளிச் செய்ததனால் இந்த நூல் பாஞ்சராத்திரம் என்று சொல்லப்படும். இவர் சங்கருடணர், வாசுதேவர், பிரத்தியும்நர், அநிருத்தர் என்னும் நால்வகையாய் அவதரித்தருளினர். இதற்கு வியூகாவதாரமென்று பெயர். மேலும் அம்சாவதாரஞ் செய்தருளினர்: மச்சம், கூர்மம், வராகம், நரசிங்கம், வாமநம், பரசுராமர், பலராமர், ஸ்ரீராமர், கிருஷ்ணர், கற்கி என்று சொல்லப்பட்ட தசாவதாரமுஞ் செய்தருளினர். இந்தத் தசாவதாரங்களுள்ளே, வேதத்தைத் திருடிக் கடலி லொளித்த சோமுகாசுரனைக் கொல்லும் பொருட்டு மச்சாவதாரமும், திருப்பாற் கடல் கடையும்போது மந்தரமலையைத் தாங்கும் பொருட்டுக் கூர்மாவதாரமும், இரணியாக்கன் பூமியைப் பாயாகச் சுருட்டின போது அதை விரிக்கும் பொருட்டும் அவனைக் கொல்லும் பொருட்டும் வராகாவதாரமும், தமையன் பழிவாங்கச் சருவதேவ வணக்கத்தை விலக்கின இரணியனைக் கொல்லும் பொருட்டு நரசிங்காவதாரமும், மாவலியை யடக்கும் பொருட்டு வாமனாவதாரமும், அரசரால் தாழ்த்தப்பட்ட வேதியர் நிமித்தமாக அவ்வரசரைக் கொல்லும் பொருட்டுப் பரசுராமாவதாரமும், இராவணன் முதலியோரைக் கொல்லும்

பொருட்டு ஸ்ரீ ராமாவதாரமும், பிரலம்பன் முதலிய பல ராக்ஷஸரைக் கொல்லும் பொருட்டுக் கிருஷ்ணாவதாரமும், தருமத்தை நிலைநிறுத்தும் பொருட்டுக் கற்கியவதாரமும் செய்தருளுவர். அன்றியும், ஒரு முதலை வாயில் அகப்பட்டு மெலிவடைந்த ஒரு யானையானது ஆதிமூலமேயென்று அழைத்த வுடனே விரைந்து வந்து அந்த முதலையைத் தமது திருவாழியால் கொன்று யானைக்கு முக்தி தந்தருளினர். இவ்வாறு அவர் உலகத்துக்குச் செய்கிற கருணைச்செயல்களுக்கு ஓர் எல்லை இல்லை. அவரருளால் உண்டாகின்ற அண்ட கோடிகளெல்லாம் அநித்தியமுமல்ல, ஆயினும் அவை யாவும் அவர் கருணையாலே உய்யா நின்றன. அவை ஏகமன்று, அநேகமாம். பிரபத்தி பக்தி என்னும் வழியால் ஆசாரியனருள் பெற்று, அந்தப் பரந்தாமனை வணங்கி, அர்ச்சிராதி மார்க்கமாகப் போய், விரஜாநதியில் மூழ்கி, திவ்வியரூபம் [illegible], அநந்த கருட விஷ்வக்ஸேநாதிகள் எதிர்கொள்ள, [illegible]த்தில் தமது சுகதுக்கங்களை யெல்லாம் விண்ணப் [illegible], பிறகு பகவதநுக்ரஹத்தால் சாலோகசாமீப [illegible]யுஜ்யங்களை யடைந்து, அப்பிராகிருத வுலகத்துச் [illegible] சங்காதி பஞ்சாயுதங்களும் தாங்கி ஸ்ரீபெரியபிரா[illegible]ங்கும்படி பீதாம்பரந் தரித்துக்கௌஸ்துபமணி யணி[illegible]கின்ற எம்பெருமானது ஏவற்பணிவிடையைச் சிர[illegible] இங்கே தாஸோஹமென்று பாவித்த காரணத்தால் [illegible] திருமாலின் கல்யாண குணங்களையெல்லாம் சேவித்து வாழ்வார். இதுவே உண்மையாதலால் யாவரும் திருமாலுக் கடிமை பூண்டு, அவனடியார்களை வணங்கிக் கைங்கரியஞ்செய்து, இம்மையிற் புகழும் மறுமையில் முக்தியும் அடைவார் என்றான். இந்தக் கேட்ட வேதாந்தியானவன் உலகம் யாவும் மித்தை யன்றென்றும் ஆன்மா வேறு வேறாய் அநேகமென்றும் நினைத்த பாஞ்சராத்திரியின் மனோவிகாரத்தை யொழித்து, வேதமுடிவை நோக்கி நீ வாழக்கடவை யென்றான். வேதாந்தியானவன் இந்தப் பிரகாரமாகப் பாஞ்சராத்திரியை வாய்பேசாதிருக்கும்படி செய்த பிறகு, சைவசித்

தாந்தி என்பானொருவன் வந்தான். விவேகீனும் தலையசைக்கும்படி வேதாந்தியை நோக்கித் தன் மதக்கொள்கைகளைச் சொல்லலாயினன் :

பாஞ்சராத்திரச் சருக்கம் முற்றிற்று.

46. சைவசித்தாந்தச் சருக்கம்

'காண்டல், அநுமான முதலாக, உவமை, அருத்தாபத்தி, அபாவம் என்று சொல்லப்படுகிற இவைகளே பிரமாணங்களென்று சொல்லப்படும். இவையன்றி வேறு பிரமாணங்களுஞ் சிலவுள; இவற்றைக்கொண்டு அளக்கப்படும் பொருள்கள் மூன்று; அவை பதி, பசு, பாசம் என்பன. அம் மூன்றனுள் பதியென்று சொல்லப்படுவது, ஆதிமத்தியாந்த ரஹிதமாய், சச்சிதாநந்தமாய், அகண்டமாய், வேதமுடிவாய், பிரமாதி தேவர்களுக்கு நாயகனாய், உமாஸஹிதனாய்ப் பஞ்சகிருத்தியங்களையும் நடத்துவதும், பராசத்தி, ஆதிசத்தி, இச்சாசத்தி, ஞானசத்தி, கிரியாசத்தி, என்னும் பஞ்சசத்திகளோடு கூடி, அபின்னபாவசத்தி யிடமாகி, விகாரமில்லாமல் சூரியனுக்கெதிரே தாமரைபோல எல்லாத் தொழில்களும் மாயையினிடத்தில் பொருந்தக் காட்டி, உருவலய போகாதிகாரங்களாகிய மூன்றுவகையாய்ப் பிரகாசிக்கும். அன்றியும், படைப்பு முதலிய ஐந் தொழில்களையும் நடத்தாநிற்கும். இவை யாவும் பதிக்கு இயல்பாகும். பசுவருக்கங்களெல்லாம், எல்லையின்மை நாசமின்மை யென்பவற்றை யியற்கையாகக் கொண்டு, மலத்தி லழுந்தி, இருவினைகளுக் கீடாகச் சிவனருளால் உடம்பெடுத்து, சுகதுக்கங்களை யநுபவித்து, மலபரிபாகம் வருதலும், திருவருளால் பந்த முழுதும் நீங்கப்பெற்று, நீங்காத இன்பங்கள் நீங்கி, பேரின்பவீட்டை யடையாநிற்கும். விஞ்ஞானகலர், பிரளயாகலர், சகலர், இம் மூவர்க்கும் ஈசனே மலமொழித்தருளுவன். பாசமானது மலம், மாயை கன்மம் என மூவகையாம். இவற்றுள் மாயை விந்து, மோகினி, மாயேயம் என மூன்று வகைப்படும். கர்மமானது தரு

மாதருமம் என்றிரண்டு வகையாயிருக்கும். இவ்விரண்டும் நினைவு, சொல், செயல் என்னும் மூன்றினும் வரும். மூல வாணவம் ஒன்றாய் நித்தமாய் இருண்ட மோகமாகி, தாமி ரத்திற் களிம்பு போல ஆன்மாவைப் பற்றி நின்று, நீங்குங் காலம் வந்தால் விட்டு நீங்கும். அனந்த சத்தியைப் பொரு ந்தி அறிவு முழுதும் மறைக்கும். இத்தன்மையுள்ளதே மலமென்று அறிஞர் கூறுவர். சித்துக்கும் அசித்துக்கும் அருள்வது இயல்பாதலால், பாசக் கூட்டத்துக்கு மலபரி பாக மூண்டாக ஈசன் அருள்வதாய்ப் பித்தை நீக்குதற் குரிய சிவசத்தி திரோதானசத்தி யென்றொரு பேராய், எப் படிப்பட்ட வொளிக்கும் நீங்காத இருளுருவாய் மலமென்று சொல்லப்பட்டு மிருக்கும். விந்து வானது மாமாயை, குடிலை முதலிய பல பேர்களைப் பெற்று, இறைவ னருளுக்கிடமாகி, சிவம், சத்தி, நாதம், விந்து, சாதாக்கியம், ஈசுரம், சுத்தவி த்தை என்பவற்றையும் தந்து, நாதத்தில் வைகரி முதலிய வற்றையும் தருந்தன்மையை யுடைத்தாயிருக்கும். சுத்த மாயை அருவாய், ஒன்றாய், அநித்தமாய், அணுக்களுக்கு ஆவ ரணமாகி, விரிவாய், தன் கருமத்தால் அசலமாய், சித்தாய், ஊழிகாலத்தில் உயிர்களுக்கிடமாகி, மலமாகி, உலக முழுதும் உண்டாதற்கு உபாதான காரணமுமாகும். தனுகரணபுவன போகங்களாகிய நான்கு தன்மையாக முன்னே சொல்லப் பட்ட மாயாகாரியம் தோன்றும். அது காலம், நியதி, கலை, வித்தைகளாய், அவ்வித்தையில் அராகம் உண்டாகும், இவற் றின் செறிவில் புருடனுண்டாவன். கலாதத்துவத்தில் அவ் வியத்தம் முக்குணத்தின் செறிவாய்த்தோன்றும், அதில் உரு த்திரரால் சித்தம், புத்தி, அகங்காரம் என மூன்றாய்த் தோன் றும். அகங்காரம் தைசதம், வைகாரி பூதாதி யென மூன்று வகையாம். அவற்றுள் மனமும் ஞானேந்திரியமும்தைசதமாம்; வைகாரி, கன்மேந்திரியங்களைந்தையும் தன்மாத்திரைகளைந் தையும் தரும். பூதாதியாகிய ஐந்தில் ஆகாய முதலிய பஞ்ச பூதங்கள்தோன்றும். இவ்வகையால் தத்துவங்கள் முப்பத்தா றாய் முடிவுபெறும். சிவம், சத்தி, சாதாக்கியம், ஈசுரம், சுத்த

வித்தையாகிய ஐந்தும் சிவ தத்துவமாகிய சுத்த தத்துவ
மென்று சொல்லுவர். காலம், நியதி, கலை, வித்தை, அராகம்,
புருடன், பிரகிருதியாகிய ஏழும் வித்தியா தத்துவமாகிய சுத்
தாசுத்த தத்துவங்களென்று சொல்லுவார்கள். சித்தம் புத்தி
அகங்காரம் மனம் ஆகிய நான்கும், மெய் வாய் கண் மூக்கு
செவி ஆகிய ஐந்தும், வாக்கு பாதம் பாணி பாயுரு உபஸ்தம்
ஆகிய ஐந்தும், சத்தம் பரிசம் ரூபம் ரசம் கந்தம் ஆகிய
ஐந்தும், பிருதிவி அப்பு தேயு வாயு ஆகாயம் ஆகிய ஐந்தும்,
இவ்விருபத்து நான்கும் ஆன்ம தத்துவமாம்; அசுத்ததத்துவ
மென்றும் சொல்லப்படும். ஆற்று நீர்போல, இடையீடின்றி,
அநாதியாய், சரீரங்கள் யாவும் தோன்றுதற்கு ஏதுவாய்,
நசிப்பதற்கும் காரணமாய்த் தொடர்ந்து ஆன்மாவுக்குப் பல
வகையாய் இன்ப துன்பங்களைப் பொருந்துவித்து, உலக
மழியுங் காலத்தில் மாயையி லடங்கும். இது கன்ம மலம்
வகுத்தவாறும். மந்திரம் பதம் வன்னம் புவனம் தத்துவம்
கலை என்னும் இவ்வாறும் சடத்துவா எனப்படும். இவற்றுள்
மந்திரம் பதினொரு வகையாயும், பதம் எண்பத்தொரு வகை
யாயும், வன்னம் ஐம்பத்தொன்றாயும், புவனம் இருநூற்றெ
ண்பத்துநான்காயும், தத்துவம் முப்பத்தாறாயும், கலைகள் ஐந்
தாயும் வகுக்கப்பட்டிருக்கும், ஒன்றி லொன்று வியர்த்தியா
ய்ப் பொருந்துகின்ற பந்தமாகிய இவையாறும் நீங்கி மேலா
ய்ச் சென்று நிலைபெற்ற திரோதானசத்தியும் அருள் வழியாய்
நிற்க, பொதுவின்னின்று நடனஞ் செய்வோனாகிய இறைவன்
சச்சிதானந்தமாய்ச் சமரசமாயிருக்கிற நிருவாண பதத்தைக்
கொடுக்கப் பெற்றுப் பேரின்பத்தை யடையாநிற்பர்' என்
றான். அதுகேட்ட வேதாந்தி, சைவசித்தாந்தியை நோக்கி,
உன்னுடைய ஆராய்ச்சியும் சுபசரிதமும் எமக்கொத்ததேயா
யினும் முக்திமார்க்கமொன்று மாத்திரம் பேதப்படுகின்றது.
இன்னமும் சிவபெருமானது திருவடித்தாமரையை வணங்கி,
வேதமுடிவைக் கண்டு இரண்டற்று, நிலைபெற்ற சச்சிதானந்த
நிரதிசய முக்தியையடைந்து வாழக் கடவாய்' என்றான். இப்
படி வேதாந்தி சொல்லிச் சைவசித்தாந்தியை வாயடக்கி நின்

றபோத, பாசுபதன், வாமி, வைரவன், மகாவிரதி, காளா முகன் என்பவர்கள் வந்து வேதாந்தியை யெதிர்த்து வாது செய்து, அபஜய மடைந்து வாயடங்கினார்கள். அப்பொழுது விவேகன் தன் ஜைமத்ருனனாகிய வேதாந்தியை நோக்கி, நீ யிதுவரைக்கும் பல மதஸ்தரையும் வாதிட்டு வென்றது சரி தான், இனி உன்மதக் கோட்பாட்டைச் சொல்லக் கடவா யென்றதும், வேதாந்தி சொல்லலாயினன் :

ஸைவசித்தாந்தச் சருக்கம் முற்றிற்று.

---

47. வேதாந்தச் சருக்கம்

கங்கை முதலாகிய பல நதிகளும் இறுதிக்காலத்தில் சமுத்திரத்திற் பிரவேசித்து அதனோடொன்றாய்ப் பொருந்துவதுபோல மீமாஞ்சை முதலாகிய சமயநெறிகளெல்லாம் ஈறது வேதாந்த நெறியி லடங்கி யொன்றாய்விடும். சத்தாய், அகண்ட பரிபூரணமாய், அருவாய், தற்பரமாய், சிதது முத லியவாய் விளங்குகின்ற அந்தப் பிரமமானது, ஒரு சூரியனே பல குடங்களிலுள்ள நீரிலும் பிரதிபிம்பித்திருப்பதுபோலச் சரீரங்களிலெல்லாம் நிற்கும். அப்படி நின்றும் பொறிகளால் அறிதற்கரிதாகவும் சாட்சி முதலாகிய பிரமாணங்களால் அள விடப்படாததாகவு மிருக்கும். மாலைக்காலத்தில் பழுதையா னது பாம்பாகத் தோற்றும்; சூரியனுதித்த காலைப்பொழுதில் பழுதை மெய்யாகிப் பாம்பு பொய்யாய்ப்போம். அதுபோல இவ்வுலகம் அவித்தையால் மெய்யாய்த் தோன்றினும் பிர மஞான முண்டானால் பொய்யா யொழியும். மேலும் கிளிஞ் சில் வெள்ளி போலவும் பொய்யா யொழியும். சிலந்திப்பூச்சி யானது தன் வாய்நூலால் வலை பின்னி விரித்து மறுபடியும் தன்னுள்ளே யிழுத்தடக்கிக் கொள்வது போல பிரமமானது தன்னிடத்திலிருந்து உலக முழுதும் தோன்றுவித்துக் காத்து அழிக்குமாதலால் அந்தப் பிரமம் உலகத்துக்கு நிமித்தகார ணமும் உபாதானகாரணமுமாகும். அந்தப் பிரமத்தினின்று

ஆகாயமும், அதில் வாயுவும், அதில் நெருப்பும், அதில் நீரும், அதில் நிலமும், இவ்வைந்தில் பயிருண்டாகி, அந்தப் பயிரில் அமுதுண்டாகி, அவ்வமுதில் துவக்கு முதலாகிய தாதுக்களுண்டாயின. அந்தத் தாதுக்களின் கூட்டத்தில் அன்னமய கோசந்தோன்றும்; அதனிடத்தில் பிராணமய கோசந்தோன்றும்; அதனிடத்தில் மனோமய கோசந் தோன்றும்; அதனிடத்தில் ஆனந்தமய கோசந் தோன்றும். ஆகாயமானது தன்னிடத்துண்டான வாயு முதலிய நான்கினுள்ளும் நிறைந்து புறத்திலும் நிறைந்திருத்தல் போல, பிரமமும் தன்னிடத்திலுண்டான பஞ்சகோச வுடல்கடோறும் நிறைந்து உள்ளும் புறம்பும் விளங்கா நிற்கும். சூரியனது ஒளி குறைந்து குடங்கடோறும் நின்றாற்போலப் பிரமமும் பஞ்சகோச சரீரங்கடோறும் நிற்கும். அப்படி நின்றாலும், நீருக்கே யன்றிப் பிரதிபிம்பத்துக்குச் சலனமில்லாததுபோலச் சரீரத்துக்கே யன்றிப் பிரமத்துக்குச் சலனமில்லை. செய்கின்ற தொழில் வேறுபாட்டினால் பல பெயர்கள் பெற்றுப் போகபோக்கியங்களால் விரியா நின்ற நனவு கனவு சுழுத்தி துரியம் என்னும் அவஸ்தைகளை யடையும். இவற்றிற்கு முறையே கரணங்கள் பதினான்கும் நான்கும் ஒன்றும் இவையொன்று மில்லாதொழிதலுமாம். கருவிகரணங்கள் யாவும் நானெனல் பந்தமாம். ஒன்றையொன்றா யறிகின்ற மருளினால் மாயாகருமங்களுண்டாகும். மருள் ஒழிந்தால் அந்தக் கருமமும் ஒழியும்; ஒழிந்து தெளிவுண்டாகவே பேதபாவனைகள் யாவும் நீங்கும். நிஷ்காமிய கருமம் சித்தசுத்தியையுண்டாக்கும்; அந்தச் சித்தசுத்தியால் ஞானமுண்டாகும்; அந்த ஞானமுண்டாதலும் அசையாநின்ற நீரில் தோற்றுகிற சந்திரபிம்பத்துக்கு அசைவில்லாததுபோல மாயையில் தோற்றுகிற தன்னை அசையாதவனாய்க் காண்பான். கருவிகரணாதிகளினின்று நீங்கிக் காணப்பட்ட தானே தானாகித் தனது அநுபூதியிற் கண்டு மற்றொன்றையுங் காணாமல், சொல்லு மற்று, ஆகாய முதலிய ஒழியவும் தானொழியாது நிலைபெற்று நானே பிரமமென்று தெளிவதே மெய்ஞ்ஞானமாம். வேதமுடிவாகிய வாக்கியமே மகா

வாக்கியமென்று சொல்லப்படும். அவ் வாக்கியத்தை அறிஞர் குருமுகத்தை யடுத்து யறிந்துகொள்வார்கள். அப்படி யறிந்துகொள்ளாதவர்கள் அறியும் பொருட்டு பஞ்ச சாதனத்தைக்கொண்டு இயமநியமாதிகளாகிய யோக முயற்சியைச் செய்வார்கள்' என்று இப்படிச் சொன்ன வேதாந்திக்கிடையே அஞ்ஞன் புகுந்து, 'நீ சொன்னசொல் நன்று நன்று! என் வல்லமையும் நானுமிருக்க நீ சொன்னது எவ்வாறு பொருந்தும்? அதை யறிவோர் யார்? அறிந்தாலும் அவ்வறிவைப் போயழிப்பேன்; அழியேனாயின் என் பெருமை யென்னாய் முடியும்?'' என்றான். அந்தச் சொல்லைக்கேட்ட வேதாந்தியானவன் அரசனை நோக்கி, இவனது ஆற்றலைப் பிரபோதனன்றி அழிப்பவர் வேறொருவரிலர். ஆதலால் பிரபோதனாகிய மைந்தன் உதிக்கும்படி தேவரீர் திருவுளம் வைக்கவேண்டுமென்று மெல்லச் செவியி லோதினான். அதைக்கேட்ட விவேக வேந்தன் களிப்புடைந்து, மைத்துனனாகிய வேதாந்தியை மார் பேரடணைத்துக்கொண்டு, மற்றுமுள்ள ஞானவான்களையும் அவனோடு போம்படி விடைகொடுத்தான்.

வேதாந்தச் சருக்கம் முற்றிற்று.

---

48. பிரபோதன் முடிசூடு சருக்கம்

அந்த வேதாந்தி முதலானோர் போன பிறகு, விவேக ராஜன் தன் மனைவியாகிய உபநிடதையை இதய கமலாசநத்திருத்தி, பொற்றாமரை மலரின்மேல் அரசவன்னம் தன் பெடையைத் தழுவுதல் போலத் தழுவி மனங்குழைந்தான். இப்படி நாள்தோறும் உமாதேவியும் சிவபிரானும் பிரிவறக் கூடிவாழ்வது போலக் கூடி வாழுங்காலத்தில், பாற்கடலில் வலம்புரிச் சங்கின் கருப்பத்தில் முத்துச்சூலுண்டானது போல் உபநிடதையின் வயிற்றில் ஒருசூலுண்டாயிற்று. அப்பொழுது சிவபக்தி ஹரிபக்தி என்கிற யோகினிகள் அரசனை யழைத்து, அந்தச் சூலைக் காப்பாற்றக் கடவாயென்று நியமிக்க, அவனும் சிவபெருமானது வீரியத்தைச் சரவணப்

பொய்கையில் இந்திரன் காப்பாற்றினாற் போலக் காப்பாற்றி னான். அந்தச் சூலானது நாள்தோறும் பிறைச் சந்திரன் வளர்வதுபோல வளர்ந்து வருங்காலத்தில் மாயாகாரியங்கள் யாவும் வெந்தபடம் போல வலி குன்றிக் கெட்டொழிந்தன. பின்னும் நிதித்தியாசனனை யழைத்து, நீ அரசன் காப்பாற் றின சூலை, சச்சிதானந்தமயமே அநிர்தசட தூக்கங்கனென்று சொல்லலாகாதெனை வகுக்கும் சீமந்த முதலிய சடங்குகள் செய்யக்கடவாயென்று கட்டளையிட்டார்கள். அந்த நிதித்தி யாசனனும் அந்த யோகினிகள் கட்டளையைச் சிரசாவகித்துச் சீமந்த முதலிய சடங்குகளை முறையாய்ச் செய்து, கண்ணை யிமை காப்பதுபோல அந்தச் சூலைக் காத்துவரு நாளில், அஞ்ஞானென்கிற இரவு விடியவும் விவேக வேந்தனது முகத் தாமரையும் உபநிடதையின் அகத்தாமரையும் மலரவும் பிற வியாகிய பனி அதிகரியாதொழியவும் பிரபோதன் என்னுஞ் சூரியன் உதித்தான். சிங்கக்குட்டியானது பிறக்கும்போதே மதயானையைக் கொலை செய்யுந் தன்மைபோல உதிக்கும் போதே அஞ்ஞானது உயிரைத் தொலைத்து உதித்தான். அப் படி உதித்த மைந்தனை வாணிமகளாகிய உபநிடதை தன் மணவாளனாகிய விவேக வேந்தன் கையிற் கொடுக்க, அவனும் வாங்கி மனமகிழ்ந்து, தன்னைப் பெற்ற தந்தையாகிய மான தன் கையிற் கொடுக்க, அவனும் வாங்கி உடல் புளகித்துக் கண்களிக்கவும் தோள்கள் பூரிக்கவும் தன் மார்பி லணைத்துத் தழுவிக்கொண்டான். அந்தச் சமயத்தில் அந்த மைந்தன் நான் தேவர் மனிதர் முதலிய ஏழுவகைப் பிறப்புமல்லேன், அசுரங்களு மல்லேன், பஞ்ச பூதங்களு மல்லேன், ஞானேந் திரியங்களு மல்லேன், கன்மேந்திரியங்களு மல்லேன், பஞ்ச பிராணங்களு மல்லேன், அந்தக் கரண சதுஷ்டயமு மல் லேன், இவ்வுலகத்தில் காணப்படுகிற எல்லாப் பொருள் களும் என் கண்ணுக்குச் சச்சிதானந்த மயமாகவே காணப் படுகின்றன' வென்றான். அப்போது அந்தப் பிரபோதன் என்னும் புதல்வன் நிதித்தியாசனனால் ஆயிரங் கிரணங்க ளோடு கூடி விளங்குகின்ற உச்சிக்காலத்துச் சூரியன்போலத்

தாயார் மகிழும்படி வளர்கின்ற காலத்தில், விவேகனானவன் அந்த மைந்தனுக்கு முடி சூட்டித் தான் வனத்துக்குப் போகவேண்டுமென் றுலோசித்து, நித்த அகண்டாகார சுப நிரதிசய சச்சிதாநந்த முத்தியென்னும் ஒப்பற்ற சாம்ராஜ்ய முழுதும் உனதேயென்று நிரூபகாரியர் உதவியைக்கொண்டு சுபமங்கள தினத்தில் பிரபோதனுக்கு முடிசூட்டினான். இவ்வாறு விவேகனால் முடி சூட்டப்பெற்ற பிரபோத னென்னும் ராஜராஜேந்திரன் செங்கோல் செலுத்தி அரசாட்சி செய்துவருங் காலத்தில், விவேகன் தன் தாயாகிய நிவிர்த்தியும் தன் மூத்தமனைவியாகிய சுமதியும் இளைய மனைவியாகிய உபநிடதையும் உறவினரும் தன்னைத் தொடர்ந்துவரக் காட்டிற் பிரவேசித்தான். இவன் காட்டிற் பிரவேசித்தலும் இவன் தந்தையாகிய மானதன் தனிமை யாற்றாதவனாய்த் தன் தாயாகிய மாயையினிடஞ் சேர்ந்து அவள் திருவடியை வணங்குதலும், அவளும் புத்திரனாகிய மானதனை வாரி யெடுத்து மார்போ டணைத்து, நீ யிங்குவந்த காரிய மென்னவென்று கேட்க, மானதனும் நடந்த செய்தியெல்லாம் ஆதியந்தமாய்ச் சொல்லி அந்த மாயையினிடத்திலே யமர்ந்திருந்தான். அப்போது மாயையானவள் தன்னாலேவப்பட்ட மீமாஞ்சகன் முதலானோருடைய சொற்கள் தாழ்ந்ததையும், வேதாந்தி வெற்றியடைந்ததையும், அவன் தங்கையாகிய உபநிடதையை விவேகன் சேர்ந்து பிரபோதனைப் பெற்றதையும், அவன் பிறந்தவுடனே அஞ்ஞான் உயிர் நீங்கினதையும், மானதன் தன்னிடத்தில் வந்து சேர்ந்ததையும், ஒளியை யிருளாக்கிப் பொய்யை மெய்யாக்கி யாவரையும் மயக்க வல்லளாகிய தனது இந்திரசாலமுழுதும் அழிந்து இவ்வாறு முடிந்ததையும் மனத்திற்கொண்டு மிகவும் வருந்தி, சலிப்பற்ற என் தலைவனிடத்தில் என் சலனத்தை யாரோபித்தும் கெடுதியின்றி யெவ்விடத்தும் வாழ் வேனைச் சரீரமாகிய சிறு குடிலிற் சிறைசெய்து உன் மூத்த மகனாகிய மோகனைக் கொண்டும் அவன் மக்களாகிய அஞ்ஞன் முதலானோரைக் கொண்டும் தளையிட்டும் இன்னும் பல

நிலைமைகள் செய்தும பலிக்காமல் இவ்வாறு முடிந்ததே, ஆக
லால் நான் செய்த பிழையும் என் மகன் செய்த பிழையும்,
அவன் புதல்வர் செய்த பிழையும் ஆகிய எல்லாவற்றையும்
யோசிக்குமிடத்தில் தீமைகளே யென்பதற்கு யாதொரு சந்
தேகமுமில்லை; இந்தப் பிழைகளை யெல்லாம் மன்னித்து நம்
மைக் காப்பவர் ஈசுர நாயகனே யன்றி வேறொருவரு மிலர்,
அவன் திருவடியை யடைவதே தகுதியான காரியமென்று
துணிந்து அவனை யடைந்து அவன் பதத்திற் சேர்ந்தாள்.
விழித்தபோது கனவுபோலவும் பூமாலையிற் றோன்றிய பாம்பு
போலவும் கிளிஞ்சில் வெள்ளிபோலவும் பஞ்சபூத விகாரங்
கள் யாவும் ஓட, மாயையும் நீங்கின பிறகு, மிக்க ஒளியை
யுடைய பிரபோதன் சாட்சி காணப்படு பொருள் காண்ப
வன் என்னும் விகற்பமுண்டாக மோகனாதியர் முன் செய்த
பிழைகளெல்லாம் பிழைபா யொழியவும் தன் தந்தை நினை
த்தபடியே நிறைவேறவும் அழிவற்ற அகண்ட பரிபூரண
சின்மயத்தைத் தழுவிப் பிரகாசித்தான். மானதன் லயிக்கவும்
மாயையின் ஆரோபிதங்கள் மறையவும் முடிவில்லாத சின்மய
மூர்த்தியான தன் உபாதியாகிய தடை நீங்கப்பெற்றுப் பேரி
ருளை யழித்து உதயஞ்செய்துவிளங்குகின்ற சூரியன்போலப்
பேரொளியைப் பரப்பி எவ்விடத்தும் நிறைந்து ஒன்றாகி
நின்றான். பிரபோதன் இவ்வாறு அரசுசெய்யுங் காலத்தில்,
இவ்வுலகில் அந்தணர் முதலானோர் பெருஞ் செல்வத்தோடு
கூடியிருந்தும் புளியம்பழமும் அதன் ஓடும் போல மனத்
திலொருபற்றுமில்லாமல் நித்தியானந்த நிலையில் நின்றார்கள்.

பெரும் பரப்பையுடைய இவ்வுலகத்தில் மெய்ஞ்ஞான
விளக்கமென்னும் இந்தக் கதையை ஒருதரம் படிப்போரும்
அறிவுண்டாகக் கேட்போரும் இம்மையில் பெரும் போகங்
கள் அநுபவித்து மறுமையில் அகண்ட பரிபூரண சச்சிதானந்த
சாகரத்தில் மூழ்குவார்கள்.

இது பந்தம், இது மோக்ஷம், இது சரீரத்திலுள்ள
சீவன், இது பரம், இந்தச் சீவபரங்கள் ஒன்றாதற்குரிய